Safe and Efficient Skies for All

# වාර්ෂික වාර්තාව 2021
# ஆண்டறிக்கை 2021
# ANNUAL REPORT 2021



ශ්‍රී ලංකා සිවිල් ගුවන්සේවා අධිකාරිය

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை

**CIVIL AVIATION AUTHORITY OF SRI LANKA**

Civil Aviation Authority
Sri Lanka

அனைவருக்கும் பாதுகாப்பு மற்றும் வினைத்திறன்மிக்க ஆகாயம்



# ஆண்டறிக்கை 2021

## இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை

# உள்ளடக்கம்

**இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் கருப்பொருள் பாடல் / 2**

**விமான சேவைகள், ஏற்றுமதி வலைய அபிவிருத்திக்கான கௌ.இராஜாங்க அமைச்சரிடம் கையளிப்பு / 3**

**எம்மைப்பற்றி / 4**

**சுருக்கப்பதங்கள் / 6**

**விவரக் கொத்து / 10**

**தலைவரின் மதிப்பாய்வு / 11**

**சிவில் விமானப் போக்குவரத்து பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதம நிறைவேற்று அலுவலரின் மதிப்பாய்வு / 15**

**இ.சி.வி.போ.அதிகாரசபையின் விவரக்குறிப்பு / 18**

பொதுநோக்கு **/ 18**
இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகார சபையின் உறுப்பினர்கள் **/ 21**
பணிப்பாளர் சபை **/ 22**
CAASL இன் 13 ஆவது பணிப்பாளர் சபை உறுப்பினர்களது சுயவிவரங்கள் **/ 23**
CAASL இன் மூத்த முகாமைத்துவம் **/ 29**

**இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை / 32**

நிலைப்பாடு **/ 32**
இலக்குகள் **/ 32**
உத்திகள் **/ 32**
விழுமியங்கள் **/ 32**
CAASL **இன் உடனடி இலக்குகள் / 32**
எதிர்பார்த்த பெறுபேறுகள் **/ 33**
வெளியீடு **/ 33**

**ஒழுங்குமுறை நோக்கெல்லை / 34**

CAASL **இன் ஆளுகையும் பொறுப்புடமையும் / 36**

அதிகார சபையின் வகிபாகம் **/ 36**
சபை உறுப்பினர்கள் **/ 36**
பணிப்பாளர் சபை மற்றும் ஆளுகை **/ 36**
அதிகாரசபையின் நிறைவேற்று அதிகாரங்கள் **/ 36**
அதிகாரசபையின் குழுக்கள் **/ 37**
ஊழியர் குழு **/ 37**
கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு **/ 37**
இலங்கை NGAP திட்டத்தின் தேசிய குழு **/ 38**
சிவில் விமானப் போக்குவரத்து அபிவிருத்தி மற்றும் கல்விக் குழு (CADEC) **/ 39**
பங்குதாரர்களுடனான உறவு **/ 39**
அதிகாரசபை மற்றும் மூத்த முகாமைத்துவத்தின் பொறுப்புக்கள் **/ 39**
பொறுப்புடமை **/ 40**
கருத்து முரண் **/ 40**
தரம் மற்றும் உள்ளக கணக்காய்வு **/ 40**
சட்ட இணக்கப்பாடு **/ 40**
ஒழுக்கவிதி **/ 41**

**நிறுவனக் கட்டமைப்பு – முகாமைத்துவ ஊழியர் / 44**

**இயக்கம் மற்றும் முகாமைத்துவம் / 49**

CAASL **கூட்டங்கள் / 50**

வான்பயண பாதுகாப்புக் கண்காணிப்பு பிரிவு **/ 50**
சட்ட விவகாரங்கள் மற்றும் அமலாக்கப் பிரிவு **/ 53**
தகவல் தொடர்பு மற்றும் தொழில்நுட்ப (ICT) பிரிவு **/ 53**
சிவில் விமானப் போக்குவரத்து ஊக்குவிப்புப் பிரிவு **/ 54**
வான்மருத்துவ சேவைகள் அலகு **/ 55**
தொழில்நுட்ப நூலகப் பிரிவு **/ 56**
தரம் மற்றும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு **/ 57**
சுற்றாடல் ஆராய்ச்சி மற்றும் செயற்திட்டப் பிரிவு **/ 58**

**வானூர்தி சேவை முறைப்படுத்தல் பிரிவு / 60**

விமானத்தள பிரிவு **/ 61**
வான் வழிகாட்டல் சேவைகள் பிரிவு **/ 63**

**விமானப் பாதுகாப்பு முறைப்படுத்தல் பிரிவு / 68**

பயிற்சி நிறுவனங்கள் மற்றும் ஊழியர் உரிமம் பிரிவு **/ 69**
வானூர்தி செயற்பாடுகள் பிரிவு **/ 71**
வானூர்தி பதிவு மற்றும் வான்தகைமை பிரிவு **/ 72**

**வான்பயண பாதுகாப்பு முறைப்படுத்தல் பிரிவு / 74**

வான்பயண பாதுகாப்பு பிரிவு **/ 75**

**பெருநிறுவன முகாமைத்துவப் பிரிவு / 78**

வான் போக்குவரத்து மற்றும் பொருளாதார ஒழுங்குமுறைப் பிரிவு **/ 79**
மனிதவள மற்றும் ஆதன முகாமைத்துவப் பிரிவு **/ 83**
நிதி மற்றும் வருவாய் முகாமைத்துவப் பிரிவு **/ 87**

**CAASL செயற்திறனின் சுருக்கம் - 2021 / 89**

**பிரதான செயற்திறன் குறிகாட்டிகள் - 2021 / 91**

**போக்குவரத்து விவரங்கள் 2021 / 97**

**நிதிக் கூற்றுகள் - 2021 / 99-135**

**கணக்காய்வாளர் அறிக்கை - 2021 / 136**

**கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பதில் - 2021 / 143**

Safe and Efficient Skies for All

# ஆண்டறிக்கை - 2021

**இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை**

2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை சட்டத்தின் 15 ஆவது பிரிவின்படி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

# இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் கருப்பொருள் பாடல்

ஸ்ரீலங்கா சிவில் குவண்சேவா அதிகாரிய
கித் யசசின் சுதிலே
ஹெலி கொட்ட ஹேலீ ஹெலே//

சக்வித்தி ராவண ஆதி யுகென்
தண்டு மொணரின் குவண தினா//
விக்மெத்தி லக்தன வா ரிய பொலினுத்
பா விது நுவண மனா//

‘உவதுரு தொர பவ சந்தஹா முல்வெமு’
வெய் பெர வெக்கிய அபே//
‘இக்மன் அய மக நெகுமெஹா முல்வெமு’
மே வெய் தெக்கும அபே//

ரடவெசி யுதுகம் இடுவென அயுரின்
மௌபிம ஹா பந்தெமு//
சமாஜ மெஹவர சாரதஹும் ரெக்க
வககீமென் புதமு//

**வரிகள்** : மறைந்த கலாபூசணம் அரிசென் அஹூபுது
**பாடகர்** : மறைந்த கலாகீர்த்தி தேசமான்ய முனைவர் பண்டித் டபிள்யு.டி. அமரதேவ
**இசை** : மறைந்த கலாகீர்த்தி தேசமான்ய முனைவர் பண்டித் டபிள்யு.டி. அமரதேவ

# விமான சேவைகள், ஏற்றுமதி வலைய அபிவிருத்திக்கான கௌரவ இராஜாங்க அமைச்சரிடம் கையளிப்பு

2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை சட்டத்தின் 15 ஆவது பிரிவின் கீழ் கூறப்பட்டுள்ள சட்டவாக்கத் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் ஆண்டறிக்கை 2021 தயாரிக்கப்பட்டுள்ளது. இது இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையினால் 2021 ஜனவரி 1 முதல் 2021 டிசம்பர் 31 வரையிலான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பிரதான நடவடிக்கைகளின் சுருக்கத்தையும் 2021 ஆம் நிதியாண்டுக்கான நிதி நிலைமைக் கூற்றினையும் கொண்டுள்ளது.

**உபுல் தர்மதாச**
தலைவர்

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை
28 பெப்ரவரி 2022



# நோக்கு

அனைவருக்கும் பாதுகாப்பான பறப்பை உறுதிப்படுத்தும் வினைத்திறனான, நம்பகமான விமானசேவைப் பாதுகாப்பு ஒழுங்குபடுத்துநராதல்.

# பணி

சர்வதேச தரநிலைகள், பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகள், தேசிய சட்டவாக்கத் தேவைகளுக்கு இணங்க பாதுகாப்பான, சீரான, திறமையான, வழக்கமான, சுற்றுச் சூழலுக்கு உகந்த தேசிய விமானப் போக்குவரத்து அமைப்பின் செயற்பாட்டை மூலோபாய திட்டமிடல் மற்றும் பயனுள்ள ஒழுங்குமுறை மூலம் எளிதாக்குதல்.

# குறிக்கோள்

‘அனைவருக்கும் பாதுகாப்பான வினைத்திறனான பறப்பு’



# அனைவருக்கும் பாதுகாப்பான வினைத்திறனான பறப்பு

பல ஆண்டுகளாக, சிவில் விமானப் போக்குவரத்து துறையின் பார்வையை நாம் மாற்றியமைத்து வருகிறோம். உலகலாவிய தரநிலைகளை முழுமையாகப் புரிந்து கொள்ளவும் நம்மை ஒழுங்கமைக்கவும், எமது செயற்பாடுகளை வடிவமைத்து, சீரமைத்து வருகிறோம். பறப்பின் பாதுகாப்பில் மிகுந்த கவனம் செலுத்தும் அதேவேளை, இன்னும் நிலையான சுற்றுச்சூழல் சாதக வழியில் சென்று, அடுத்த தலைமுறைக்கு பாதுகாப்பான பறப்பை உறுதி செய்கிறோம். பயன்மிகு ஒழுங்குமுறை மற்றும் மூலோபாயத் திட்டமிடல் மூலம் நாங்கள் புதிய சகாப்தமொன்றைக் கண்டதோடு, சிறப்பான விமானப் பாதையொன்றில் இருக்கிறோம். பாதுகாப்பான இறக்கைகளால் உறுதியாகத் தாங்கி, அனைவருக்கும் பாதுகாப்பான வினைத்திறனான பறப்பை உருவாக்குகிறோம்.

# சுருக்கப்பதங்கள்

| | |
|---|---|
| AE | விமானத் தளங்களும் |
| ANS | வான் வழிகாட்டல் சேவைகள் |
| AASL | வரையறு. விமான நிலையம் மற்றும் விமானப் போக்குவரத்துச் சேவைகள் (இலங்கை) நிறுவனம் |
| ADG | மேலதிக பணிப்பாளர் நாயகம் |
| ADRM | விமானத்தளம் |
| AME (BL) | வானூர்தி பராமரிப்பு பொறியியலாளர் (அடிப்படை உரிமம்) |
| AML | வானூர்தி பராமரிப்பு உரிமம் |
| AMO | அங்கீகரிக்கப்பட்ட பராமரிப்பு நிறுவனம் |
| AMT | வானூர்தி பராமரிப்பு தொழில்நுட்பர் |
| ANR | வான் வழிகாட்டல் ஒழுங்குமுறை |
| AOC | விமான செயற்பாட்டாளர் சான்றிதழ் |
| AS | வானூர்தி சேவைகள் |
| ASN | விமானப் போக்குவரத்து பாதுகாப்பு அறிவித்தல் |
| ASM | விமானப் போக்குவரத்து பாதுகாப்பு கண்காணிப்பு |
| AT&ER | வான் போக்குவரத்து மற்றும் பொருளாதார ஒழுங்குமுறை |
| ATC | வான் போக்குவரத்துக் கட்டுப்பாடு/ வான் போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர் |
| ATM | வான் போக்குவரத்து முகாமைத்துவம் |
| AV. SEC | விமானப் போக்குவரத்து பாதுகாப்பு |
| AW | பறப்புத் தகைமை |
| AWE | பறப்புத் தகைமை பொறியியலாளர் |
| BIA | பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் |
| BIRD | பறவை மோதல் |
| CAASL | இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை |
| CADEC | சிவில் விமானப் போக்குவரத்து அபிவிருத்தி மற்றும் கல்விக் குழு |
| CEO | பிரதம நிறைவேற்று அலுவலர்கள் |
| CNS | தொடர்பாடல், வழிநடத்தல், கண்காணிப்பு |

| | |
|---|---|
| COSCAP-SA | செயற்பாட்டு பாதுகாப்பு, தொடர் வான்தகைமை விருத்திக்கான ஒத்துழைப்பு வேலைத்திட்டம் - தெற்காசியா |
| CSI | கேபின் பாதுகாப்பு பரிசோதகர் |
| C of R | பதிகைச் சான்றிதழ் |
| D | பணிப்பளர் |
| DDG/ASR | பிரதி பணிப்பாளர் நாயகம் (வானூர்தி சேவை ஒழுங்குமுறை) |
| DDG/CAER | பிரதி பணிப்பாளர் நாயகம் (பெருநிறுவன முகாமைத்துவம்) |
| DDG/FSR | பிரதி பணிப்பாளர் நாயகம் (விமானப் பாதுகாப்பு ஒழுங்குமுறை) |
| DDG/AVSER | பிரதி பணிப்பாளர் நாயகம் (விமானப் போக்குவரத்து பாதுகாப்பு ஒழுங்குமுறை) |
| D/AE | பணிப்பாளர் / விமானத்தளமும் |
| D/ANS | பணிப்பாளர் / வான் வழிகாட்டல் சேவை |
| D/AOPS | பணிப்பாளர் / வானூர்தி செயற்பாடு |
| D/ARAW | பணிப்பாளர் / வானூர்தி பதிகை மற்றும் பறப்புத் தகைமை |
| D/ATER | பணிப்பாளர் / வான் போக்குவரத்து மற்றும் பொருளாதார ஒழுங்குமுறை |
| D/AVS | பணிப்பாளர் / விமானப் போக்குவரத்து பாதுகாப்பு |
| D/HR&PM | பணிப்பாளர் / மனிதவளம் மற்றும் ஆதன முகாமைத்துவம் |
| D/F&RM | பணிப்பாளர் / நிதி மற்றும் வருமான முகாமைத்துவம் |
| D/TO&PL | பணிப்பாளர் / பயிற்சி ஒழுங்கமைப்பு மற்றும் பணியாளர் உரிமம் |
| D/ER&P | பணிப்பாளர் / சுற்றாடல், ஆராய்ச்சி, வேலைத்திட்டம் |
| D/QIA | பணிப்பாளர் / தரம் மற்றும் உள்ளக கணக்காய்வு |
| DG | அபாயகரமான பொருட்கள் |

# சுருக்கப்பதங்கள்

| | |
|---|---|
| DGCA | சிவில் விமானப் போக்குவரத்து பணிப்பாளர் நாயகம் |
| EASA | ஐரோப்பிய விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு முகவர் நிலையம் |
| ER&P | சுற்றாடல், ஆராய்ச்சி, வேலைத்திட்டம் |
| FIR | விமான தகவல் வலயம் |
| FS | விமானப் பாதுகாப்பு |
| FPP | விமான செயல்படுமுறை செயற்திட்டம் |
| FUEL | எரிபொருள் தொடர்பான |
| GCOL | தரை மோதல் |
| GSA | பொது விற்பனை முகவர் |
| ICAO | பன்னாட்டு குடிசார் வான்பயண அமைப்பு |
| ICT | தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்பம் |
| IS | அமுல்படுத்தும் தரநிலை |
| PBN | செயலாக்கம் அடிப்படையிலான வழிகாட்டல் |
| LALT | உயரம் குறைவான செயற்பாடுகள் |
| LCC | செலவு குறைந்த விமான சேவை |
| LA&EU | சட்ட விவகாரங்கள் மற்றும் அமுல்படுத்தல் பிரிவு |
| MAC | விமானங்களுக்கிடையிலான பாதுகாப்பு சூழ்நிலை / வான்வழி மோதல் தவிர்ப்பு அமைப்பு எச்சரிக்கை / பிரிவின் இழப்பு / (அருகே) நடுவான் மோதல்கள் |
| MED | மருத்துவம் |
| MRIA | மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் |
| NCASP | தேசிய சிவில் விமானப் போக்குவரத்து பாதுகாப்பு செயற்திட்டம் |
| OTHR | ஏனையவை |

| | |
|---|---|
| Q&IA | தரம் மற்றும் உள்ளக கணக்காய்வு |
| RI | ஓடுபாதை ஊடுருவல் - வாகனம், விமானம் அல்லது நபர் |
| RPK | பயணிகளுக்கான கிலோமீற்றர் வருவாய் |
| RTK | தொன் கிலோமீற்றர் வருவாய் |
| SARPs | தரநிலை மற்றும் பரிந்துரைக்கப்பட்ட செயல்முறைகள் |
| SAARC | தெற்காசிய நாடுகளுக்கான பிராந்தியக் கூட்டமைப்பு |
| SARI | தெற்காசிய பிராந்திய முன்னெடுப்பு |
| SCF-NP | தொகுதி/கூறு செயலிழப்பு அல்லது பிறழியக்கம் |
| SCF-PP | மின்பிறப்பாக்கி செயலிழப்பு அல்லது பிறழியக்கம் |
| SEC | பாதுகாப்பு |
| SLAS | இலங்கை கணக்கியல் தரநிலைகள் |
| SLCAP | இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து வெளியீடு |
| SLFRS | இலங்கை நிதி அறிக்கையிடல் தரநிலைகள் |
| SMS | பாதுகாப்பு முகாமைத்துவ அமைப்பு |
| SSP | தேசிய பாதுகாப்பு செயற்திட்டம் |
| TO&PEL | பயிற்சி ஒழுங்கமைப்பு மற்றும் பணியாளர் உரிமம் |
| TURB | கொந்தளிப்பு பாய்வை சந்தித்தல் |
| USAP | உலகலாவிய பாதுகாப்பு கணக்காய்வு செயற்திட்டம் |
| USOAP | உலகலாவிய பாதுகாப்பு மேற்பார்வை கணக்காய்வு செயற்திட்டம் |
| WILD | வனவிலங்கு மோதல் |
| WSTRW | காற்றழுத்தம் அல்லது இடியுடனான மழை |



# பிரகாசமான எதிர்காலத்துக்கான சாத்தியப்பாடுகளைப் பயன்படுத்தல்





# விவரக் கொத்து

| | | |
|---|---|---|
| **தலைமை அலுவலகம்** | : | இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை<br>இல. 152/1, மினுவாங்கொட வீதி,<br>கட்டுநாயக்க, இலங்கை |
| | | தொலைபேசி : 94 -11-2304632, 94-11-2358800<br>தொலைநகல் : 94 -11-2304644<br>மின்னஞ்சல் : உ_ழவெயஉ_வரளளுஉ_யய.டம<br>இணையம் : www.caa.lk<br>தபால் முகவரி : த.பெ.இல. 535, கொழும்பு<br>தந்தி முகவரி : AIRCIVIL<br>AFTN முகவரி : VCCCYAYX |
| **கட்டுநாயக்க அலுவலகம்** | : | இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை<br>FD II, புறப்பாடு முனையம்<br>பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்க |
| | | தொலைபேசி : 94 -11-2252269<br>தொலைநகல் : 94 -11-2252269 |
| **மத்தள அலுவலகம்** | : | இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை<br>மத்தள ராஜபக்ச சர்வதேச விமான நிலையம்<br>மத்தள |
| | | தொலைபேசி : 94 -47-7510530<br>தொலைநகல் : 94 -47-7510541 |
| **பறப்புத் தகைமை உப அலுவலகம** | : | இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை<br>கொழும்பு விமான நிலையம்<br>இரத்மலானை |
| | | தொலைபேசி : 94 -11 -3135828<br>தொலைநகல் : 94 -11 -2635756 |
| **கணக்காய்வாளர்கள்** | **:** | **கணக்காய்வாளர் தலைமையதிபதி, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு** |
| **சட்டத்தரணிகள்** | **:** | **சட்டமா அதிபர், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு** |
| **வங்கியாளர்கள்** | **:** | **இலங்கை வங்கி, மக்கள் வங்கி** |
| **காப்புறுதிதாரர்கள்** | **:** | **செலிங்கோ ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிடெட்** |

## தலைவரின் மதிப்பாய்வு



**2021 ஆம் ஆண்டு முழுவதும் தொடர்ந்து பரவிய தொற்றுநோய் மக்களின் வாழ்க்கைக்கும் பணிச்சூழலுக்கும் பாரிய சவால்களைத் தோற்றுவித்தது. அத்துடன் நோய்த்தொற்றின் விளைவுகளுக்கு உலகளாவிய விமானப் போக்குவரத்தும் விதிவிலக்காகவில்லை. இந்த சவால்களுக்கு மத்தியிலும் இலங்கையின் சர்வதேச விமான சேவை நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்வதற்குத் தேவையான ஒழுங்குமுறை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.**

# தலைவரின் மதிப்பாய்வு

## பணியாளர் நலனுக்கு முன்னுரிமை அளித்தல்

இந்தப் பின்னணியில், எங்களது உடனடி முன்னுரிமையானது எங்கள் பணியாளர்கள் மற்றும் நாங்கள் செயற்படும் விமானச் சமூகத்தின் நல்வாழ்வாக இருந்தது. எனவே கொவிட்-19 இற்கு எதிராக எங்கள் பணியாளர்களின் ஆரோக்கியத்தை பாதுகாப்பதற்கு முக்கியத்துவம் அளித்தோம். சுகாதாரத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டுதல்களுக்கு ஏற்ப கட்டுநாயக்கவில் உள்ள தலைமை அலுவலகம், மத்தளவில் உள்ள உப அலுவலகம். வீரவில மற்றும் மட்டக்களப்பு பிரதேசங்களில் உள்ள உத்தியோகபூர்வ குடியிருப்புகள், விடுமுறை பங்களாக்கள் ஆகிய இரண்டிலும் இருந்த வசதிகளில் சுகாதாரம் மற்றும் ஏனைய முன்னெச்சரிக்கை செயற்பாடுகளை அறிமுகப்படுத்தினோம். வானூர்தி சேவைப் பிரிவுகள் மற்றும் விமான சேவை சூழலில் செயற்பாடு மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு, பொருத்தமான தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் உட்பட 'சர்ஜிக்கல் முகக்கவசங்களை' வழங்குவதன் மூலம் எமது வளாகத்துக்குள் வைரஸ் பரவும் அபாயத்தைக் குறைக்க நடவடிக்கை எடுத்தோம். இதற்கு மேலதிகமாக, பணியாளர்களின் வசதியை உறுதி செய்வதற்காக, எமது தலைமை அலுவலக வளவில் கொவிட்-19 தடுப்பூசித் திட்டத்தை அறிமுகப்படுத்தினோம். இதன் பின்னர், எங்கள் ஊழியர்களை தொற்று நோய்க்கு ஆளாகாமல் பாதுகாக்க முடிந்தது. அத்துடன் இந்த காலகட்டத்தில் பல சவால்களை எதிர்கொள்ள நேரிட்ட போதிலும் எமது செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல ஒத்துழைப்பு வழங்கிய CAASL ஊழியர்களின் தளராத மனப்பான்மை, ஒற்றுமை மற்றும் வலிமைக்காக அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## வான் மருத்துவக் குழுவின் பாராட்டுக்குரிய செயற்பாடு

முன்னெப்பொழுதும் இல்லாத சவால்களுக்கு மத்தியில், பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், செயற்பாடுகளைத் தொடர்வதற்கும் அயராது உழைத்த CAASL வான் மருத்துவக் குழுவுக்கு நான் நன்றியுள்ளவனாக இருக்கிறேன்.

## மொஸ்கோவுக்கும் அங்கிருந்தும் நேரடி விமானங்களை மீள ஆரம்பித்தல்

வருடத்தின் ஆரம்பத்தில் இலங்கைக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் புதுப்பித்துக் கொள்ளப்பட்ட விமான சேவை உடன்படிக்கைக்கு ஏற்ப, 2015 ஆம் ஆண்டு முதல் ஆறு வருட காலமாக நிறுத்தப்பட்டிருந்த இரு நாடுகளுக்கிடையிலான நேரடி விமான சேவைகளை மீண்டும் இப்போது ஆரம்பிக்க எம்மால் முடிந்திருக்கிறது. நான் மற்றும் வெளிநாட்டலுவல்கள், மற்றும் சுற்றுலா அமைச்சுக்களின் குழு மற்றும் துறைசார் அமைச்சு மற்றும் ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் ஆகியவை மூலம் அரசாங்கத்தின் சார்பாக இந்த ஒப்பந்தத்தை எளிதாக்க முடிந்தது. புதிய ஏற்பாடுகளைத் தொடர்ந்து ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் இப்போது இரண்டு நாடுகளுக்குமிடையில் BIA இலிருந்து DME (vv) இற்கு, இடைநில்லா விமானப்பயணத்தை வெள்ளிக்கிழமை சென்று ஞாயிற்றுக்கிழமை திரும்பும் வகையில் 2021 ஜூலை 30 முதல் செயற்படுத்துகிறது.

## EU – EASA திட்ட அலுவலகம், தென்கிழக்கு ஆசியா

2021 ஜூன் 15 அன்று EASA இன் நிர்வாக இயக்குனர் மூன்றாண்டு காலத்துக்கான இரண்டாம் கட்டப் புதுப்பித்தல் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, மாலைதீவு, நேபாளம், பாகிஸ்தான், இலங்கை உள்ளிட்ட உறுப்பு நாடுகளின் விமானப் போக்குவரத்து அதிகாரிகளுக்கும் இடையிலான நிறுவன உறவு மற்றும் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதை இந்த திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. செப்டெம்பர் 24 அன்று, அதன் இலங்கை அலுவலகம் CAASL இல் மீள ஆரம்பிக்கப்படுவதன் மூலம் விரிவாக்கப்பட்ட திட்ட காலத்துடன், தனது உறுப்பு நாடுகளுக்குத் திட்டமிட்ட நோக்கங்களை EU- EASA எட்டும் என நாம் நம்புகிறோம்.

## ஒன்லைன் விமானப் போக்குவரத்து விழிப்புணர்வுத் திட்டம்

வளங்களை நேரடியாகப் பார்வையிட வைப்பதன் மூலம் பாடசாலை மாணவர்களுக்கு விமானப் போக்குவரத்து பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் திட்டத்தின் தொடர்ச்சி தொற்றுநோயால் ஏற்படும் சவால்கள் காரணமாக இனி சாத்தியமில்லை.

# தலைவரின் மதிப்பாய்வு

எனவே இதற்கு மாற்றாக CAASL குழுவானது எனது வழிகாட்டுதல் மற்றும் பணியாளர்களின் மேற்பார்வையின் கீழ், விழிப்புணர்வுத் திட்டத்தை ஒரு ஒருங்கிணைந்த தகவல் தொடர்புத் தளமாக மாற்றியது. அதாவது அடுத்த தலைமுறைக்கான CAASL இன் புதிய முயற்சியாக ZOOM திட்டமாக அது மாறியது, இந்த விழிப்புணர்வுத் திட்டத்தின் முதலாவது நிகழ்ச்சி அக்டோபர் 17 நடைபெற்றது. அதனையடுத்து ஆண்டு முழுவதும் 14 அமர்வுகள் நடந்தன. அவற்றில் நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த 1000 பாடசாலை மாணவர்கள் பங்கேற்றனர்.

## வேர்ல்ட் டிராவல் மார்ட் லண்டன் (WTM London)

இந்த நிதியாண்டில் பங்குபற்றும் நாடுகள் பயன்பெறும் வகையில் தொழில் வாய்ப்புகளை உருவாக்கவும் அவ்வாறான தொழில் வாய்ப்புகளை அபிவிருத்தி செய்யும் வகையிலும் தொழில் வல்லுநர்களை ஒருங்கிணைக்கும் முன்னணி உலகலாவிய நிகழ்வு நவம்பர் முதல்வாரம் லண்டனில் நடைபெற்றது. விமானத் துறை தொடர்பான வணிக அறிவை பகிர்ந்து கொள்ளவும், இலங்கையின் தொழிற்துறை அபிவிருத்திக்கு உதவக்கூடிய பிற நாடுகளின் புதிய விமானப் போக்குகளை கற்றுக் கொள்ளும் பாக்கியமும் இந்த உலகளாவிய நிகழ்வில் எனக்குக் கிடைத்தது.

## துபாய் விமானக் கண்காட்சி

துபாய் விமானக் கண்காட்சியை ஐக்கிய அரபு எமிரேட்ஸ் சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையுடனும் பாதுகாப்பு அமைச்சுடனும் இணைந்து ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அரசு நடத்தியது. இந்தக் கண்காட்சி 2021 நவம்பர் 14 - 18 வரை நடைபெற்றது. இது உலகின் மிகவும் வெற்றிகரமான மற்றும் தொலைநோக்குப் பிரதிநிதித்துவத் திட்டங்களில் ஒன்றாக தரவரிசைப்படுத்தப்பட்டது. இதில் பங்கேற்ற தொழில்சார் விமானப் போக்குவரத்து வல்லுநர்கள் மற்றும் மூத்த விமானிகளில் நானும் ஒருவனாவேன். இந்தக் கண்காட்சியில் நான் பெற்ற புதிய அறிவையும், அங்கு ஏற்படுத்திக் கொண்ட தொடர்புகளையும் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து துறையை அபிவிருத்தி செய்வதற்குப் பயன்படுத்துவேன்.

## சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்துத் தினம்

சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து தினத்தின் முதலாவது கொண்டாட்டம் 1994 டிசம்பர் 7 அன்று ICAO வின் 50 ஆவது ஆண்டு விழாவின் ஒரு பகுதியாகவும், 1996 டிசம்பர் 7 ஆம் திகதியை சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து தினமாக ஐக்கிய நாடுகள் பொதுச் சபை அங்கீகரித்ததற்கு ஏற்பவும் நடத்தப்பட்டது. டிசம்பர் 7 பொது விடுமுறையாக அறிவிக்கப்படாத போதிலும் அந்த தினம் சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து தினமாகக் கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டுக்கான தொனிப் பொருள் 'உலகளாவிய அபிவிருத்திக்கான புதுமைகளை முன்னெடுப்பது' ஆகும். இது 2023 வரை தொடரும். ICAO வின் நோக்கங்களை முன்னெடுத்துச் செல்வது என்ற கலந்துரையாடல் நிகழ்ச்சியொன்றை இலங்கை அரச தொலைக்காட்சிக் கூட்டுத்தாபனத்தின் ரூபவாஹினியில் ஒளிபரப்பு செய்ததன் மூலம் சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து தினத்தை இலங்கை கொண்டாடியது. CAASL இன் தலைவர் என்ற வகையில், ICAO வின் நோக்கங்கள் மற்றும் அதன் முன்னோக்கிச் செல்லும் வழி மற்றும் அதன் உறுப்பினராக இருப்பதன் நன்மைகள் ஆகியவற்றை விவரிக்கும் வகையில் நாட்டு மக்களுக்கு உரையாற்றும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது.

## நாட்டின் நிறைவேற்று ஜனாதிபதி CAASL ஐ பார்வையிடுகிறார்

சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து தினத்தை முன்னிட்டு, 2021 டிசம்பர் 23 இடம்பெற்ற வருடத்துக்கான நிறைவு நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளுமாறு விடுக்கப்பட்ட அழைப்பின் பேரில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸ கட்டுநாயக்கவிலுள்ள சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் தலைமை அலுவலக வளவுக்கு விஜயம் செய்தார். சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரிகள், ஊழியர்கள் மற்றும் இலங்கையின் சிவில் விமானப் போக்குவரத்து வரலாற்றில் அடையாளமாக இடம்பிடித்திருந்த மூத்த விமானிகள் குழுவின் அபிலாஷைகளைக் கேட்டறிவதற்கு ஜனாதிபதி நேரம் ஒதுக்கினார்.

# தலைவரின் மதிப்பாய்வு

இந்த சந்தர்ப்பத்தில் சிவில் விமானப் போக்குவரத்து துறையின் மூத்த அதிகாரிகள் தங்கள் பதவிக் காலத்தின்போது எதிர்கொண்ட சுவாரசியமான அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள முடிந்தது. நாட்டின் ஜனாதிபதியொருவர் சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபைக்கு முதல் முறையாக விஜயம் செய்ததை கொண்டாடும் வகையில் அவர்களுக்கு நினைவுச்சின்னங்கள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியின் ஞாபகார்த்தமாக 'நாக மரம்' ஒன்று நடப்பட்டது. அதனையடுத்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸ நிகழ்வில் கலந்து கொண்டமையைப் பாராட்டி நான் அவருக்கு நினைவுச் சின்னமொன்றை வழங்கினேன். போக்குவரத்து அமைச்சர், சிவில் விமானப் போக்குவரத்து மற்றும் ஏற்றுமதி வலய அபிவிருத்திகள் ராஜாங்க அமைச்சர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், சுற்றுலா மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சுக்களின் செயலாளர்கள், AASL தலைவர், ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் மற்றும் DGCA ஆகியவற்றின் தலைவர், மற்றும் CAASL நிர்வாக சபை உறுப்பினர்கள் இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

### புதிய தலைமுறைக்கான சிவில் விமானப் போக்குவரத்து வாய்ப்புகள்

ஆசிய பசுபிக் பிராந்தியங்களில் விமானப் போக்குவரத்து வேலைகளுக்கான உயர் வாய்ப்புக்கள் மற்றும் ICAO கணிப்பின் பிரகாரம் விமானப் போக்குவரத்து நிபுணர்களுக்கான தேவை அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டு, எங்கள் கல்வி அமைப்பில் சிவில் விமானப் பயணத்தை ஒரு பாடமாக்குவதை ஊக்குவிக்க விரும்புகிறேன். இது பற்றி அதிகாரிகளுடனான நீண்ட கலந்துரையாடலைத் தொடர்ந்து சிவில் விமானப் போக்குவரத்து பாடத்தை தரம் ஆறு முதல் பதினொன்று வரையிலான பாடப் புத்தகங்களில் சேர்ப்பதற்கு கல்வி அமைச்சின் செயலாளர் ஒப்புதல் அளித்த போது 'நம்பிக்கை ஒளி' தென்பட்டது. குறிப்பிட்ட பாடத்தில் மாணவர்கள் கணிசமான அறிவைப் பெறுவதற்கும், அவர்களின் எதிர்கால வாழ்க்கைப் பாடத்தைத் தீர்மானிப்பதற்கும் இது இடமளிக்கிறது.

### அதியுயர் பாதுகாப்பை நிலைநிறுத்தல் - விபத்துக்களற்ற ஆண்டு

மிகுந்த உயர் பாதுகாப்பு மற்றும் கவனம் தேவைப்படும் சூழலில், சட்டத்துக்குப் புறம்பாகத் தலையிடும் செயல்களுக்கு எதிராகப் பாதுகாப்பது தொடர்பான அனைத்து விடயங்களிலும் பயணிகள், பணியாளர்கள், தரைப் பணியாளர்கள், பொது மக்கள் ஆகியோரின் பாதுகாப்பை திருப்திப்படுத்தும் சர்வதேசக் கடமைகளை நிறைவேற்றும் பொறுப்பு CAASL சார்ந்தது. இந்த நோக்கத்தை வெற்றிகரமாக நிறைவேற்றி, விபத்துக்கள் இல்லாத ஆண்டை நாம் நிறைவு செய்துள்ளோம்.

### நிதிச் செயற்பாடு

தொற்றுநோய் காரணமாக விமானப் போக்குவரத்து நடவடிக்கைகளுக்கு மோசமான இடையூறுகள் ஏற்பட்ட போதிலும், 2020 ஆம் ஆண்டில் எங்கள் நிதிச் செயற்பாட்டை சிறிது சிறிதாக பதிவு செய்ய முடிந்தது. CAASL இன் நிதிச் செயற்பாட்டின் விரிவான கண்ணோட்டம் இந்த வருடத்தின் ஆண்டறிக்கையான நிதிநிலை அறிக்கை 2021 இல் இடம்பெறுகிறது.

**உபுல் தர்மதாச** CTC
தலைவர்
இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை

# சிவில் விமானப் போக்குவரத்து பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதம நிறைவேற்று அலுவலரின் மதிப்பாய்வு



**பல தசாப்தங்களுக்குப் பின்னர் இலங்கைக்கான எயார் பிரான்ஸ் சேவைகள் மீண்டும் மாலே ஊடாக இலங்கைக்கு திரும்பியமை இந்த வருடத்தின் மிக முக்கியமான அபிவிருத்தியாகும். மதிப்பு மிக்க வகையில் ஐரோப்பாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் விமான சேவை என்ற வகையில் எயார் பிரான்ஸின் வருகையானது நாட்டின் விமானப் போக்குவரத்து துறைக்கு விலைமதிப்பற்ற ஆதரவாக இருந்தது.**

# சிவில் விமானப் போக்குவரத்து பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதம நிறைவேற்று அலுவலரின் மதிப்பாய்வு

அதே காலப்பகுதியில் உலகில் நோய்த்தொற்று நிலைமை காரணமாக செயற்பாடுகளை நிறுத்தியிருந்த விமான சேவைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை இலங்கையின் சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை (CAASL) எடுத்தது. நுஅசையவநளஇ Qatar Airways, Kuwait Airways, Etihad Airways ஆகியவற்றைப் பின்பற்றி, வெளிநாட்டு மண்ணில் சிக்கித் தவிக்கும் இலங்கைப் பயணிகளைத் திருப்பி அழைக்கும் நடவடிக்கைகளில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியது.

கொவிட்-19 பின்னணி மற்றும் தொடர்புடைய சுகாதார வழிகாட்டுதல்களை கருத்திற்கொண்டு, விமானப் போக்குவரத்து அதிகாரிகள் ஆண்டின் முதல் பாதியில் உள்வரும் பயணிகளின் எண்ணிக்கையை மட்டுப்படுத்தினர். அத்துடன் சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையானது இலங்கைக்கு சமமான முறையில் இயக்கப்பட்ட விமான நிறுவனங்களிடையே பயணிகள் எண்ணிக்கையை ஒதுக்கீடு செய்தது. எவ்வாறாயினும் ஆண்டின் இரண்டாம் பாதியில் இந்த கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டன.

இலங்கையில் இயங்கி வந்த பெரும்பாலான விமான சேவைகள். பயணிகள் விமானங்களைப் பயன்படுத்தி சரக்கு ஏற்றிச் செல்வதற்கு தேவையான ஒழுங்குமுறை அனுமதிகளுடன் விமானத்துக்குள் சரக்குகளை ஏற்றிச் செல்லும் செயற்பாடுகளையும் தொடர்ந்தன. Lot Polish, Thai Air Asia, FlyDubai, Air Arabia, Turkish Airlines, IndiGo ஆகிய விமான நிறுவனங்கள் இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்ததையடுத்து ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸும் ஒரு முழுமையான மதிப்பீட்டுக்குப் பிறகு CAASL இன் செயற்பாட்டுப் பிரிவில் இருந்து விமானத்துக்குள் சரக்குகளை ஏற்றிச் செல்வதற்கான ஒப்புதலைப் பெற்றது. இதேவேளை Cathay Pacific, Qatar Airways, Emirates, Oman Airlines, Air China ஆகியவை இலங்கையின் வர்த்தகத் துறைகளை பெரிதும் ஊக்குவிப்பதன் மூலம் இலங்கைக்கான தமது திட்டமிட்ட சரக்கு சேவைகளைத் தொடர்ந்தன. இது Vietnam Airlines, Viet Jet, Ethiopian Airlines, Egypt Air ஆகியவை தற்காலிக சரக்கு விமானங்களை இயக்கியதுடன் இக்காலப்பகுதியில் முக்கியமாக இலங்கையின் ஆடைத் தொழிலுக்கான மூலப் பொருட்களை கிழக்கு ஆசிய நாடுகளில் இருந்து கொண்டு வந்தன. இலங்கை ஆடைத் தொழிற்துறையின் உற்பத்தியானது விமானப் போக்குவரத்தைப் பயன்படுத்தியே ஐரோப்பாவுக்கும் அமெரிக்காவுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டது.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸானது நைரோபி(கென்யா)க்கு புதிய சரக்கு விமான சேவையை ஆரம்பித்தது. கொழும்பு வழியாக அவுஸ்திரேலியாவுக்கு இந்த விமான சேவை தொடர்ந்து இயங்கத் தொடங்கியது. அத்துடன் இந்தியா, அவுஸ்திரேலியா, சீனா உட்பட பல இடங்களுக்கு சரக்கு விமானங்களை இயக்குவதன் மூலம் சரக்கு நடவடிக்கைகளில் தனது இடத்தை ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் பாதுகாத்துக் கொண்டது. இது தவிர இலங்கையில் பதிவு செய்யப்பட்ட சர்வதேச சரக்கு நிறுவனமான Fits Aviation இலங்கையில் சரக்கு நடவடிக்கைகளின் வளர்ச்சிக்கு ஆதரவாக இந்த ஆண்டில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட விமானங்களைப் பயன்படுத்தி வியட்நாம், பாகிஸ்தான், இந்தியா, மியன்மார், மாலைதீவுகள் ஆகிய இடங்களுக்கு ஆண்டு முழுவதும் தனது செயற்பாட்டை அதிகரித்தது. அத்துடன் புதிய சரக்கு செயற்பாட்டாளரான எயார் அஸ்தானா, கஸகஸ்தான் விமான சேவையூடாக இலங்கையின் சுற்றுலாத் துறைக்கு அடிக்கடி உதவும் வகையில் நடவடிக்கைகளை ஆரம்பித்தது.

பல தசாப்தங்களுக்குப் பின்னர் இலங்கைக்கான Air France சேவைகள் மீண்டும் மாலே ஊடாக இலங்கைக்கு திரும்பியமை இந்த வருடத்தின் மிக முக்கியமான அபிவிருத்தியாகும். மதிப்பு மிக்க வகையில் ஐரோப்பாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் விமான சேவை என்ற வகையில் எயார் பிரான்ஸின் வருகையானது நாட்டின் விமானப் போக்குவரத்து துறைக்கு விலைமதிப்பற்ற ஆதரவாக இருந்தது.

உலகெங்கும் உள்ள கப்பல்களில் பணிபுரியும் மாலுமிகளின் பரிமாற்றமானது இந்த ஆண்டில் குறிப்பிடத்தக்கவொரு பிரச்சினையாக இருந்தது. கொவிட்-19 நோய்த்தொற்று மற்றும் அதனுடன் தொடர்புடைய விமானங்கள் கிடைக்காதமை ஆகியவை மாலுமிகளின் பரிமாற்ற செயன்முறைக்குத் தடைகளை ஏற்படுத்தின. இந்த பிரச்சினையைத் தீர்க்கும் வகையில் இலங்கையின் விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்களை பயன்படுத்தும் கடற்படையினர் கடுமையான சுகாதார வழிகாட்டுதல்களின் கீழ் பரிமாற்றம் செய்வதை அனுமதிக்கும் வகையில் 2021 செப்டம்பர் வரை தொடர்ந்த இந்த வகையான செயற்பாடுகளுக்கும் பரிமாற்றங்களுக்கும் CAASL அனுமதி வழங்கியது. அதனையடுத்து, இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்ட பல நிறுவனங்களுடன் கடற்படையினரின் பரிமாற்றங்கள் தொடர்ந்தன. ஆண்டின் இறுதியில் IndiGo, Spicejet, Qatar Airways, Air Asia Philippine, Maldivian Airlines மற்றும் சில தற்காலிக வெளிநாட்டு விமான சேவைகள் இந்த செயற்பாட்டைத் தொடர்ந்தன. இது தொற்று நோயின் விளைவாக உருவான ஒரு புதிய வணிக வாய்ப்பு ஆகும்.

இலங்கையில் சிவில் விமானங்களின் பதிவேடு 2021 டிசம்பர் இறுதியில் மொத்தம் 80 ஆக உள்ளது. இதில் 25 பெரிய விமானங்கள் (MTOW>5700KGS), 43 இலகுரக விமானங்கள், 7 ஹெலிகொப்டர்கள், 4 பலூான்கள், 1 அல்ட்ரா லைட்கள் உள்ளன. இதற்கு

# சிவில் விமானப் போக்குவரத்து பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதம நிறைவேற்று அலுவலரின் மதிப்பாய்வு

மேலதிகமாக 3 புதிய விமானங்கள் 2021 டிசம்பர் இறுதிக்குள் பதிவு செய்யப்பட்டதுடன் 69 விமானங்கள் புதுப்பிக்கப்பட்டன. அதே காலப்பகுதியில் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் மற்றும் மட்டக்களப்பு விமான நிலையத்துக்கான வலய ஒழுங்கு முறைகள், பாதுகாப்பான விமான செயற்பாடுகளை ஏற்படுத்தும் வகையில் இருப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் எதிர்கால வெற்றிக்குத் தேவையான திறன்களையும் அறிவையும் பணியாளர்கள் வளர்த்துக்கொள்வதை உறுதி செய்யும் வகையில், தொலைநோக்குப் பார்வையுடன் இணைந்த பயனுள்ள பணியாளர்களை வளர்ப்பதற்கு, மனித மூலதன மேம்பாட்டில் CAASL தொடர்ந்து முதலீடு செய்தது. தற்போது 31-12-2021 அன்று மொத்தம் 176 பணியாளர்கள் உள்ளனர். இதில் 8 புதிய ஆட்சேர்ப்புக்கள் உள்ளடங்குகின்றன.

கொவிட்-19 பின்னணியில் உள்ளூர் மற்றும் சர்வதேச பயிற்சிகளில் உடல் ரீதியாகக் கலந்துகொள்வதில் நாங்கள் தடைகளை எதிர்கொண்டோம். எனவே பணியாளர்களின் திறமையை வளர்ப்பதற்காக அவர்களுக்கு பலதரப்பட்ட பயிற்சிகளை வழங்க ஒரு மாற்று நடவடிக்கையாக இணையத்தளத்தை பயன்படுத்தினோம். இந்த நோக்கத்துடன். 2021 ஆம் ஆண்டில் 124 பணியாளர்களுக்கு இணையத்தில் பயிற்சி அமர்வுகள் வழங்கப்பட்டன.

விமானப் போக்குவரத்து துறையின் ஆற்றல்மிக்க இயல்புக்கு அதன் வல்லுநர்கள் மிகவும் மேம்படுத்தப்பட்ட திறனையும் திறமைகளையும் பெற வேண்டும். இது தொடர்பாக, 69 உள்ளூர் வெளிநாட்டு பயிற்சிகள், கருத்தரங்குகள், பட்டறைகள், கூட்டங்கள், ஆய்வுகள் குறிப்பிட்ட காலப்பகுதியில் நடத்தப்பட்டன. 187 பணியாளர்கள் இதில் கலந்து கொண்டனர். இதன் மூலம் அவர்கள் இந்தத் துறையின் சமீபத்திய போக்குகள் பற்றிய புதுப்பிக்கப்பட்ட அறிவைப் பெறமுடிந்தது. இது முந்தைய ஆண்டு பயிற்சிகளை விட 30% அதிகமாகும்.

அரசன் இராவணன் மற்றும் அவனது விமான அறிவு பற்றிய கதை தொடர்ந்தும் மர்மமாகவே இருந்து வருகிறது. அது உறுதியான ஆதாரங்களுடன் தீர்க்கப்பட்டால் உலக வரலாற்றில் ஒரு புதிய பரிணாமம் திறக்கப்படும். அரசன் இராவணன் வாழ்ந்த இடங்கள் தொடர்பான ஆதாரங்கள் ஆவணப்படுத்தப்பட்டாலும், இலங்கையில் இராவணனின் செயற்பாடுகளின் முக்கியத்துவத்தை மதிப்பிடுவதற்காக பலர் அது தொடர்பான தளங்களுக்கு சென்று அது பற்றிய சுற்றுலா இலக்கியங்களைத் தொகுத்துள்ளனர். இந்த ஆண்டில் இலங்கையின் சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையும் (CAASL) இராவண மன்னனின் இழந்த மரபு மற்றும் விமான ஆதிக்கத்தின் பாரம்பரியம் பற்றிய ஆராய்ச்சியை நடத்தியது.

அத்துடன் CAASL பெருநிறுவன திட்டம், ஆண்டறிக்கை, வருடாந்த பணித் திட்டம், CAASL செயல் திட்டம், செழிப்பு மற்றும் மகிமை பற்றிய திட்ட அறிக்கை, புள்ளியியல் அறிக்கை, மத்திய வங்கி அறிக்கை, நிறுவன முடிவுகள் கட்டமைப்பின் முன்னேற்ற அளவீடு (ORF) ஆகியவற்றை நாம் நிதியாண்டின் நிலுவைத் திகதிக்கு முன்னரே பூர்த்தி செய்து சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களுக்கு சமர்ப்பித்துள்ளோம்.

CAASL இன் முதன்மை வருமான ஆதாரம், வெளிநாடுகளில் வாங்கப்பட்ட விமான டிக்கெட்டுகளுக்கு விதிக்கப்படும் கூடுதல் கட்டணம் மூலமாகவே தொடர்ந்தும் கிடைத்து வந்தது. எனவே, 2021 ஆம் ஆண்டுக்கான CAASL இன் மொத்த வருமானம் மற்றும் செலவு முறையே 1,128 மில்லியன் மற்றும் 707 மில்லியன் ரூபாய் ஆகும். 2021 ஆம் ஆண்டுக்கான வரிக்குப் பிந்திய நிகர லாபம் 330 மில்லியன் ரூபாயாக இருந்தது.

இந்த நிதியாண்டு முழுவதும் கொவிட்-19 நோய்த்தொற்று தொடர்பான தடைகள் இருந்தபோதிலும் CAASL ஆல் செய்யப்படும் முக்கிய பணிகள் மற்றும் செயற்பாடுகளை மேற்கூறிய விபரிப்பு கோடிட்டுக் காட்டுகிறது. 2021 ஆம் ஆண்டின் வேலைத் திட்டத்தை நிறைவு செய்வதற்கு அனைத்து ஊழியர்களும் வழங்கிய நேர்மறையான பங்களிப்புக்காக நன்றியைத் தெரிவிக்க இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்கிறேன். CAASL இன் செயற்பணியை சீராக மேற்கொள்வதற்கான தாராள ஆதரவையும் வழிகாட்டலையும் வழங்கிய CAASL தலைவர், துணைத் தலைவர் மற்றும் இயக்குநர்கள் குழுவின் அனைத்து உறுப்பினர்களுக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மேலும் CAASL இன் சிவில் விமானப் போக்குவரத்து பணிப்பாளர் நாயகமாகவும் தலைமை நிர்வாக அலுவலராகவும் எனது கடமைகளை நிறைவேற்றுவதற்கு ஆதரவு மற்றும் ஒத்துழைப்பு வழங்கியதுடன் அதற்கு வழிகாட்டியமைக்காக மாண்புமிகு சுற்றுலா அமைச்சர், விமானப் போக்குவரத்து மற்றும் ஏற்றுமதி வலயங்கள் அபிவிருத்திக்கான இராஜாங்க அமைச்சர் மற்றும் மேற்கண்ட அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் ஏனைய அனைத்து அதிகாரிகளுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.



**கேப்டன் தேமிய அபேவிக்ரம**
சிவில் விமானப் போக்குவரத்து பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதம நிறைவேற்று அலுவலர்
இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை

# CAASL விவரக்குறிப்பு

### பொதுநோக்கு

2002ம் ஆண்டு 34 ஆம் இலக்க சிவில் விமான சேவை அதிகாரசபைச் சட்டத்தின் பிரகாரம் 2002 டிசம்பர் 27 ஆம் திகதி இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகாரபை நிறுவப்பட்டது. இலங்கை ஜனநாயக சோசலிக குடியரசின் அரசியல் சாசனத்தின் 154 ஆம் பிரிவின் கீழ் கணக்குகளை கணக்காய்வு செய்யும் நோக்கில் இது ஓர் பொது முயற்சியாண்மை நிறுவனமாக கருதப்படுகின்றது.

2002 ஆம் ஆண்டு 34 ஆம் இலக்க இலங்கை சிவில் விமான சேவை அதிகாரசபை சட்டம் மற்றும் 2010 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்க சிவில் விமான போக்குவரத்துச் சட்டம் என்பனவற்றுக்கு அமைய உள்ளூர் குடிசார் வான்பயண தொழிற்துறையை ஒழுங்குபடுத்துவதும், பாதுகாப்பு, கவனம், வினைத்திறன், ஒழுங்கமைத்தல், சுற்றுச்சூழலுக்கு பொறுப்பு கூறல் உள்ளிட்ட காரணிகளில் உயர் செயற்திறனை வெளிப்படுத்தும் நோக்கில் பன்னாட்டு குடிசார் வான்பயண அமைப்பு (ICAO) ஏற்றுக்கொண்ட சர்வதேச தரநிர்ணயங்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நடைமுறைகள் என்பனவற்றுக்கு அமைவாக செயற்படுவதும் இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகாரசபையின் முதன்மை தொழிற்பாடாகும். தேசிய பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கும் நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும் இந்த நிறுவனம் பங்களிப்புச் செய்யும்.

இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகாரசபை எட்டு (8) சபை உறுப்பினர்களைக் கொண்டமைந்ததாகும். இதில் ஐந்து (5) உறுப்பினர்கள் சிவில் விமான போக்குவரத்து துறைக்கு பொறுப்பான கௌரவ அமைச்சரினால் நியமிக்கப்படுவர். பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், நிதி விவகார கௌரவ அமைச்சரின் பிரதிநிதி, சிவில் விமான போக்குவரத்து பணிப்பாளர் நாயகம் ஆகியோர் ஏனைய மூன்று உறுப்பினர்களாவர். அதிகாரசபையின் தவிசாளர், துணைத் தவிசாளர் ஆகியோரை சிவில் விமான போக்குவரத்து துறைசார் கௌரவ அமைச்சர் நியமிக்கின்றார். அமைச்சரவை அமைச்சர்களினால் நியமிக்கப்படும் சிவில் விமான போக்குவரத்து பணிப்பாளர் நாயகம், சட்டத்தின் பிரகாரம் அதிகாரசபையின் பிரதம நிறைவேற்று அலுவலர் ஆவார்.

நியமிக்கப்படும் உறுப்பினர்களின் பதவிக்காலமானது நியமனம் செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டுகள் (3) ஆகும்.

சிவில் விமான போக்குவரத்து துறைசார் கௌரவ அமைச்சரின் பொதுவான வழிகாட்டல்கள் மற்றும் கட்டுப்பாட்டில் இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகாரசபை இயங்கும்.

### பிரிவுகள் மற்றும் அலகுகள் பற்றிய பொதுநோக்கு

#### விமானத்தளம் மற்றும் வசதியளித்தல் பிரிவு

இலங்கையின் சிவில் விமானத்தளங்கள் குறித்த ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பணிப்பாளர் நாயகத்திற்கு உதவுவது சிவில் விமானத்தளப் பிரிவின் பொறுப்பாகும். சிவில் விமானத்தளம் என்பது தரையிலும் நீரிலும் அமைந்துள்ள விமானத்தளங்களை உள்ளடக்கியுள்ளது. இலங்கையில் காணப்படும் 14 விமானத்தளங்களில் ஐந்து விமானத்தளங்களுக்கு சிவில் விமான போக்குவரத்து அதிகாரசபை பொறுப்பானது. இவை உள்ளூர் மற்றும் சர்வதேச விமானத்தளங்கள் என்ற வகையீட்டுக்கு உட்பட்டுள்ளது. இலங்கையில் பெரும் எண்ணிக்கையிலான நீர்மேலான விமானத்தளங்கள் காணப்படுவதோடு இவற்றில் 11, சுற்றுலாப் பயணிகளை கவனத்தை ஈர்க்கக்கூடிய மிதவை விமான நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. பன்னாட்டு குடிசார் வான்பயண அமைப்பின் தர நிர்ணயங்கள் மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகளை (SARP) தேசிய சட்டம், தொடர்ச்சியான கண்காணிப்பு, கணக்காய்வு நடவடிக்கைகளுக்கு ஏற்றுக்கொள்வதன் மூலம் விமானத்தளங்களில் பாதுகாப்பானதும் வினைத்திறனானதுமான வானூர்தி செயற்பாடுகளை இந்தப் பிரிவு உறுதி செய்கிறது.

#### வான் வழிகாட்டல் சேவைப் பிரிவு

கொழும்பு விமான தகவல் பிராந்தியத்திற்குள் (கொழும்பு FIR) வான்வழிகாட்டல் சேவையை நிர்வாகம் செய்வது குறித்த விதிகள், ஒழுங்குவிதிகள் ஆகியனவற்றை உருவாக்குவதே வான்வழிகாட்டல் சேவைப் பிரிவின் அடிப்படை பொறுப்பாகும். பன்னாட்டு குடிசார் வான்பயண அமைப்பினால் நிறைவேற்றப்பட்ட (ICAO) சர்வதேச தரநிர்ணயங்கள் மற்றும் ஏற்றுக் கொள்ளப்பட்ட நடைமுறைகள் (SARP) என்பனவற்றை பின்பற்றுவதுடன், இலங்கை வான்வழிகாட்டல் சேவை வழங்குனர்களினால் இந்த தர நிர்ணயங்கள் அமுல்படுத்தப்படுவதனை உறுதி செய்தலும் இந்தப் பிரிவின் பொறுப்பாகும்.

#### பயிற்சி ஒழுங்கமைப்பு மற்றும் பணியாளர் உரிமம் பிரிவு

பயிற்சி அமைப்பு மற்றும் பணியாளர் உரிமம் பிரிவுவானது, பொருந்தக்கூடிய

# CAASL விவரக்குறிப்பு

சர்வதேச தரநிலைகள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளுக்கு இணங்க, சிவில் விமான போக்குவரத்து தொடர்பான பாதுகாப்பு உணர்திறன் நடவடிக்கைகளில் ஈடுபடும் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் பணியாளர்களின் சான்றிதழ் மற்றும் கண்காணிப்பு தொடர்பான விதிகள் மற்றும் நடைமுறைகளை உருவாக்குவதற்கு பொறுப்பாகும்.

### வானூர்தி செயற்பாடுகள் பிரிவு

விமானப் பாதுகாப்பு ஒழுங்குபடுத்தல் பிரிவின் கீழ் இயங்கும் வானூர்தி செயற்பாடுகள் பிரிவின் முக்கியப் பணியானது, பன்னாட்டு குடிசார் வான்பயண அமைப்பு (ICAO) ஏற்றுக்கொண்ட சர்வதேச தரநிலைகள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளுக்கு இணங்க (SARP), விமானச் செயற்பாட்டாளர்களின் பயனுள்ள பாதுகாப்பு மேற்பார்வைக்கான உள்நாட்டு விதிமுறைகள், விதிகள், உத்தரவுள், நடைமுறைகளை உருவாக்கும் முதன்மையான பொறுப்பைக் கொண்டுள்ளது.

### விமானப் பதிகை மற்றும் வான்தகைமை பிரிவு

ஏற்றுக்கொள்ளப்பட்ட தர நிர்ணயங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளுக்கு அமைய இலங்கையில் சிவில் வானூர்திகளைப் பதிவு செய்வதற்கான நடைமுறைகள் மற்றும் நியதிகளை உருவாக்கும் பொறுப்பு விமான பதிகை மற்றும் வான்தகைமை பிரிவினைச் சாரும். பராமரிப்பு பயிற்சி நிறுவனங்கள், தொடர் வான்தகைமை முகாமைத்துவ அமைப்புக்கள், விமான பராமரிப்பு நிறுவனங்கள் உள்ளிட்டனவற்றுக்கான அனுமதி வழங்குதல் மற்றும் அவற்றை கண்காணிக்கும் செயற்பாடுகளையும் இந்த பிரிவு தன்னகத்தே கொண்டுள்ளது.

### வான்பயண பாதுகாப்புப் பிரிவு

இலங்கை சிவில் விமான போக்குவரத்து நடவடிக்கைகளுக்கு பாதுகாப்பான சூழலை உறுதி செய்வதற்காக அனைத்து பன்னாட்டு குடிசார் வான்பயண பாதுகாப்புத் தரநிர்ணங்களையும் பூர்த்தி செய்யக் கூடிய வகையில், தேசிய சிவில் விமான போக்குவரத்து பாதுகாப்பு திட்டத்தின் மேம்பாடு, பராமரிப்பு மற்றும் அமுல்படுத்தும் பணிகளை முதன்மை நோக்கமாக கொண்டு வான்பயண பாதுகாப்பு பிரிவு செயற்படுகின்றது.

### வான்போக்குவரத்து மற்றும் பொருளாதார ஒழுங்குமுறைப் பிரிவு

இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகாரசபையின் பெருநிறுவன முகாமைத்துவ பிரிவின் கீழ் வான்போக்குவரத்து மற்றும் பொருளாதார ஒழுங்குமுறைப் பிரிவு செயற்படுகின்றது. இலங்கை விமான போக்குவரத்து துறையை ஒழுங்குபடுத்துவதே இந்த பிரிவின் பொறுப்பாகும்.

### மனிதவள மற்றும் ஆதன முகாமைத்துவப் பிரிவு

இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகாரசபையின் கடமைகளை உரிய முறையில் மேற்கொள்வதற்கு சரியான ஆளணி வளத்தை நியமித்துள்ளதனை மனிதவள மற்றும் ஆதன முகாமைத்துவ பிரிவு (HRPM) உறுதி செய்கின்றது. அதிகாரசபையில் தனிநபர்கள், ஊழியர் குழுக்களை வளர்ச்சியடையச் செய்வதற்கும் முன்னேறுவதற்கும் வழிவகுத்து ஊக்குவிக்கும் வாய்ப்புக்களை உருவாக்குகிறது. அதிகாரசபையின் சொத்துக்களை முகாமைத்துவம் செய்தல் மற்றும் அலுவலக நிர்வாகத்துக்கும் இந்தப் பிரிவே பொறுப்பாக செயற்படுகின்றது.

### நிதி மற்றும் வருவாய் முகாமைத்துவப் பிரிவு

CAASL அல்லது அரசாங்க கொள்கைகள், விதிகள், நடைமுறைகளுக்கு அமைய வரையறுக்கப்பட்ட நிதியியல் வளங்களை காத்திரமாகவும், வினைத்திறனாகவும் பொருளியல் ரீதியாகவும் முகாமைத்துவம் செய்யும் பொறுப்பு நிதி மற்றும் வருமாய் முகாமைத்துவ பிரிவினைச் சாரும். ICASL வெளியிட்ட ஏற்றுக்கொள்ளப்பட்ட இலங்கை கணக்கியல் கோட்பாடுகள், கணக்கீட்டு நியதிகள் என்பனவற்றுக்கு அமைவாக கணக்கு புத்தகங்களை பேணுதல் மற்றும் நிதியியல் கணக்குகளின் மெய்யான நிலைமையை வழங்குதல் ஆகியனவும் இந்தப் பிரிவின் பொறுப்புக்களாகும்.

### சுற்றாடல், ஆய்வு மற்றும் செயற்திட்டப் பிரிவு

சுற்றுச்சூழல் ஆராய்ச்சி மற்றும் திட்டப் பிரிவானது விமானப் போக்குவரத்து தொடர்பான ஆய்வுகளை நடத்துதல், CAASL புள்ளிவிவரத் திட்டத்தை நிர்வகித்தல், CAASL நிகழ்வுகளை நடத்துதல், பௌதீக உள்கட்டமைப்பு மேம்பாடுகள், CAASL ஆவணங்கள், அறிக்கைகள், இதழ்களை வெளியிடுதல் மற்றும் சர்வதேச விமானப் போக்குவரத்துக்கான கார்பன் உமிழ்வு மற்றும் குறைப்பு (CORSIA) திட்டத்தைச் செயல்படுத்துதல் ஆகிய பணிகளை மேற்கொள்வதோடு, CAASL இற்கான அனைத்து கொள்முதல்களையும் கையாளுகிறது.

# CAASL விவரக்குறிப்பு

### தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பப் பிரிவு

இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகாரசபையின் வர்த்தக மற்றும் சேவை தேவைகளுக்கான காத்திரமான, பாதுகாப்பான, நம்பகமான, பேண்தகு தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பினை வழங்குதல் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பிரிவின் பொறுப்பாகும்.

### சட்டவிவகார மற்றும் அமுலாக்கல் பிரிவு

இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகாரசபையின் சட்ட மற்றும் அமுலாக்கல் பணிகளை சீரமைப்பதனை பிரதான நோக்கமாக கொண்டு சட்ட விவகார மற்றும் அமுலாக்கல் பிரிவு (LA&E) இயங்குகின்றது. பன்னாட்டு சிவில் விமானப் போக்குவரத்து ஒப்பந்தங்களின் அங்கீகாரம்/ அணுகலுக்கு பொறுப்பாகவும், வான்போக்குவரத்து முதன்மை மற்றும் துணைச் சட்டங்களின் மதிப்பாய்வு, மேம்பாடு, இற்றைப்படுத்தல், CAASL இன் அமுலாக்கல் கொள்கை மற்றும் திறனை வலுப்படுத்தல், CAASL இன் உரிமைகள் மற்றும் நலன்களைப் பாதுகாத்தல் ஆகியன சட்ட விவகார மற்றும் அமுலாக்கல் பிரிவின் முதன்மை பொறுப்புக்களாகும்.

### தரம் மற்றும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகாரசபையின் இடர் முகாமைத்துவம், ஆளுகை மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு செயன்முறை என்பன காத்திரமான முறையில் இயங்குகின்றது என்பதனை தரம் மற்றும் உள்ளகக் கணக்காய்வு பிரிவு சுயாதீனமாக உறுதி செய்வதோடு, தேவையான தர தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்படுகின்றது என்பதனை உறுதி செய்கின்றது.

### வான்பயண பாதுகாப்பு கண்காணிப்புப் பிரிவு

விமான விபத்துகள், விபத்துக்கள் குறித்த விசாரணைகள் தொடர்பாக அரசாங்கத்தின் கடமைகளை உறுதி செய்வதும், ICAO இணைப்பு 13 மற்றும் இணைப்பு 19 என்பனவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள சர்வதேச தரநிர்ணயங்கள் மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகளுக்கு அமைய தேசிய பாதுகாப்புத் திட்டத்தை (SSP) செயற்படுத்தலும், நாட்டுக்குள் ஆளில்லா விமான செயற்பாடுகளை ஒழுங்கு நெறிப்படுத்துவதும், வான்பயண பாதுகாப்பு கண்காணிப்பு பிரிவினைச் சாரும்.

### சிவில் விமானப் போக்குவரத்து ஊக்குவிப்புப் பிரிவு

பொதுமக்கள் மத்தியில், குறிப்பாக பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட இளம் தலைமுறையினர் மத்தியில் விமான போக்குவரத்து குறித்த அறிவினை மேம்படுத்துவதன் மூலம் இலங்கையில் விமான போக்குவரத்து குறித்த கலாச்சாரத்தை உருவாக்கும் பொறுப்பு சிவில் விமான போக்குவரத்து ஊக்குவிப்புப் பிரிவினைச் சாரும். CAASL செயற்பாடுகளை இலத்திரனியல், அச்சு மற்றும் புதிய ஊடக தளங்களில் பிரச்சாரம் செய்வதன் மூலமும் விமான போக்குவரத்து குறித்த நம்பகமான செய்திகளை சமூகத்திற்கு கொண்டு சேர்ப்பதன் மூலமும் இந்தப் பணி முன்னெடுக்கப்படுகின்றது.

### வான்மருத்துவ சேவைப் பிரிவு

வான்மருத்துவ சேவைப் பிரிவானது, CAASL உரிமம் வைத்திருப்பவர்களின் மருத்துவ மதிப்பீட்டிற்கான வசதிகளை வழங்குவதோடு மட்டுமல்லாமல், பிற முக்கிய சிறப்புத் துறைகளான வான்மருத்துவப் பயிற்சி, ஆராய்ச்சி, ஊழியர்கள் மற்றும் பிற பங்குதாரர்களிடையே வான்மருத்துவ விழிப்புணர்வை உருவாக்குதல், நுழைவுப் பகுதிகளில் பொது சுகாதார சேவைகள், கண்காணிப்பு நடவடிக்கைகள், CAASL இன் பிற பிரிவுகள், வாடிக்கையாளர்கள், ஊழியர்களின் நலனை உறுதி செய்யும் பிற தொடர்புடைய பங்குதாரர்களுடன் எளிதாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்கிறது, மேலும், வான்மருத்துவ பிரிவானது, தேசிய மற்றும் விமானப் போக்குவரத்துத் துறைக்கு வான்பாதுகாப்பு தீர்வுகள் மற்றும் பொது சுகாதார பாதுகாப்பு தீர்வுகளை தொடர்ந்து வழங்குகிறது. வான்மருத்துவ சேவைப் பிரிவின் அனைத்து அம்சங்களும் வான்வெளியில் பாதுகாப்பை உறுதி செய்வதை இன்றியமையாக இலக்காகக் கொண்டுள்ளன.

### தொழில்நுட்ப நூலகம்

CAASL தொழில்நுட்ப நூலகமானது உள்ளக ஆவணங்களை நிர்வகித்தல், ICAO வெளியீடுகள், நடைமுறை ஒழுங்குவிதிகள், அரசாங்க வெளியீடுகள், அதிகாரசபையினதும் ஏனைய உள்ளூர் வான்பபோக்குவரத்துத் துறையினரதும் பொது ஆவணங்களை பெற்றுக்கொள்ளல் மற்றும் தரவுப்பரிமாற்றல் செய்யும் பொறுப்புக்களை வகிக்கின்றது. CAASL இன் அதிகாரபூர்வ இணைய தளத்தினை நிர்வகித்தல் மற்றும் உள்ளடக்க முகாமைத்துவம் ஆகிய பணிகள் தொழில்நுட்ப நூலகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 2016ம் ஆண்டு 12 ஆம் இலக்க தகவல் அறியும் சட்டத்தின் பிரகாரம் பொதுமக்களுக்கு தகவல்கள் வழங்கப்படுகின்றது. ICAO மற்றும் APAC என்பனவற்றுடன் கடிதப் போக்குவரத்தினை முகாமைத்துவம் செய்தல், அகில பாதுகாப்பு

# CAASL விவரக்குறிப்பு

கண்காணிப்பு கணக்காய்வு திட்டத்தினை நிர்வாகம் செய்தல், கடிதங்களை அனுப்பி வைத்தல் ஆகிய பணிகள் முன்னெடுக்கப்படுகின்றது. CAASL சார்பில் தொடர்ச்சியாக கண்காணிப்பு (USOAP-CMA) நடவடிக்கைகளையும் மேற்கொள்கிறது.

## இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகார சபையின் உறுப்பினர்கள்

### இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் 13 ஆவது சபை உறுப்பினர்கள்

| தொ. இல | பெயர் | பதவி |
|---|---|---|
| 01. | திரு. உபுல் தர்மதாச CTC | தலைவர் |
| 02. | திரு. அமித்த விஜயசூரிய | உபதலைவர் |
| 03. | திரு. நிஹால் ஜயவர்தன PC | CAASL உறுப்பினர் |
| 04. | திரு.டபிள்யு.எம்.எஸ். சமிந்த வெல்கம | CAASL உறுப்பினர் |
| 05. | கெப்டன் நவீன் டி சில்வா | CAASL உறுப்பினர் |
| **பதவிவழி உறுப்பினர்** | | |
| 06. | ஜெனரல் (ஓய்வுபெற்ற) கமல் குணரட்ன | CAASL உறுப்பினர்<br>பாதுகாப்பு துறைசார் அமைச்சரின் செயலாளர் |
| 07. | திருமதி அயந்தி டி சில்வா | CAASL உறுப்பினர்<br>நிதித் துறைசார் அமைச்சரினால் பரிந்துரை செய்யப்பட்ட பிரதிநிதி (பணிப்பாளர் நாயகம், செயல்திட்ட முகாமைத்துவ திணைக்களம் மற்றும் நிதி அமைச்சு கண்காணிப்பு) |
| 08. | கெப்டன் தேமிய அபேவிக்ரம | CAASL உறுப்பினர்<br>இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதம நிறைவேற்று அலுவலர் |

### அமைச்சு கண்காணிப்பாளர் - விமானப்போக்குவரத்து மற்றும் ஏற்றுமதி வலைய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு

| தொ. இல | பெயர் | பதவி |
|---|---|---|
| 01. | திருமதி அவந்தி சேனாரட்ன | விமான போக்குவரத்து மற்றும் ஏற்றுமதி வலய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் அமைச்சு கண்காணிப்பாளர், பணிப்பாளர் (விமான போக்குவரத்து) |

# பணிப்பாளர் சபை



























# பணிப்பாளர் சபை

**இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகாரசபையின் 13 ஆவது பணிப்பாளர் சபை உறுப்பினர்களது சுயவிவரங்கள்**

## (1) திரு. உபுல் தர்மதாச

*தலைவர்*

*CAASL உறுப்பினர்*

திரு. உபுல் கங்கநாத் தர்மதாச CTC சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் தலைவராக 14 ஜனவரி 2020 பெறுப்பேற்றார்.

1952 இல் பிறந்த திரு. உபுல் தர்மதாச, மாத்தறையிலுள்ள ராகுல, சில்வெஸ்டர், புனித தோமஸ் கல்லூரிகளில் பாடசாலைக் கல்வி பயின்றார். 1972 இல், சிலோன் ஹோட்டல் பாடசாலையில் பட்டம் பெற்று, சிலோன் ஓபராய் ஹோட்டலில் பணியாற்றினார். பின்னதாக எயார் சிலோனில் இணைந்து UTA பயிற்சி பெற்று, 1974-1979 வரை அங்கு பணிபுரிந்தார்.

1979 இல் 'லங்கா கல்யாணி' கேடட் பயிற்சிக் கப்பலில் இணைந்து கணக்கு எழுதுபவராக 1980 வரை பயணித்தார்.

1980 இல் அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்திலுள்ள லொஸ் ஏஞ்சலீஸ் நகருக்குக் குடிபெயர்ந்த திரு. உபுல் தர்மராச, உணவு மற்றும் ஊட்டச்சத்து பட்டப்படிப்பை முடித்தார். 1982-1987 வரை கலிபோர்னியாவின் சிறந்த மருத்துவமனைகளில் மருத்துவமனை உணவியல் நிபுணராகப் பணியாற்றினார்.

1984 இல் அமெரிக்காவில் பகுதிநேரமாக உபுல் ட்ராவல்ஸ் சேவை எனும் பயண வணிகத்தை ஆரம்பித்தார்.

1989 இல் 'இன்ஸ்டிடியூட் ஒ/ப் சேர்டிபிகேட் டிராவல் ஏஜென்ட் ஒ/ப் மாசசூட்ஸ்' நிறுவனத்திடமிருந்து பயணத்துறையில் மிக உயரிய தரச் சான்றிதழை பெற்றார். பயணத் துறையில் ஆலோசகராக CTC (சான்றழிக்கப்பட்ட பயண ஆலோசகர்) என்ற சிறப்புத் தரநிலை அவருக்கு வழங்கப்பட்டது. அவர் 1999 இல் அமெரிக்காவில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் GSA ஐ நிர்வகித்து பாதுகாத்தார்.

அவர் பயணச்சீட்டு மற்றும் சுற்றுலா தொடர்பான பகுதிகளில் தொடர்ச்சியான நிபுணத்துவ பயிற்சி பெற்றுள்ளார். மேலும் அமெரிக்காவில் 'அப்பர் கிளாஸ் டிராவல் இங்க்' என்ற பெயரில் ஒரு நிறுவனத்தை நிறுவி, 150,000 இற்கும் மேற்பட்ட பயண நிபுணர்களுக்கு சேவையாற்றியதோடு, முதல் வகுப்பு, வணிக வகுப்பு பயணங்களுக்கு விலைக்கழிவு வழங்கினார். 2006 ஆம் ஆண்டு கலிபோர்னியா மற்றும் நெவாடா மாநிலங்கள் முழுவதும் சொகுசு வாகன சேவைகளை வழங்கும் உயர்தர லிமோசின் சேவையை லொஸ் ஏஞ்சலீஸில் உருவாக்கினார். மேலும் 2009 ஆம் ஆண்டு லொஸ் ஏஞ்சலீசிலுள்ள இலங்கை லிமோசின் கூட்டமைப்பின் தலைவராக நியமிக்கப்பட்டார். 2011 இல் லொஸ் ஏஞ்சலீஸ், கலிபோர்னியாவில் UEI Inc எனும் நிதி நிறுவனத்தை உருவாக்கியதுடன் Utravel.com எனும் சர்வதேச பயண முன்பதிவு இயந்திரத்தை 2014 இல் உருவாக்கினார்.

அவர் இலங்கை மன்றக் கல்லூரியால் வழங்கப்பட்ட விதிவிலக்கான சாதனையாளர் விருது 2006 மற்றும் 2017 இல் இலங்கை அமெரிக்கா கலாச்சார அமைப்பினால் வழங்கப்பட்ட ஸ்ரீ அமெரிக்கா விருதை வென்றவர்.

1984 முதல் 2020 வரையான காலப்பகுதியில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்துக்கு வட அமெரிக்காவிலிருந்து 200 மில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிக வருவாயைக் கொண்டு வருவதில் திரு. உபுல் கங்கநாத் தர்மதாச முக்கிய பங்காற்றினார்.

தற்போது அவர் ஐக்கிய இராச்சியத்தின் டீஸ் வெலியின் மிடில்ஸ்பரோவில் உள்ள டீசைட் பல்கலைக்கழகத்தில் MBA படித்து வருகிறார்.

## (2) திரு. அமித்த விஜயசூரிய

*உபதலைவர்*

*CAASL உறுப்பினர்*

அமித்த விஜயசூரிய 1981 ஆம் ஆண்டு அப்போதைய தேசிய விமான நிறுவனமான வரையறு.எயர் லங்காவில் இணைந்தார். அவரது 38 வருட பதவிக் காலத்தில் அவர் இலங்கை மற்றும் வெளிநாடுகளில் உள்ள ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸில் பல சிரேஸ்ட முகாமைத்துவ பதவிகளை வகித்துள்ளார்.

இவரது செயற்பாட்டு நோக்கத்தின் முக்கிய சிறப்பம்சமாக மேன்மைதாங்கிய ஜனாதிபதி, மாண்புமிகு பிரதமர், அனைத்து அமைச்சரவை அமைச்சர்கள், கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் என அனைத்து VVIP பயணங்களையும் கவனிப்பது அமைந்தது. அமைச்சின் செயலாளர்கள், பொலிஸ்மா அதிபர், ஆயுதப் படை தலைவர்கள் ஆகியோரின் அனைத்து பயணங்களுக்கும்

# பணிப்பாளர் சபை

அவர் பொறுப்பாளராக இருந்தார். திரு. விஜயசூரிய விமானப் போக்குவரத்துத் துறையில் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல், மக்கள் தொடர்புகள், பதவி உயர்வுகள், அரசு மற்றும் பொது விவகாரங்கள் வரையிலான சிறந்த அனுபவத்தைக் கொண்டுள்ளார். அவர் ஓய்வு பெற்ற பின்னர், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸில் பொது மற்றும் அரசாங்க விவகாரங்களுக்கான ஆலோசகராக மீண்டும் நியமிக்கப்பட்டார்.

### (3) கேப்டன் தேமிய அபேவிக்ரம

*சிவில் விமானப் போக்குவரத்து பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதம நிறைவேற்று அலுவலர்*

*முன்னாள் பதவிநிலை உறுப்பினர்*

கேப்டன் தேமிய அபேவிக்ரம சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகம்/பிரதம நிறைவேற்று அதிகாரியாக, அவரது முன்னோடியான திரு.எச்.எம்.சி. நிமல்சிறி ஓய்வுபெற்றவுடன் 2020 ஏப்ரல் 1 பதவியேற்றார். சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகமாக பதவியேற்பதற்கு முன்பதாக கேப்டன் தேமிய குவைத்தில் உள்ள ஜசீரா எயார்வேஸில் மூத்த கேப்டனாக இருந்தார்.

கேப்டன் தேமிய 1990 இல் விமானத் துறையில் தனது புகழ்பெற்ற வாழ்வைத் தொடங்கியது எயார் லங்காவின் லொக்ஹீட் ட்ரைஸ்டார் கப்பற்படையில் விமானப் பொறியாளராக. அவர் விரைவாக முன்னேறி ட்ரைஸ்டாரில் முதல் அதிகாரியாகவும், பின்னர் ஏர்பஸ் கப்பற்படைக்கும், அதன்பின் ஏர்பஸ் A320/A330/A340 கப்பற்படைகளில் கேப்டனாகவும் பணியாற்றினார். நிறுவனத்துக்கு நியமிக்கப்பட்ட மேற்பார்வை விமானி மற்றும் அதிமுக்கிய பயணிகளின் விமானியாகவும் அவர் இருந்தார்.

அடுத்தபடியாக, 2008 ஆம் ஆண்டு கிங்பிஷர் எயார்லைன்சில் கேப்டனாகவும், எயார்லைனின் ஏர்பஸ் கப்பற்படையில் இந்திய சிவில் விமான போக்குவரத்து பணிப்பாளர் நாயகத்துக்கு நியமிக்கப்பட்ட மேற்பார்வை விமானியாவும் பணியாற்றினார். இந்திய சிவில் விமான போக்குவரத்து பணிப்பாளர் அலுவலக விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளின்படி கிங்பிஷர் வைட் பாடி கப்பற்படை பயிற்றுவிப்பாளர் மற்றும் விமானிகளுக்கான பயிற்சியின் அறிமுகத்தை தொடங்கிவைத்தார். அத்துடன் அதிமுக்கிய பயணிகளுக்கான விமானியாகவும் அங்கீகரிக்கப்பட்டார்.

2011 இல் மிஹின் லங்காவில் பயிற்சி மற்றும் தரநிலைகளுக்கான தலைமை விமானியாகப் பதவியேற்றார். அத்துடன் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைக்கு நியமிக்கப்பட்ட மேற்பார்வை விமானியாகவும், புத்தாக்கம் மிகுந்த கேடட் பைலட் அறிமுகம் மற்றும் பயிற்சித் திட்டங்களை செயற்படுத்துவதையும் பெறுப்பேற்றார். இந்தக் கடமையில் அவர் விமான நிறுவனத்தின் சார்பாக CAASL இன் பல ஒழுங்குமுறைத் தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டியிருந்தது. புதிய விமானங்களை அறிமுகப்படுத்தும்போது விமானங்ளின் ஏற்பு சோதனையை நடத்துவதுடன் சிறப்பு மற்றும் அதிமுக்கிய பயணர்களுக்கான விமானியாகவும் கேப்டன் தேமிய செயற்பட்டார்.

2015 இல் ஹிமாலயா எயர்லைன்ஸில் பொது முகாமையாளராகவும் செயற்பாட்டு பிரதிப் பணிப்பாளராகவும் இணைந்தபோது சூடான, வெயில் மிகுந்த இலங்கையிலிருந்து கேப்டன் தேமிய மலைப்பகுதியான நேபாளத்துக்கு இடம்பெயர்ந்தார். அங்கேயும் நேபாளத்தின் சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைக்கு நியமிக்கப்பட்ட மேற்பார்வை விமானியாக செயற்பட்டார். விமான சேவையானது அதன் விமான செயற்படுத்துநர் சான்றிதழை பெறுவதில் முக்கிய பங்காற்றிய குழுவில் இருந்தார். மேலும் நேபாளத்தின் சிவில் விமான போக்குவரத்து ஆணையத்தின் ஒழுங்குமுறை மற்றும் உரிமத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான விமானிகள் தொழில்நுட்ப ஊழியர்கள், கேபின் குழுவினருக்கான பயிற்சியை ஒருங்கிணைப்பதற்கும் பொறுப்பாக இருந்தார். மீண்டும் ஹிமாலயனுக்கு புதிய விமான ஏற்பு சோதனை விமானங்களை நடத்த அவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. நேபாள பிரதமர் சீனாவுக்கு பயணம் மேற்கொண்டபோது அதனை வழிநடாத்தும் பொறுப்பும் கேப்டன் தேமியவிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஹிமாலயா எயார்லைன்ஸில் இருந்து கேப்டன் தேமிய, 2016 இல் குவைத்தில் உள்ள வதனியா எயார்வேஸ் நிறுவனத்துக்கு இடம்பெயர்ந்தார். குவைத் சிவில் விமானப் போக்குவரத்து பணிப்பாளர் நாயகத்தின் தேவைகளின்படி அனைத்து ஒழுங்குமுறை அம்சங்களையும் நிறைவேற்றும் வகையில் செயற்பாட்டு இயக்குநராகப் பொறுப்பேற்றார்.

# பணிப்பாளர் சபை

விமான நிறுவனத்துக்கு அதன் விமான செயற்படுத்துநர் சான்றிதழைப் பெற உதவினார். அண்டை நாடுகளான சவூதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், பஹ்ரைன், எகிப்து, ஈராக், துருக்கி, லெபனான், இந்தியா, நேபாளம் மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுடன் விமான சேவையை ஒருங்கிணைத்தார். வதனியாவுக்கான விமான ஏற்பு சோதனை விமானங்களும் கேப்டன் தேமியவால் மேற்கொள்ளப்பட்டன.

கேப்டன் தேமிய தனது ஆரம்ப மற்றும் உயர் கல்வியை காலி ரிச்மண்ட் கல்லூரியில் பெற்றதோடு, கலிபோர்னியாவின் ஓக்லண்டில் உள்ள சியரா அகாடமி ஒ/ப் ஏரோநாட்டிக்ஸில் தனது விமானப் பயிற்சியைப் பெற்றார்.

### (4) மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) ஜி.டி.எச். கமல் குணரத்ன

*பாதுகாப்பு செயலாளர் - பாதுகாப்பு அமைச்சர்*

*முன்னாள் பதவிநிலை உறுப்பினர்*

ஜெனரல் கமல் குணரத்ன, இலங்கையின் முக்கியமான தலைமைத்துவ நபராவார். அவர் 28 டிசம்பர் 2020 அன்று இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் ஆயுதப்படைகளின் தளபதியான மேன்மைதாங்கிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால், நான்கு நட்சத்திர ஜெனரல் தரத்துக்கு உயர்த்தப்பட்டார்.

ஜெனரல் கமல் குணரத்ன (ஓய்வு) 35 ஆண்டுகளுக்கும் மேலான புகழ்பெற்ற இராணுவ வாழ்க்கையைக் கொண்ட துணிச்சலான இராணுவத் தலைவராவார். பல கட்டளை, பணியாளர் மற்றும் பயிற்றுவிப்பு நியமன அதிகாரங்களையும் கொண்டவர். இலங்கையின் அரசாங்க உத்தியோகத்தராக சுமார் இரண்டு வருடம் சேவையாற்றியுள்ள ஜெனரல் குணரத்ன, தற்போது பாதுகாப்பு அமைச்சு மற்றும் தேசிய பாதுகாப்பு – அனர்த்த முகாமைத்துவ அமைச்சு ஆகிய இரண்டிலும் செயலாளர் நியமனங்களை வகிக்கிறார். அரசாங்க நிர்வாக அமைப்பில் இவ்விரண்டும் முக்கிய நிர்வாக நியமனங்களாகும். இதன்மூலம் அவர் முதன்மை பாதுகாப்பு கொள்கை வகுப்பாளராகவும் பாதுகாப்பு/ தேசிய பாதுகாப்பு விடயங்களில் ஜனாதிபதிக்கு ஆலோசகராகவும் செயற்படுகிறார். ஜெனரல் குணரத்னவால் உள்வாங்கப்பட்ட மேலும் முக்கிய பொறுப்புக்களாக, ' பாதுகாப்பான நாட்டை, ஒழுக்கமான நல்லொழுக்கமுள்ள சட்டபூர்வமான சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கான' மற்றும் 'இலங்கையின் கிழக்கு மாகாண தொல்பொருள் பாரம்பரிய முகாமைத்துவத்துக்கான' ஜனாதிபதி செயலணியின் தலைவர் பதவிகளையும் அவர் வகிக்கின்றார்.

புகழ்பெற்ற சிரேஸ்ட இராணுவ அதிகாரியாக, இலங்கையின் சமகால யுத்த வரலாற்றில் சாதனைகளைப் படைத்துள்ளதோடு, இறுதிக்கட்டப் போரில் 53 ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதியாக அவர் ஆற்றிய பங்கு மிகவும் பாராட்டத்தக்கது. வன்னி பாதுகாப்புப் படைத் தளபதியாகப் பணியாற்றியுள்ளதோடு, தனது இராணுவப் பணியின் இறுதிக் கட்டங்களில் இராணுவத் தலைமையகத்தின் துணைத் தளபதி (AG), கட்டளைத் தளபதி (MGO) ஆகிய இரண்டு முதன்மைப் பணியாளர் நியமனங்களைப் பெற்றார். பொறிமுறை காலாட் படையணி, சிறப்புப் படைப் (SF) பிரிவு, கஜபா படைப்பிரிவு ஆகியவற்றின் மதிப்புமிகு படைத்தலைவர் பதவிகளையும் அவர் வகித்துள்ளார்.

அவர் பலுசிஸ்தான் பல்கலைக்கழகத்தில் போர்முறையின் கலையும் அறிவியலும் துறையில் முதுகலைப் பட்டம் பெற்றவர். இந்தியாவின் மதிப்புமிகு இராணுவ நிறுவனமான தேசிய பாதுகாப்புக் கல்லூரியில் தனது மிகவுயர்ந்த இராணுவக் கல்வித் தகுதியை (னெஉ) பெற்றார். மெட்ராஸ் பல்கலைக்கழகத்தில் 'பாதுகாப்பு மற்றும் மூலோபாய ஆய்வுகளில்' முதுதத்துவமாணி பட்டமும் பெற்றார்.

மேலும் அவர் இலங்கை இராணுவத்தில் பணிபுரிந்த காலத்தில் வெளிநாடுகளில் பல கருத்தரங்குகள், பட்டறைகள், மாநாடுகளில் கலந்துகொண்டுள்ளதோடு, பிரேசிலில் துணைத் தூதுவராக இராஜதந்திர துறையில் பணியாற்றியுள்ளார். இலங்கை வரலாற்றில் முதன்முறையாக போர் இலக்கியத்தைப் புதுமைப்படுத்திய எழுத்தாளரான இவர், இலங்கையின் புரட்சிகர போர் இலக்கிய உணர்வுகளாக மாறியுள்ள நூ லான 'நந்திக்கடலுக்கான பாதை' எனும் சிங்கள நூல் உட்பட ஏழு நூல்களை வெளியிட்டுள்ளார். மேலும், ஏழு பாடல்களை எழுதியுள்ள சிறந்த பாடலாசிரியரும் ஆவார். சித்ராணி குணரத்னவை மணந்த அவருக்கு ஒரு மகள் இருக்கிறார்.

## பணிப்பாளர் சபை

### (5) திருமதி பி.கே.அயந்தி டி சில்வா

*திறைசேரியின் பிரதிநிதி*
*திட்ட முகாமைத்துவம் கண்காணிப்புத் திணைக்கள பணிப்பாளர் நாயகம்*
*முன்னாள் பதவிநிலை உறுப்பினர்*

அயந்தி டி சில்வா நிதியமைச்சின் திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஆவார், இவர் கொள்கை முடிவுகளுக்காக அரசாங்கத்தின் முதலீடுகளிலிருந்து பெறுபேறுகளை அறிக்கையிடுவதற்குப் பொறுப்பானவர்.

பொது முதலீட்டில் இருந்து பொது மக்களுக்கு உத்தேசித்துள்ள பலன்களை வழங்குவதற்காக, செயல்படுத்தும் நிறுவனங்களை கண்காணித்தல், மதிப்பீடு செய்தல், வாதிடுதல் ஆகியவற்றுக்கான குழுவை அயந்தி வழிநடத்துகிறார்.

அயந்தி 1994 இல் பொதுச் சேவையில் உதவி பணிப்பாளராக இணைந்ததுடன் திறைசேரி துறையின் பிரிவுகளான பெருநிலை கொள்கை உருவாக்கம், தேசிய திட்டமிடல், தேசிய வரவு செலவுத் திட்டம், முடிவுகள் கண்காணிப்பு ஆகிய துறைகளில் தனது குறிப்பிடத்தக்க சேவையை வழங்கினார். அவர் தனது 27 வருட பணிக்காலத்தில் தேசிய நீர் வழங்கல் சபை, இலங்கை மின்சார சபை, தேசிய கல்வி ஆணைக்குழு, தொழிற்கல்வி தொழில்நுட்ப பல்கலைக்கழகம் உள்ளிட்ட 15 அரச நிறுவனங்களின் பணிப்பாளர் சபையின் முன்னாள் பதவிநிலை உறுப்பினர் அந்தஸ்த்தைக் கொண்டுள்ளார். அத்துடன் இலங்கையில் உள்ள பொருளாதார வல்லுநர்கள், மதிப்பீட்டாளர்கள், மக்கள்தொகை ஆய்வாளர்கள் ஆகிய 3 நிபுணத்துவ சங்கங்களில் செயல் உறுப்பினராகவும் உள்ளார்.

அவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் வணிகவியலில் இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டங்கள், அவுஸ்திரேலியாவின் / பிளிண்டர்ஸ் பல்கலைக்கழகத்தில் சர்வதேச அபிவிருத்தி, கொழும்பு பல்கலைக்கழகத்தில் மக்கள்தொகையியல் முதுகலை டிப்ளோமா ஆகிய இரண்டிலும் கௌரவங்களையும் பெற்றுள்ளார்.

### (6) திரு. நிஹால் ஜயவர்தன, ஜனாதிபதி சட்டத்தரணி

*CAASL உறுப்பினர்*

கண்டி புனித அந்தோனியார் கல்லூரியில் தனது பாடசாலைக் கல்வியைப் பெற்ற அவர் 1980 ஆம் ஆண்டு இலங்கை சட்டக் கல்லூரியில் நுழைந்தார். அங்கு 3 வருடங்களும் 10 மாதங்களும் நீடித்த ஜயவர்தன, இலங்கை உச்ச நீதிமன்றத்தின் சட்டத்தரணியாக 1983 நவம்பரில் பதிவுசெய்தார். 1984 ஜூலையில் சட்டமா அதிபர் திணைக்களத்தில் இணைந்தார்.

1990-91 கல்வியாண்டில் லண்டன் பல்கலைக்கழக கல்லூரியால் பொது சர்வதேச சட்டத்தில் முதுகலைப் பட்டம் அவருக்கு வழங்கப்பட்டது, மேலும் 1991 ஆம் ஆண்டில் அவரும் இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் உச்ச நீதிமன்றத்தின் வழக்கறிஞராகப் பதிவு செய்யப்பட்டார். விமான சட்டத் துறையில் பரந்த அனுபவத்தைக் கொண்ட ஜயவர்தன, சில காலம் சிவில் விமானப் போக்குவரத்துத் துறையின் சட்ட ஆலோசகராகப் பணியாற்றி, சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைச் சட்டம் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்துச் சட்டத்தின் வரைவுத் தயாரிப்பில் தீவிரமாகப் பங்கேற்றார். பல நாடுகளுடன் இருதரப்பு விமான சேவை ஒப்பந்தங்களின் பேச்சுவார்த்தையில் அவர் பங்கேற்றுள்ளார். 2004 இல் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் பணிப்பாளர் சபைக்கு நியமிக்கப்பட்ட அவர் 2013 ஜூலை வரை அந்தப் பதவியில் நீடித்தார்.

1996 முதல் பொது நிறுவன சீர்திருத்த அதிகாரசபையின் சட்ட ஆலோசகர் குழுவின் உறுப்பினராகவும் அவர் செயற்பட்டார். இந்தக் குழுவின் உறுப்பினராக 1996 முதல் 2005 வரை அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட அனைத்து முன்னணி அரச நிறுவனங்களின் மீள்கட்டமைப்பு திட்டங்களிலும் அவர் பங்கேற்றார். தேசிய விமான சேவையான எயார் லங்காவை தனியார் மயமாக்குதல், கொழும்புத் துறைமுகத்தின் சில பிரிவுகளை தனியார்மயமாக்குதல், பெருந்தோட்டம், காப்புறுதி, தொலைத்தொடர்புத் துறை ஆகிய அரசாங்க நிறுவன மீள்கட்டமைப்புகளில் பங்கு வகித்தார். 2003 ஏப்ரலில் அவர் இந்த சட்ட ஆலோசகர் குழுவின் தலைவராக பொறுப்பேற்றார். 2005 மேயில் பொதுச்சேவையில் இருந்து ஓய்வு பெறும் வரை அந்த பதவியில் பணியாற்றினார்.

## பணிப்பாளர் சபை

அவர் 2002 ஆம் ஆண்டில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் பெருநிறுவனப் பிரிவின் ஒட்டுமொத்த நிர்வாகத்தின் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். இந்தப் பிரிவு சுமார் 200 அரசாங்க நிறுவனங்களின் சட்டப் பணிகளைக் கையாண்டது.

அவர் மே 1993 முதல் நிறுவனச் சட்ட சீர்திருத்தச் செயல்பாட்டில் பங்கேற்றார், இதன் விளைவாக 2007 ஆம் ஆண்டின் நிறுவனங்கள் சட்டம் எண் 7 இயற்றப்பட்டது. சீர்திருத்தம் தேவைப்படும் பகுதிகள் மற்றும் அதன் பிறகு ஆய்வு மேற்கொள்ள நியமிக்கப்பட்ட துணைக் குழுவின் செயலாளராக அவர் ஆரம்பத்தில் செயல்பட்டார். நிறுவனத்தின் சட்ட ஆலோசனைக் குழுவின் ஆராய்ச்சி ஒருங்கிணைப்பாளராக, உலகளவில் நிறுவன சட்ட சீர்திருத்தங்களில் பரந்த அனுபவம் பெற்ற உலக வங்கியின் ஆலோசகர் ஒருவருடன் இணைந்து பணியாற்றினார். வரைவு செயல்பாட்டில் அவரது குறிப்பிடத்தக்க பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில் அவர் 1998 ஆகஸ்டில் நிறுவனத்தின் சட்ட ஆலோசனைக் குழுவின் உறுப்பினராக நியமிக்கப்பட்டு, அதில் ஆகஸ்ட் 2008 வரை தொடர்ந்து பணியாற்றினார்.

2002 ஆம் ஆண்டின் சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைச் சட்டம் மற்றும் 2010 ஆம் ஆண்டின் சிவில் விமானப் போக்குவரத்துச் சட்டத்தின் வரைவு செயல்முறையிலும், அதற்கு முன்பாக இருந்த தொன்மையான சட்ட ஆட்சிக்குப் பதிலாக அறிமுகப்படுத்தப்பட்ட நவீன கருத்துக்களை மேம்படுத்துவதிலும் அவர் தீவிரமாகப் பங்கேற்றுள்ளார்.

அவர் மே 2005 இல் தனியார் சட்டத் தொழிலுக்குத் திரும்பினார்.

1997 முதல் இலங்கை சட்டக் கல்லூரியின் கல்விப் பணியாளர்களுக்கு சிரேஸ்ட விரிவுரையாளராகவும், வணிகச் சட்டத்தின் பரீட்சார்த்தராகவும் அவர் சேவையாற்றி வருகிறார். இலங்கை சட்டக் கல்லூரியின் உயர் சட்டக் கற்கைகள் நிறுவகத்தில் பெருநிறுவனச்சட்ட விரிவுரையாளராகவும் பணியாற்றுகின்றார்.

அவர் சிவில் விமானப் போக்குவரத்துத் திணைக்களம், சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை, நகர அபிவிருத்தி அமைச்சு, வெகுஜன ஊடகம் மற்றும் தகவல் அமைச்சகத்தின் சட்ட ஆலோசகராகவும் பணியாற்றினார்.

2004 முதல் 2015 வரை கொழும்பு ஹில்டன் ஹோட்டலின் சொந்த நிறுவனமான ஹோட்டல் டெவலப்பர்ஸ் (லங்கா) லிமிடெட்டின் பணிப்பாளராகப் பணியாற்றினார், மில்கோ (பிரைவேட்) லிமிடெட், ஸ்ரீலங்கா லிபியா அக்ரிகல்சுரல் அண்ட் லைவ்ஸ்டாக் கோ. லிமிடெட் மற்றும் லங்கா சதொச நிறுவனத்தின் நிறுவகத் தலைவராகவும் பணிபுரிந்தார்.

விமானப் போக்குவரத்துச் சட்டம், பொதுச் சட்டம், பெருநிறுவன மற்றும் வணிகச் சட்டம் ஆகியவற்றில் சிறந்த ஆலோசகராக சட்டத் துறைக்கு அவர் ஆற்றிய பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில், 2012 ஆம் ஆண்டில் சனாதிபதி சட்டத்தரணியாக நியமிக்கப்பட்டார்.

அவர் 2021 இல் கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டத்தை வரைந்து இறுதி செய்த மூன்று வரைவாளர்கள் குழுவில் உறுப்பினராக இருந்தார். அவர் கம்பனிச் சட்ட ஆலோசனை ஆணைக்குழுவின் தலைவராக செயற்படுகின்றார். ஹட்டன் நஷனல் வங்கியின் பணிப்பாளராகவும் உள்ளார்.

### (7) கேப்டன் நவின் டி சில்வா

*CAASL உறுப்பினர்*

அமெரிக்காவின் புளோரிடாவிலுள்ள புகழ்பெற்ற ஃபிஜி பாதுகாப்பு சர்வதேச விமான பாடசாலையில் தனது படிப்பை முடித்த கேப்டன் நவின் டி சில்வா, இலங்கையின் உள்நாட்டுப்போர் உச்சகட்டத்தில் இருந்தபோது, தாய் நாட்டுக்கு சேவை செய்வதற்காக இலங்கை விமானப்படையில் தன்னார்வல விமானியாக இணைந்து தனது பறப்பியல் வாழ்வைத் தொடங்கினார்.

1986 இல் தேசிய விமான சேவையான எயார் லங்காவில் கேடட் விமானியாக சேர்ந்தார். அதன் பின்னர் கேப்டன் பதவிக்கு முன்னேறி, 25 ஆண்டுகளுக்கும் மேலாக பயிற்றுவிப்பாளராகவும் தேர்வாளராகவும் சான்றிதழ் பெற்றுள்ளார்.

தேசிய விமான சேவையில் இணைந்ததிலிருந்து A320 விமானப்படையின் தலைமை விமானி, விமான நடவடிக்கைகளின் தலைவர், கேடட் பயிற்சித் திட்டத்திற்குப் பொறுப்பான தலைமை விமானி ஆகிய நிர்வாகப் பதவிகளை வகித்துள்ளார்.

# பணிப்பாளர் சபை

கேப்டன் நவின் டி சில்வா, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிர்வாகத்திலும், தொழில்முறை விமானியாவும் பதவி வகித்த காலத்தில், விமானப் போக்குவரத்துத் துறை தொடர்பான பல்வேறு சர்வதேச மாநாடுகள், பயிற்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்றுள்ளார். தனது 38 வருட பணிக்காலத்தில் அவர் பெற்ற நுண்ணறிவைப் பயன்படுத்தி, இலங்கை விமானப் போக்குவரத்துத் துறையின் ஒரு முக்கிய நபராக இருந்துள்ளார்.

### (8) திரு.டபிள்யு.எம்.எஸ். சமிந்த வெலேகம

*CAASL உறுப்பினர்*

திரு. டபிள்யு.எம்.எஸ்.சி. வெலேகம, ஜனதா தோட்ட அபிவிருத்திச் சபையின் கீழ் பயிற்சி உதவி அத்தியட்சகராக தனது வாழ்க்கையை ஆரம்பித்து, தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவகம், தேயிலை ஆராய்ச்சி நிறுவனம் தலவாக்கலை, தெங்கு ஆராய்ச்சி நிலையம் லுணுவில ஆகியவற்றில் பயிற்சி பெற்றார். 32 வருட காலமாக பெருந்தோட்டக் கைத்தொழில் மற்றும் தனியார் துறையில் சிரேஸ்ட முகாமைத்துவத் திறனில் தனது சேவைகளை ஆற்றியுள்ளார்.இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தில் 2011- 2015 வரையில் பணிப்பாளராக கடமையாற்றிய அவர், தற்போது வரையறு. தெரணியகல பிளான்டேஷன்ஸ் (தனியார்) நிறுவனத்தின் தலைவராகப் பணியாற்றுகிறார். மேலும் பெட்ரோலிய பொருள் வணிகத்தில் ஈடுபட்டுள்ள வரையறு. சிம்பலங்கா ஹோல்டிங்ஸ் (தனியார்) நிறுவன இணை முகாமைத்துவப் பணிப்பாளராக கடமையாற்றுகிறார். மோட்டார் வாகன, கடல்சார், மின்மாற்றி மசகுப்பொருள் உற்பத்தி நிறுவனமான மலேசியாவின் வரையறு.ஹைராக்ஸ் (தனியார்) நிறுவனத்தின் பணிப்பாளராகவும், பிரிட்டிஷ் சிலோன் ஒத்துழைப்புத் தலைவராகவும் உள்ளார். ஜப்பானில் வெளிநாட்டு தொழில்நுட்ப உதவித்தொகைக்கான (AOTS) சங்கத்தின் கீழ் PIPF திட்டத்தின் பயிற்சியை வெற்றிகரமாக முடித்தார். இந்திய முகாமைத்துவ மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தில் 2003 இல் நிதி முகாமைத்துவ டிப்ளோமோவை முடித்தார்.

### (9) திருமதி. அவந்தி சேனாரட்ன

*விமான சேவைகள், ஏற்றுமதி வலைய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு*

*அமைச்சின் கண்காணிப்பாளர்*

திருமதி அவந்தி சேனாரட்ன விமான போக்குவரத்து, ஏற்றுமதி வலய அபிவிருத்திக்கான இராஜாங்க அமைச்சின் பணிப்பாளர் (விமான போக்குவரத்து) ஆவார்.

அவர் 17 வருட அனுபவமுள்ள இலங்கையின் முதல் வகுப்பு நிர்வாக அதிகாரியாவார். பொது நிர்வாக அமைச்சு, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு, விவசாய அமைச்சு ஆகியவற்றில் பல முக்கிய பதவிகளை வகித்து நாட்டுக்கு குறிப்பிடத்தக்க சேவையை வழங்கியுள்ளார்.

மலேசியாவின் சைன்ஸ் பல்கலைக்கழகத்தில் பொது நிர்வாகத்தில் முதுகலைப் பட்டத்தை (MPA) பெற்றுள்ளார், மேலும் கொழும்பு பல்கலைக்கழகத்தில் பொருளாதார அபிவிருத்தி டிப்ளோமாவையும் முடித்துள்ளார். கூடுதலாக, அவர் தேசிய கல்வி நிறுவனத்தில் கல்வியியல் முதுகலை டிப்ளோமா பெற்றுள்ளார். ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் இளங்கலை பட்டம் (BA) பெற்றார்.

திருமதி அவந்தி சேனாரட்ன தனது மதிப்புமிக்க அனுபவத்தையும் அறிவையும் கொண்டு, 2018 முதல் சிவில் விமானப் போக்குவரத்தின் பல முக்கிய அபிவிருத்தி திட்டங்களில் பங்களித்துள்ளார். மேலும், அவர் தனது காலத்தில் அரச பிரதிநிதிகள் குழுவின் உறுப்பினராக பல முக்கிய சிவில் விமானப் போக்குவரத்து மாநாடுகளிலும் பங்கேற்றுள்ளார்.

# CAASL இன் மூத்த முகாமைத்துவம்



**(1) திரு. ரைஹான் வன்னியப்பா**
*பணிப்பாளர் (விமான போக்குவரத்து மற்றும் பொருளாதார ஒழுங்குமுறை) தற். DDG விமான போக்குவரத்து மற்றும் பொருளாதார ஒழுங்குமுறை*

**(2) திரு. பி.ஏ.ஜயகாந்த**
*சிவில் விமானப் போக்குவரத்து மேலதிக பணிப்பாளர் நாயகம்*

**(3) கேப்டன் தேமிய அபேவிக்ரம**
*சிவில் விமானப் போக்குவரத்து பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதம நிறைவேற்று அலுவலர்*

**(4) திரு. உபுல் தர்மதாச CTC**
*தலைவர்*

**(5) திரு.அமித்த விஜயசூரிய**
*உபதலைவர்*

**(6) திரு. சமன் குணவர்தன**
*பிரதி பணிப்பாளர் நாயகம் (விமான பாதுகாப்பு ஒழுங்குமுறை)*

**(7) திருமதி. ஷெரீனா கசீர்**
*பிரதி பணிப்பாளர் நாயகம் (வானூர்தி சேவைகள் ஒழுங்குமுறை)*

**(8) திரு. மாலக்க தஸநாயக்க**
*பணிப்பாளர் - சுற்றுச்சூழல் ஆராய்ச்சி மற்றும் செயற்திட்டம்*

**(9) திருமதி. ரெமாஷா டி சில்வா**
*பணிப்பாளர் (தரம் மற்றும் உள்ளக கணக்காய்வு)*

**(10) திருமதி. மஞ்சுளா விக்ரமநாயக்க**
*பணிப்பாளர் (நிதி மற்றும் வருமான முகாமைத்துவம்)*

**(11) திரு.எம்.ஏ.கே.பிரசன்ன**
*பணிப்பாளர் (வான் வழிகாட்டல் சேவைகள்)*

**(12) திரு. சுகத் நாகஹாவத்த**
*பணிப்பாளர் (பயிற்சி ஒழுங்கமைப்பு மற்றும் பணியாளர் உரிமம்)*

**(13) கேப்டன் லுஷான் பெர்ணான்டோ**
*பணிப்பாளர் (விமான செயற்பாடுகள்)*

**(14) AVM (ஓய்வுபெற்ற) எச்.என். அபேசிங்க**
*பணிப்பாளர் (விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு)*

**(15) திருமதி ஷெர்மிலா மாகமமுதலி**
*பணிப்பாளர் (மனிதவளம் மற்றும் ஆதன முகாமைத்துவம்)*

**(16) திருமதி. பத்மி ஜயவர்தன**
*பணிப்பாளர் (வானூர்தி பதிவு மற்றும் வான்தகைமை)*

# சித்தாந்தத்திலிருந்து யதார்த்தத்துக்கு ஒழுங்குமுறையை எடுத்துக்கொள்ளல்





# இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை

## நிலைப்பாடு

நமக்கு மேலாகவுள்ள ஒரு பொதுச் சொத்தான வான்வெளியானது, நாட்டின் முன்னேற்றம், செழிப்பு மற்றும் நாட்டின் சந்ததியினருக்காக நிர்வகிக்கப்படவேண்டிய சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கான பரந்த சாத்தியப்பாடுகளைக் கொண்டுள்ளது.

## இலக்குகள்

- கவனம் மற்றும் பாதுகாப்பான விளைவு இலக்குகளை அடைதல் அல்லது விஞ்சுதல்
- பொருத்தமான முறையில் வளம் பெறுதல்
- தொழில்முறை மற்றும் தகுதியானவராக இருத்தல்
- பரந்த நம்பகத்தன்மையும் அங்கீகாரமும் பெறல்
- சாதனைகளை நிலைநிறுத்தல் அல்லது மேம்படுத்தல்
- எடுக்கப்பட்ட சகல செயற்பாட்டிலும் மிக உயர்ந்த ஆக்கத்திறனை அடைதல்
- சர்வதேச தரநிலைகள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளில் அதிக அளவு இணக்கத்தை பராமரித்தல்
- சிவில் விமானப் போக்குவரத்து திட்டமிடல் மற்றும் மேம்பாட்டுக்கு வலுவான உதவியாளராக இருத்தல்

## உத்திகள்

- பொருந்தக்கூடிய சர்வதேச தரநிலைகள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளுடன், சட்டப்பூர்வ செயற்பாடு மற்றும் சமூகக் கடமைகளை நிறைவேற்றுவதில், மேம்பட்ட மற்றும் சீரான செயற்படுத்துகை
- கணிசமான விமானப் போக்குவரத்துச் சிக்கல்களுக்கான தீர்வுகளை அடையாளம் கண்டு செயற்படுத்துதல்
- குறிப்பிட்ட கலாச்சார மாற்ற முயற்சிகளை அறிமுகப்படுத்தல்
- விமானத் தொழில்துறையுடன் ஒத்துழைப்பு மற்றும் கூட்டாண்மையில் பணியாற்றுதல்
- வெளிப்படையாகவும் நிலைபேறாகவும் செயற்படுவதோடு, புறவெளியிலும் உள்ளகத்திலும் திறம்படத் தொடர்பு கொள்ளுதல்
- அனைத்து ஆவணங்கள், பொருட்கள் மற்றும் உள்ளக நடைமுறைகளின் செயற்திறனையும் நிலைத்தன்மையையும் பராமரித்தல்

## விழுமியங்கள்

CAASL மற்றும் அதன் ஊழியர்கள் செய்யவேண்டியவை:

- விமானப் பாதுகாப்புக்கு முன்னுரிமையும் முக்கியத்துவமும் வழங்கி பாதுகாப்பு கலாச்சாரத்தை மேம்படுத்துதல்
- CAASL வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் சேவைகளை அதிகரித்தல்
- மேற்கொள்ளும் அனைத்து செயல்களிலும் ‘முடியும்’ என்ற மனப்பான்மையை கொண்டிருத்தல்
- நம்பகமாக, யதார்த்தமாக, நிலைத்தன்மையுடன் இருத்தல்
- தொடர்ச்சியான முன்னேற்றத்துக்காக மாறுவதற்குத் தயாராக இருத்தல்
- வெற்றியை அடைய ஒன்றிணைந்து பணியாற்றல்
- திறந்தமனம், நேர்மை, வெளிப்படைத் தன்மையுடன் இருத்தல்
- அனைத்து நடவடிக்கையிலும் செயற்திறன், ஆக்கத்திறன், ஒழுங்குமுறைகளை ஊக்குவித்தல்
- சக ஊழியர்களை நம்புதல் மதித்தல் ஊடாக குழுப்பணியை நிலைநாட்டல்
- சகலரது பங்களிப்புக்கும் மதிப்பளித்தல்
- சமூக பொறுப்புகளையும் கடமைகளையும் அங்கீகரித்தல்
- செய்யும் பணியை மகிழ்வுடன் அனுபவித்தல்
- தொழில்முறை அணுகுமுறையில் பெருமிதம் கொள்ளுதல்
- வீட்டையும் பணிச்சூழலையும் சமநிலையாகப் பேணல்

## CAASL இன் உடனடி இலக்குகள்

- வணிக விமானத்துறையில் ஏற்படும் அபாயகரமான விபத்துகளைத் தடுத்தல்
- சிவில் விமானப் போக்குவரத்தில் விமானக் கடத்தலையும் சட்டவிரோத தலையீடுகளையும் தடுத்தல்
- பொதுவான விமான விபத்துக்களைத் தடுத்தல்
- விமான நிலைய தரைத்தளத்தில் நிகழும் விமானம்சார் அபாயகரமான விபத்துக்களைத் தடுத்தல் பொறியியல், பராமரிப்பு பட்டறைகளில் ஏற்படும் விபத்துக்களைக் குறைத்தல்
- பொறியியல், பராமரிப்பு பட்டறைகளில் விமானம்சார் விபத்துக்களைக் குறைத்தல்
- குறித்த-நேரப் புறப்பாட்டில் ஏற்படும் தாமதங்களைக் குறைப்பதில் துணைநிற்றல்
- விமான சேவைத் தரம் மேம்படுத்தலை ஊக்குவித்தல்
- பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு, விமான நிலையங்களில் நெரிசலைக் குறைத்தல் மற்றும் பயணிகள் செயற்பாட்டை துரிதப்படுத்தல்
- விமானப் போக்குவரத்தில் செயற்பாட்டுச் செலவை

குறைப்பதிலும் கழிவுகளை அகற்றுவதிலும் உதவுதல்

- சுற்றுச்சூழலுக்கு விமானப் போக்குவரத்தால் நிகழும் பாதக விளைவுகளைக் குறைக்க உதவுதல்
- சிவில் விமானப் போக்குவரத்தின் சாத்தியமான நன்மைகள் பற்றி பாடசாலை மாணவர்களுக்கு கற்பித்தல்
- அடுத்த தலைமுறை விமானப் போக்குவரத்து வல்லுநர்களைத் தயார்படுத்தல்

## எதிர்பார்த்த பெறுபேறுகள்

- சிவில் விமானப் போக்குவரத்துத் துறையில் அரசின் சர்வதேசக் கடமைகளை நிறைவேற்றுதல் மற்றும் சர்வதேச தரநிலைகளை அமுல்படுத்தி தொடர்ந்து செயற்படுத்துதல் மற்றும் SARPS இன் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளை திறம்பட செயற்படுத்துவதை மிக உயர்ந்த அளவில் பதிவு செய்தல்
- தடைகளும் கட்டுப்பாடுகளும் இல்லாத இலங்கையின் சிவில் விமானப் போக்குவரத்து அமைப்புக்கான சர்வதேச அங்கீகாரம் மற்றும் அரசின் விமானப் போக்குவரத்து முறைக்கு எதிராக ICAO இனால் எழுப்பப்படும் பாதுகாப்புக் கவலைகளைத் தவிர்த்தல்
- சிவில் விமானப் போக்குவரத்தில் பாதுகாப்பு, கவனம், ஒழுங்குமுறை, செயற்திறன் ஆகியவற்றை மேம்படுத்துவதன் மூலம் விமானப் போக்குவரத்து அமைப்பில் பொதுமக்களின் நம்பிக்கை மேம்பாடு
- அதிகரித்த வாடிக்கையாளர் திருப்தி
- அதிகார சபையின் மேம்பட்ட நிதிச் செயற்திறன்

## வெளியீடு

| வெளியீட்டு வகை | வெளியீடு |
|---|---|
| கொள்கை அறிவுரை | அரசாங்கத்துக்கும் பிற அமைப்புக்களுக்கும் ஆலோசனை வழங்கல் |
| | சட்டவாக்க சீர்திருத்தங்கள் |
| | விதிமுறைகளை மேம்படுத்தல் |
| | தரநிலைகளை செயற்படுத்துவதில் மேம்பாடும் அறிக்கையிடலும் |
| | விமானப் போக்குவரத்துக் கொள்கை மேம்பாடு |
| | நடைமுறைக் கையேடுகளை மேம்படுத்தல் |
| | விமானப் போக்குவரத்து உட்கட்டமைப்புக்கான பிரதான திட்டமிடல் |
| பாதுகாப்பு மதிப்பீடும் சான்றுப்படுத்தலும் | இடர் முகாமைத்துவம் |
| | விமான நிலையம், விமானத்தளம் ஆகிய துறைகளின் பாதுகாப்பு |
| | பொது விமானத் துறைப் பாதுகாப்பில் விமான நிறுவன பாதுகாப்பு |
| | பணியாளர் உரிமப் பாதுகாப்பு |
| | விமானமோட்டும் பயிற்சியில் பாதுகாப்பு |
| | விமானப் பராமரிப்பில் பாதுகாப்பு விமான சேவைகள் துறை பாதுகாப்பு இடர் முகாமைத்துவம் |
| பாதுகாப்பு பகுப்பாய்வு, தகவல் மற்றும் மேம்பாடு | பாதுகாப்பு புலனாய்வு |
| | பாதுகாப்பு பகுப்பாய்வு |
| | பாதுகாப்பு தகவல், கல்வி, ஊக்குவிப்பு |
| | விமான விபத்து, சம்பவ விசாரணைகள் மற்றும் பாதுகாப்பு பரிந்துரைகளை செயற்படுத்தல் |
| ஒப்புதலளித்தல் | விமான அட்டவணை ஒப்புதல் |
| | விமானக் கட்டண ஒப்புதல் |
| | பயண முகவர் சான்றுப்படுத்தல் |
| | விமானத்தை பதிவுசெய்தல் |
| | விமான உதிரிப் பாகங்களை இறக்குமதி செய்வதற்கான அங்கீகாரம் |
| | உயர் கட்டமைப்பு கட்டுமானங்களுக்கான அங்கீகாரம் |
| | GSA இற்கான அங்கீகாரம் |
| | சர்வதேச நடவடிக்கைகளுக்கான உள்நாட்டு விமான சேவைகளின் நியமனம் |
| பாதுகாப்பு மதிப்பீடு | சிவில் விமானப் போக்குவரத்துத்துறை பாதுகாப்பு இடர் முகாமைத்துவம் |
| நடைமுறைப்படுத்தல் | ஒழுங்குமுறை மீறல்களுக்கான பதில்கள் |
| | பொது சுகாதாரம் மற்றும் சுகாதாரத் தேவைகளை நடைமுறைப்படுத்தல் |
| அரசாங்கத்துக்கான உதவி | விமான நிறுவனங்களிடமிருந்து விமானமேறல் வரி அறவிடல் |

# ஒழுங்குமுறை நோக்கெல்லை

2021 ஆம் ஆண்டின் முடிவில் சிவில் விமானப் போக்குவரத்து ஒழுங்குமுறை நோக்கெல்லை பின்வருமாறு இருந்தது.

| ஒழுங்குமுறை துறைகள் | 2021 | 2020 | மாற்றம் |
|---|---|---|---|
| **விமான நிலையங்கள்** | | | |
| உள்நாட்டு தரை விமான நிலையங்கள் | **11** | 11 | 0 |
| உள்நாட்டு நீர்மேலான விமான நிலையங்கள் | **11** | 11 | 0 |
| சர்வதேச விமான நிலையங்கள் | **3** | 3 | 0 |
| **விமான சேவைகள்** | | | |
| உள்ளூர் வான் சேவையில் ஈடுபடும் உள்நாட்டு விமான சேவைகள் | **5** | 7 | -29 |
| சர்வதேச வான் சேவைகளில் ஈடுபடும் உள்நாட்டு விமான சேவைகள் | **2** | 2 | 0 |
| சர்வதேச வெளிநாட்டு விமான சேவைகள் | **36** | 39 | -8 |
| **பயிற்சி அமைப்புக்கள்** | | | |
| பறப்பியல் பாடசாலைகள் | **8** | 8 | 0 |
| வகை மதிப்பீட்டு பயிற்சி நிலையங்கள் | **2** | 3 | -33 |
| பொறியியல்/பராமரிப்பு பாடசாலைகள் | **4** | 4 | 0 |
| சிவில் விமானப் போக்குவரத்து பயிற்சி மையங்கள் | **1** | 1 | 0 |
| **வான் வழிகாட்டல்** | | | |
| வான் வழிகாட்டல் சேவை வழங்குநர்கள் | **1** | 1 | 0 |
| **விமானத்தின் பதிவு மற்றும் வான் தகைமை** | | | |
| பெரிய விமானம் (அதிகபட்ச புறப்பாட்டு எடை 5700 கிலோ மற்றும் மேல்) | **25** | 29 | -14 |
| **சிறிய விமானம் (அதிகபட்ச புறப்பாட்டு எடை 5700 கிலோவிற்கும் குறைவு)** | | | |
| இலகுரக போக்குவரத்து விமானம் | **43** | 42 | 2 |
| அல்ட்ரா-லைட் விமானம் | **1** | 2 | -50 |
| உலங்குவானூர்திகள் | **7** | 9 | -22 |
| வெப்பக்காற்று பலூன் | **4** | 6 | -33 |
| **செயற்கை பயிற்சி சாதனங்கள் பறக்கும் பயிற்சி சாதனங்கள்** | | | |
| » உள்நாட்டு முழுவிமான சிமுலேட்டர்கள் - A 320/A 330/ ஒருங்கிணைந்த குழு பயிற்சியாளர் | **3** | 3 | 0 |
| » ATC சிமுலேட்டர் | **1** | 1 | 0 |

# ஒழுங்குமுறை நோக்கெல்லை

| ஒழுங்குமுறை துறைகள் | 2021 | 2020 | மாற்றம் |
|---|---|---|---|
| **ஊழியர் உரிமம்** | | | |
| மாணவர் விமானி உரிமம் வைத்திருப்போர் | **211** | 114 | 85 |
| தனியார் விமானி உரிமம் வைத்திருப்போர் | **173** | 87 | 99 |
| வணிக விமானி உரிமம் வைத்திருப்போர் | **306** | 176 | 74 |
| வான்போக்குவரத்து விமானி உரிமம் வைத்திருப்போர் | **448** | 295 | 52 |
| வான்போக்குவரத்து கட்டுப்பாட்டு உரிமம் வைத்திருப்போர் | **54** | 49 | 10 |
| விமான பராமரிப்பு பொறியாளர் உரிமம் வைத்திருப்போர் | **1** | 1 | 0 |
| விமான பராமரிப்பு உரிமம் வைத்திருப்போர் | **81** | 144 | -44 |
| விமான அனுப்புநர் உரிமம் வைத்திருப்போர்/விமான இயக்க அதிகாரி உரிமம் | **1** | 0 | 0 |
| கேபின் குழு உறுப்பினர் சான்றிதழ் வைத்திருப்போர் | **176** | 96 | 83 |
| விமானப் பயிற்றுனர்கள் | **1** | 1 | 0 |
| உதவி விமானப் பயிற்றுனர்கள் | **8** | 3 | 167 |
| தரை பயிற்றுனர் உரிமம் வைத்திருப்போர் | **3** | 6 | -50 |
| விமான ஆய்வாளர்கள் | **6** | 6 | 0 |
| நியமிக்கப்பட்ட மேற்பார்வை விமானிகள் | **20** | 20 | 0 |
| சிவில் விமானப் போக்குவரத்து மருத்துவ பரிசோதனையாளர்கள்/மருத்துவ மதிப்பீட்டாளர்கள் | **6** | 6 | 0 |
| சான்றளிக்கப்பட்ட விமான பாதுகாப்பு ஸ்கிரீனர்கள் | **648** | 452 | 43 |
| சான்றளிக்கப்பட்ட விமான பாதுகாப்பு பயிற்றுநர்கள் | **14** | 13 | 8 |
| சான்றளிக்கப்பட்ட விமான பாதுகாப்பு முகாமையாளர்கள் | **20** | 2 | 900 |
| **வான் போக்குவரத்து சேவை வழங்குநர்கள்** | | | |
| உலகளாவிய விநியோக சேவை வழங்குநர்கள் | **4** | 4 | 0 |
| வான் போக்குவரத்து சேவை வழங்குநர் உரிமம் வைத்திருப்போர் | **309** | 348 | -11 |
| வான் போக்குவரத்து சேவை வழங்குநர் உரிமம் - குழு A | **298** | 329 | -9 |
| வான் போக்குவரத்து சேவை வழங்குநர் உரிமம் - குழு B | **11** | 19 | -42 |
| பொது விற்பனை முகவர்கள் | **23** | 24 | -4 |

# CAASL இன் ஆளுகையும் பொறுப்புடமையும்

## அதிகார சபையின் வகிபாகம்

அதிகாரசபையின் பிரதான வகிபாகம் பின்வருமாறு பட்டியலிடப்பட்டுள்ளது, எனினும் வரையறுக்கப்படவில்லை

- நாட்டின் சிவில் விமான போக்குவரத்து துறை குறித்த திட்டமிடல்களின்போது கௌரவ சிவில் விமான போக்குவரத்து துறை அமைச்சர் மற்றும் ஏனைய அரசாங்க பங்குதாரர்களின் கருத்துக்கள் பிரதிபலிக்கப்படுவதனை உறுதி செய்யும் வகையிலான தொடர்பாடல்களை மேற்கொள்ளல்.
- சிவில் விமான போக்குவரத்து துறையில் கொள்கைகள் மற்றும் இலக்குகளை நிர்ணயம் செய்தல், CAASL இன் நோக்கங்களை அடைவதற்கு அதன் நிறுவன செயற்திறனைக் கண்காணித்தல், சிவில் விமான போக்குவரத்து துறையில் அரசாங்கத்தின் குறிக்கோள்களை பிரதிபலிக்கும் வகையில் CAASL இன் பெருநிறுவன திட்டத்தை புதுப்பித்தல்.
- பிரதம நிறைவேற்று அலுவலர் பதவியையும் வகிக்கும், சிவில் விமான போக்குவரத்து பணிப்பாளர் நாயகத்திடமும், சபை உறுப்பினர்களிடமும் இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகாரசபையின், குறிப்பிட்ட நோக்கங்களை அடைவதற்கான பொறுப்புக்களை ஒப்படைத்தல்.
- திறமையான தகுதியான ஊழியர்களை பணிக்கு அமர்த்தல் மற்றும் அவர்களுக்கான ஊதியத்தை நிர்ணயம் செய்தல், CAASL இன் தொழிற்பாடுகள், கடமைகளை நிறைவேற்றுவதற்கான நிபந்தனைகள் மற்றும் வரையறைகள் என்பனவற்றை நிர்ணயித்தல்.
- CAASL இன் பெருநிறுவன திட்ட அமுல்படுத்துகையை நோக்கிய சிவில் விமான போக்குவரத்து திட்டம் மற்றும் முன்னேற்றம் என்பனவற்றில் கௌரவ. சிவில் விமான போக்குவரத்து துறை அமைச்சருக்கு பொறுப்புக்கூறல்.

## சபை உறுப்பினர்கள்

விமான போக்குவரத்து மற்றும் சுற்றுலாத்துறை கௌரவ அமைச்சர், 2002 ஆம் ஆண்டின் CAASL சட்டம் 34 இன்கீழ் தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் சிவில் விமான போக்குவரத்து அதிகாரசபைக்கு உறுப்பினர்களை நியமித்தார்.

திரு. உபுல் தர்மதாச CTC மற்றும் திரு. அமித்த விஜயசூரிய ஆகியோர் முறையே தலைவர் மற்றும் உபதலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

## பணிப்பாளர் சபை மற்றும் ஆளுகை

அதிகாரசபையின் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் வியாபாரம், நிர்வாகம், நிதியியல், சட்டம், விமானப் போக்குவரத்து தொழிற்துறை உள்ளிட்டவற்றில் பன்முக திறனையும் அனுபத்தையும் கொண்டவர்கள். இதனால் சிவில் விமான போக்குவரத்து தொடர்பான கொள்கைசார் பிரச்சினைகள் குறித்து பரந்துபட்ட கருத்துப் பதிவுகளையும் எண்ணக்கருக்களையும் தன்னகத்தே கொண்டவர்கள்.

நியமனத்தின் பின்னர், அனைத்து உறுப்பினர்களும் சிவில் விமான போக்குவரத்து அதிகாரசபையின் சிறந்த நலன்களுக்காக செயற்பாடுவார்கள் என்பதுடன், அதிகாரசபை எடுக்கும் தீர்மானங்களில் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்பதையும் அதிகாரசபைக்கு வெளியே தனிப்பட்ட நபர்களுக்கு தனியான ஆளும் வகிபாகம் கிடையாது என்பதனையும் ஏற்றுக்கொள்வார்கள் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

CAASL இன் நோக்கங்களை அடைவதற்கான பொருத்தமான கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை உருவாக்குவதற்காக, பிரதம நிறைவேற்று அலுவலர் ஒருவரை நியமித்து அவருக்கு அதிகாரங்களையும் திட்டங்களையும் அதிகாரசபை வழங்கியுள்ளது. அதிகாரசபையின் முன்னோக்கிய திட்டம் மூன்றாண்டுகளுக்கு ஒரு தடவையான பெருநிறுவன திட்டத்தினை உள்ளடக்கியுள்ளது. பயிற்சி நிகழ்ச்சித் திட்டம், வரவு செலவுத் திட்டம், கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டம் ஆகியன வருடாந்த வேலைத்திட்டத்தின் ஊடாக திறம்பட கண்காணிக்கப்படுகின்றது. இந்த திட்டங்கள் ஒவ்வொரு ஆண்டின் ஆரம்பத்திலும் அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்படுகின்றது. தற்பொழுது வரையறுக்கப்படாத அனைத்து விடயங்களிலும் சபைத் தீர்மானங்கள் ஊடாக அதிகாரசபையானது பிரதம நிறைவேற்று அலுவலருக்கு வழிகாட்டல்களை வழங்குகின்றது, இவ்வாறான தீர்மானங்களை நிறைவேற்றுவது பிரதம நிறைவேற்று அலுவலரின் கடமையாகும்.

## அதிகாரசபையின் நிறைவேற்று அதிகாரங்கள்

2002ம் ஆண்டு 34 ஆம் இலக்க இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை சட்டத்தின் பிரகாரம் அமைச்சரவை அமைச்சர்கள் சிவில் விமானப் போக்குவரத்து பணிப்பாளர் நாயகத்தை நியமிக்கின்றனர், இவரே அதிகார சபையின் பிரதம நிறைவேற்று அலுவலராகவும் சட்டத்தின் பிரகாரம் கடமையாற்றுவார்.

அவர், அமைச்சரவை அமைச்சுக்களால் தீர்மானிக்கப்படும்

# CAASL இன் ஆளுகையும் பொறுப்புடமையும்

தொழில் நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளுக்கு உட்பட வேண்டும். இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகாரசபை சட்டம் அல்லது பொருந்தக்கூடிய எழுதப்பட்ட சட்டங்கள் மற்றும் அதிகாரசபையின் பொது நிர்வாக தொழிற்பாடுகள் என்பவற்றுக்கு அமைய ஒப்படைக்கப்பட்டுள்ள அனைத்து கடமைகள் மற்றும் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகம் சட்டத்தினால் அவருக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொழிற்பாடுகளை சுயாதீனமான முறையில் மேற்கொள்வார் என்பதனை அதிகாரசபை ஒப்புக்கொள்கின்றது. எவ்வாறெனினும், கடமைகளையும் தொழிற்பாடுகளையம் மேற்கொள்வதற்கு அவர் CAASL இன் வளங்களை அங்கீகரிக்கப்பட்ட நடைமுறைகள் மற்றும் வழிகாட்டல்களின் அடிப்படையில் பயன்படுத்திக்கொள்ள முடியும்.

## அதிகாரசபையின் குழுக்கள்

அபிவிருத்தி திட்டங்களை அமுல்படுத்தல், வடிவமைத்தல், குறிப்பிட்ட பிரச்சினைகள் குறித்து கூடுதல் கவனம் செலுத்தல் ஆகிய நோக்கங்களுக்காக ஊழியர் குழு, கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ஆகிய இரண்டு (02) நிலையியற் குழுக்களை அதிகாரசபை நிறுவியுள்ளது. ஒவ்வொரு குழுவிற்கும் அதிகாரசபையின் இலக்குகளையும் குறிக்கோள்களையும் எட்டுவதற்கும், நிறுவனத்தின் முன்னேற்றத்தை நிறுவுவதற்கும் கண்காணிப்பதற்கும் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. பின்வரும் குழுக்களுக்கு அதிகாரங்களை வழங்கப்பட்டுள்ளாலும், அதிகாரசபையானது தேவைப்படும் ஏதேனும் அல்லது அனைத்து விடயங்களிலும் தனது அதிகாரத்தை தொடர்ந்து பயன்படுத்தலாம்.

## ஊழியர் குழு

ஊழியர் குழுவானது அதிகாரசபையின் பின்வரும் விடயங்களுக்கு பொறுப்பானது,

- நிறுவன நிர்வாக கட்டமைப்பினை ஏற்றல், தேவையான நேரங்களில் அதில் திருத்தங்களை செய்தல்
- சம்பளம் மற்றும் ஆளணி எண்ணிக்கையை நிர்ணயம் செய்தல்
- ஊழியரை தெரிவு செய்தல், ஆட்சேர்ப்பு, நியமனம், பதவி உயர்வு, பதவி இறக்கம், ஓய்வுறுத்தல், பணி நீக்கம் மற்றும் ஏனையவை
- ஆட்சேர்ப்பு முறைமையின் மேம்பாடு அல்லது திருத்தங்கள் மேலும் எப்போது அது தேவை என நிர்ணயித்தல்
- CAASL ஊழியர் விதிகள் மற்றும் நிர்வாக நடைமுறைகளை மேம்படுத்தல்
- CAASL காரியாலய நடைமுறைகளை மேம்படுத்தல்
- ஊழியருக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கைகள்
- CAASL ஊழியருக்கான ஒழுக்காற்று நடைமுறைகளை மேம்படுத்தல்
- CAASL இன் பெருநிறுவனத் திட்டங்களை தேவையான சந்தர்ப்பங்களில் மீளமைத்தல், புதுப்பித்தல்
- CAASL இன் வருடாந்த தொழில் திட்டம், பயிற்சி கொள்கைகள், நடைமுறைகள், நிகழ்ச்சிகளை கண்காணித்தல்
- CAASL ஊழியருக்கு புலமைப் பரிசில் நிதியுதவி மற்றும் வெளிநாடுகளில் பயிற்சி பெறுவதற்கான நிதி உதவிக்கு அனுமதி வழங்குதல்
- அசையும் அசையா சொத்துக்களை கொள்வனவு செய்வதற்கான அனுமதி அல்லது இவ்வாறான சொத்துக்கள் குறித்து திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி செய்வதற்கான அனுமதி
- முற்கூட்டியே ஓய்வு பெறுவோர் அல்லது பிரிவடையும் DCA ஊழியருக்கான நட்டஈட்டுத் திட்டங்களை உருவாக்கல்
- CAASL ஊழியருக்கான சமூக நலன்புரித் திட்டங்களை உருவாக்குதல்

ஊழியர் குழு CAASL இன் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டமைந்துள்ளது

(1) திரு. உபுல் தர்மதாச (தலைவர்)

(2) கெப்டன் தேமியா அபேவிக்ரம (உறுப்பினர்)

(3) திரு. நிஹால் ஜயவர்தன. PC (உறுப்பினர்)

## கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு பின்வரும் விடயங்களுக்கு பொறுப்பானது

- தரம் மற்றும் உள்ளக கணக்காய்வு பிரிவு ஆகியவற்றின் பொறுப்புக்களைத் தீர்மானித்தல், வருடாந்த கணக்காய்வுத் திட்டத்தை மீளாய்வு செய்தல்
- நிறுவனத்தின் சகல செயற்பாடுகளினதும் உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகளை மீளாய்வு மற்றும் மதிப்பாய்வு செய்தல்
- செலவு செயல்திறனை உறுதி செய்வதற்கும், வீண்செலவுகளை தவிர்ப்பதற்கும் நிறுவனத்தின் செயல்திறனை சீரான இடைவெளியில் மதிப்பாய்வு செய்தல்

# CAASL இன் ஆளுகையும் பொறுப்புடமையும்

- புற கணக்காய்வாளர்களுடன் தொடர்பு கொள்ளல், கணக்காய்வாளர் நாயகத்தின் முகாமைத்துவக் கடிதங்களுக்குப் பதிலளித்தல்
- சட்டங்கள், ஒழுங்குமுறைகள், விதிகள், சுற்று நிருபங்கள் என்பனவற்றுக்கு அமைவாக செயற்படுவதனை உறுதி செய்தல்
- கணக்கியல் நியமங்களுக்கு அமைவாக நிதியியல் அறிக்கைகள் காணப்படுவதை மதிப்பாய்வு செய்து உறுதிப்படுத்தல்
- உள்ளக, வெளியக கணக்காய்வு அறிக்கைகளை மதிப்பாய்வு செய்து, தீர்வுத் திட்டங்களை பரிந்துரை செய்து முகாமைத்துவ கடிதங்களை அனுப்பி வைத்தல்
- பொது முயற்சியாண்மை குழுவின் வழிகாட்டல்கள் பரிந்துரைகள் என்பனவற்றை அமுல்படுத்தல், மதிப்பாய்வு செய்தல்
- ஆண்டறிக்கையில் உள்ளடக்குவதற்கு தேவையான குழுவின் கண்டறிதல்கள் அடங்கிய அறிக்கையை தயாரித்தல்
- அதிகாரசபையால் தேவை என கோரப்படும் சந்தர்ப்பத்தில், அனைத்து வகையான கணக்காய்வு விடயங்களையும் அறிக்கையிடல்.

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டமைந்தது

(1) திருமதி அயந்தி டி சில்வா (தலைவர்)

(2) திரு. சமிந்த வெல்கம (உறுப்பினர்)

(3) திருமதி அவந்தி சேனாரட்ன (தற்காலிக உறுப்பினர்)

## இலங்கை NGAP திட்டத்தின் தேசிய குழு

- இலங்கையின் அடுத்த தலைமுறை வான்பயண தொழில் வல்லுனர் (NGAP) திட்டம் குறித்த பன்னாட்டு குடிசார் வான்பயண அமைப்பின் (ICAO) எண்ணக்கரு

எதிர்வரும் காலத்தில் திறமையான வான்வயணத் துறைசார் வல்லுனர்களுக்கு பற்றாக்குறை ஏற்படக்கூடும் என சர்வதேச வான்பயண சமூகத்தால் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, இந்த முக்கிய பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கில் அடுத்த தலைமுறை வான்பயண தொழில் வல்லுனர் (NGAP) என்ற திட்டத்தை பன்னாட்டு குடிசார் வான்பயண அமைப்பு அறிமுகம் செய்துள்ளது. எதிர்காலத்தில் பன்னாட்டு வான்பயண முறைமையை இயக்குவதற்கும், நிர்வகிப்பதற்கும், பராமரிப்பதற்கும் ஆயத்தமாக தகுதியான, திறமையான வல்லுனர்கள் இருப்பார்கள் என்பதை இத்திட்டம் உறுதிப்படுத்துகிறது.

இலங்கை NGAP திட்டத்தின் தேசிய குழுவானது, அடுத்த தலைமுறை வான்பயண தொழில் வல்லுனர்களுக்கு, திட்டத்தின் நோக்கம், குறிக்கோள், பிரதான செயற்திட்டம் குறித்த பொறுப்புக்களை எவ்வாறு நிறைவேற்றுவது என்பது குறித்த உதவிகளை வழங்குகின்றது.

இலங்கை NGAP நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கங்கள் வருமாறு,

- தொழிந்துறை பங்குதாரர்களின் நீண்டகால அடிப்படையிலான மனிதவளத் தேவைகளை அடையாளம் காண்பதற்கும், வான்பயணத் துறை நிபுணர்களை ஈர்ப்பதற்கும், கற்றுக் கொடுப்பதற்கும், பயிற்சி அளிப்பதற்கும், அவர்களைத் தொடர்ந்தும் துறையில் தக்கவைத்துக் கொள்வதற்குமான மூலோபயங்களை உருவாக்குதல் குறித்து தொடர்பாடுதல், உதவுதல் ஆகிய நோக்கங்களைக் கொண்ட தேசிய மன்றத்தை நிறுவுதல்.
- அடுத்த தலைமுறையினருக்குத் தேவையான கருவிகள், வழிகாட்டல்களை தொழிற்துறையினால் வழங்குதல், விமான போக்குவரத்து துறையை சாத்தியமான தொழிந்துறையாக இளைஞர்கள் மத்தியில் மேம்படுத்தல்

# CAASL இன் ஆளுகையும் பொறுப்புடமையும்



*"இலங்கையின் அடுத்த தலைமுறை வான்பயண தொழில் வல்லுனர் நிகழ்ச்சியின் தேசியக் குழு"*

### இலங்கையின் அடுத்த தலைமுறை வான்பயண தொழில் வல்லுனர் நிகழ்ச்சியின் தேசியக் குழு

**பிரதான ஆலோசகர்**
திரு. உபுல் தர்மதாச CTC
(CAASL தலைவர்)

**ஆலோசகர்**
திரு. அமித்த விஜயசூரிய

இலங்கை NGAP நிகழ்ச்சித் திட்ட தேசிய குழுவில் பின்வரும் அதிகாரிகள் அங்கம் வகிக்கின்றனர்,

### இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை

(1) கேப்டன் தேமியா அபேவிக்ரம - தலைவர்

(2) திரு. பி.ஏ. ஜயகாந்த - துணைத் தலைவர்

(3) திரு. கிம்ஹான் தபரெரா - செயலாளர் மற்றும் NGAP தேசிய இணைப்பாளர்

(4) திரு. என். நவஜீவன் - துணைச் செயலாளர்

(5) திரு. ரைஹான் வன்னியப்பா - ஆலோசகர்

(6) திரு. கே.எம்.எம்.என். திஸாநாயக்க - விமானப் போக்குவரத்து கல்வி அபிவிருத்திக் குழுவின் பிரதானி

(7) திரு. பிரபாத் குலரத்ன - விமான போக்குவரத்து விழிப்புணர்வுக் குழுவின் பிரதானி

### வரையறு.இலங்கை விமான நிலைய, விமானப் போக்குவரத்து சேவை நிறுவனத்தின் பிரதிநிதிகள்

(1) திரு. தெவின்த அபேகுணவர்தன

(2) திரு. திவான்க வீரசிங்க

### வரையறு.ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் பிரதிநிதிகள்

(1) திருமதி. ஜயனி சேனாநாயக்க

(2) திரு. ரச்சித்த வித்தாரணகே

### சிவில் விமானப் போக்குவரத்து அபிவிருத்தி மற்றும் கல்விக் குழு (CADEC)

சிவில் விமான போக்குவரத்து செயற்பாடுகள் குறித்து பொதுமக்களுக்கும் எதிர்கால தலைமுறையினருக்கும் (பாடசாலை மாணவர்) தெளிவூட்டுவதனை இலக்காகக் கொண்டு 2020 ஆகஸ்டில், சிவில் விமானப் போக்குவரத்து அபிவிருத்தி மற்றும் கல்விக் குழு (CADEC) நிறுவப்பட்டது. திட்டமிடல், அபிவிருத்தி, அமுல்படுத்தல் தொடர்பிலான விசேட நிகழ்ச்சிகள் இந்தக் குழுவினால் முன்னெடுக்கப்படுகின்றது. இந்தக் குழுவுக்கு பிரதம நிறைவேற்று அலுவலர், பணிப்பாளர் நாயகம் தலைமை தாங்குவதுடன் மேலதிக பணிப்பாளர் நாயகம் உதவிகளை வழங்குகிறார். பணிப்பாளர் நாயகத்தால் பிரேரிக்கப்பட்ட, பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகாரசபையின் ஊழியர்கள் இந்த குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்படலாம்.

### பங்குதாரர்களுடனான உறவு

பங்குதாரர்களுடன் நெருக்கமானதும் தொடர்ச்சியானதுமான உறவைப் பேணுவதற்கான பொறுப்பை அதிகாரசபை ஏற்றுக்கொள்கின்றது. குறிப்பாக சிவில் விமான போக்குவரத்துத் துறைசார் கௌரவ அமைச்சரின் எதிர்பார்ப்புக்களை புரிந்து கொண்டு செயற்படுதலை ஒப்புக்கொள்கிறது.

### அதிகாரசபை மற்றும் மூத்த முகாமைத்துவத்தின் பொறுப்புக்கள்

சிவில் விமான போக்குவரத்து அதிகாரசபையின் வினைதிறனான தொழிற்பாடுகளுக்கு

# CAASL இன் ஆளுகையும் பொறுப்புடமையும்

அடிப்படையானது யாதெனில், பிரதம நிறைவேற்று அலுவலர் தலைமையிலான மூத்த முகாமைத்துவத்திற்கும் அதிகாரசபைக்கும் இடையிலான வகிபாகம் தொடர்பிலான தெளிவான வரையறைகளேயாகும்.

உயர்மட்டக் கொள்கைகள் மற்றும் மூலோபாயங்களை வகுத்தலிலும் அந்த நோக்கங்களை அடைகின்றதா என்பதைக் கண்காணித்தலிலும் அதிகாரசபை கவனம் செலுத்துகிறது. தற்போதைய கொள்கைகளில், ஒழுங்குமுறைகளில் அல்லது நெறிமுறைகளில் எந்த இடத்தில் குறிப்பிட்ட சில நடைமுறைகள் இருக்கக்கூடாது என்பதான வழிகாட்டல்களை அதிகாரசபை வழங்குகின்றது.

இந்த உயர்மட்டக் கொள்கைகள், மூலோபாயங்கள் என்பவற்றை உரிய முறையில் அமுல்படுத்துவதற்கான பொறுப்பு பிரதம நிறைவேற்று அலுவலர் தலைமையிலான மூத்த முகாமைத்துவத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்க சிவில் விமானப் போக்குவரத்துச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட வான்பயண வழிகாட்டல் ஒழுங்குமுறைகள் அல்லது எழுதப்பட்ட வேறு ஏதேனும் சட்டத்தின்படி, சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்திற்கான ஒழுங்குமுறை கடமைகளை நிறைவேற்றுவதற்கான பொறுப்புக்களை அதிகாரசபை பகிர்ந்துகொள்ளாது.

எவ்வாறெனினும், சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு அமைய ஒழுங்குபடுத்தல், கடப்பாடுகள், தொழிற்பாடுகளை முன்னெடுப்பதற்கு சிவில் விமானப் போக்குவரத்து சேவை பணிப்பாளர் நாயகத்துக்குத் தேவையான சகல அத்தியாவசிய வளங்களையும் உதவிகளையும் அதிகாரசபை வழங்கும். குறிப்பாக ஆளணி, கருவிகள், வசதிகள், சேவைகள் உள்ளிட்டன மட்டுமன்றி தேவையான சகல உதவிகளையும் அதிகாரசபை வழங்கும்.

CAASL பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதம நிறைவேற்று அலுவலருக்கு அதிகாரங்களை வழங்குவதன் மூலமும், தொழிற்பாடுகளை ஒப்படைப்பதன் மூலமும் அவர்களின் வகிபாகத்தை அதிகாரசபை தெளிவாக விளக்கியுள்ளது.

## பொறுப்புடமை

சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை சரியான முறையில் முகாமைத்துவம் செய்யப்படுகின்றதா, சரியாக நிர்வகிக்கப்படுகின்றதா, கணக்காய்வு செய்யப்படுகின்றதா என்பதனை உறுதி செய்யவும், மூலோபாயக் குறிக்கோள்களின் முன்னேற்றத்தைக் கண்காணிக்கவும் அதிகாரசபையும், அதன் குழுக்களும் அடிக்கடி சந்தித்து கூட்டங்களை நடாத்துகின்றன, மூலோபாய வழிமுறைகள் மற்றும் பெருநிறுவன திட்டத்தின் நிர்ணயிக்கப்பட்ட எதிர்பார்ப்புக்கள் என்பன அதிகாரசபையின் கொள்கைகளுக்கு அமைவாக முன்னெடுக்கப்படுகின்றதா என்பது கண்காணிக்கப்படுகின்றது.

## கருத்து முரண்

கருத்து முரண் பதிவேடு ஒன்றைப் பராமரித்து வரும் அதிகாரசபையானது, அதிகாரசபையின் உறுப்பினர்கள் தமது கருத்துக்களை அறிவிப்பதற்கான தமது கடமையைப் பற்றி அறிந்திருப்பதை உறுதி செய்கிறது. இந்த அணுகுமுறையால் அதிகாரசபையின் உறுப்பினர்கள் மற்றும் CAASL அனைத்து ஊழியர்களுக்கும் கருத்து முரண் பதிவேடு பராமரிக்கப்படுகிறது.

## தரம் மற்றும் உள்ளக கணக்காய்வு

அதிகாரசபையின் அநேகமான தொழிற்பாடுகள் மற்றும் கடமைகள் ஒப்படைக்கப்பட்டிருந்தாலும், நிறுவனக் கட்டுப்பாடு, மேற்பார்வை என்பவற்றைப் பராமரிப்பதற்கான காத்திரமான ஒட்டுமொத்த இறுதிப் பொறுப்பு அதிகாரசபையின் வசமே காணப்படும்.

அதிகாரசபை குறிப்பிட்ட நோக்கங்களை அடைவதனை உறுதி செய்வதற்காக கொள்கை முறைமைகள் மற்றும் நடைமுறைகள் நிறுவுதல் உள்ளக கட்டுப்பாடுகளில் உள்ளடக்கப்படும். இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள பொறுப்புக்கள் குறித்த கூற்றில் கையொப்பமிடுவதன் மூலம் அதிகாரசபையும் மூத்த முகாமைத்துவமும் தங்களது பொறுப்புக்களை ஏற்றுக்கொள்கின்றன.

CAASL இன் பிரிவுகள் ஒவ்வொன்றிலும் உள்ளகக் கட்டுப்பாட்டின் விரிவான நுண்ணாய்வு மற்றும் கண்காணிப்பு அமைப்புக்களுக்கான உள்ளக கணக்காய்வு மற்றும் தரம் ஆகியனவற்றின் பொறுப்பை அதிகாரசபை கொண்டுள்ளது. CAASL இனால் வழங்கப்படும் சேவைகள், தொழிற்பாடுகள், கடமைகளின் ஒட்டுமொத்த தரத்தினை பேணிப் பராமரிக்கும் பொறுப்பானது தரம் மற்றும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினைச் சாரும். மேலும் நெறிமுறைகளின் அடிப்படையில் அதிகாரசபையின் தலைவர் மற்றும் கணக்காய்வு, முகாமைத்துவ குழுவுக்கு நேரடியாக வழங்கப்படும் நிதியியில் மற்றும் ஏனைய தகவல்களின் நம்பகத்தன்மைக்கு பொறுப்பாண்மையுடையதாகவும் தரம்

# CAASL இன் ஆளுகையும் பொறுப்புடமையும்

மற்றும் உள்ளக கணக்காய்வு பிரிவு செயற்படுகின்றது.

உள்ளக கணக்காய்வு பிரிவானது மூத்த முகாமைத்துவத்திலிருந்து சுயாதீனமாக இயங்குகின்றது, நெறிமுறைமைக்கு அமைய CAASL பணிப்பாளர் நாயகம், அதிகாரசபையின் பிரதம நிறைவேற்று அலுவலர் மற்றும் கணக்காய்வு முகாமைத்துவ குழுவுக்கு, உள்ளக கணக்காய்வுப் பிரிவு திரட்டிய தகவல்கள் நேரடியாக அறிக்கையிடுகின்றன.

## சட்ட இணக்கப்பாடு

நிறுவனம் அனைத்து சட்டங்களுக்கும் இணங்கி செயற்படுகின்றது என்பதனை உறுதி செய்யும் கடப்பாட்டை அதிகாரசபை ஏற்றுக்கொள்கின்றது. இணக்க சிக்கல்களை முறையாகக் கண்டறிவதற்கான ஒரு திட்டத்தின் அபிவிருத்தி மற்றும் செயற்பாட்டின் பொறுப்பை மூத்த முகாமைத்துவத்திற்கு அதிகாரசபை ஒப்படைத்துள்ளதுடன் அனைத்து ஊழியர்களும் அவர்களுக்குப் பொருத்தமான சட்டத் தேவைப்பாடுகள் பற்றி அறிந்திருப்பதை உறுதி செய்கிறது.

அரசாங்க நிறுவனங்களால் அதிகாரசபைக்கு வழங்கப்படும் பொதுவான அல்லது குறிப்பிட்ட சுற்று நிருபங்கள் மற்றும் வழிகாட்டல்களை அமுல்படுத்துவது குறித்து ஒவ்வொரு சந்தர்ப்பத்தின் அடிப்படையில் ஆய்ந்தறிந்து அதிகாரசபை தீர்மானங்களை எடுக்கின்றது. எனவே, அரசாங்க திணைக்களங்களால் வெளியிடப்படும் அனைத்து சுற்று நிருபங்களும் தானாகவே CAASL முகாமைத்துவத்தில் அமுல்படுத்தப்படாது. மாறாக இவ்வாறான சுற்று நிருபங்களின் உள்ளக்கமானது அதிகாரசபையின் கடமைகள், தொழிற்பாடுகள், சட்ட ரீதியான அதிகாரங்களில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது குறித்து அதிகாரசபை ஆராய்ந்ததன் பின்னர் தீர்மானம் எடுக்கப்படும். சுற்று நிருபத்தை அமுல்படுத்தினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள், அதன் தன்மை குறித்தும் அதிகாரசபை கவனம் செலுத்தும்.

CAASL பெருநிறுவன விவகாரங்கள் மற்றும் பொருளாதார ஒழுங்குபடுத்தல் பிரிவானது, ஊயுளுடு இன் செயற்பாட்டுக்கு அரசாங்க சுற்று நிருபங்களை அமுல்படுத்துவது குறித்த புதுப்பிக்கப்பட்ட பட்டியலை பேணும் பொறுப்பினை வகிக்கின்றது.

## ஒழுக்கவிதி

ஒழுக்கவிதி கோவையை உருவாக்கியுள்ள அதிகாரசபையானது, அனைத்து ஊழியர்களும் உயர்தரமான நெறிமுறை நடத்தைகளைப் பேணுவதையும், 'சிறந்த பெருநிறுவன ஆளுகை' எண்ணக்கருக்களை நடைமுறைப்படுத்துவதையும் தொடர்ந்து கண்காணிக்கிறது. ஒழுக்கவிதி தர நிர்ணயங்கள் சரியான முறையில் அமுல்படுத்தப்பட்டுள்ளதா என்பதனை முறைப்பாடுகள் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகள், உள்ளக கண்காய்வு அறிக்கை அல்லது ஏனைய அறிக்கைகள் அல்லது ஒழுக்க விதிகள் குறித்த கொள்கைகளை மீறும் வகையிலான ஏதேனும் குறிகாட்டிகள் என்பனவற்றின் மூலம் கண்காணிக்கிறது.

சிறந்த பெருநிறுவன ஆளுகை என்பது ஊழியர்கள் உள்ளிட்ட அதிகாரசபையை உள்ளடக்கியதாகும். இது நிறுவனத்திற்கு வெளியே பல சமூகங்களின் உறுப்பினர் என்பதனை ஏற்றுக்கொள்ளல், வெளிப்படைத்தன்மை, தொடர்ச்சி, சுயாதீனத்தன்மையுடன் செயற்படுவதற்கான அர்ப்பணிப்பினை உறுதி செய்தல், பொறுப்பான முறையில் சமூகத்தின் அனைத்து பிரஜைகளதும் உரிமைகளை ஏற்றுக்கொண்டு பொறுப்பாக செயற்படுவதனை உள்ளடக்குகிறது.

## நிறுவனக் கட்டமைப்பு – முகாமைத்துவ ஊழியர்

அதிகாரசபையின் முகாமைத்துவ ஊழியர்களது நிறுவன நிர்வாகக் கட்டமைப்பு பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது. அறிக்கையின் ஆரம்பத்தில் சுருக்கப்பதங்கள் பற்றிய விபரங்கள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

# தொழிற்துறையில் ஆபத்தின்மையைப் பாதுகாத்து சேவை செய்வோம் என்ற எமது வாக்குறுதியை நிலைநிறுத்துதல்





# இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் செயற்பாட்டு நிறுவனக் கட்டமைப்பு – முகாமைத்துவ பணியாளர்கள்



# இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் செயற்பாட்டு நிறுவனக் கட்டமைப்பு – முகாமைத்துவ பணியாளர்கள்



# இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் செயற்பாட்டு நிறுவனக் கட்டமைப்பு – முகாமைத்துவ பணியாளர்கள்

| | வாசகங்கள் | Os குறியீடு | பதவி |
|---|---|---|---|
| 1. | | | சிவில் விமானப் போக்குவரத்து பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதம நிறைவேற்று அலுவலர் |
| 2. | ADG 01 | OS1-HM22-ADG | மேலதிகப் பணிப்பாளர் நாயகம் |
| 3. | DDG 01 | OS2-HM21-DDG-1 | பிரதிப் பணிப்பாளர் நாயகம் (விமானப் போக்குவரத்து சேவை ஒழுங்குமுறை) |
| 4. | DDG 02 | OS2-HM21-DDG2 | பிரதிப் பணிப்பாளர் நாயகம் (வானியல் பாதுகாப்பு ஒழுங்குமுறை) |
| 5. | DDG 03 | OS2-HM21-DDG3 | பிரதிப் பணிப்பாளர் நாயகம் (கூட்டுறவு முகாமைத்துவம்) |
| 6. | DDG 04 | OS2-HM2-1-DDG4 | பிரதிப் பணிப்பாளர் நாயகம் (விமான சேவைப் பாதுகாப்பு ஒழுங்குமுறை) |
| 7. | D 01 | OS3-HM11-D2 | பணிப்பாளர் (விமானத்தளம்) |
| 8. | D 02 | OS3-HM11-D3 | பணிப்பாளர் (வான் வழிகாட்டல் சேவைகள்) |
| 9. | D 03 | OS3-HM11-D10 | பணிப்பாளர் (பயிற்சி அமைப்பு மற்றும் ஊழியர் உரிமம்) |
| 10. | D 04 | OS3-HM11-D5 | பணிப்பாளர் (விமான செயற்பாடுகள்) |
| 11. | D 05 | OS3-HM11-D6 | பணிப்பாளர் (விமானப் பதிகை மற்றும் வான்தகைமை) |
| 12. | D 06 | OS3-HM11-D8 | பணிப்பாளர் (மனிதவளம் மற்றும் ஆதன முகாமைத்துவம்) |
| 13. | D 07 | OS3-HM11-D9 | பணிப்பாளர் (நிதி மற்றும் வருமான முகாமைத்துவம்) |
| 14. | D 08 | OS3-HM11-D7 | பணிப்பாளர் (விமான போக்குவரத்து மற்றும் பொருளாதார ஒழுங்குமுறை) |
| 15. | D 09 | OS3-HM11-D1 | பணிப்பாளர் (விமானப் போக்குவரத்து பாதுகாப்பு) |
| 16. | D 10 | OS3-HM11-D4 | பணிப்பாளர் (சுற்றாடல், ஆராய்ச்சி, செயற்திட்டம்) |
| 17. | D 11 | OS3-HM11-D11 | பணிப்பாளர் (தரம் மற்றும் உள்ளக கணக்காய்வு) |
| 18. | D 12 | OS3-HM11-D12 | பணிப்பாளர் (தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்பம்) |
| 19. | SCAI 01 | OS4-MM11-AD-1 | மூத்த சிவில் விமானப் போக்குவரத்து பரிசோதகர் (விமானத்தளம்) |
| 20. | SCAI 02 | OS4-MM11-AD-2 | மூத்த சிவில் விமானப் போக்குவரத்து பரிசோதகர்(விமானத் தள தர நிர்ணயம்) |
| 21. | SCAI 03 | OS4-MM11-AN-1 | மூத்த சிவில் விமானப் போக்குவரத்து பரிசோதகர் (விமான போக்குவரத்து முகாமைத்துவம் - செயற்பாடுகள்) |
| 22. | SCAI 04 | OS4-MM11-AN-2 | மூத்த சிவில் விமானப் போக்குவரத்து பரிசோதகர் (வானூர்தி தகவல் சேவை) |
| 23. | SCAI 05 | OS4-MM11-AN-5 | மூத்த சிவில் விமானப் போக்குவரத்து பரிசோதகர் (வானூர்தி வானிலையியல்) |
| 24. | SCAI 06 | OS4-MM11-AN-3 | மூத்த சிவில் விமானப் போக்குவரத்து பரிசோதகர் (விமானப் போக்குவரத்து -தொழில்நுட்பம்) |
| 25. | SCAI 07 | OS4-MM11-AN-4 | மூத்த சிவில் விமானப் போக்குவரத்து பரிசோதகர் (ATM மற்றும் தரநிலையும் நடைமுறையும்) |
| 26. | SCAI 08 | OS4-MM11-PL-1 | மூத்த சிவில் விமானப் போக்குவரத்து பரிசோதகர் (ஊழியர் உரிமத் தேர்வு மற்றும் தரநிலை) |
| 27. | SCAI 09 | OS4-MM11-PL-3 | மூத்த சிவில் விமானப் போக்குவரத்து பரிசோதகர் (ஊழியர் உரிமம் - விமான ஊழியர் குழு) |
| 28. | SCAI 10 | OS4-MM11-PL-4 | மூத்த சிவில் விமானப் போக்குவரத்து பரிசோதகர் (ஊழியர் உரிமம் - விமானம் அல்லாத ஊழியர் குழு) |
| 29. | SCAI 11 | OS4-MM11-OP-1 | மூத்த சிவில் விமானப் போக்குவரத்து பரிசோதகர் (வானூர்தி விமான செயற்பாடுகள்) |
| 30. | SCAI 12 | OS4-MM11-OP-2 | மூத்த சிவில் விமானப் போக்குவரத்து பரிசோதகர் (வானூர்தி தரைத்தள செயற்பாடுகள்) |
| 31. | SCAI 13 | OS4-MM11-OP-3 | மூத்த சிவில் விமானப் போக்குவரத்து பரிசோதகர் (விமான கேபின் பாதுகாப்பு) |
| 32. | SCAI 14 | OS4-MM11-AW-1 | மூத்த சிவில் விமானப் போக்குவரத்து பரிசோதகர் (விமானப் பதிவு மற்றும் வான்தகைமை தரநிலை) |

# இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் செயற்பாட்டு நிறுவனக் கட்டமைப்பு – முகாமைத்துவ பணியாளர்கள்

| | வாசகங்கள் | Os குறியீடு | பதவி |
|---|---|---|---|
| 33. | SCAI 15 | OS4-MM11-AW-2 | மூத்த சிவில் விமானப் போக்குவரத்து பரிசோதகர் (பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு நிறுவனங்கள்) |
| 34. | SCAI 16 | OS4-MM11-AW-3 | மூத்த சிவில விமானப் போக்குவரத்து பரிசோதகர் (வானூர்தி செயற்பாட்டு சான்றிதழ் மற்றும் கண்காணிப்பு) |
| 35. | SCAI 17 | OS4-MM11-HR-1 | முகாமையாளர் (மனிதவள முகாமைத்துவம்) |
| 36. | Mgr 18 | OS4-MM11-HR-2 | முகாமையாளர் (கூட்டுறவு விவகாரம் மற்றும் ஆதன முகாமைத்துவம்) |
| 37. | Mgr 19 | OS4-MM11-HR-3 | முகாமையாளர் (ஊழியர் பயிற்சி மற்றும் மேம்பாடு) |
| 38. | Mgr 20 | OS4-MM11-FM-1 | முகாமையாளர் (வரவு செலவு மற்றும் வேலைத்திட்டங்கள்) |
| 39. | Mgr 21 | OS4-MM11-FM-2 | முகாமையாளர் (நிதிச் செயற்பாடுகள்) |
| 40. | Mgr 22 | OS4-MM11-AT-1 | முகாமையாளர் (வான் சேவைகள் மற்றும் போக்குவரத்து உரிமைகள்) |
| 41. | SCAI 23 | OS4-MM11-AS-1 | மூத்த சிவில் விமானப் போக்குவரத்து பரிசோதகர் (விமான நிலைய பாதுகாப்பு) |
| 42. | SCAI 24 | OS4-MM11-AS-2 | மூத்த சிவில் விமானப் போக்குவரத்து பரிசோதகர் (விமான நிறுவன பாதுகாப்பு) |
| 43. | Mgr 25 | OS4-MM11-SP-1 | முகாமையாளர் (ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான திட்டமிடல்) |
| 44. | Mgr 26 | OS4-MM11-HR-5 | முகாமையாளர் (ஆவணங்கள் மற்றும் இணைய முகாமைத்துவம்) |
| 45. | Mgr 27 | OS4-MM11-IA-1 | முகாமையாளர் (உள்ளகக் கணக்காய்வு மற்றும் தரநிலை மதிப்பாய்வு) |
| 46. | Mgr 28 | OS4-MM11-DM-2 | முகாமையாளர் (சட்டவிவகாரம் மற்றும் அமுலாக்கம்) |
| 47. | Mgr 29 | OS4-MM11- DM -4 | முகாமையாளர் (தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்) |
| 48. | SCAI 30 | OS4-MM11-PL-2 | மூத்த சிவில் விமானப் போக்குவரத்து பரிசோதகர் (விமானப் போக்குவரத்து மருத்துவம்) |
| 49. | MGR 31 | OS4-MM11-DM-1 | முகாமையாளர் (விமானப் போக்குவரத்து பாதுகாப்புக் கண்காணிப்பு) |
| 50. | Mgr 32 | OS4-MM 1-1-DM-3 | நிறைவேற்று உதவியாளர் - பிரதம நிறைவேற்று அலுவலருக்கான |
| 51. | Mgr 33 | OS4-MM 1-1-DM-4 | பணிப்பாளர் சபையின் செயலாளர் |
| 52. | Mgr 34 | OS4-MM 1-1DM -5 | முகாமையாளர் (சிவில் விமானப் போக்குவரத்து ஊக்குவிப்பு) |
| 53. | CAI 01 | OS5-MA5-3-AD-1 -1 | சிவில் விமானப் போக்குவரத்து பரிசோதகர் (விமானத்தள செயற்பாடு) |
| 54. | CAI 02 | OS5-MA5-3-AD-1-2 | சிவில் விமானப் போக்குவரத்து பரிசோதகர் (விமானத்தள செயற்பாடு) |
| 55. | CAI 03 | OS5-MA5-3-AD-1-3 | சிவில் விமானப் போக்குவரத்து பரிசோதகர் (விமானத்தள செயற்பாடு) |
| 56. | CAI 04 | OS5-MA5-3-AD-2 | சிவில் விமானப் போக்குவரத்து பரிசோதகர் (விமானத்தள செயற்பாடு) |
| 57. | CAI 05 | OS5-MA5-3-AN-1 | சிவில் விமானப் போக்குவரத்து பரிசோதகர் (விமானப் போக்குவரத்து முகாமைத்துவம் - செயற்பாடு) |
| 58. | CAI 06 | OS5-MA5-3-AN-2-1 | சிவில் விமானப் போக்குவரத்து பரிசோதகர் (வானூர்தி தகவல் சேவை) |
| 59. | CAI 07 | OS5-MA5-3-AN-2-2 | சிவில் விமானப் போக்குவரத்து பரிசோதகர் (வானூர்தி தகவல் சேவை) |
| 60. | CAI 08 | OS5-MA5-3-AN-3 | சிவில் விமானப் போக்குவரத்து பரிசோதகர் (வான்போக்குவரத்து முகாமைத்துவம் - தொழில்நுட்பம்) |
| 61. | CAI 09 | OS5-MA5-3-AN-4 | சிவில் விமானப் போக்குவரத்து பரிசோதகர் (ATM – தரநிலை மற்றும் நடைமுறைகள்) |
| 62. | CAI 10 | OS5-MA5-3-PL-1 | மூத்த சிவில் விமான சேவை பரிசோதகர் (ஊழியர் உரிமம் தேர்வுகள்) |
| 63. | CAI 11 | OS5-MA5-3-PL-2 | சிவில் விமானப் போக்குவரத்து பரிசோதகர் (ஊழியர் உரிமம் தேர்வுகள்) |
| 64. | CAI 12 | OS5-MA5-3-PL-3 | சிவில் விமானப் போக்குவரத்து பரிசோதகர் (ஊழியர் உரிமம் - விமானக் குழு) |
| 65. | CAI 13 | OS5-MA5-3-PL-5 | சிவில் விமானப் போக்குவரத்து பரிசோதகர் (ஊழியர் உரிமம் - விமானமல்லாத குழு) |
| 66. | CAI 14 | OS5-MA5-3-PL-4 | சிவில் விமானப் போக்குவரத்து பரிசோதகர் (பறத்தல் பயிற்சி) |
| 67. | CAI 15 | OS5-MA5-3-OP-1-1 | சிவில் விமானப் போக்குவரத்து பரிசோதகர் (வானூர்தி வான் சேவைகள்) |
| 68. | CAI 16 | OS5-MA5-3-OP-1-2 | சிவில் விமானப் போக்குவரத்து பரிசோதகர் (வானூர்தி வான் சேவைகள்) |

# இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் செயற்பாட்டு நிறுவனக் கட்டமைப்பு – முகாமைத்துவ பணியாளர்கள்

| | வாசகங்கள் | Os குறியீடு | பதவி |
|---|---|---|---|
| 69. | CAI 17 | OS5-MA5-3-OP-1-3 | சிவில் விமானப் போக்குவரத்து பரிசோதகர் (வானூர்தி வான் சேவைகள்) |
| 70. | CAI 18 | OS5-MA5-3-OP-2-1 | சிவில் விமானப் போக்குவரத்து பரிசோதகர் (வானூர்தி தரைத்தள சேவைகள்) |
| 71. | CAI 19 | OS5-MA5-3-OP-2-2 | சிவில் விமானப் போக்குவரத்து பரிசோதகர் (வானூர்தி தரைத்தள சேவைகள்) |
| 72. | CAI 20 | OS5-MA5-3-OP-2-3 | சிவில் விமானப் போக்குவரத்து பரிசோதகர் (வானூர்தி தரைத்தள சேவைகள்) |
| 73. | CAI 21 | OS5-MA5-3-OP-3 | சிவில் விமானப் போக்குவரத்து பரிசோதகர் (வானூர்தி கேபின் பாதுகாப்பு) |
| 74. | CAI 22 | OS5-MA5-3-OP-4 | சிவில் விமானப் போக்குவரத்து பரிசோதகர் (ஆளில்லா வானூர்தி அமைப்புக்கள்) |
| 75. | CAI 23 | OS5-MA5-3-AW-4 | சிவில் விமானப் போக்குவரத்து பரிசோதகர் |
| 76. | CAI 24 | OS5-MA5-3-AW-1-1 | சிவில் விமானப் போக்குவரத்து பரிசோதகர் (வான்தகைமை – விமானம்) |
| 77. | CAI 25 | OS5-MA5-3-AW-2-1 | சிவில் விமானப் போக்குவரத்து பரிசோதகர் (வான்தகைமை – மின் ஆலை) |
| 78. | CAI 26 | OS5-MA5-3-AW-3 | சிவில் விமானப் போக்குவரத்து பரிசோதகர் (வான்தகைமை – வான் மின்னணுவியல்) |
| 79. | CAI 27 | OS5-MA5-3-AW-1-2 | சிவில் விமானப் போக்குவரத்து பரிசோதகர் (வான்தகைமை – விமானம்) |
| 80. | CAI 28 | OS5-MA5-3-AW-2-2 | சிவில் விமானப் போக்குவரத்து பரிசோதகர் (வான்தகைமை – மின் ஆலை) |
| 81. | AM 29 | OS5-MA53-HR-1 | உதவி முகாமையாளர் (மனித வள முகாமைத்துவம்) |
| 82. | AM 30 | OS5-MA53-HR-2 | உதவி முகாமையாளர் (கூட்டுறவு விவகாரம் மற்றும் ஆதன முகாமைத்துவம்) |
| 83. | AM 31 | OS5-MA53-HR-3 | உதவி முகாமையாளர் (பயிற்சி) |
| 84. | AM 32 | OS5-MA53-FM-1 | உதவி முகாமையாளர் (வரவு செலவு மற்றும் செயற்திட்டம்) |
| 85. | AM 33 | OS5-MA53-FM-1 | உதவி முகாமையாளர் (நிதி செயற்பாடு) |
| 86. | AM 34 | OS5-MA53-AT-1 | உதவி முகாமையாளர் (வான் சேவை மற்றும் போக்குவரத்து உரிமை) |
| 87. | AM 35 | OS5-MA53-AT-3 | உதவி முகாமையாளர் (வான் போக்குவரத்து சேவைகள்) |
| 88. | CAI 36 | OS5- MA53-AS-1 | சிவில் விமானப் போக்குவரத்து பரிசோதகர் (விமான நிலைய பாதுகாப்பு) |
| 89. | CAI 37 | OS5-MA53-AS-2-1 | சிவில் விமானப் போக்குவரத்து பரிசோதகர் (விமான நிறுவன பாதுகாப்பு) |
| 90. | CAI 38 | OS5-MA53-AS-2-2 | சிவில் விமானப் போக்குவரத்து பரிசோதகர் (விமான நிறுவன பாதுகாப்பு) |
| 91. | CAI 39 | OS5-MA53-AS-3 - 1 | சிவில் விமானப் போக்குவரத்து பரிசோதகர் (பாதுகாப்பு தரநிலைகள்) |
| 92. | CAI 40 | OS5-MA53-AS-3 -2 | சிவில் விமானப் போக்குவரத்து பரிசோதகர் (பாதுகாப்பு தரநிலைகள்) |
| 93. | CAI 41 | OS5-MA53-Fal-1 | சிவில் விமானப் போக்குவரத்து பரிசோதகர் (வசதியளிப்புகள்) |
| 94. | AM 42 | OS5-MA53-SP-3 | உதவி முகாமையாளர் (புள்ளிவிவரங்கள் மற்றும் முன்கணிப்பு) |
| 95. | AM 43 | OS5-MA53-SP-2 | உதவி முகாமையாளர் (திட்டமிடல்) |
| 96. | AM 44 | OS5- MA53-SP-1 | உதவி முகாமையாளர் (விசேட செயற்திட்டங்கள்) |
| 97. | AM 45 | OS5-MA53-HR-5 | உதவி முகாமையாளர் (ஆவணங்கள் மற்றும் இணைய முகாமைத்துவம்) |
| 98. | AM 46 | OS5-MA53-IA-1 | உதவி முகாமையாளர் (உள்ள கணக்காய்வு மற்றும் தரநிலை மதிப்பாய்வு) |
| 99. | AM 47 | OS5-MA53-DM-2 | உதவி முகாமையாளர் (சட்ட விவகாரம் மற்றும் அலுலாக்கம்) |
| 100. | AM 48 | OS5-MA53-AT-2 | உதவி முகாமையாளர் (சர்வதேச தொடர்புகள்) |
| 101. | AM 49 | OS5-MA53-HR-4 | உதவி முகாமையாளர் (தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்) |
| 102. | AM 50 | OS5-MA53-DM-1 | உதவி முகாமையாளர் (விமானப் போக்குவரத்து பாதுகாப்பு கண்காணிப்பு) |
| 103. | JM 51 | OS6-JM11-SP-4 | தலைவருக்கான உதவி முகாமையாளர் |
| 104. | JM 52 | OS6-JM 1-1-DM-1 | உதவி முகாமையாளர் (சிவில் விமானப் போக்குவரத்து ஊக்குவிப்பு) |
| 105. | JM 53 | OS6-JM11-DM-3-1 | ஒருங்கிணைப்பு அலுவலர் |
| 106. | JM 54 | OS6-JM11-DM-3-2 | ஒருங்கிணைப்பு அலுவலர் |
| 107. | JM 55 | OS6-JM11-DM-3-3 | ஒருங்கிணைப்பு அலுவலர் |
| 108. | JM 56 | OS6-JM11-DM-3-4 | ஒருங்கிணைப்பு அலுவலர் |
| 109. | JM 57 | OS6-JM11-DM-3-5 | ஒருங்கிணைப்பு அலுவலர் |

# இயக்கம் மற்றும் முகாமைத்துவம்



"அனைவருக்கும் பாதுகாப்பு மற்றும் வினைத்திறன்மிக்க ஆகாயம்"

# இயக்கம் மற்றும் முகாமைத்துவம்

## CAASL கூட்டங்கள்

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையானது மீளாய்வுக்கு உட்பட்ட காலப்பகுதியில் ஒன்பது (9) அதிகாரசபைக் கூட்டங்களை நடத்தியதுடன், CAASL மற்றும் அது ஒழுங்குபடுத்தும் சிவில் விமானப் போக்குவரத்துத் துறையின் முன்னேற்றம் மற்றும் நல்வாழ்வுக்கான தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது. CAASL ஊழியர் குழு இரண்டு (2) முறை கூடியுள்ளது. அதே சமயம் CAASL கணக்காய்வுக் குழு மூன்று (3) முறை மீளாய்வுக்கு உட்பட்ட காலப்பகுதியில் கூடியுள்ளது.

## வான்பயண பாதுகாப்புக் கண்காணிப்பு பிரிவு

ICAO இணைப்பு 13 இன் கீழ் விமான விபத்து மற்றும் சம்பவ விசாரணைகளின் நிர்வாக செயற்பாடுகளை மேற்கொள்வது மற்றும் பாதுகாப்பு இலக்குகளை அடைவதற்காக, ICAO இணைப்பு 19 இன் கீழ் நாட்டின் பாதுகாப்பு திட்டத்தை செயல்படுத்துவது தொடர்பான பணிகள் ஆகியவை இந்த பிரிவின் முக்கிய பணிகளாகும். மேலதிகமாக, ஆளில்லா வான்வாகன செயல்பாடுகள் தொடர்பான பணிகளுக்கு இந்த அலகு பொறுப்பாகும்.

## ஒழுங்குபடுத்தல் அபிவிருத்தி

இலங்கையில் ஆளில்லா வான்வாகன இயக்கம் தொடர்பான விதிமுறைகள் வரைவு செய்யப்பட்டு, கலந்துரையாடல் நிலையில் உள்ளது.

AIG தொடர்பான நாட்டின் விமானப் போக்குவரத்துச் செயல்பாட்டின் வினாப்பட்டியல் மற்றும் விமான விபத்து, சம்பவ விசாரணை தொடர்பான ICAO 13 ஆம் இணைப்புக்கான சரிபார்ப்புப் பட்டியல்கள் மற்றும் பாதுகாப்பு முகாமைத்துவம் தொடர்பான இணைப்பு 19 ஆகியவை ICAO-CMA இல் புதுப்பிக்கப்பட்டன.

பாதுகாப்பு முகாமைத்துவம் தொடர்பான ICAO 19 ஆம் இணைப்புக்கு இணங்க, SMS கட்டமைப்பில் செயல்படுத்தும் தரநிலையின் இரண்டாம் பதிப்பு, பாதுகாப்பு இடர் மதிப்பீட்டின் இணைப்புடன் வெளியிடப்பட்டது.

விமான செயற்பாட்டாளர்களின் ஏழு பாதுகாப்பு முகாமைத்துவ அமைப்பு கையேடுகள் மதிப்பாய்வு செய்யப்பட்டு, SMS கட்டமைப்பில் செயல்படுத்தப்படும் தரநிலை SLCAIS 070 உடன் இணக்கம் உள்ளதா என்பது, தொடர்புடைய பிரிவுகளால் ஏற்றுக்கொள்வதற்கு முன் சரிபார்க்கப்பட்டது.

தொழில்துறையின் சமீபத்திய முன்னேற்றங்கள் மற்றும் சர்வதேச தரநிலைகள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளுடன் இணங்கும் வகையில் விமானிகள் இல்லாத வான்வாகன அமைப்புகளின் செயல்பாடு குறித்த நடைமுறைப்படுத்தல் தரநிலை – SLCAIS - 053 இன் புதிய பதிப்பு தயாரிக்கப்பட்டது. ட்ரோன்-மாதிரி வான்வாகனங்களின் செயற்பாடு குறித்த புதிய நடைமுறைகள், புதுப்பிக்கப்பட்ட நடைமுறைப்படுத்தல் தரநிலையின்படி தயாரிக்கப்பட்டன.

பாதுகாப்பு அமைச்சு, இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு மற்றும் இலங்கை சுங்கம் ஆகியவற்றுடன் இணைந்து ட்ரோன் இறக்குமதி நடைமுறை தயாரிக்கப்பட்டது. UAV – விமானி தேர்வு மற்றும் UAV பயிற்சி அமைப்பு பற்றிய வழிகாட்டுதல் பொருட்கள் தயாரிக்கப்பட்டன.

## சான்றுப்படுத்தல் நடவடிக்கைகள்

**வழங்கப்பட்ட UAV ஒப்புதல்கள் - 2021**




2021 ஆம் ஆண்டில் 1,028 ட்ரோன்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும், ஆளில்லா வான்வாகனங்களின் (UAV) இயக்கத்துக்காக 942 அனுமதிகள் வழங்கப்பட்டன மற்றும் இலங்கையில் மாதிரி பறக்கும் நடவடிக்கைகளுக்கு 5 அனுமதிகள் வழங்கப்பட்டன.

தனிப்பயனாக்கப்பட்ட 48 ட்ரோன்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. கூடுதலாக, நடைமுறைப்படுத்துதல் தரநிலை –SLCAIS 053 இல் குறிப்பிடப்பட்டுள்ள

# இயக்கம் மற்றும் முகாமைத்துவம்

UAS இறக்குமதி, பொருத்துதல், உற்பத்திக்கான 2 அனுமதிகள் வழங்கப்பட்டன. UAV செயல்பாட்டிற்கான ஒரு தளம் ஆய்வு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.

### வான்பறப்பு நிகழ்வுகள்

இலங்கையில் பதிவு செய்யப்பட்ட விமானங்கள் மற்றும் இலங்கையின் எல்லைக்குள் செயற்படும் வெளிநாட்டுப் பதிவு விமானங்கள் தொடர்பாக 2021 இல் 226 விபத்து அல்லது சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இதில், 14, வெளிநாட்டுப் பதிவு விமானங்களில் இலங்கை எல்லைக்குள் நிகழ்ந்துள்ளன. ஏனையவை இலங்கையில் பதிவு செய்யப்பட்ட விமானங்களுடன் தொடர்புடையன.

மொத்த நிகழ்வுகளில், அதிக எண்ணிக்கையிலான நிகழ்வுகளாக, 70 பறவை மோதல்கள் பதிவாகியுள்ளன. அறிக்கையிடப்பட்ட பறவை மோதல்களில், கட்டுநாயக்கவிலுள்ள பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் 54, அம்பாந்தோட்டையிலுள்ள மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தில் 3, கொழும்பு இரத்மலானை சர்வதேச விமான நிலையத்தில் 1 என இவை பதிவாகியுள்ளன.

இந்த ஆண்டில் தொகுதி/கூறு செயலிழப்பு அல்லது பிறழியக்கம் தொடர்பான 52 நிகழ்வுகள் பதிவாகியுள்ளன.

ATM/தொடர்பாடல் தொடர்பான நிகழ்வுகள் 38 பதியப்பட்டுள்ளன. இதில் பெரும்பாலானவை ATS அலகுகளுடன் தொடர்பு இல்லாததால் நேர்ந்துள்ளதோடு, மும்பை FIR இல் அதிக எண்ணிக்கையிலான நிகழ்வுகள் பதிவாகியுள்ளன.

### விசாரணைகள்

கருடா இந்தோனேசியன் எயார்லைன்ஸ் ஏர்பஸ் A330-341 பதிவு எண் கொண்ட PK-GPF விமானம் 2019 ஏப்ரல் 2 அன்று அமுக்கத்தளர்வு காரணமாக இலங்கையின் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் அவசரமாகத் தரையிறங்கியது. இந்த சம்பவம் பற்றிய விசாரணை நிறைவுற்று பாதுகாப்பு பரிந்துரைகளுடன் இறுதி அறிக்கை வெளியிடப்பட்டது.

வங்காளதேசத்தின் ஹஸ்ரத் ஷாஜலால் சர்வதேச விமான நிலையத்திலிருந்து இலங்கையின் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு 2020 டிசம்பர் 2 அன்று வந்த ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானம் UL 190, 4R-AND தொடர்பான தீவிர சம்பவத்தின் விசாரணை நிறைவடைந்தது. சிவில் விமானப் பாதுகாப்புக்கான விசாரணை பகுப்பாய்வு பணியகம் (BEA) - பிரான்ஸ் மற்றும் AIRBUS இன் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள், சிங்கப்பூரின் வடிவமைப்பு உற்பத்தி போக்குவரத்து பாதுகாப்பு புலனாய்வுப் பணியகம் (TSIB) ஆகியன, விசாரணைக்கான தொழில்நுட்ப நிபுணத்துவத்தை வழங்கின. வரைவின் இறுதி அறிக்கை வெளியிடப்படுவதற்கு முன் அந்தந்த அரசுகளின் ஆலோசனைக்காக வழங்கப்பட்டது.

இலங்கையின் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து (VCBI) சிங்கப்பூரின் சாங்கி சர்வதேச விமான நிலையத்திற்கு (WSSS) 2021 ஜனவரி 23 சரக்கு விமானமாக இயக்க திட்டமிடப்பட்ட UL 1430, 4R-ALP என்ற பதிவு கொண்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானத்துக்கு வழங்கப்பட்ட சறுக்கல்-பயன்பாடு சம்பவம் ஆய்வு செய்யப்பட்டு, பாதுகாப்புப் பரிந்துரைகளுடன் இறுதி அறிக்கை வழங்கப்பட்டது.

2021 மார்ச் 21 அன்று, இலங்கையின் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து, அவுஸ்திரேலியாவின் கிங்ஸ்/போர்ட் ஸ்மித் சர்வதேச விமான நிலையத்திற்கான பயணத்தின்போது UL 606, 4R-ALR பதிவு கொண்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானம், ஜகார்த்தா FIR மீது FL 390 இல் பறந்தபோது, ஏறத்தாழ 1540 அடி உயரவிலகல் சம்பவம் பதிவு செய்யப்பட்டது. இது குறித்து ஆய்வு செய்யப்பட்டு தேவையான உடனடி தீர்வு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானம் UL 121, A320, பதிவு எண் 4R-ABO இன் மற்றொரு சறுக்கல்-பயன்பாடு சம்பவம், இலங்கையின் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து (VCBI) இந்தியாவின் சென்னை சர்வதேச விமான நிலையத்திற்கு (VOMM) 2021 செப்டம்பர் 22 அன்று இயக்க திட்டமிடப்பட்டபோது நிகழ்ந்தது. அது குறித்து விசாரிக்கப்பட்டு முடித்துவைக்கப்பட்டது.

2021 செப்டெம்பர் 18 அன்று இலங்கையின் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து சவுதி அரேபியாவின் ரியாத் கிங் காலிட் சர்வதேச விமான நிலையத்திற்குப் புறப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானமான UL1265, 4R-ALM ஆனது FL 292 இற்கு மேலே ஏறும்போது ஆலங்கட்டி மழையை எதிர்கொண்டது. அதன் இரண்டு கண்ணாடிகளும் உடைந்தன. விமானம் மீண்டும் தளத்திற்கு (VCBI) அதிக எடையுடன் தரையிறக்கம் செய்யப்பட்டது. இந்த சம்பவம் பாரதூரமான சம்பவமாக வகைப்படுத்தப்பட்டு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. உடனடியாக சீரமைப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டு விசாரணை நடந்து வருகிறது.

# இயக்கம் மற்றும் முகாமைத்துவம்

2021 அக்டோபர் 18 அன்று மஸ்கட் ATC விமான நிலை 410 ஐ நிராகரித்ததால், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானம் UL 226, ஐக்கிய அரபு எமிரேட்ஸின் துபாய் சர்வதேச விமான நிலையத்திலிருந்து கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு மஸ்கட் FIR வழியாக ETOPS பாதையில் சென்ற சம்பவம், விசாரணை செய்யப்பட்டு இறுதி அறிக்கை வழங்கப்பட்டது.

UL 455, A330, 4R-ALL இன் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானக் குழுவினர் 2021 அக்டோபர் 21 அன்று ஜப்பானின் நரிட்டா சர்வதேச விமான நிலையத்திலிருந்து இலங்கை கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய (VCBI) FMGS இல் ஓடுபாதையை தவறாகச் செருகியது விசாரிக்கப்பட்டு, பாதுகாப்பு பரிந்துரைகளுடன் இறுதி அறிக்கை வெளியிடப்பட்டது.

சகுராய் ஏவியேஷன் Pipper PA 38- 112 விமானம் பதிவு 4R-ASJ விபத்துக்குள்ளானது, டோண்ட்ராவிற்கு குறுக்குவெளி வான்தட பயிற்சிக்காகப் புறப்பட்டபோது மின்சார இழப்பை எதிர்கொண்டது. 2021 டிசம்பர் 22 அன்று பயாகல கடற்கரையில் அவசரமாக தரையிறக்கப்பட்டது. விசாரணை ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

2021 டிசம்பர் 27 அன்று, சகுராய் ஏவியேஷன் விமானம் 4R-GAF, Cessna 172L சிகிரியா (VCCS) இலிருந்து கொக்கல (VCCK) இற்கு சென்று கொண்டிருந்தபோது இயந்திர சக்தி இழப்பை எதிர்கொண்டது. அவசரகால அணுகுமுறையில் VCBI (BIA) ஓடுபாதை 22 ஐ நெருங்கியபோது வடகிழக்கே 2 முதல் 3 கடல் மைல்களுக்குள் 4 பயணிகளுடன் விபத்துக்குள்ளானது. ஒரு பயணிக்கு பலத்த காயமேற்பட்டபோதும், உயிரிழப்பு நேரவில்லை. விபத்து விசாரணை தொடங்கப்பட்டு, அந்தந்த அரசுகளுக்கு அறிவிப்புகள் அனுப்பப்பட்டன. சம்பந்தப்பட்ட அரசுகள் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகளை நியமித்து விசாரணை நடந்து வருகின்றன.

விமான இயக்குநர்களால் புகாரளிக்கப்பட்ட ஒழுங்குமுறை மற்றும் நடைமுறை மீறல் தொடர்பான ஐந்து சம்பவங்கள் விசாரிக்கப்பட்டன. எதிர்காலத்தில் மீண்டும் நிகழாமல் தடுக்கத் தேவையான திருத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு பாதுகாப்பு பரிந்துரைகளுடன் இறுதி அறிக்கைகள் வெளியிடப்பட்டன.

**இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட விமானங்கள் மற்றும் இலங்கையின் எல்லைக்குள் வெளிநாட்டில் பதிவுசெய்யப்பட்ட விமானங்களுக்கான அனைத்து நிகழ்வுகளும் - 2021**




| | | | |
|---|---|---|---|
| ARC | அசாதாரண ஓடுபாதை தொடல் | OTHR | ஏனையவை |
| ADRM | விமானத்தளம் | RAMP | தரை கையாளல் |
| ATM | வான் போக்குவரத்து முகாமைத்துவம் / தொடர்பாடல், வழிநடத்தல், கண்காணிப்பு | SCF-NP | தொகுதி/கூறு செயலிழப்பு அல்லது பிறழியக்கம் |
| BIRD | பறவை மோதல் | SCF-PP | மின்பிறப்பாக்கி செயலிழப்பு அல்லது பிறழியக்கம் |
| CABIN | கேபின் பாதுகாப்பு | SEC | பாதுகாப்பு |
| EXTL | வெளியக சுமை தொடர்பான நிகழ்வுகள் | TURB | கொந்தளிப்புப் பாய்வை சந்தித்தல் |
| GCOL | தரை மோதல் | WILD | வனவிலங்கு மோதல் |
| MAC | விமானங்களுக்கிடையிலான பாதுகாப்பு சூழ்நிலை/ வான்வழி மோதல் தவிர்ப்பு அமைப்பு எச்சரிக்கை/ பிரிவின் இழப்பு/ (அருகே) நடுவான் மோதல்கள் | WSTRW | காற்றழுத்தம் அல்லது இடியுடனான மழை |
| MED | மருத்துவம் | | |

# இயக்கம் மற்றும் முகாமைத்துவம்

## சட்ட விவகாரங்கள் மற்றும் அமலாக்கப் பிரிவு

சட்ட விவகாரங்கள் மற்றும் அமலாக்கப் பிரிவின் (LA&E) முக்கிய நோக்கம் CAASL இன் சட்ட மற்றும் அமலாக்க விவகாரங்கள் தொடர்பான பணிகளை நெறிப்படுத்துவதாகும். LA & E பிரிவானது சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து ஒப்பந்தங்களின் அங்கீகாரம்/ அணுகல், விமானப் போக்குவரத்து முதன்மை மற்றும் துணைச் சட்டங்களை மதிப்பாய்வு செய்தல், புதுப்பித்தல் மற்றும் மேம்பாடு செய்தல், CAASL அமலாக்கக் கொள்கை திறன் மற்றும் CAASL இன் உரிமைகள் நலன்களைப் பாதுகாத்தல் ஆகியவற்றிற்கு முதன்மைப் பொறுப்பாகும்.

வருடத்தில் LA&E பிரிவு செய்த பணிகள் கீழ்கண்டவாறு,

- சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து சட்டத்திற்குப் புறம்பான செயல்களை ஒடுக்குவதற்கான பெய்ஜிங் ஒப்பந்தம் மற்றும் அதனுடன் தொடர்புடைய துணை நெறிமுறைகள் சட்டத்தை உருவாக்குவதற்கான புதிய அமைச்சரவை ஒப்புதலைப் பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.
- கேப் டவுன் மாநாடு மற்றும் தொடர்புடைய நெறிமுறைகளை சட்டமாக்கல்
- சட்டத்தை உருவாக்குவதற்கு புதிய அமைச்சரவை அனுமதியைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.
- விமானத்தில் செய்யப்படும் குற்றங்கள் மற்றும் பிற சில செயல்களின் மாநாட்டை திருத்துவதற்கான நெறிமுறையை இயற்றுதல் - மாண்ட்ரியல் நெறிமுறை 2014
- சட்டத்தை உருவாக்குவதற்கு அமைச்சரவை ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.
- விமான இயக்குநர்களுக்கான பொறுப்பு மற்றும் காப்பீட்டுத் தேவைகளின் வரம்புகள் தொடர்பான உத்தரவு (SLCAD 18) வழங்குதல்.
- நீர்மேலான விமானத்தள விதிமுறைகளை பிரகடனம் செய்தல்
- மூன்று மொழிகளிலும் இறுதி வரைவு ஒழுங்குமுறைக்கான CAASL அவதானிப்புகள் சட்ட வரைஞர்களுக்கு அனுப்பப்பட்டன.
- வானூர்தி சேவை வழங்குநர் உரிம விதிமுறைகளை பிரகடனம் செய்தல்
- CAASL அவதானிப்புகளுக்காக சட்ட வரைஞர் திணைக்களத்திடமிருந்து மூன்று மொழிகளில் இரண்டாவது வரைவு ஒழுங்குமுறை பெறப்பட்டது.
- விமானப் பதிவு மற்றும் பொதுவான மதிப்பெண்கள் விதிமுறைகளை விளம்பரப்படுத்துதல்
- மூன்று மொழிகளிலும் இறுதி வரைவு ஒழுங்குமுறை CAASL அவதானிப்புகளுக்காக சட்ட வரைஞர் திணைக்களத்திடமிருந்து பெறப்பட்டது.
- விமான விதிகள் மூலம் ஆபத்தான பொருட்களின் பாதுகாப்பான போக்குவரத்தை விளம்பரப்படுத்துதல்
- மூன்று மொழிகளிலும் இறுதி வரைவு ஒழுங்குமுறைக்கான CAASL அவதானிப்புகள் சட்ட வரைஞருக்கு அனுப்பப்பட்டன.
- சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைச் சட்டம் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்துச் சட்டத்தில் திருத்தங்கள்
- வரையறு. இலங்கை விமானநிலையம் மற்றும் வான்பயண சேவை தனியார் நிறுவனம் மற்றும் வரையறு. ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட முன்மொழிவுகள் மதிப்பாய்வு செய்யப்பட்டன.
- செயல்பாடுகள் பிரிவால் வழங்கப்பட்ட அனைத்து உரிமங்கள், சான்றிதழ்கள், அனுமதிகள், படிவங்களின் சட்டப்பூர்வ செல்லுபடியை மதிப்பாய்வு செய்து தேவையான திருத்தங்களுடன் அவற்றை அனுப்பியமை.

## தகவல் தொடர்பு மற்றும் தொழில்நுட்ப (ICT) பிரிவு

தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்பம் (ICT) பிரிவு இரண்டு முக்கிய செயல்பாடுகளைக் கொண்டுள்ளது. முதலில் தகவல் தொழில்நுட்பச் சேவைகளை வழங்குவதற்காக தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பை நிர்வகித்தலை, இது உறுதி செய்கிறது:

- தகவல் அமைப்புகளை நிர்வகித்தல் மற்றும் பாதுகாத்தல்
- தரவு வளங்களை நிர்வகித்தல் மற்றும் பாதுகாத்தல்
- கணினி பயன்பாடுகளை நிர்வகித்தல் மற்றும் பாதுகாத்தல்
- வலையமைப்பை நிர்வகித்தல் மற்றும் பாதுகாத்தல்

இரண்டாவது செயற்பாடு தகவல் அமைப்புகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பை உருவாக்குதல் மற்றும் மாற்றியமைத்தல்.

தகவல் தொழில்நுட்பப் பிரிவினால் 2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட முக்கியப் பணியானது, Google Workspace இலிருந்து Office365 இற்கு மின்னஞ்சல் சேவையை நகர்த்தியது ஆகும். இது பயனர்களுக்கு

# இயக்கம் மற்றும் முகாமைத்துவம்

உகந்த திறமையான மின்னஞ்சல் தீர்வை வழங்குகிறது. மேலும், ICT அலகானது CAASL இற்காக பல மென்பொருள் பயன்பாடுகளை ஊழியர்களின் தேவைக்கேற்ப வழங்கி, அவர்களின் பணியை எளிதாக்கியுள்ளது. இந்த மென்பொருட்கள், செயற்பாடுகள் மற்றும் செயல்முறைகளை புதுமையானதாக்கவும், அதிக உற்பத்தித் திறன் கொண்டதாக்கவும், திறமையானதாக்கவும், அதன் போட்டியாளர்களை விட முன்னேறவும் அனுமதிக்கின்றன. CAASL அதன் நோக்கங்கள் மற்றும் பிற இலக்குகளை அடைவதில் முக்கியப் பங்காற்றிய அதேவேளையில், ICT பிரிவு 2021 ஆம் ஆண்டில் பின்வரும் திட்டங்களை முடிக்க முடிந்தது.

- PEL புதிய பரிட்சை முறை
- இணையவழி போதனை முகாமைத்துவ அமைப்பு
- குழு உறுப்பினர் சான்றிதழ் வழங்கும் அமைப்பு
- CAASL நற்சான்றிதழ் அட்டை வழங்கும் அமைப்பு
- CAASL டிஜிட்டல் நிகழ்வுகள் அறிக்கை அமைப்பு
- CAASL இணையத்தள புதுப்பிப்புகள் மற்றும் பராமரிப்பு

CAASL இன் ஊழியர்கள், தங்கள் கணினிகள், வலையமைப்பு இணைப்பு, மின்னஞ்சல் கணக்கு அல்லது பிற ICT சேவைகளில், தொழில்நுட்பச் சிக்கல்கள் ஏற்படும்போது ICT உதவி மைய ஆதரவைப் பெற்றுள்ளனர். CAASL இன் கணினிப் பயனர்களுக்கு பயனுள்ள மற்றும் திறமையான கணினி ஆதரவை வழங்கும் அதேவேளையில், CAASL இல் உள்ள அனைத்து ஊழியர்களுக்கும் பிழை இல்லாத ICT சூழலை ICT பிரிவு உறுதி செய்துள்ளது. 2021 இல் புகாரளிக்கப்பட்ட சிக்கல்களின் விவரங்கள் நன்கு தீர்க்கப்படும் நிலை கீழே காட்டப்பட்டுள்ளது. மேலும் பெரும்பாலான சிக்கல்கள் சிறிய பிரச்சினைகளே என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

| சிக்கல்கள் | தெரிவிக்கப்பட்டது | தற்போதைய நிலை | |
|---|---|---|---|
| மென்பொருள்/தரவுத்தளம் தொடர்பானது | 840 | 840 | தீர்க்கப்பட்டது |
| வன்பொருள்/வலையமைப்பு தொடர்பானது | 500 | 500 | தீர்க்கப்பட்டது |

## சிவில் விமானப் போக்குவரத்து ஊக்குவிப்புப் பிரிவு

சிவில் விமான போக்குவரத்து ஊக்குவிப்புப் பிரிவு இலங்கையில் விமானப் போக்குவரத்து கலாசாரத்தை உருவாக்குவதற்கு பொறுப்புடையதாகும். குறிப்பாக நாட்டின் இளைஞர்கள் உட்பட பொதுமக்களிடையே விமானப் போக்குவரத்து அறிவை மேம்படுத்துவதன் மூலமும், தற்போதைய மிகவும் நம்பகமான விமான போக்குவரத்து தொடர்பான செய்திகளுடன் சமூகத்தை புதுப்பித்தல் மற்றும் CAASL இன் மின்னணு, அச்சு ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகத் தளங்கள் மூலம் அதன் செயல்பாட்டை மேம்படுத்துதல் மூலமும் இது செயற்படுத்தப்படுகின்றது. CAASL இன் தலைவரின் வழிகாட்டுதலின் கீழ் இந்த அலகு செயல்படுகிறது.

### சிவில் விமான போக்குவரத்து தொடர்பாக பாடசாலை மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி

இலங்கையின் எதிர்கால சந்ததியினரிடையே விமான போக்குவரத்து தொடர்பான அறிவைக் கட்டியெழுப்பும் நோக்குடன், பாடசாலைக்குள் 'சிவில் ஏவியேஷன் கிளப்' ஒன்றை உருவாக்குவது குறித்து மாணவர்களுக்கு கல்வி கற்பிக்கும் ஆறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் திட்டமிடப்பட்டன. இந்த பாடத்தில் அதிக விழிப்புணர்வையும் ஆர்வத்தையும் உருவாக்கும் முயற்சியில் இளம் மாணவர்களை சிவில் ஏவியேஷன் கருத்தாக்கத்துடன் ஈடுபடுத்துவதை நிகழ்ச்சிகள் தம் நோக்கமாகக் கொண்டுள்ளன. கல்வி அமைச்சின் அறிவுறுத்தலின் பேரில் கொவிட்-19 நோய்த்தொற்று காரணமாக விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் மற்றும் பாதுகாப்பு நெறிமுறைகள் காரணமாக விமான நிலையப் பட்டறைகள் உட்பட வருடத்திற்கு திட்டமிடப்பட்ட அனைத்து நிகழ்ச்சிகளும் ஒத்திவைக்கப்பட்டன. கடந்த ஆண்டைப் போல் அல்லாமல், பாதுகாப்பு நெறிமுறைகள் மற்றும் வரம்புகளுக்கு இணங்க நிகழ்ச்சித் திட்டங்களின் தன்மையை மாற்றியமைக்க வேண்டியிருந்தது, இருப்பினும், சுகாதார அமைச்சு மற்றும் கல்வி அமைச்சின் வழிகாட்டுதலுடன், ஆண்டு முழுவதும் அவற்றை பாதுகாப்பான அமைப்பில் நடத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டது. இது பரிசீலனையில் உள்ளது.

### விமான போக்குவரத்து விழிப்புணர்வு பற்றிய இணையவழி நிகழ்ச்சிகள்

சிவில் விமான போக்குவரத்து ஊக்குவிப்பு பிரிவானது, பாடசாலை விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்காக 'இணையவழி' முறையை

அறிமுகப்படுத்தியுள்ளது மற்றும் 1,000 மாணவர்களுக்கு ஜூம் மூலம் 14 நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. இறுதித் தேர்வில் 723 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

### பாடசாலைகளை இலக்காகக் கொண்டு "குவன்சார" விமானப் போக்குவரத்து இதழ் வெளியிடல்

‘குவன்சார’ விமானப்போக்குவரத்து இதழ்களின் இருபத்தி இரண்டு (22) பதிப்புகள் வெளியிடப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலை நூலகங்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. இந்த இதழ் மாணவர்கள் மத்தியில் பிரபலமான வாசிப்பாக மாறியுள்ளது. மேலும் இந்த இதழின் இலவச பிரதியானது அனைத்து பாடசாலை உயர்தர வகுப்புகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும், கடந்த ஆண்டு நோய்த்தொற்று பரவி பாடசாலைகள் மூடப்பட்டதால், இதழ் எதிர்பார்த்த அளவுகளில் அச்சிடப்படவில்லை மற்றும் விநியோகத்தையும் குறைக்க வேண்டியிருந்தது.

### "குவன் சரிசர" தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒளிபரப்பல்

”குவன் சரிசர” தொலைக்காட்சி நிகழ்ச்சியானது அதன் தனித்துவமான தயாரிப்பு பாணி மற்றும் இதுவரை பார்த்திராத அல்லது பொதுவில் காட்டப்படாத விமானத் துறையின் சுவாரசியமான குறுக்குவெட்டுகளை உள்ளடக்கிய காட்சிகள் காரணமாக பிரபலமடைந்துள்ளது. இந்தத் திட்டம் அதன் புகழ் மற்றும் சமூகத்திற்குத் தகுதியான பங்களிப்பின் காரணமாக ஒரு விருதைப் பெற்றது. வரவிருக்கும் மாதங்களில் மற்றும் அதற்கு அப்பால் நாட்டில் கொவிட்-19 கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதைத் தொடர்ந்து நிகழ்வின் உருவாக்கம் மீண்டும் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

சிவில் விமானப் போக்குவரத்தின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் முயற்சியில், CAASL செய்திகள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்துத் துறை செய்திகளை அச்சு மற்றும் மின்னணு ஊடகங்கள் மூலம் வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டு, மின்னணு மற்றும் அச்சு ஊடகங்களைப் பயன்படுத்தி தகவல்களை வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது நாளிதழ்கள், வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மூலம் சிவில் விமானப் போக்குவரத்து ஊக்குவிப்புப் பிரிவினால் ஒருங்கிணைக்கப்படுகிறது.

### சிறப்பு நிகழ்வுகளை ஏற்பாடு செய்தல்

சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து தினத்தின் 77 ஆவது ஆண்டு நிறைவு விழா நிகழ்வுகள் ஊக்குவிப்பு பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், அதிமேதகு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்த நிகழ்வின் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

### உள்நாடு மற்றும் சர்வதேச வாசகர்களுக்கான புதிய ஊடகங்கள் மூலம் சிவில் விமானப் போக்குவரத்துத் தகவலைப் பரப்புதல்

இணைய அடிப்படையிலான ஆதாரங்கள் மற்றும் சமூக ஊடகங்கள் ஆகியவை உள்நாடு மற்றும் உலகளாவிய சமூகங்களிடையே அதிகாரம் மற்றும் அதன் செயல்பாடுகள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து தொடர்பான தகவல்களைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான பயனுள்ள தளங்களாக புதிய ஊடகங்கள் பார்க்கப்படுகின்றன. இந்த நோக்கத்துக்காக, இந்த தளங்களில் விழிப்புணர்வை உருவாக்குவதற்கான அர்த்தமுள்ள உள்ளடக்கத்தை எதிர்காலத்தில் வெளியிட, இந்த ஊடக வழிகளைப் பற்றி நன்கு புரிந்துகொண்டு இவ்வலகு தயாராகி வருகிறது.

### எதிர்கால ஊடக முயற்சிகள்

கடந்த கால மற்றும் நிகழ்காலத்தின் அனைத்து முக்கிய தரவுகளையும் பாதுகாக்கும் நோக்கில், ஒரு மின்னணு நூலகம் ஒரு வருடத்திற்குள் இந்த அலகு மூலம் தொடங்கப்பட்டது. இந்த நூலகத்தின் உள்ளடக்கத்தை செழுமைப்படுத்துவதுடன், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த உண்மைகள் மற்றும் சம்பவங்களை தொடர்ந்து தொகுக்க, இந்த அலகு ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது.

## வான்மருத்துவ சேவைகள் அலகு

CAASL இன் வான்மருத்துவ சேவைகள் 2021 ஆம் ஆண்டு முழுவதும் செயல்பட்டன, மேலும் நாட்டில் பல பொதுமுடக்கங்கள் நடைமுறைக்கு வந்த போதிலும், CAASL வாடிக்கையாளர்களுக்கு அதன் சேவைகளைத் தொடர்ந்தது. கடுமையான பொது சுகாதார நெறிமுறைகளைப் பின்பற்றும் விமானிகள், விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர்கள் மற்றும் குழு உறுப்பினர்களுக்கான மருத்துவ மதிப்பீடுகளை முக்கியமாக இது நடத்துகிறது.

மேலும், ICAO ஒழுங்குமுறைத் தேவைகளுக்கு இணங்க, மாற்று முறைகளைப் பயன்படுத்தி உரிமங்களின் செல்லுபடியை உறுதிசெய்து, வெளிநாட்டில் சிக்கித் தவிக்கும் CAASL உரிமம் வைத்திருப்பவர்களின் மருத்துவ செல்லுபடியை நீட்டிப்பதற்கு ஒப்புதல் வழங்க, சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

# இயக்கம் மற்றும் முகாமைத்துவம்

ICAO & EASA தேவைகளின்படி I-வகுப்பு மருத்துவச் சான்றிதழ் வைத்திருப்பவர்களுக்கு புதிய மருத்துவச் சான்றிதழ் அறிமுகப்படுத்தப்பட்டது.

மேலும், சுகாதார அமைச்சகம், தேசிய கொவிட் மையம் மற்றும் நாட்டுக்கான WHO அலுவலகம் போன்ற தேசிய அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து கொவிட்-19 நோய் பரவுவதைத் தடுக்கும் நடவடிக்கைகளில் வான் மருத்துவச் சேவை தனது பங்களிப்பைத் தொடர்ந்தது.

அவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய பொது சுகாதார நடவடிக்கைகள் பின்வருமாறு:

(a) கொவிட்-19 நோய், பொது சுகாதார ஒழுங்குமுறை தேவைகள் மற்றும் பொது சுகாதார முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எவ்வாறு கடைப்பிடிப்பது என்பது குறித்து CAASL விமான நிறுவனங்கள் மற்றும் சர்வதேச விமான நிலையங்களின் முழு ஊழியர்களுக்கும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

(b) கொவிட்-19 பரவுவதைத் தடுக்கவும், சர்வதேசப் பயணத்துக்காக எங்கள் விமான நிலையங்களைத் திறக்கும்போது ஒழுங்குமுறைத் தேவைகளை மேம்படுத்தவும் நியமிக்கப்பட்டவையும் சுகாதார அமைச்சு மற்றும் சுற்றுலா அமைச்சில் உள்ளவையுமான பல தேசிய குழுக்களில் CAASL பிரதிநிதித்துவம் வகித்தமை

(c) WHO மற்றும் சுகாதார அமைச்சுடன் இணைந்து கொவிட்-19 நோய்க்கெதிரான விமானப் போக்குவரத்துத் துறைக்கான வழிகாட்டுதல்களை உருவாக்க ஒரு வளவாளராக சேவைகள் வழங்கப்படுகின்றன.

(d) தற்காலிக விமானங்கள், அவசரகால medivac செயல்பாடுகள் மற்றும் பணியாளர் ஓய்வுக்கான ஒழுங்குமுறை தேவைகளை கண்காணித்தல், பணியாளர்களின் PCR சோதனைகள், சுகாதார அமைச்சின் ஒத்துழைப்புடன் தனிமைப்படுத்தல் தேவைகள் ஆகியவற்றிற்கு அனுமதி வழங்குதல்.

(e) கொவிட்-19 ஐ தடுப்பதற்கான தேசிய செயல்பாட்டு மையத்தில் நடைபெற்ற கூட்டங்களில் CAASL ஐ பிரதிநிதித்துவப்படுத்தி, விமானப் போக்குவரத்து தொடர்பான முடிவெடுப்பதில் தீவிரமாக ஈடுபட்டமை.

(f) சர்வதேச சாதனைகள் - வான்பயண சேவைகளின் தலைவர்

- விமானப் போக்குவரத்துக்கான ICAO ஆசிய பசிபிக் பொது சுகாதாரக் குழுவின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன், ICAO CART (வான்பயண மீட்பு பணிக்குழுவுக்கான பேரவை) ஆவணம் மற்றும் CAPSCA விதிமுறைகள் போன்ற, விமானம் தொடர்பான பொது சுகாதார ஆவணங்களை உருவாக்க தொழில்நுட்ப ஆதரவு மற்றும் ஆலோசனைகளை வழங்கும் செயலில் உறுப்பினராக பணியாற்றுதல்
- விமானப் போக்குவரத்து (HIOATF) பணிக்குழுவில் ICAO உடல்நலப் பிரச்சினைகள் தொடர்பில் ஒரு விடயத்துக்கான நிபுணராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன், ICAO இணைப்பு 9 இல் மேம்பாடுகள் மற்றும் திருத்தங்களை கவனிக்கும் பணிக்குழுக்கள் ஒன்றில் தலைமை வகித்தமை.

வான்பயண மருத்துவம், வான்பயண பொது சுகாதார ஒழுங்குபடுத்தல் பணியானது (சர்வதேச தரநிலைகளின்படி ICAO & WHO) பின்வருவன மூலம் முடிக்கப்பட்டது:

- ICAO, WHO மற்றும் சுகாதார அமைச்சின் சமீபத்திய தேவைகளுக்கு ஏற்ப, கொவிட்-19 இற்கான சிறப்பு பணிப்புகள் அவ்வப்போது திருத்தங்களுடன் வெளியிடப்படுகின்றன.
- விமானப் போக்குவரத்தில் பொது சுகாதாரத் தடுப்புத் தேவைகளுக்கான பொதுப் பணிப்பு 011 இன் 2 ஆவது பதிப்பு, உள்நாட்டு மற்றும் சர்வதேச தேவைகளுக்கு ஏற்ப வெளியிடப்பட்டது (GD 011).

ICAO வான்பயண மருத்துவத் தேவைகளுக்கு ஏற்ப, சிவில் வான்பயண மருத்துவ அதிகாரிகள் மற்றும் விமான மருத்துவ அதிகாரிகளின் பயிற்சி மேற்கொள்ளப்பட்டது.

## தொழில்நுட்ப நூலகப் பிரிவு

உள் ஆவணங்களை நிர்வகித்தல், ICAO வெளியீடுகளின் அணுகல் மற்றும் பரப்புதல், பொருந்தக்கூடிய விதிமுறைகள், அரசாங்க வெளியீடுகள் மற்றும் CAASL மற்றும் உள்நாட்டு விமானப் போக்குவரத்துத் துறையில் உள்ள பிற பொது ஆவணங்கள் ஆகியவற்றுக்கு CAASL தொழில்நுட்ப நூலகம் பொறுப்பாகும். CAASL அதிகாரப்பூர்வ இணையதளத்தின் நிர்வாகம் மற்றும் உள்ளடக்க முகாமைத்துவம், தகவலறியும் உரிமைச் சட்டம் 2016 எண் 12 இற்கு அமைவான பொதுமக்களுக்குரிய தகவலளிப்பு, ICAO மற்றும் APAC தேசிய கடிதங்களுடனான கடித முகாமைத்துவம், மற்றும் உலகளாவிய பாதுகாப்பு மேற்பார்வை கணக்காய்வுத் திட்டத்தின் நிர்வாகம்

# இயக்கம் மற்றும் முகாமைத்துவம்

- CAASL சார்பாக தொடர்ச்சியான கண்காணிப்பு அணுகுமுறை (USOAP-CMA) ஆகியவற்றுடன் தொழில்நுட்ப நூலகம் இணைக்கப்பட்டுள்ளது

### ஆவண முகாமைத்துவம்

தொழில்நுட்ப நூலகம் அறிவைத் தேடுபவர்களுக்கான மையமாக செயல்படுவதோடு, விமான போக்குவரத்து விதிமுறைகளின் புதுப்பிப்புகள் உட்பட உலகளாவிய விமானத் துறையில் தற்போதைய மற்றும் மகத்தான தகவல்களை வழங்குகிறது. மதிப்பாய்வின் கீழ் ஆண்டு முழுவதும், 2021 ஆம் ஆண்டிற்கான நூலகத்திற்கு புதிய வெளியீடுகளை வாங்குவதற்காக இரண்டு இலட்சத்து எண்பத்தேழாயிரத்து இருநூற்று அறுபத்தாறு ரூபாய் (ரூ. 287,266) செலவிடப்பட்டது. அதுமட்டுமல்லாமல், ஊழியர்களிடையே புதுப்பிப்புகளைப் பரப்புவதை மேம்படுத்தும் நோக்கத்துடன், தொழில்நுட்ப நூலகத்தால் பிரிவு நூலகங்கள் தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டில் பதிவிறக்கம் செய்து சரிபார்க்கப்பட்ட 4844 ICAO வெளியீடுகளிலிருந்து, தொழில்நுட்ப நூலகம் மற்றும் பிரிவு நூலகங்களுக்கு முறையே நானூற்று அறுபத்தொன்பது (469) மற்றும் இருநூற்று ஐம்பத்தொன்று (251) அணுகப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டது. மொத்தம் முந்நூற்று பதின்மூன்று (313) அரசுசார் கடிதங்களும் தொடர்புடைய அலகுகள், பிரிவுகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன.

### ஆவண முகாமைத்துவம்




### CAASL இணையதளம்

CAASL இணையதளம் பொதுமக்களுக்கு தகவல்களைப் பரப்புவதற்கான ஒரு முக்கிய ஆதாரமாகும். CAASL இன் இணையதளம் தொடர்ச்சியாக புதுப்பிக்கப்பட்டு, ஆண்டு முழுவதும் ஐம்பத்து ஓராயிரத்து அறுநூற்று தொண்ணூற்று இரண்டு (51,692) பயனர்களால் பார்வையிடப்பட்டது. இது இணையதளத்தில் வெளியிடப்பட்ட சிவில் விமான போக்குவரத்து தொடர்பான தகவல்களில் பொதுமக்களிடையே உள்ள ஆர்வத்தைக் குறிக்கிறது.

## தரம் மற்றும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

### கணக்காய்வு செயல்பாடுகள்

CAASL இன் தர நிர்வாகத்தை மேம்படுத்துவதே தரம் மற்றும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் (QIA) முக்கிய நோக்கமாகும். உள்ளகக் கணக்காய்வு செயல்முறையானது, நிறுவனத்தின் இடர் முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு சூழல் மற்றும் நிர்வாகக் கட்டமைப்பின்மீது, தொடர்புடைய சட்டரீதியான தேவைகளுக்கு இணங்குவதை ஆய்வு செய்து மதிப்பாய்வு செய்வதன் மூலம் உறுதியளிக்கிறது. QIA பிரிவு CAASL இன் கணக்கியல் மற்றும் நிதி அறிக்கை முறையின் ஒருமைப்பாடு மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு அமைப்புகளின் செயல்திறனை தொடர்ந்து கண்காணித்து அளவிடுகிறது.

### செயல்திறன்

கொவிட்-19 இன் தாக்கம் இருந்தபோதிலும், மொத்தம் 33 முன் கணக்காய்வுகள் உட்பட 80 கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் விளைவாக 2021 ஆம் ஆண்டில் 110 கணக்காய்வு அவதானிப்புகள் கிடைத்தன. எங்களின் வருடாந்திர வேலைத் திட்டம் 2021 இன்படி நாங்கள் திட்டமிட்ட கணக்காய்வுகளில் 93% நிறைவடைந்துள்ளது. முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், பிந்தைய கணக்காய்வுகள் தொடர்பான காலத்தில் 42% அதிகரிப்பு தெளிவாகத் தெரிகிறது.

**47 வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட பின் கணக்காய்வுகள்**

| வரிசை | |
|---|---|
| தொழில்நுட்ப கணக்காய்வு | 32% |
| நிதியியல் கணக்காய்வு | 21% |
| மனிதவளம் சார் கணக்காய்வு | 17% |
| தரநிலை கணக்காய்வு | 26% |
| பிற கணக்காய்வு | 21% |

பிந்தைய கணக்காய்வு
2021 – 47
2020 – 33

முந்தைய கணக்காய்வு
2021 – 33
2020 – 51

42% பிந்தைய கணக்காய்வு

35% முந்தைய கணக்காய்வு

## கருத்துக்கணிப்புகள்

மதிப்பாய்வின் கீழ் உள்ள ஆண்டில், QIA பிரிவினால், முக்கியமாக 91 மாதிரி மக்கள் தொகை கொண்ட இணையத் தளத்தைப் பயன்படுத்தி. ஊழியர் திருப்திக் கருத்துக்கணிப்பு முதன்முறையாக மேற்கொள்ளப்பட்டது, ஊழியர்களின் நடத்தை நிறுவனத்தின் செயல்திறனுடன் சாதகமான தொடர்புடையதாக இருப்பதால், தகுந்த நடவடிக்கை எடுக்க நிர்வாகத்துக்கு முடிவுகளைப் புகாரளிப்பதே நோக்கமாக இருந்தது. முந்தைய ஆண்டைப் போலவே வாடிக்கையாளர் திருப்திக் கருத்துக்கணிப்பும் நடத்தப்பட்டது.

## சுற்றாடல் ஆராய்ச்சி மற்றும் செயற்திட்டப் பிரிவு

### சிவில் விமானப் போக்குவரத்து துறை தொடர்பான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களை செயற்படுத்தல்

மன்னன் இராவணனும் அவனது விமானப் போக்குவரத்து அறிவும் ஒரு சுவாரசியமான மர்மமாகவே உள்ளது. இந்த மர்மத்தை உறுதியான ஆதாரங்களுடன் தீர்க்க முடிந்தால், மன்னன் இராவணன் மற்றும் விமானப் போக்குவரத்தில் அவன் தலையிட்ட கதைகளை நிரூபிக்க முடியும், அது உலக வரலாற்றை ஒரு புதிய பரிமாணத்திற்கு இட்டுச் செல்லும். பல தரப்பினரும் ஆதாரங்களை சேகரித்து, இராவணன் மற்றும் தொடர்புடைய இடங்கள் தொடர்பான தகவல்களை ஆவணப்படுத்தியுள்ளனர். இலங்கையில் இராவணன் நடவடிக்கைகளின் முக்கியத்துவத்தை மதிப்பிடுவதற்காக தள வருகைகள் மேற்கொள்ளப்பட்ட அதேவேளை, அனைத்து இராவணன் தலங்களையும் இணைத்து சாத்தியமான சுற்றுலா இலக்கியங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

### புள்ளியியல் மற்றும் முன்கணிப்பு

CAASL ஆனது சிவில் விமானப் புள்ளிவிவரத் திட்டத்தை நிர்வகிக்கிறது. இது விமானப் போக்குவரத்து புள்ளிவிவரத் திட்டம் மற்றும் CAASL புள்ளிவிவரத் திட்டத்தை உள்ளடக்கியதாகும். இந்த புள்ளிவிவரத் திட்டம் பல்வேறு கருவிகள் மற்றும் நுட்பங்களைப் பயன்படுத்தி தரவு சேகரிப்பு, தொகுத்தல், விளக்கம், விளக்கக்காட்சியை உள்ளடக்கியது.

# இயக்கம் மற்றும் முகாமைத்துவம்

அதன்படி, CAASL ஆனது சர்வதேச விமான நிறுவனங்கள்/விமான நிலையங்கள், உள்நாட்டு விமான நிறுவனங்கள்/விமான நிலையங்கள் மற்றும் விமான போக்குவரத்து புள்ளியியல் திட்டத்தின் கீழ் எரிபொருள் நுகர்வு பற்றிய புள்ளிவிவரங்களை சேகரித்து, ஜனவரி மற்றும் டிசம்பர் 2021 இற்கு இடையில் ICAO மற்றும் பிற பொது/தனியார் நிறுவனங்களுக்கு தரவுகளை பரப்பியது. மேலும், CAASL புள்ளிவிவரத் திட்டத்தின் கீழ், CAASL மாதாந்திர செயல்திறன் அறிவிப்புகள்/அறிக்கைகளைத் தயாரிப்பதற்காக, CAASL வருடாந்திர அறிக்கை 2020 உட்பட, நிறுவனத்தின் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் மாதாந்திர பணி செயல்திறன் புள்ளிவிவரங்களை CAASL சேகரித்தது.

### இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகாரசபையின் ஆவணங்கள், அறிக்கைகள், சஞ்சிகைகளின் வெளியீடு

பெருநிறுவனத் திட்டத்தை மேம்படுத்தும் பணி, செழுமை மற்றும் சிறப்பைப் பற்றிய CAASL வேலைத் திட்டம், இராஜாங்க அமைச்சுக்கான முன்னேற்ற அறிக்கை, புள்ளியியல் அறிக்கை, மத்திய வங்கி அறிக்கை, நிறுவன முடிவுகள் கட்டமைப்பின் முன்னேற்றத்தை அளவிடுதல் - (ORF) மற்றும் சிவில் விமான போக்குவரத்து அதிகாரசபையின் வருடாந்த அறிக்கைகளை தொகுத்தல் ஆகியன பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. அத்துடன், அறிக்கைகள் வெளியிடப்பட்டு இலங்கை பாராளுமன்றம், சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்கள் மற்றும் தொழில்துறையில் உள்ள பிற வாடிக்கையாளர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

### சர்வதேச விமானப் போக்குவரத்துக்கான கார்பன் தட ஈடு மற்றும் குறைப்புத் திட்டம் (CORSIA)

பன்னாட்டு குடிசார் வான்பயண அமைப்பின் (ICAO) எரிபொருள் நுகர்வுத் தரவுகளின் தேவைகளுக்கு இணங்க, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் ஆனது, உமிழ்வுத் தரவு மற்றும் பிற தரவுகளை சேகரித்து, தரவுகளின் துல்லியத்தையும் ICAO இன் மத்திய பதிவேட்டில் சமர்ப்பிக்கப்பட்ட தரவையும் சரிபார்த்தது.

### சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் கொள்முதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

சரக்குகள் மற்றும் சேவைகளின் அனைத்து கொள்முதல் மற்றும் ஆலோசனைகள் கொள்முதல் வழிகாட்டுதல்கள் மற்றும் நடைமுறைகளுக்கு இணங்க CAASL இன் பிரிவுகள் மற்றும் அலகுகளின் தேவைகளுக்கு ஏற்ப மேற்கொள்ளப்பட்டன. கொவிட்-19 தொற்றுநோய் சூழ்நிலையில் CAASL ஊழியர்கள் மற்றும் தேவையான அதிகாரிகளுக்கு சுகாதார பாதுகாப்பு நடவடிக்கைகளை வழங்க தேவையான கொள்முதல்களை மேற்கொண்டது.

### உடல்சார் உட்கட்டமைப்பு மேம்பாடு

சுற்றாடல், ஆராய்ச்சி மற்றும் திட்டப் பிரிவினால் மேற்கொள்ளப்படும் செயற்திட்டங்களைத் திட்டமிடுதல், கொள்முதல் செய்தல் மற்றும் செயல்படுத்துதல் ஆகிய பணிகள், CAASL தலைமை அலுவலகக் கட்டடத் திட்டம், வாகனப் பூங்கா தங்குமிடத் திட்டம் மற்றும் CAASL ஓட்டுநர்களுக்கான கொள்கலன் வகை தங்குமிட வசதிகளை மாற்றியமைப்பதை உள்ளடக்கியுள்ளன.

# வானூர்தி சேவை முறைப்படுத்தல் பிரிவு




“அனைவருக்கும் பாதுகாப்பு மற்றும் வினைத்திறன்மிக்க ஆகாயம்”

# வானூர்தி சேவை முறைப்படுத்தல் பிரிவு

## விமானத்தள பிரிவு

விமான தளங்களில் பாதுகாப்பானதும், வினைத்திறனானதுமான விமானச் செயற்பாடுகளை உறுதிப்படுத்துவதற்கு விமானத்தளப் பிரிவானது இலங்கையில் உள்ள சிவில் விமானத்தளங்களை முறைப்படுத்துவதைப் பொறுப்பேற்றுள்ளது. இந்த பிரிவு சிவில் விமானப் போக்குவரத்துச் சட்டம், ICAO இணைப்புகள், பிற வழிகாட்டுதல் பொருட்கள், தொடர்புடைய தகவல்கள், நடைமுறைப்படுத்துதல் தரநிலைகள், உத்தரவுகள், பணிப்புரைகள், வழிகாட்டுதல்கள் மூலம் அதிகாரம் பெறுகிறது. ICAO மாநாட்டின் இணைப்பு 14 என்பது விமானத்தளங்களுடன் தொடர்புடைய முக்கிய இணைப்பாகும். இது முறையே நடைமுறைப்படுத்துதல் தரநிலைகளான (IS) 30 மற்றும் 41 மூலம் அறிவிக்கப்படுகிறது. இணைப்பு 14 ஐ வெளியிடுவதற்காக வெளியிடப்பட்ட சர்வதேச தரநிலைகளுக்கு கூடுதலாக இரண்டு நடைமுறைப்படுத்தும் தரநிலைகள், விமானத்தளங்களின் சான்றிதழுக்கான IS 37 மற்றும் விமானத்தள ஓடுபாதை வலிமை நிலைமைகளை ஒழுங்குபடுத்தும் IS 32 ஆகியவை வெளியிடப்பட்டன. தொழில்துறை வழிகாட்டுதல் என்பது, தொழில்துறையை மேம்படுத்துவதற்கு உதவுவதற்காக CAASL இல் எளிதாகக் கிடைக்கும் மற்றொரு வகை துணை ஆவணமாக கருதப்படுகிறது.

### விமானத்தள சான்றுப்படுத்தல்

நடைமுறைப்படுத்தல் தரநிலை 30 இன்படி ஒவ்வொரு சர்வதேச விமான நிலையமும் சான்றளிக்கப்பட்டிருக்கும். இந்த சான்றிதழ் இரண்டு வருடங்களுக்கு செல்லுபடியாகும். சான்றிதழின் புதுப்பித்தல் விமானத்தளப் பிரிவால் நடத்தப்படும் விமானத்தள சான்றிதழ் புதுப்பிப்புக் கணக்காய்வுக்கு உட்பட்டது.

கொவிட்-19 நோய்த்தொற்று சவால்களுக்கு மத்தியிலும், மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலைம் (MRIA) சர்வதேச தரநிலைகளுக்கு இணங்குவதை உறுதி செய்வதன் மூலம் தடையற்ற செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான சான்றிதழ் புதுப்பித்தல் கணக்காய்வு திட்டத்தை, விமானத்தள பிரிவு மற்றும் சார்பான பிரிவுகள் மேற்கொண்டன.

இரத்மலானை விமான நிலையம் அல்லது கொழும்பு சர்வதேச விமான நிலையம் (CIAR) சர்வதேச பிராந்திய நடவடிக்கைகளுக்கான சான்றிதழைப் பெறுவதற்கான செயற்பாட்டில் உள்ளது. இதன் ஆரம்ப கட்டமாக விமானத்தளப் பிரிவானது 2020 இல் சான்றிதழ் கணக்காய்வை மேற்கொண்டது. கணக்காய்வின்போது கண்டறியப்பட்ட குறைபாடுகளை சரிசெய்வதற்காக CAASL இயக்குநருக்கு அறிவிக்கப்பட்டது. அவரது கோரிக்கையின் பேரில் சரிசெய்தல் செயன்முறையின்போது தொடர்ச்சியான உதவி வழங்கப்படுகிறது.

### முறைப்படுத்தல் மேம்பாடு

நீர் விமானத்தள விதிமுறைகள் சட்ட வரைஞர் அலுவலகத்தில் செயற்பாட்டில் உள்ளன. அறிவிக்கப்படவுள்ள இந்த விதிமுறைகள் சேவையாளர்களின் கட்டுப்பாடு உட்பட மிதவை விமான செயற்பாடுகளை உறுதி செய்வதாகும். பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் மற்றும் மட்டக்களப்பு விமான நிலையத்துக்கான வலய ஒழுங்குமுறைகள் வெளியிடப்படவுள்ளன. இது விமான நிலையங்களுக்குள் பாதுகாப்பான வானூர்தி செயற்பாடுகளை மேற்கொள்ள உதவும்.

இலங்கையில் IS 30 – விமானத்தள தரநிலைகளின் புதிய பதிப்பாக இணைப்பு 14 இன் புதிய திருத்தங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இப்போது அவை CAASL இணையத்தளத்தில் இலகுவில் பார்வையிடக் கிடைக்கின்றன.

### கண்காணிப்பு நடவடிக்கைகள்

இலங்கையில் உள்ள சிவில் விமான நிலையங்களின் கட்டுப்பாட்டாளராக, அனைத்து நில விமான நிலையங்களிலும் நோய்த்தொற்று காலத்திலும்கூட அதிகபட்ச மற்றும் சாத்தியமான கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு இப்பிரிவு வகைசெய்கிறது. பயணிகள் போதாமை காரணமாக ஒரே ஒரு மிதவை விமான சேவையை நடத்துபவர் நீர் விமானத்தளத்தில் தமது செயற்பாட்டை மட்டுப்படுத்த நேரிட்டது.

விமானத்தள சான்றிதழ் பத்தியில் குறிப்பிட்டுள்ளதன்படி CIAR IS 30 தேவைகளுக்கு இணங்க, முழு அளவிலான அவசரகால பயிற்சியை நடத்தியது. சுகாதாரக் கட்டுப்பாடுகள் காரணமாக, பயிற்சி முழுமையும் விமானத்தள பிரிவு உட்பட CAASL மாத்திரமே மேற்பார்வையாளராக பங்கேற்றது. இந்த பயிற்சி வெற்றியடைந்ததுடன் CIAR இன் விமான நிலைய அவசரத் திட்டத்தை மேலும் மேம்படுத்துவதற்கான பரிந்துரைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

# வானூர்தி சேவை முறைப்படுத்தல் பிரிவு

### ஒப்புதல்கள்

விமானத்தளங்களுக்குள் நடத்தப்படும் கட்டுமானங்கள் மற்றும் பிற செயற்பாடுகளின்போது பாதுகாப்பு இணக்கத்தை உறுதிசெய்வதற்காக, அத்தகை செயற்பாடுகளின் திட்ட முன்மொழிவு, செயலாக்கம், பாதுகாப்பு முகாமைத்துவம் ஆகியவற்றை மதிப்பாய்வு செய்த பிறகு, தேவையான தொழில்நுட்ப வழிகாட்டல் மற்றும் ஒப்புதல்களை விமானத்தளப் பிரிவு வழங்குகிறது. அத்தகைய அனுமதி வழங்கப்பட்ட திட்டங்கள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

- புதிதாக கட்டப்பட்ட Apron E கட்டுமானத்தின் ORAT (செயல்பாட்டுத் தயார்நிலை மற்றும் விமான நிலையப் பரிமாற்றம்) ஆனது, விமான நிறுத்தக வளத்தை மேம்படுத்த BIA இற்குள் மேற்கொள்ளப்பட்ட மிகப் பெரிய மேம்பாடுகளில் ஒன்றாகும். ஆண்டின் இறுதியில், ஆரம்பநிலை Apron E தொடங்கப்பட்டது. ஆனால் அடுத்த கணக்காய்வின் போதுதான் அதற்கான சான்றிதழ் வழங்கப்படும். அதற்கான செயல்பாட்டுத் தயார்நிலையும் சரிபார்க்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- BIA இல் எரிபொருள் சேமிப்பு அமைப்பைப் பதுப்பித்தல்.
- BIA இல் புதிய முனையத்தின் தொகுப்பு A - 2 ஆம் நிலை - 2 ஆம் கட்டத்துக்கான பாதுகாப்புத் திட்டங்கள் மற்றும் பிற ஏற்பாடுகள் உரிய நேரத்தில் அங்கீகரிக்கப்பட்டன.
- CIAR இன் ஓடுபாதையை IS 30 தேவைகளுக்கு இணங்க குறைத்தபிறகு, அங்கீகரிக்கப்பட்ட இடம்பெயர்ந்த வாசல் மற்றும் ஓடுபாதை அடையாளங்கள்.

### உலகளாவிய அறிக்கை வடிவத்தை (GRF) நடைமுறைப்படுத்தல்

GRF என்பது ஓடுபாதை பயணங்களைக் குறைப்பதற்கான ICAO இன் பாதுகாப்புச் செயற்பாடுகளில் ஒன்றாகும். கொவிட்-19 தாக்கம் காரணமாக இது நடைமுறைக்கு வரும் திகதி 2021 இற்கு மாற்றப்பட்டுள்ளது. CAASL மற்றும் CAASL ஆகியவை 2021 நவம்பர் 2 முதல் நடைமுறைக்கு வரும் திகதியை அடைவதற்கு அயராது உழைத்தன. மேலும் விமானத்தளப் பிரிவு நடைமுறைப்படுத்தல் செயற்பாட்டின் மையப் புள்ளியாக உள்ளது. ஆரோக்கியத்தை உறுதிப்படுத்தும் வகையில் தொடர்ச்சியான மெய்நிகர் சந்திப்புகள் மற்றும் நடைமுறை அமர்வுகள் நடத்தப்பட்டபோது திட்டம் திறம்பட செயற்பட்டது. இப்போது புசுகு இலங்கையில் உள்ள அனைத்து சர்வதேச விமான நிலையங்களுக்கும் 2021 நவம்பர் 4 முதல் நடைமுறைக்கு வருகிறது. SLCAP 2500 GRF ஐ செயற்படுத்துவதற்கான கையேடு வழிகாட்டிப் பொருளாக வெளியிடப்பட்டது.

### தடைவரம்பு மேற்பரப்பை நிர்வகித்தல் (OLS)

ஒவ்வொரு சிவில் விமான நிலையத்துக்கும் பாதுகாக்கப்பட்ட பகுதியின் எல்லை நிர்ணயம் மற்றும் பாதுகாக்கப்பட்ட பகுதிக்குள் இடம்பெறும் செயற்பாடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் மண்டல விதிமுறைகளின் அடிப்படையில் தடைவரம்பு மேற்பரப்புகள் நிறுவப்பட்டுள்ளன.

விமானத்தளங்களில் வானூர்தி செயற்பாடுகளின் பாதுகாப்பு, விமானத்தளங்களை சுற்றி தடையற்ற சூழலைப் பேணுதல், வானூர்தி செயற்பாடுகளின்போது மின்னணு மற்றும் பிற குறுக்கீடுகளை தவிர்த்தல், விமானத்தளப் பாவனையை உறுதி செய்தல் ஆகியவற்றுக்கு இந்த விதிமுறைகள் அவசியமானதாக கருதப்படுகிறது.

பொது மக்கள், தொலைதொடர்புகளை இயக்குபவர்கள் மற்றும் பிற அரச நிறுவனங்களுக்கு தடைவரம்பு தேவைகளின் அடிப்படையில் கட்டடங்கள், அலைவாங்கிகள், கோபுரங்கள், காற்றாலைகள், மின் விநியோகக் கம்பிகள் உள்ளிட்டவற்றை நிர்மாணிப்பதற்கான அனுமதிகளை விமானத்தளப் பிரிவு வழங்குகிறது. கொவிட்-19 நோய்த்தொற்று காரணமாக, வீட்டிலிருந்து பணிபுரியும்போதுகூட, சேவையின் தொடர்ச்சியை இப்பிரிவு உறுதி செய்தது.

எந்தவொரு தாமதமும் ஏற்படாமல், உயரம்சார் ஒப்புதலுக்கான விண்ணப்பதாரர்களுக்கு தேவையான உதவிகளை வழங்குவதற்காக இணையவழி சேவைப் பிரிவுகளும் செயற்படுத்தப்பட்டன.

'கமட்ட சன்னிவேதனய' எனும் மாண்புமிகு ஜனாதிபதியின் நோக்கம், ஒப்புதல்களை விரைவுபடுத்துவதன் மூலம் நன்கு எளிதாக்கப்பட்டது.

விமான நிலையங்களைச் சுற்றியுள்ள தடைவரம்பு மேற்பரப்புகளை வரைபடமாக்கும் தொலைநோக்குப் பார்வையை DGCA கொண்டுள்ளது. இது தாமதங்களை தவிர்க்கவும், செயல்திறன் மற்றும் முன்திட்டமிடல் செயல்முறையை மேம்படுத்தவும் பொதுமக்களுக்கு விரிவான பார்வையை வழங்கும். இது நில அளவைத் திணைக்களத்தின் ஆதரவுடன் CIAR இல் ஆரம்பிக்கப்பட்டு மேம்படுத்தப்பட்டு வருகிறது.

# வானூர்தி சேவை முறைப்படுத்தல் பிரிவு

மாண்புமிகு ஜனாதிபதியின் கொள்கை அறிக்கையான 'செழிப்பு மற்றும் சிறப்பின் காட்சிகள்' உடன் ஏரோட்ரோம்ஸ் பிரிவு உடன்படுகிறது.

விமானப் போக்குவரத்து மற்றும் ஏற்றுமதி மண்டலங்கள் மேம்பாட்டுக்கான இராஜாங்க அமைச்சர், ஜனாதிபதியின் கொள்கை அறிக்கைக்கு இணங்க, விமானத்தளப் பிரிவால் சுட்டிக்காட்டப்பட்ட கீழ்க்கண்ட ஒவ்வொன்றுக்கும் பங்களிப்பு வழங்க இணங்கினார்.

- கட்டுநாயக்க விமான நிலையத்தின் பயணிகள் முனையத்தின் அபிவிருத்தி. வானூர்தி பிரிவு, ஒப்பந்ததாரர் மற்றும் பிற பங்குதாரர்களுக்கு விமானநிலையம் மற்றும் விமான செயற்பாடுகளை கட்டுமான காலத்தில் பாதுகாப்பாக நடத்துவதற்கு தேவையான ஒப்புதல்களை வழங்கி வருகிறது.
- நுவரெலியா விமான நிலையம் உள்ளிட்ட உள்நாட்டு விமான நிலையங்களின் அபிவிருத்தி. அமைச்சினால் சுட்டிக்காட்டப்பட்ட பூர்வாங்க பணிகள் நிறைவடைந்துள்ளன. சாத்தியமான இடம் கண்டறியப்பட்டு, தேவைக்கேற்ப மேலதிக வழிமுறைகளுக்காக காத்திருக்கிறது.
- மத்தள விமான நிலையத்தில் வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பித்தல் மற்றும் வசதிகளை மேம்படுத்துதல். சான்றிதழ் புதுப்பித்தல் கணக்காய்வானது சர்வதேச வணிகச் செயற்பாடுகள் தடையின்றி இயங்கும் வகையில் நடத்தப்பட்டுள்ளது.

### கொழும்பு துறைமுக நகரத்தில் வரவிருக்கும் நீர் விமானத்தளம்

2021ஆம் ஆண்டு மிதவை விமான செயற்பாடுகளுக்கு மந்தமான ஆண்டாக இருந்தபோதிலும், இலங்கையின் புதிய பொருளாதார மையமான கொழும்பு துறைமுக நகரத்தில் நீர் விமானத்தளத்தை நிறுவும் யோசனை உள்ளதால் சேவை வழங்குநர்கள் கவலையற்று, செழிப்பான எதிர்காலத்தை எதிர்பார்க்கின்றனர்.

விமானத்தளப் பிரிவால் விண்ணப்பம் பெறப்பட்ட பின்னர், சேவை வழங்குநர்களும், பங்குதாரர்களும் ஒருங்கிணைந்து பூர்த்தி செய்ய வேண்டிய கடப்பாடுகள் மற்றும் நிறுவலுக்கு முன் வழங்கப்படவேண்டிய ஒப்புதல்களை தெரிவித்தனர்.

தளத்திற்கான பொருத்தமான இடத்தை சரிபார்ப்பதற்காக பிரிவினர் தங்கள் பூர்வாங்க ஆய்வை மேற்கொண்டு மேலதிக மேம்பாட்டுக்கு ஒப்புதல் வழங்கினர்.

### பயிற்சி மற்றும் மேம்பாடு

பிரிவில் உள்ள ஆய்வாளர்கள் அவர்களது அறிவையும் திறனையும் மேம்படுத்த ICAO, COSCAP, SAAA, தென் கொரியா, சீன மக்கள் குடியரசு ஆகியவற்றால் வழங்கப்பட்ட பயிற்சிகளை பெற்றுள்ளனர்.

## வான் வழிகாட்டல் சேவைகள் பிரிவு

வான் வழிகாட்டல் சேவைகள் (ANS) பிரிவின் முதன்மைப் பொறுப்பானது, சர்வதேசத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பொருந்தக்கூடிய சர்வதேச தரநிலைகள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளுக்கு (SARPs) இணங்க, கொழும்பு விமான தகவல் பிராந்தியத்துக்குள் (கொழும்பு FIR) வான் வழிகாட்டல் சேவைகளை வழங்குவதற்கான விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை உருவாக்குவதாகும். பன்னாட்டு குடிசார் வான்பயண அமைப்பு (ICAO) மற்றும் அதன் தரநிலைகள் இலங்கையில் உள்ள வான் வழிகாட்டல் சேவைகள் வழங்குநரால் தொகுக்கப்படுவதை உறுதி செய்தல் அதன் பணியாகும்.

### வான் வழிகாட்டல் சேவைகளின் மேற்பார்வைக்கான ANS ஒழுங்குமுறை கட்டமைப்பை மேம்படுத்தல்

இணைப்பு 2, இணைப்பு 3, இணைப்பு 4, இணைப்பு 5. இணைப்பு 10, இணைப்பு 11, இணைப்பு 12, இணைப்பு 15 ஆகிய எட்டு ICAO இணைப்புகளில் உள்ள சர்வதேச தரநிலைகளை ஏற்றுக்கொள்வதற்கு ANS பிரிவு 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் சிவில் விமானப் போக்குவரத்து சட்டப்பிரிவு 120 இற்கு இணங்க, நடைமுறைப்படுத்துதல் தரநிலைகளை (IS) வெளியிடுவதன் மூலம் பொறுப்பாகிறது.

2021 ஆம் ஆண்டில் மேலே குறிப்பிட்டுள்ள ICAO இணைப்புகளை குறிப்பிடுவதன் மூலம் ANS ஊழியர்கள் தொடர்ந்து நடைமுறைப்படுத்தும் தரநிலைகளை மேம்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளனர். அதன்படி, வான் வழிகாட்டல் சேவைகளை முறைப்படுத்துவதற்காக, தொடர்புடைய ICAO இணைப்புகளின் சமீபத்திய பதிப்புடன் இருக்கும் வகையில், பின்வரும் நடைமுறைப்படுத்தும் தரநிலைகள் புதுப்பிக்கப்பட்டன.

- விமானப் போக்குவரத்து சேவைகள் மீதான திருத்தப்பட்ட ஒழுங்குமுறை (IS 025 – 3ஆவது பதிப்பு)

# வானூர்தி சேவை முறைப்படுத்தல் பிரிவு

- தானியங்கி சார்பு கண்காணிப்பு ஒளிபரப்பு (ADS-B OUT) செயற்பாடுகள் மீதான திருத்தப்பட்ட கட்டுப்பாடு (IS 064 – 2ஆவது பதிப்பு)
- வான் போக்குவரத்து சேவைகளை (IS096) வழங்குவதில் சோர்வு மேலாண்மை மீதான கட்டுப்பாடு
- இலங்கையில் கருவி விமான நடைமுறை வடிவமைப்பு சேவையின் விதிமுறைகள் (IS099)
- கண்காணிப்பு மற்றும் மோதல் தவிர்ப்பு மீதான திருத்தப்பட்ட விதிமுறைகள் (IS047 – 2ஆம் பதிப்பு)
- அலைபரப்பி வழிசெலுத்துதலுக்கு உதவும் பொருட்கள் மீதான திருத்தப்பட்ட விதிமுறைகள் (IS034- 3 ஆவது பதிப்பு)
- PANS நிலை (IS038 – 3 ஆவது பதிப்பு) உட்பட தகவல் தொடர்பு நடைமுறைகள் மீதான திருத்தப்பட்ட விதிமுறைகள்
- குரல் தொடர்பு அமைப்புகளில் திருத்தப்பட்ட விதிமுறைகள் (IS040 - 3ஆவது பதிப்பு சுநஎ01)
- AIS மீதான திருத்தப்பட்ட விதிமுறைகள் (IS028 - 3 ஆவது பதிப்பு Rev02)

## ANS தொடர்பான ICAO அரச கடிதங்கள் மீதான நடவடிக்கை

2021 ஆம் ஆண்டில் ANS பிரிவால் 92 ICAO அரச கடிதங்கள் பார்வைக்கு வந்ததால், அவற்றிலுள்ள விடயங்களை விரைவாக செயற்படுத்துதல்.

## கணக்காய்வு மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகள்

சிவில் விமானப் போக்குவரத்து இயக்குநரால் (DGCA) அங்கீகரிக்கப்பட்ட ‘ANS கண்காணிப்புத் திட்டம் 2021’ இன்படி இந்தத் துறை தொடர்ந்து தொழில்துறையில் கண்காணிப்பை மேற்கொண்டது. இலங்கையில் வான் வழிகாட்டல் சேவைகளை வழங்குவதில் பாதுகாப்பு மேற்பார்வை அமைப்பின் செயல்திறனை உறுதி செய்வதற்காக பின்வரும் செயற்பாட்டு மையங்கள்/அமைப்புகளில் அறுபத்து மூன்று (63) திட்டமிடப்பட்ட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

- பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் (VCBI), மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் (VCRI), கொழும்பு இரத்மலானை விமான நிலையம் (VCCC), மட்டக்களப்பு விமான நிலையம் (VCCB), யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையம் (VCCJ) ஆகியவற்றில் ATS செயற்பாட்டு மையங்கள்.
- VCCC இல் தேடல் மற்றும் மீட்பு (SAR) மையம்
- VCBI இல் வானூர்தி தகவல் சேவைகள் மையம்
- VCBI இல் வரைபடங்கள் மற்றும் விளக்கப் படங்கள் அலகு
- அத்திடிய, பிதுருதலாகல, கந்தபொல, VCCC, VCCB, VCBI, VCRI, VCCJ ஆகியவற்றில் உள்ள தொடர்பாடல் வழி செலுத்துதல் மற்றும் கண்காணிப்பு (CNS) மையங்கள்
- விமானப் போக்குவரத்து சேவைகளின் பாதுகாப்பு முகாமைத்துவ அமைப்பு
- ANS பிரிவு வான்தகைமை, செயற்பாடுகள், வான்பறப்பு பாதுகாப்பு பிரிவுகளுடன் இணைந்து திட்டமிடப்படாத விமான ஆய்வுகளை நடத்துகிறது. 2021 இல் இவ்வாறான நான்கு ஆய்வுகளை நடத்தியது.
- ANS பிரிவு VCRI இன் ஏரோட்ரோம் சான்றிதழ் புதுப்பித்தல் கணக்காய்வில் பங்கேற்றது.

## நிறுவன முடிவுகள் கட்டமைப்பு (ORF)

சர்வதேச தரநிலைகள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகள் மற்றும் தேசிய சட்டத் தேவைகளுடன், வான்வழிகாட்டல் சேவை வழங்குநரின் இணக்கம் 2021 ஆம் ஆண்டுக்காக கணக்கிடப்பட்டது.

## ATC சிமுலேட்டர் சோதனைகள் மற்றும் தர மதிப்பீடு

ANS பிரிவு முப்பத்தெட்டு (38) ATC சிமுலேட்டர் சோதனைகள் மற்றும் விமானப் போக்குவரத்து கட்டுப்பாட்டாளர்கள் மீது பதினொரு (11) தர மதிப்பீடுகளை மேற்கொண்டு வான் போக்குவரத்து கட்டுப்பாட்டு சேவையை வழங்குவதில் மேம்படுத்தப்பட்ட மற்றும் நிலையான நிபுணத்துவத்தை உறுதிப்படுத்தியது.

## ரேடியோ தகவல்தொடர்பு செயல்முறை பரீட்சைகள்

ANS பிரிவு ரேடியோ தகவல்தொடர்பு (RT) பரீட்சைகளை நடத்துவதில் பயிற்சி அமைப்பு மற்றும் ஊழியர் உரிமம் (PEL) பிரிவுடன் ஒத்துழைத்தது. மற்றும் வணிக விமானி உரிமம் (CPL) மற்றும் தனியார் விமானி உரிமம் (PPL), தனியார் விமானப் பயிற்சி கல்லூரிகளின் விமானிகளுக்கான RT பரீட்சைகளுக்கான தேர்வுக் குழுவைப் பிரதிநிதித்துவப்படுத்தியது. அதன்படி, நாற்பத்து மூன்று (43) ரேடியோ தகவல்தொடர்பு பரீட்சைகள் நடத்தப்பட்டன

## விசாரணைகள்

ANS பிரிவு 2021 ஆம் ஆண்டில் வான் போக்குவரத்து முகாமைத்துவம் தொடர்பான சம்பவங்கள் குறித்து இரண்டு (2) விசாரணைகளை, இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் தடுக்கும் நடவடிக்கைகள் எடுப்பதற்காக, நடத்தியது.

# வானூர்தி சேவை முறைப்படுத்தல் பிரிவு

## விமான அனுமதி/தரையிறங்கும் அனுமதி

திட்டமிப்படாத தொழில்நுட்ப நிறுத்தங்கள்/ வணிகம் சாரா தரையிறங்கும் விமானங்கள் மற்றும் இலங்கை வான்பரப்பு மேலாகச் செல்லும் பயணங்களுக்கு ஒப்புதல் அளித்தல் திறமையாக மேற்கொள்ளப்பட்டது. பாதுகாப்பு அமைச்சகம் (MOD) மற்றும் இலங்கை விமானப் படை (SLAF) உள்ளிட்ட பிற தொடர்புடைய நிறுவனங்களின் கூடுதல் ஒப்புதலுக்கு உட்பட்டு நோக்கம் இடம்பெறும் இடத்தைப் பொறுத்து வான்வழிப் பயணத்துக்கான ஒப்புதல் வழங்கப்பட்டது. அதன்படி, ANS பிரிவு 584 திட்டமிடப்படாத விமானங்களுக்கு இலங்கையின் எல்லைக்கு மேல் பறக்கவும், 551 விமானங்களுக்கு இலங்கையில் தரையிறங்கவும் அனுமதிகளை வழங்கியது.

இலங்கையின் விமான நிலையங்களுக்குள் இராஜதந்திர விமானங்களை இயக்குவது மற்றும் இலங்கை எல்லைக்கு மேலாக பறப்பதற்கு முன்மொழியப்பட்ட விமானங்கள் தொடர்பாக வெளியுறவு அமைச்சுடன் ஒருங்கிணைக்கப்பட்டது. அதன்படி, இராஜதந்திர தரையிறங்கும் விமானங்களுக்கு 153 ஆட்சேபணையில்லா/ ஒப்புதல் குறிப்புகளும், இலங்கை எல்லைக்கு மேல் பறக்க இராஜதந்திர விமானங்களுக்கு 57 ஆட்சேபணையில்லா/ஒப்புதல் குறிப்புகளும் வழங்ப்பட்டன. மேலும் 41 வான்வழி புகைப்பட/ விளம்பர விமானங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

## AIP திருத்தங்கள், AIP குறைநிரப்பு, வானூர்தி தகவல் சுற்றறிக்கைகள் (AIC) மற்றும் NOTAM கோரிக்கைகள்

AIP திருத்தம் ஒன்று (1), AIP குறைநிரப்புகள் மூன்று (3), வானூர்தி தகவல் அறிக்கைகள் (AIC) நான்கு (4) வெளியிடப்பட்டன. அதேநேரத்தில் செயற்பாட்டு நடவடிக்கைகள் குறித்த NOTAM கோரிக்கைகள் ஐந்நூற்று எழுபத்து ஒன்பது (579) ஆய்வு செய்யப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

## வான்வழிகாட்டல் சேவைகள் தொடர்பாக அரச பாதுகாப்பு திட்டத்தை செயற்படுத்துதல்

- விமான சேவை வழங்குநரின் பாதுகாப்பு முகாமைத்துவக் கையேடு மதிப்பாய்வு செய்யப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- கொழும்பு FIR இற்குள் 50NM நீளமான பிரிவை செயல்படுத்துவது குறித்து நடத்தப்பட்ட பாதுகாப்பு மதிப்பீட்டை மதிப்பாய்வு செய்தது.
- மாலே மற்றும் கொழும்பு TMA இடையே TOC புள்ளிகளில் 30NM விண்ணப்பத்தின் மீது நடத்தப்பட்ட பாதுகாப்பு மதிப்பீடு மதிப்பாய்வு செய்யப்பட்டது.
- VCCC இல் தனியாக சக்தியை வழங்கும் AGL ஐ செயல்படுத்துவதில் நடத்தப்பட்ட பாதுகாப்பு மதிப்பீடு மதிப்பாய்வு செய்யப்பட்டது.
- ATS வழங்குநரால் நடத்தப்பட்ட பாதுகாப்பு மதிப்பீடு மதிப்பாய்வு செய்யப்பட்டது.

## இலங்கை வான்வழிகாட்டல் திட்டத்தின் அபிவிருத்தி (SLANP)

இலங்கைக்கான வான்வழிகாட்டல் திட்டத்தின் அபிவிருத்தியை நிறைவு செய்து, அதற்கான DGCA அங்கீகாரத்தைப் பெற்றது.

## ANS பயிற்சி

ANS தொடர்பான ஒழுங்குமுறைப் பணிகளைச் செய்யப் போதுமான பயிற்சி பெற்ற ஊழியர்களின் வளர்ச்சியை உறுதி செய்வதற்காக, பிரிவின் அதிகாரிகள் தங்கள் தொழில்முறை திறன்களை வலுப்படுத்துதல் மற்றும் அறிவு எல்லைகளை விரிவுபடுத்துதல் ஆகியவற்றுடன் தொடர்புடைய 76 பயிற்சிகளை மேற்கொண்டனர்.

## ICAO மற்றும் பிற கூட்டங்கள்

பணிப்பாளர் - வான்வழிகாட்டல் சேவைகள் மற்றும் மூத்த சிவில் விமானப் போக்குவரத்து ஆய்வாளர் - ATMSP வான் போக்குவரத்து முகாமைத்துவக் துணைக்குழுவின் (ATM/SG/8) எட்டாவது கூட்டத்தில் ATMSP இன் மெய்நிகர் கூட்டத்தில் CAASL ஐ பிரதிநிதித்துவப்படுத்தினார்.

கொழும்பு FIR இற்குள் RNP 10 கிடைமட்ட பிரிப்புத் தரங்களைப் பயன்படுத்துவதற்கான வழிகாட்டுதலை வழங்குவதற்காக வரையறு.விமான நிலையம் வான்பயண சேவைகள் (இலங்கை) நிறுவனத்துடன் (CAASL) ஒரு சந்திப்பு நடத்தப்பட்டது.

ANS பிரிவானது பெட்ரோலிய வளங்கள் மேம்பாட்டு செயலகம் ஏற்பாடு செய்த கூட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது. வானகாஈர்ப்பு - காந்த ஆய்வுக்கான அரசாங்க திட்டத்துக்கு உதவுகிறது.

# வானூர்தி சேவை முறைப்படுத்தல் பிரிவு

தேசிய வானூர்தி தேடல் மற்றும் மீட்பு திட்டம் தொடர்பான மெய்நிகர் சந்திப்புகள் வணிகக் கப்பல் செயலகம், நிதி அமைச்சு, அனர்த்த முகாமைத்துவ நிலையம், இலங்கை இராணுவம், இலங்கை விமானப்படை, இலங்கை சுங்கம், வளிமண்டலவியல் திணைக்களம், குடிவரவுத் திணைக்களம், வெளிநாட்டலுவல்கள் அமைச்சு, NARA, மீன்பிடி மற்றும் நீர்வழங்கல் திணைக்களம் ஆகியவற்றுடன் ஒருங்கிணைக்கப்பட்டு நடத்தப்பட்டன.

இலங்கை வான்வழிகாட்டல் திட்டம் தொடர்பாக CAASL உடன் ஒன்பது கூட்டங்கள் ஒருங்கிணைந்து நடத்தப்பட்டன.

நியமிக்கப்பட்ட மூத்த சிவில் விமானப் போக்குவரத்து பரிசோதகர் - ATM OPS மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து பரிசோதகர் ஆகியோர் ICAO ஆசிய/பசுபிக் தேடல் மற்றும் மீட்புப் பணிக்குழுவின் (APSAR/WG/6) ஆறாவது கூட்டத்தில் (மெய்நிகர் சந்திப்பு) பங்கேற்றனர்.

எக்ஸ்போ லங்கா ஹோல்டிங்ஸ் PLC இற்காக இலங்கையில் Cloudline விமான செயற்பாடுகள் பற்றிய விவாதத்தில் ANS பணிப்பாளர் பங்குபற்றினார்.

ICAO AIS – AIM அமலாக்க பணிக்குழுவின் பதினாறாவது கூட்டத்தில் (AAITF/16) கூட்டத்தில் (மெய்நிகர் கூட்டம்) இரண்டு சிவில் விமானப் போக்குவரத்து பரிசோதகர்கள் பங்கேற்றனர்

APAC வான் போக்குவரத்து முகாமைத்துவத் துணைக்குழுவின் 9 ஆவது கூட்டத்தில் (ATM/SG/9) (மெய்நிகர் கூட்டம்) ANS பிரிவு பங்கேற்றது.

ATS பிரிப்பு தரநிலைகள் குறித்து விவாதிப்பதற்காக AASL இன் ATS மற்றும் E/ANE அதிகாரிகளுடன் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சின் பிரதிநிதிகள் மற்றும் ANS பிரிவு ஒரு கூட்டத்தில் பங்கேற்றது.

ATS வழங்குநரின் பாதுகாப்பு முகாமைத்துவக் கையேட்டை மதிப்பாய்வு செய்ய CAASL உடன் இரண்டு மெய்நிகர் சந்திப்புகள் நடத்தப்பட்டன

## கொழும்பு FIR இற்குள் தேடல் மற்றும் மீட்பு (SAR) சேவைகள்

CAASL ஆல் பராமரிக்கப்படும் வானூர்தி மீட்பு ஒருங்கிணைப்பு மையம் (ARCC) மற்றும் இலங்கை கடற்படையால் நிறுவப்பட்டு பராமரிக்கப்படும் கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு மையம் (MRCC) ஆகியவற்றுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு செயல்முறையை நிறுவுதல் மற்றும் SAR சேவைகளை வழங்குவதன் அடிப்படையில் அரச கடமைகளை திறம்பட நிறைவேற்றுவதை உறுதிசெய்ய CAASL ஆல் கூட்டங்கள் மற்றும் பணிக்குழுக்களை உருவாக்குதல் ஆகியவற்றின் மூலம் மேற்கொள்ளப்பட்ட தலையீடுகளால் தொடங்கப்பட்டது.

CAASL தேசிய வானூர்தி தேடல் மற்றும் மீட்பு திட்டத்தை (NASARP) ஸ்தாபிப்பதற்கான செயன்முறையை முன்னெடுத்தது. இது தொடர்பாக தேசிய வானூர்தி தேடல் மற்றும் மீட்புத் திட்டத்தின் ஆரம்ப வரைவு உருவாக்கப்பட்டது. பாதுகாப்பு அமைச்சு (MOD) மற்றும் விமானப் போக்குவரத்து இராஜாங்க அமைச்சு மற்றும் ஏற்றுமதி வலயங்களை அபிவிருத்தி செய்தல் என்பவற்றின் அனுமதிகளின் ஊடாக இந்த ஆவணம் பின்னர் பாதுகாப்பு நிறுவனங்களுக்கும் ஏனைய நாடுகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது. திட்டத்தில் விவரிக்கப்பட்டுள்ள தங்கள் பங்கை பார்வையிடவும். தேசிய வானூர்தி தேடல் மற்றும் மீட்பு முயற்சிக்கு தங்கள் சிறந்த பங்களிப்பை வழங்கும் வகையில் அதனை மேலும் சீர்திருத்தவும் பங்குதாரர்களுக்கு அறிவிக்கப்பட்டது. திட்டத்தை இறுதி செய்வதற்காக SAR பங்குதாரர்களின் ஒரு செயற்குழுவை நிறுவுவதற்கான வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் ஆண்டு இறுதியில் பின்னூட்டம் மற்றும் ஒப்புதலுடன் ஆரம்ப வரைவை இறுதி செய்ய முடிந்தது. இப்போது திருத்தங்களை மதிப்பாய்வு செய்து அவற்றை (NASARP) இல் இணைக்கும் பணியில் CAASL ஈடுபட்டு வருகிறது.

தேசிய வானூர்தி தேடல் மற்றும் மீட்பு சேவையானது SAR சேவைகளை வழங்குவதை உறுதி செய்வதற்காக GOSL மற்றும் GOI இடையே ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதறகாக CAASL தொடர்ந்து இந்திய வெளியுறவு அமைச்சகம் மற்றும் இந்திய விமான நிலைய ஆணையத்துடன் பேச்சு நடத்தி வருகிறது.

CAASL இன் ARCC மற்றும் இலங்கை கடற்படையின் MRCC ஆகியவற்றுக்கு இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம் ANS ஆல் உருவாக்கப்பட்டு இறுதி செய்யப்பட்டது. புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கான ஆவணம் இலங்கை கடற்படைக்கு அனுப்பப்பட்டது. சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் ஆவணத்தில் கையெழுத்திடும் வகையில் இலங்கை கடற்படை பாதுகாப்பு அமைச்சின் ஒப்புதலைப் பெறுவதற்கான செயற்பாட்டில் உள்ளது.

# வானூர்தி சேவை முறைப்படுத்தல் பிரிவு

### ANS ஏற்பாடு தொடர்பான ஒழுங்குமுறை கட்டமைப்பை திறம்பட செயற்படுத்துவதற்கும் அமலாக்குவதற்கும் வழிகாட்டுதல் மேம்பாடு

பின்வரும் பகுதிகளில் வழிகாட்டுதல் கையேடுகளை உருவாக்குதல்,

- இலங்கையில் IFP வடிவமைப்பு சேவை (95% நிறைவு)
- ATS SMS மேற்பார்வைக்கான வழிகாட்டுதல் கையேடு (85% நிறைவு)
- ATSP வழங்குவதில் சோர்வை மேற்பார்வைக்கான வழிகாட்டுதல் கையேடு (50% நிறைவு)
- AIS வழங்குநர் மற்றும் தரவுத் தோற்றுவிப்பாளர்களுடன் முறையான ஏற்பாடுகளைச் செயல்படுத்துவதற்கான வழிகாட்டுதல் கையேடு (50% நிறைவு)
- ATS SMM செயல்படுத்துவதற்கு பொறுப்பான செயல்பாட்டு பணியாளர்களுக்கான வழிகாட்டுதல் கையேடு. (50% நிறைவு)
- வானொலி வழிசெலுத்துதல் பொருட்களின் ANSP செயல்திறன் விமான அளவீடுகளுக்கான வழிகாட்டுதல் கையேடு (75% நிறைவு)

### USOAP தொடர்கண்காணிப்பு அணுகுமுறை (CMA) சார் செயற்பாடுகள் மற்றும் சரியான செயற்திட்டங்கள்

ANS ஊழியர்கள், சரிசெய்தல் திட்டங்களை (CAP) செயல்படுத்துவதில் தொடர்ந்து கலந்துகொண்டனர். அதே நேரத்தில் தேவையான செயற்படுத்தல் தரநிலைகள் மற்றும் பிற தொடர்புடைய ஆவணங்களை படிப்படியாக மேம்படுத்தி, தொழில்துறையின் தரநிலைகளை செயற்படுத்துவதற்கான நிறுவனத்தை தயாரிப்பதற்காக வான்வழிகாட்டல் சேவைகள் வழங்குனருடன் ஈடுபட்டுள்ளனர்.

### உலகலாவிய அறிக்கை வடிவத்தை (GRF) செயற்படுத்தல்

ANS பிரிவு இலங்கையில் GRF ஐ நடைமுறைப்படுத்துவதற்காக CAASL இன் விமானத்தளப் பிரிவுடன் இணைந்து பணியாற்றியது. AE பிரிவினரால் நடத்தப்பட்ட புசுகு பயிற்சிகளில் ANS பிரிவு பங்கேற்றது. மற்றும் மூத்த சிவில் விமானப் போக்குவரத்து ஆய்வாளர் - ATMSP மற்றும் சிவில் விமானத்துறை பரிசோதகர் AIS (D) ஆகியோர் முறையே AIS அதிகாரிகள் / AASL இன் பாதுகாப்பு குழுவுக்கான GRF செயலாக்கம் குறித்த இரண்டு பயிற்சி அமர்வுகளை நடத்தினர்.

AASL இன் வான்வழிகாட்டல் சேவைகள் பிரிவால் GRF இல் உருவாக்கப்பட்ட SOP மதிப்பாய்வு செய்யப்பட்டது. மற்றும் GRF அமலாக்கத்துக்காக AASL இன் வான்வழிகாட்டல் சேவைகள் பிரிவினால் உருவாக்கப்பட்ட அமலாக்க உத்தியை மதிப்பாய்வு செய்தது.

### எதிர்கால வான்பயண அபிவிருத்திக்காக கொழும்பு FIR இன் மறுசீரமைப்பு பற்றிய வரலாற்று ஆய்வுகள்/மறுசீரமைப்பு' மீதான மதிப்பீடு

பின்வரும் பகுதிகளை உள்ளடக்கிய 'எதிர்கால வான்பயண அபிவிருத்திக்காக கொழும்பு விமான தகவல் பிராந்தியத்தின் (FIR) மறுசீரமைப்பு பற்றிய வரலாற்று ஆய்வுகள்/மறுசீரமைப்பு' பற்றிய அறிக்கையை தயாரித்தல்.

விமானத் தகவல் பிராந்தியம், FIR எல்லைகளை வரையறுக்கும்போது கருத்திற்கொள்ள வேண்டிய காரணிகள், மதிப்பீட்டுக்கான காரணிகள், கொழும்பு விமானத் தகவல் பிராந்தியம், கொழும்பு FIR இன் பரிமாணங்கள், கொழும்பு FIR இன் பரிணாமம், FIR இற்குள் நுழையும் சேவைகளை வழங்குவதில் தற்போதைய நிலை, வான்வெளி பிரதிநிதிகளால் பொருளாதாரப் பாதிப்பு, வான்வெளியை மீட்டெடுப்பதில் எடுக்கப்பட்ட நடவடிக்கை/முன்னேற்றம் (95% நிறைவு.)

### சேவை ஒப்பந்தங்கள்

அச்சிடப்பட்ட மற்றும் மின்னணு பதிப்புகளில், வானூர்தி வரைபடங்கள், மற்றும் வரைபடங்களின் இலவச விநியோகத்தைப் பெறுவதற்காக Jeppessen உடனான சேவை ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட்டது.

### பெருநிறுவன விவகாரங்கள் மற்றும் அலுவலக முகாமைத்துவத்தில் முன்னேற்றம் மற்றும் பங்களிப்பு

தொடர்ச்சியான குறிப்புகள் மற்றும் மதிப்பாய்வுகள் மூலம் CAASL அலுவலகக் கையேட்டின் தற்போதைய கையேடுகள், சரிபார்ப்புப் பட்டியல்கள், வழிகாட்டுப் பொருட்கள், ANS அத்தியாயம் புதுப்பிக்கப்பட்டது.

CAASL இணையத்தில் ANS பிரிவில் உள்ள தகவல் துல்லியமாக சரிபார்க்கப்பட்டு அதற்கேற்ப புதுப்பிக்கப்பட்டது.

# விமானப் பாதுகாப்பு முறைப்படுத்தல் பிரிவு



"அனைவருக்கும் பாதுகாப்பு மற்றும் வினைத்திறன்மிக்க ஆகாயம்"

# விமானப் பாதுகாப்பு முறைப்படுத்தல் பிரிவு

## பயிற்சி நிறுவனங்கள் மற்றும் ஊழியர் உரிமம் பிரிவு

சர்வதேச தரநிலைகள், பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளுக்கு ஏற்ப, சிவில் விமானப் போக்குவரத்து தொடர்பான பாதுகாப்பு முக்கியத்துவம் வாய்ந்த நடவடிக்கைகளில் ஈடுபடும் ஊழியர்களுக்கான பயிற்சி நிறுவனங்களின் சான்றிதழ், கண்காணிப்புக்கான சட்டங்கள், விதிகள், நடைமுறைகளை உருவாக்குவதற்கு பயிற்சி நிறுவனங்கள் மற்றும் ஊழியர் உரிமம் பிரிவானது பொறுப்பாகும்.

சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் ஊழியர் உரிமம் பிரிவு 2021ஆம் ஆண்டில் வாடிக்கையாளர்களை திருப்திப்படுத்துவதன் மூலம் வான்போக்குவரத்து சமூகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்ய மேலும் முன்னேற்றங்களைக் காட்டியுள்ளது.

- செயலற்ற காலகட்டத்தில், அனைத்து உரிமதாரர்களுக்கும் மார்ச் 31 வரை 90 நாட்கள் வரையிலான நீடிப்பு மற்றும் விண்ணப்பதாரரின் மருத்துவ நிலைக்கு ஏற்ப, ICAO தேவையாக 45 நாட்கள் வரை நீடிக்கப்பட்டுள்ளது. செயலற்ற காலத்தின்போது உரிமதாரரின் திறன் சோதனைகள் புதுப்பித்தல் மற்றும் மதிப்பீடுகள் செயற்பாட்டாளரின் பிராந்திய உறுதிப்படுத்தலுக்கு உட்பட்டு நீடிக்கப்பட்டது.
- Google Meet வசதியைப் பயன்படுத்தி பிரிவுகளுக்கான சந்திப்புகள் நடத்தப்பட்டன. அனைத்து பரிசோதகர்களும் இணைப்பு 1 இன் பரிந்துரை நடைமுறைகளின்படி வழிகாட்டுதல் செயற்பாடுகளை புதுப்பிப்பதில் ஈடுபட்டுள்ளனர்.
- விமான ஊழியர் குழு உரிமம், நடைமுறைப்படுத்தல் தரநிலை (IS) -72 ஆகியவற்றுக்காக மறுசீரமைப்பு உருவாக்கப்பட்டதுடன் 2021 ஏப்ரல் 1 முதல் செயற்படுத்தப்பட்டது. IS 72 இன் தேவைகளுக்கு ஏற்ப திறன் தேர்வுப் படிவங்கள், சரிபார்ப்புப் பட்டியல்கள், விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டன. பணிப்பட்டறைகள் மற்றும் கூட்டங்கள் நடத்தப்பட்டன. அத்துடன் தொழில் துறையினருடன் சந்திப்புகளும் இடம்பெற்றன.
- IS 72 ஐ செயல்படுத்துவதற்கு வசதியாக DFOI கூட்டங்கள் நடத்தப்பட்டன.
- IS 72 இன்படி புதிய விமான சிப்பந்திகள் உரிமம் வழங்குதல். IS 72 இன் தேவைகளுக்கு ஏற்ப இணையவழி உரிமமுறை மேம்பாடு செய்யப்பட்டது.
- SLCAP – 3030 இன் 2வது பகுதியாக விமான சிப்பந்திகளின் அதிகார தேவைகளை வரைவு செய்தல், IS 49, IS 50, IS 55 உள்ளிட்ட ஏற்கனவேயுள்ள நடைமுறைப்படுத்தல் தரநிலைகளின் புதுப்பிப்பு நிறைவு செய்யப்பட்டது.
- ஏற்கனவே உள்ள தேர்வு முறையை மேம்படுத்தல் தொடர்ந்தது. IS 72 இன் தேர்வுத் தேவைகளுக்கு ஏற்புடையவாறு தேர்வு நடைமுறை புதுப்பிக்கப்பட்டது.
- 1100 விண்ணப்பதாரர்களுக்கான விமானப் பராமரிப்பு பரீட்சை BMICH இல் வெற்றிகரமாக நடத்தப்பட்டதுடன் வருடத்தின் இரண்டாம் பாதியில் நடத்தப்படவிருந்த AML பரீட்சை தொற்றுநோய் காரணமாக பிற்போடப்பட்டது.
- NIB விண்ணப்பங்கள் செயலாக்கப்பட்டு உரிய அமைச்சகத்துக்கு அனுப்பப்பட்டதுடன் பெறப்பட்ட பாதுகாப்பு அமைச்சின் அனுமதி SLAF இற்கு அனுப்பப்பட்டு CAASL இணையத்தில் வெளியிடப்பட்டது.
- வெளிநாடுகளிலிருந்து விபரங்களை பெறுவதை தொற்றுநோய் குறைத்ததால், உரிமச் சரிபார்ப்புகளை பெற்ற பிறகு விமானிகள் மற்றும் பராமரிப்பு பணியாளர்களுக்கு வெளிநாட்டு உரிமச் சரிபார்ப்புச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

# விமானப் பாதுகாப்பு முறைப்படுத்தல் பிரிவு

| | | |
|---|---|---|
| ஊழியர் மற்றும் விமானப் பயிற்சி நிறுவனங்களின் சான்றிதழ், அவற்றின் செயற்பாடுகளைத் தொடர்ந்து கண்காணித்தல், பாதுகாப்பு குறைபாடுகளைத் தீர்த்தல் | விமானி உரிமம் | 1,135 |
| | விமான பயிற்றுநர் (AFI & FI) உரிமம் | 9 |
| | தரை பயிற்றுநர் உரிமம் | 22 |
| | வெளிநாட்டு உரிமங்களின் சரிபார்ப்புச் சான்றிதழ் | 29 |
| | வான்போக்குவரத்து கட்டுப்பாட்டு உரிமம் | 163 |
| | வானூர்தி பராமரிப்பு உரிமம் | 118 |
| | விமானச் சிப்பந்தி சான்றிதழ் | 193 |
| | சிவில் விமானப் போக்குவரத்து அறிவுத்திறன் தேர்வு | 2,535 |
| வான்பயண பயிற்சி நிறுவனங்களின் சான்றிதழ், அவற்றின் செயற்பாடுகளை தொடர்ந்து கண்காணித்தல், பாதுகாப்புக் குறைபாடுகளைத் தீர்த்தல் | பயிற்சி நிறுவனங்கள் பற்றிய தொடர் ஆய்வு | 08 |
| | ஆசிய விமானப்போக்குவரத்து மையம் | 1 |
| | பிட்ஸ் எயார் விமான அகடமி | 1 |
| | ஸ்ரீலங்கன் TRTO | 1 |
| | AT பயிற்சி மையம் | 1 |
| | வரையறு..ஃ.பிளை சதேர்ன் (தனி.) நிறுவனம் | 1 |
| | சகுராய் ஏவியேஷன் அகடமி | 1 |
| | வரையறு.லக்வின் ஏவியேஷன் (தனி.) நிறுவனம் | 1 |
| | வரையறு.ரெட் பேர்ட் ஏவியேஷன் (தனி.) நிறுவனம் | 1 |
| | உரிமக் கண்காணிப்புகள் | 6 |
| விமானக் குழு உரிமம் (தனியார் விமானி உரிமம் (PPL)/விமானப் போக்குவரத்து விமானி உரிமம் (ATPL) ஆகியவற்றுக்கான அறிவுத்திறன் தேர்வுகளை நடத்துதல் | விநியோகிக்கப்பட்ட வினாத்தாள்களின் எண்ணிக்கை - PPL | 463 |
| | விநியோகிக்கப்பட்ட வினாத்தாள்களின் எண்ணிக்கை - ATPL | 737 |
| விமான பராமரிப்பு பணியாளர்களுக்கான அறிவுத்திறன் தேர்வுகளை நடத்துதல் | விநியோகிக்கப்பட்ட வினாத்தாள்களின் எண்ணிக்கை - AML | 1,120 |
| RT மற்றும் ELPC க்கான நடைமுறை சோதனைகளை நடத்துதல் | PPL / CPL இற்கான RT எண்ணிக்கை | 64 |
| | ELPC எண்ணிக்கை | 124 |
| மாலைதீவு விண்ணப்பதாரிகளுக்கு PPL/CPL / ATPL அறிவுத்திறன் தேர்வை நடத்துதல் | விநியோகிக்கப்பட்ட வினாத்தாள்களின் எண்ணிக்கை | 2 |
| தேசிய பாதுகாப்பு திட்டத்தை செயற்படுத்துதல் | அங்கீகரிக்கப்பட்ட பாதுகாப்பு முகாமையாளர்களின் எண்ணிக்கை | 8 |
| | பயிற்சி நிலையங்களில் பாதுகாப்பு முகாமைத்துவ கையேடுகள் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | 8 |

# விமானப் பாதுகாப்பு முறைப்படுத்தல் பிரிவு

## வானூர்தி செயற்பாடுகள் பிரிவு

விமான பாதுகாப்பு விதிமுறைகளின் கீழ் உள்ள விமான சேவைகள் பிரிவானது, பன்னாட்டு குடிசார் வான்பயண அமைப்பு (ICAO) ஏற்றுக்கொண்ட பொருந்தக்கூடிய சர்வதேச தரநிலைகள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளுக்கு (SARP) ஏற்ப விமான சேவையாளர்களின் பயனுள்ள பாதுகாப்பு மேற்பார்வைக்காக உள்ளூர் விதிமுறைகள், விதிகள், உத்தரவுகள், நடைமுறைகளை மேம்படுத்துவதற்கு முதன்மையான பொறுப்பாகும். விமான சேவைகளின் சேவையாளர் விண்ணப்பதாரர்களின் ஆரம்ப மற்றும் புதுப்பித்தல் போன்றன.

- விமான செயற்படுத்துநர் சான்றிதழ்
- வெளிநாட்டு விமான செயற்படுத்துநர் சான்றிதழ்
- ஆபத்தான பொருட்கள் அனுமதி
- தரை கையாளுதல் உரிமம்
- தரை உதவி சேவைகள் அனுமதி

### ஒழுங்குமுறை மேம்பாடு

செயற்பாட்டுப்பிரிவானது 2010 ஆம் ஆண்டின் சிவில் விமானப் போக்குவரத்து சட்டம் இல. 14 இன் 78ஆம் பிரிவின் கீழ் ஆபத்தான பொருட்களுக்கான விதிமுறைகளை உருவாக்கியதுடன் ஆவண மதிப்பீட்டுக்கான சட்ட வரைவுத் துறையிடம் சமர்ப்பித்தது.

### விமான செயற்படுத்துநர் சான்றிதழ்கள்

விமான செயற்படுத்துநர் சான்றிதழ்களுக்கான ஏழு (7) ஆரம்ப விண்ணப்பங்கள் விமானச் செயற்பாட்டாளர்கள் பிரிவினால் பெறப்பட்டு அவை பரிசீலனையில் உள்ளன.

- ஓப்பன்ஸ்கைஸ்
- வரையறு.ஃபிளை லங்கா ஏசியா (தனி.) நிறுவனம்
- வரையறு. ரெட் பேர்ட் ஏவியேஷன் (தனி.) நிறுவனம்
- வரையறு. லக்வின் ஏவியேஷன் (தனி.) நிறுவனம்
- ஸ்பார்க் எயார்
- வரையறு. ஓரா எயார்லைன்ஸ் (தனி.) நிறுவனம்
- எயார் கொழும்பு

வரையறு. ஹெலிடுவர்ஸ் (தனி.) நிறுவனமானது காலாவதியான விமான செயற்படுத்துநர் சான்றிதழை புதுப்பிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டுக்கான பின்வரும் ஆறு (6) விமான நிறுவனங்களுக்கான செயற்பாட்டுப் பிரிவால் விமான செயற்படுத்துநர் சான்றிதழ்கள் புதுப்பிக்கப்பட்டன.

- வரையறு. ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் (தனி.) நிறுவனம்
- வரையறு. ஃபிட்ஸ் ஏவியேஷன் (தனி.) நிறுவனம்
- வரையறு. செங்கொக் ஏவியேஷன் (தனி.) நிறுவனம்
- வரையறு. சப்ரோன் ஏவியேஷன் (தனி.) நிறுவனம்
- வரையறு. ஏவியேஷன் (தனி.) நிறுவனம்
- வரையறு. ஃபிளை சதேர்ன் (தனி.) நிறுவனம்

### வெளிநாட்டு விமான செயற்படுத்துநர் சான்றிதழ்கள்

இலங்கையில் தற்போதுள்ள விமான சேவைகளை இயக்கும் விமான நிறுவனங்களுக்கு செயற்பாட்டாளர் பிரிவினால் வழங்கப்பட்ட இருபத்து ஒன்பது (29) வெளிநாட்டு செயற்படுத்துநர் சான்றிதழ்கள் புதுப்பித்து வழங்கப்பட்டன. 2021 இல் ஒன்பது (9) மூல வெளிநாட்டு செயற்படுத்துநர் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

- மாலைதீவு எயார்லைன்ஸ்
- ஜஸீரா எயார்வேஸ்
- உக்ரேன் இன்டர்நஷனல் எயார்லைன்ஸ்
- எயார் அஸ்தானா
- எயார்.ஃபல்கன்
- ஏரோ.ஃபிளொட்
- வியட்நாம் எயார்லைன்ஸ்
- எயார் பிரான்ஸ்
- மன்தா எயார்

### ஆபத்தான பொருட்களின் போக்குவரத்து

2021 ஆம் ஆண்டுக்கான விமானச் செயற்பாடுகள் பிரிவு பன்னிரண்டு (12) அபாயகரமான பொருட்களின் அனுமதிகளை புதுப்பித்துள்ளது.

இரண்டு (2) மூல அபாயகரமான பொருட்கள் அனுமதிக்கான விண்ணப்பங்கள் விமானச் செயற்பாட்டுப் பிரிவினரால் பெறப்பட்டன. அவை மதிப்பீட்டு நடைமுறையில் உள்ளன.

- பிளை டுபாய்
- ஓமான் எயார்

### தரை கையாளுதல் உரிமம்

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸை தரைவழி கையாள்பவராக சான்றளிக்கும் வகையில் வெளியிடப்பட்ட தரநிலைகளுக்கு இணங்குவதை உறுதி செய்வதற்காக 2021 ஆம் ஆண்டில் ஒரு விரிவான கணக்காய்வு நடத்தப்பட்டது.

### தரை உதவி சேவைகள் அனுமதி

2021 முதல் விமானச் செயற்பாடுகள் பிரிவின் கீழ், தரை உதவி சேவை அனுமதிகளை வழங்குதல்/ புதுப்பித்தல்.

# விமானப் பாதுகாப்பு முறைப்படுத்தல் பிரிவு

### நியமிக்கப்பட்ட மேற்பார்வை விமானி கண்காணிப்பு / விமானி திறன் சோதனை

பதினேழு (17) விமானக் குழு உறுப்பினர்களுக்கான மேற்பார்வை விமானி ஒப்புதல்கள் புதுப்பிக்கப்பட்டன. மற்றும் 2021 ஆம் ஆண்டுக்கான ஐந்து (5) மூல ஒப்புதல்கள் வழங்கப்பட்டன.

2021 இல் மேற்கொள்ளப்படும் விமானி தொழில்திறன் சோதனைகளுக்கு (PPC) எண்பத்து ஏழு (87) அனுமதிகள் வழங்கப்பட்டன.

### நியமிக்கப்பட்ட விமான செயற்பாட்டு பரிசோதகர்கள்

CAASL இற்காக அல்லது அதன் சார்பாக சில ஒழுங்குமுறைக் கடமைகள் மற்றும் செயற்பாடுகளைச் செய்ய அதிகாரம் கொண்ட, நியமிக்கப்பட்ட விமான செயற்பாட்டு பரிசோதகர்கள், திறமையான விமான செயற்பாட்டு பரிசோதகர்களின் பற்றாக்குறை காரணமாக, ஒழுங்குமுறை செயற்பாடுகள் மற்றும் கண்காணிப்பு செயற்பாடுகளைச் செய்யத் தேவைப்படும்போது பணியில் அமர்த்தப்பட்டனர். அவ்வாறு நியமிக்கப்பட்ட நான்கு (4) அதிகாரிகளின் நியமனங்கள் 2021 இல் புதுப்பிக்கப்பட்டன.

### கண்காணிப்பு நடவடிக்கைகள்

பயனுள்ள பாதுகாப்பு மேற்பார்வையை உறுதி செய்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட கண்காணிப்புத் திட்டத்தின்படி, CAASL ஒழுங்குமுறைத் தேவைகளுக்கு இணங்க, உள்ளூர் வெளிநாட்டு விமான செயற்படுத்துநர்கள் தொடர்ச்சியாகக் கண்காணிக்கப்படுகின்றனர். ஒட்டுமொத்த வான்பயணத் துறையிலும் நெருக்கடியை ஏற்படுத்திய கொவிட்-19 நோய்த்தொற்று காரணமாக 2021 ஆம் ஆண்டுக்கான அங்கீகரிக்கப்பட்ட கண்காணிப்பு நடவடிக்கைகளில் சுமார் 40% செயற்பாடுகளை செயற்பாட்டுப் பிரிவு மேற்கொண்டது.

கண்காணிப்பு நடவடிக்கைகளில் முதன்மை அடிப்படை கணக்காய்வுகள், சரிவு சோதனை, பயிற்சி கண்காணிப்பு, ஆபத்தான பொருட்கள் செயற்பாட்டாளர்கள், ஆபத்தான பொருட்களை கையாளுபவர்கள், ஆபத்தான சரக்குகள், வழித்தட சோதனை, சிமுலேட்டர் சோதனை, நியமிக்கப்பட்ட மேற்பார்வை விமானி, தரை கையாளுதல் சோதனை ஆகியவை அடங்கும். அதற்கு மேலதிகமாக, 2021 ஆம் ஆண்டுக்கான மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் மற்றும் மட்டக்களப்பு சர்வதேச விமான நிலைய சோதனைகளும் மேற்கொள்ளப்பட்டன.

## வானூர்தி பதிவு மற்றும் வான்தகைமை பிரிவு

இலங்கையில் சிவில் விமானங்களைப் பதிவு செய்வதற்கான விதிகள் மற்றும் நடைமுறைகளை மேம்படுத்தும் முக்கிய பொறுப்பு விமானப் பதிவு மற்றும் வான்தகைமைப் பிரிவுக்கு பொருந்தும் சர்வதேச தரநிலைகள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளுக்கு ஏற்ப உள்ளது. பராமரிப்புப் பயிற்சி நிறுவனங்கள், தொடர்ச்சியான வான்தகைமை முகாமைத்துவ நிறுவனங்கள், வானூர்திப் பராமரிப்பு நிறுவனங்கள் மற்றும் அவற்றின் செயற்பாடுகளை கண்காணித்தல் ஆகியவற்றுக்கான ஒப்புதல் வழங்குவது ஆகியவை இதில் அடங்கும்.

இந்தப் பிரிவு இலங்கையில் பதிவு செய்யப்பட்ட அனைத்து வானூர்திகளிலும் வான்தகைமை சார் செயற்பாடுகளை மேற்கொள்கிறது. இலங்கையில் இயக்கப்படும் அனைத்து பதிவு செய்யப்பட்ட சிவில் விமானங்களின் கண்காணிப்பையும் மேற்கொள்கிறது.

2021 டிசம்பர் இறுதிக்குள் இலங்கையில் சிவில் விமானப் பதிவேடு 80 ஆக இருந்தது. இதில் 25 பெரிய வானூர்திகள் (MTOW>5700KGS), 43 இலகுரக வானூர்திகள், 7 உலங்கு வானூர்திகள், 4 பலூன்கள், 1 அல்ட்ரா லைட் ஆகியவை அடங்கும்.

### ஒழுங்குமுறை மேம்பாடு

29 அக்டோபர் 2021 திகதியிட்ட IS-M இன் தொடர் வான்தகைமைத் தேவைகளுக்கான பதிப்பு, 2021 ஆம் ஆண்டில் 3 ஆவது பதிப்பு திருத்தம் 00 வெளியிடப்பட்டது.

மேலும் தேசிய அடையாளங்கள் மற்றும் பதிவு தொடர்பான விதிமுறைகள் சட்ட வரைஞரிடம் இறுதிக் கட்டத்தில் உள்ளன.

எரிபொருள் மற்றும் மசகுப்பொருள் சான்றிதழ் மீதான கட்டுப்பாடு வரைவுக் கட்டத்தில் உள்ளது.

### மேற்கொள்ளப்பட்ட சான்றிதழ் நடவடிக்கைகள்

- வானூர்திகளின் வான்தகைமை 2021 டிசம்பர் இறுதி வரை, மொத்தம் 4 தொடக்கச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டதுடன் மேலும் 54 வான்தகைமைச் சான்றிதழ்கள் புதுப்பிக்கப்பட்டன.

# விமானப் பாதுகாப்பு முறைப்படுத்தல் பிரிவு

- அங்கீகரிக்கப்பட்ட பராமரிப்பு நிறுவனங்கள் (AMO)
  3 ஆரம்ப பராமரிப்பு நிறுவனங்கள் (வெளிநாட்டு) சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. 10 பராமரிப்பு நிறுவனங்களின் சான்றிதழ்கள் (உள்ளூர்) சான்றிதழ்கள் வருடாந்த கணக்காய்வுக்குப் பின்னர் புதுப்பிக்கப்பட்டன. 55 FAMO (வெளிநாட்டு) சான்றிதழ்களும் புதுப்பிக்கப்பட்டன. RMA, BIA, MRIA, JAF ஆகியவற்றில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு 4 விசேட AMO அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

  மொத்தம் 21 பணிமனை திறன் ஒப்புதல்களும் வழங்கப்பட்டன. ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் பராமரிப்பு வசதி குறித்து விரிவான கணக்காய்வு நடத்தப்பட்டது.
- வானூர்தி பதிவுகள்
  டிசம்பர் 2021 இறுதிக்குள் 3 புதிய வானூர்திகள் பதிவு செய்யப்பட்டன, 69 புதுப்பிக்கப்பட்டன. மதிப்பாய்வு செய்யப்பட்ட காலப்பகுதியில், இலங்கை கடற்படையில் இருந்து மொத்தம் 2 விமானங்கள் பதிவு நீக்கம் செய்யப்பட்டன. மற்றும் வான்தகைமைக்கான ஏற்றுமதி சான்றிதழ் எதுவும் வழங்கப்படவில்லை.
- பராமரிப்பு பயிற்சி நிறுவனங்கள் (MTO)
  வருடாந்த கணக்காய்வின் பின்னர் மொத்தம் 2 AMTO சான்றிதழ்கள் புதுப்பிக்கப்பட்டன.
- தொடர்ச்சியான வான்தகைமை முகாமைத்துவ நிறுவனங்கள் (CAMO)
  வருடாந்த கணக்காய்வின் பின்னர் மொத்தம் 6 CAMO சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

### கண்காணிப்பு நடவடிக்கைகள்

- பாதுகாப்பு மேற்பார்வை
  தொழில் துறையிலிருந்து மொத்தம் 164 நிகழ்வு அறிக்கைகள் பெறப்பட்டு பாதுகாப்பு மேற்பார்வை திட்டத்தின் ஒரு பகுதியாக பகுப்பாய்வு செய்யப்பட்டது.
- அமலாக்க நடவடிக்கைகள்
  செஸ்னா 4R-HDE, 4R-HDC ஆகியவற்றின் பதிவு நீக்கப்பட்டது

### பிற செயற்பாடுகள்

- உதிரிப் பாகங்கள் ஒப்புதல்
  விமானங்களை பராமரிப்பதற்கு தேவையான உதிரிப்பாகங்களை இறக்குமதி/ஏற்றுமதி செய்ய, ஏராளமான சேவையாளர்கள் மற்றும் பராமரிப்பு வசதியார்களுக்கு மொத்தம் 110 கடிதங்கள் வழங்கப்பட்டன.



# வான்பயண பாதுகாப்பு முறைப்படுத்தல் பிரிவு

"அனைவருக்கும் பாதுகாப்பு மற்றும் வினைத்திறன்மிக்க ஆகாயம்"

# வான்பயண பாதுகாப்பு முறைப்படுத்தல் பிரிவு

## வான்பயண பாதுகாப்பு பிரிவு

வான்பயண பாதுகாப்புப் பிரிவின் முதன்மை நோக்கம், இலங்கையில் சிவில் விமானப் போக்குவரத்துக்கு உரிய அதிகாரம் கொண்ட DGCA சார்பாக, பயணிகள், ஊழியர்கள், தரைப் பணியாளர்கள், பொதுமக்கள், விமானம் மற்றும் விமான நிலையத்தின் வசதிகள் ஆகியவற்றின் பாதுகாப்பை உறுதி செய்யும் போது, தரையிலோ விமானத்திலோ செய்யப்படும் சட்டவிரோத தலையீடுகளுக்கு எதிராக நாட்டில் உள்ள சிவில் விமானப் போக்குவரத்துத் தொழில்துறையின் பாதுகாப்புச் செயல்பாடுகளை ஒழுங்குபடுத்துவதாகும்.

ICAO இன் உறுப்பு நாடாக, தரநிலை மற்றும் பரிந்துரைக்கப்பட்ட செயல்முறைகளுக்கு இணங்க சர்வதேச, தேசிய, விமான நிலைய மட்டங்களில் பல்வேறு மனித மற்றும் பொருள் வளங்களை ஒழுங்குசெய்தல் மற்றும் நடவடிக்கைகள் ஆகியவற்றின் மூலம் இது மேற்கொள்ளப்படுகிறது. இந்த முதன்மையான நோக்கத்தை அடைவதற்காக, ICAO இணைப்பு 17 - பாதுகாப்பு விதிகளுக்கு இணங்க, இலங்கையில் தேசிய சிவில் விமானப் பாதுகாப்புத் திட்டத்தை (NCASP) அபிவிருத்தி செய்தல், நடைமுறைப்படுத்துதல், பராமரித்தல், மறுபரிசீலித்தல் ஆகியன இந்தப் பிரிவு வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

### ஒழுங்குமுறை மேம்பாடு

2021 ஆம் ஆண்டில், விமானப் பாதுகாப்பு அம்சத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பின்வரும் சிவில் விமானப் போக்குவரத்து ஒழுங்குமுறை மேம்பாடுகளுக்கு இந்தப் பிரிவு பங்களித்தது.

- வெடிமருந்துகள் அல்லது வேறு ஏதேனும் போர்க் கருவிகளை எடுத்துச் செல்வதற்கான விதிமுறைகள்
- சாத்தியமான விமானப் பாதுகாப்பு மீறல்கள் CAASL அமலாக்க கையேட்டில் சேர்க்கப்படல்
- விமான பாதுகாப்பு சேவை வழங்குநர் உரிமம் குறித்த புதிய நடைமுறைப்படுத்தல் தரநிலை
- தரநிலை 46 ஐ நடைமுறைப்படுத்துதல் - தரை கையாளுதல் ஏற்பாடுகள், வசதிகள் மற்றும் அல்லது விமான சேவைகளுக்கான உரிமம் வழங்குதல்
- உத்தரவு எண் 006 - தரை ஆதரவு சேவைகளை வழங்குதல் (நிலையான அடிப்படையிலான இயக்குநர்) அனுமதி

விமானப் பாதுகாப்பு விடயங்களில் பாதுகாப்புப் பங்குதாரர்களை வழிநடத்தும் வகையில் இரண்டு (2) பாதுகாப்பு உத்தரவுகளை இப்பிரிவு வெளியிட்டது.

- சிவில் விமான நிலையங்களில் சிவில் விமானப் போக்குவரத்து நடவடிக்கைகளுக்கான கட்டுப்பாட்டில் விமானப் பாதுகாப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்துதல் - இலங்கை. (செயல்படும் திகதி- 17-02-2021)
- BIA இலிருந்து ஜப்பானுக்கான நேரடி விமானங்களுக்கான கட்டுப்பாட்டு பாதுகாப்பு நடவடிக்கைகளை மேம்படுத்துதல். (செயல்படும் திகதி – 19-07-2021)

### வழிகாட்டல் ஆவணங்களின் மேம்பாடு

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டுதல் ஆவணங்கள் 2021 ஆம் ஆண்டில் பிரிவால் மதிப்பாய்வு செய்யப்பட்டன.

- SLCAP 1000 – வான்பயண பாதுகாப்புத் தொழில் வழிகாட்டுதல் கையேடு
- SLCAP 1100 – வான்பயண இயக்குநர் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்ட தரநிலை
- SLCAP 1200 – வான்பயண பாதுகாப்பு ஆய்வாளர் கையேடு
- SLCAP 1300 – வான்பயண பாதுகாப்பு அலுவலக நடைமுறை கையேடு

### சான்றுப்படுத்தல் நடவடிக்கைகள்

- விமானத்தள சான்றுப்படுத்தல்

விமானத்தள இயக்குநரால் AVSEC ஒழுங்குமுறை தேவைகளுக்கு இணங்குவதை உறுதி செய்தலூடாக, 2021 ஆம் ஆண்டில் MRIA வான்பயண நிலையச் சான்றிதழைப் புதுப்பிப்பதற்கு பிரிவு ஆய்வாளர் பணியகம் பங்களித்தது.

- விமான இயக்குநர் சான்றுப்படுத்தல்

உள்நாட்டு விமான இயக்குநர்களுக்கான 10 பரிந்துரைகளும், வெளிநாட்டு விமான இயக்குநர்களுக்கான 17 பரிந்துரைகளும் அவர்களது விமான இயக்குநர் பாதுகாப்பு திட்டங்கள் மற்றும் அவர்களின் சமீபத்திய செயல்பாட்டு பதிவுகளை மதிப்பாய்வு செய்த பின்னர், அவர்களின் விமான இயக்குநர் சான்றிதழ்கள் / வெளிநாட்டு விமான இயக்குநர் சான்றிதழ்களை வழங்குதல் / புதுப்பித்தல் ஆகியவற்றிற்காக மேற்கொள்ளப்பட்டன.

- வான்பயண பாதுகாப்பு ஊழியர் சான்றுப்படுத்தல்
  கொவிட்-19 நோய்த்தொற்றின்போது கூட, விமான நிலையத்தின் விமான இயக்குநர்கள் மற்றும் பாதுகாப்புப் பணியாளர்களின் சான்றிதழ் / மறுசான்றிதழ் அளிப்புச் செயற்பாடு, பிரிவின் மூலம் 2021 முழுவதும் தொடரப்பட்டது. 2021

# வான்பயண பாதுகாப்பு முறைப்படுத்தல் பிரிவு

ஆம் ஆண்டில் சான்றளிக்கப்பட்ட ஊழியர்களின் விவரங்கள் பின்வருமாறு:

» வான்பயண பாதுகாப்பு முகாமையாளர்களின் சான்றளிப்பு/ மறுசான்றளிப்பு - 20
» வான்பயண பாதுகாப்பு பயிற்றுநர்களின் சான்றளிப்பு/ மறுசான்றளிப்பு - 14
» வான்பறப்பு பாதுகாப்பு ஸ்கிரீனர்களின் சான்றளிப்பு/ மறுசான்றளிப்பு - 48

குறிப்பு: கூடுதலாக, 600 வான்பயண பாதுகாப்பு ஸ்கிரீனர்களின் மறுசான்றிதழ் நீட்டிக்கப்பட்டது

✈ வான்பயண பாதுகாப்பு ஸ்கிரீனிங் சோதனைக் கருவி சான்றளிப்பு ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் 10 பாதுகாப்புச் சோதனை உபகரணங்களின் சான்றளிப்பு / மறு-சான்றளிப்பு பணி பூர்த்தி செய்யப்பட்டது. மற்றும் CAASL இன் 22 பாதுகாப்பு ஸ்கிரீனர் சோதனை கருவிகள் 2021 ஆம் ஆண்டுக்குள் சான்றளிக்கும் பணியில் இருந்தன.

### கண்காணிப்பு நடவடிக்கைகள்

நாட்டில் கொவிட்-19 நோய்த்தொற்று நிலைமையின்போது கூட, பிரிவின் பரிசோதகர் பணியகம், அனைத்து அதிகாரிகளின் துணையுடன் கொடுக்கப்பட்ட சர்வதேச தரத்துக்கு நாட்டின் விமானப் பாதுகாப்பு மேற்பார்வை அமைப்பைப் பராமரிப்பதில் தங்கள் கடமையை அர்ப்பணிப்புடன் நிறைவேற்றியது.

2021 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட கண்காணிப்புத் திட்டத்தின்படி, வான்பயண பாதுகாப்புச் சேவை வழங்குநர்கள் மீது பின்வரும் தரக் கட்டுப்பாட்டுச் செயல்பாடுகள் பிரிவின் ஆய்வாளரால் மேற்கொள்ளப்பட்டன.

» AVSEC ஆய்வுகள் - 40
» AVSEC சோதனைகள் - 03
» கணக்காய்வுகள் - 00
» அவதானிப்புகள் - 06

அதுமட்டுமின்றி, பிரிவின் ஆய்வாளர் பணியகம், திட்டமிடப்படாத விமானச் செயல்பாடுகள் குறித்து 3 ஆய்வுகளையும், / பிட்ஸ் எயாரின் தொடக்க சரக்கு விமானச் செயல்பாடு குறித்த விரிவான ஆய்வுகளையும் மேற்கொண்டது. மேலும், தரைவழி கையாளுதல் ஏற்பாடுகள் மற்றும் விமானங்களுக்கான வசதிகள்/ சேவைகளுக்கான உரிமம் வழங்குவதற்காக AVSEC அம்சத்தை உள்ளடக்கிய ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் ஆரம்ப சான்றிதழ் தணிக்கையில் ஆய்வாளர் பணியகம் ஈடுபட்டது.

### அமலாக்க நடவடிக்கை

பொருந்தக்கூடிய AVSEC ஒழுங்குமுறைத் தேவைகளுக்கு இணங்காத இயக்குநர்களுக்கு எதிராக அமலாக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இதுபோன்ற இணக்கமின்மைகள் தொடர்பாக இயக்குநர்களால் சரிசெய்தல் நடவடிக்கைகள் செயல்படுத்தப்படுவதைச் சரிபார்க்கும் வகையில் இப்பிரிவு பல பின்தொடர்தல் நடவடிக்கைகளைச் செய்தது.

### வேறு ஏதேனும் தகவல்

✈ பிரபஞ்ச பாதுகாப்பு கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் - இலங்கையில் தொடர்ச்சியான கண்காணிப்பு அணுகுமுறை (USAP-CMA) கணக்காய்வு

ICAO இணைப்பு 17 தரநிலைகள் மற்றும் இணைப்பு 9 இன் பாதுகாப்பு தொடர்பான ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதில் இலங்கையின் இணக்கத்தின் அளவை தீர்மானிக்கவென, 2022 ஆம் ஆண்டின் ICAO-CMA கணக்காய்வு அட்டவணைக்கு இணங்க, 2022 ஆம் ஆண்டின் முதல் பாதிக்குள் இலங்கையில் கணக்காய்வு செய்யப்படும். எனவே, 2021 ஆம் ஆண்டின் கடைசி காலாண்டில், ஒரு செயல் திட்டத்துடன் ICAO இற்கு தேசிய கடமைகளை நிறைவேற்றும்போது, கணக்காய்வை எதிர்கொள்ளத் தயாராகி வந்தது.

✈ தேசிய சிவில் விமானப் பாதுகாப்புக் குழு (NCASC)

தேசிய சிவில் விமானப் பாதுகாப்புத் திட்டத்தின் பல்வேறு அம்சங்களைச் செயல்படுத்துவதில் அக்கறையுள்ள அல்லது பொறுப்பான துறைகள், முகவரகங்கள் மற்றும் அரசின் பிற அமைப்புகள், விமான நிலையம் மற்றும் விமான இயக்குநர்கள், வான்பயண சேவை வழங்குநர்கள் மற்றும் பிற நிறுவனங்களுக்கு இடையே, பாதுகாப்பு நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் நோக்கத்திற்காக NCASC கூட்டங்கள் ஒவ்வொரு நாட்காட்டி ஆண்டிலும் குறைந்தது இரண்டு முறை நடத்தப்படும் என்றபோதும், நாட்டில் தற்போது நிலவும் கொவிட்-19 பரவுகையின் தாக்கங்கள் காரணமாக, பாதுகாப்பு அமைச்சின் தலைமையில் ஒரே ஒரு (1) NCASC கூட்டம் மட்டுமே 2021 இல் கூட்டப்பட்டது. ஆனால் NCASC ஐக் கூட்டுவதற்கான நோக்கம், 2021 இல் பல்வேறு பாதுகாப்பு மன்றங்களில் அடையப்பட்டது.

✈ சிவில் விமானப் போக்குவரத்து அச்சுறுத்தல் மதிப்பீட்டுக் குழு

2021 ஆம் ஆண்டில், நாட்டில் கொவிட்-19 பரவலின் இடையூறு

# வான்பயண பாதுகாப்பு முறைப்படுத்தல் பிரிவு

இருந்தபோதிலும், குழுக் கூட்டங்கள் வெற்றிகரமாகக் கூட்டப்பட்டன. இந்தக் குழுவின் நோக்கம் சிவில் விமானப் போக்குவரத்துக்கான அச்சுறுத்தலைத் தொடர்ந்து மதிப்பீடு செய்து தேசிய புலனாய்வுத் தலைவருக்கு (CNI) அறிக்கை அளிப்பதாகும். அதற்கேற்ப DGCA அச்சுறுத்தல் நிலைக்கு ஏற்றவாறான பொருத்தமான விமானப் பாதுகாப்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைச் செயல்படுத்துவதற்காக, தற்போதுள்ள அச்சுறுத்தல் நிலை குறித்து அறிவுறுத்தப்படுகிறது. குழு மதிப்பீடுகளில் நடைமுறை விமான நிலைய உள்கட்டமைப்பு சூழ்நிலைகளை இணைத்துக் கொள்வதற்காக, அச்சுறுத்தல் மதிப்பீட்டின் முடிவுகளை இறுதி செய்வதற்கு முன், 2021 அக்டோபர் 15 இந்த குழு BIA இற்கு விஜயத்தை மேற்கொண்டது. ICAO RCS அடிப்படையில் மதிப்பாய்வு செய்யப்பட்ட அச்சுறுத்தல் தகவல் முடிவுகளுடன், இலங்கையில் சிவில் விமானப் போக்குவரத்து நடவடிக்கைகளுக்கான அச்சுறுத்தலின் நிலை, டிசம்பர் 2021 இல் CNI இற்கு தெரிவிக்கப்பட்டது.

✈ விமானத்தின் நேரடியாக / சரக்குப்பகுதியில் ஆயுதங்களை எடுத்துச் செல்வதற்கான ஒப்புதல்

இலங்கையின் வான்பரப்புக்குள் மற்றும் இலங்கையில் உள்ள விமான நிலையங்களுக்கு ஆயுதங்களை எடுத்துச் செல்வதற்கான ஒப்புதல் DGCA இற்கு வழங்கப்பட்டுள்ளது. இது சார்பான கோரிக்கைகள் அரசு, தனியார் நிறுவனங்கள், தனிநபர்களால் முன்வைக்கப்படுகின்றன. இந்தச் சூழலில், 2021 ஆம் ஆண்டிற்குள் கப்பலில் ஏற்றிச் செல்வதற்கான அனுமதியைக் கோரி எந்த கோரிக்கையும் எழுப்பப்படவில்லை. அதேவேளையில், சரக்குக் கிடங்கில் வெடிமருந்துகளை எடுத்துச் செல்வதற்கு 47 அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன.

✈ நீதித்துறை மற்றும் நிர்வாக கட்டுப்பாட்டில் உள்ள பயணிகளின் வான் போக்குவரத்து

2021 ஆம் ஆண்டில், நீதித்துறை மற்றும் நிர்வாகக் கட்டுப்பாட்டில் உள்ள பயணிகளின் வான் போக்குவரத்துக்காக 151 பரிந்துரைகள் இலங்கைக்கு/இருந்து வழங்கப்பட்டுள்ளன.

✈ விமான நிறுவனங்களின் ஊழியர்களுக்கான விமான நிலைய அணுகல் அனுமதிகளை வழங்குவதற்கான பரிந்துரைகள்

விமான நிலைய ஊழியர்களுக்கு விமான நிலையங்களில் தமது கடமைகளை மேற்கொள்வதற்காக விமான நிலைய அணுகல் அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு 191 பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன, அதேவேளை வெளிநாட்டு விமான நிறுவனங்களுக்கு இலங்கையில் உள்ள விமான நிலையங்களில் AVSEC அல்லாத கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள 2 பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன.

✈ CAASL ஊழியர்களுக்கான விமான நிலைய அணுகல் அனுமதிகளை ஏற்பாடு செய்தல்

CAASL ஊழியர்களுக்கு விமான நிலைய அணுகல் அனுமதிகளை வழங்குவதற்கான பரிந்துரைகளை வழங்குவதை இந்த பிரிவு தொடர்ந்து நிர்வகித்தது. நாள் அனுமதி மற்றும் நிரந்தர/தற்காலிக அணுகல் அனுமதிகளை வழங்குவதற்கு 180 பரிந்துரைகள் வழங்கப்பட்டன.

✈ தொழில்துறையின் பயிற்சி தேவைகளை பூர்த்தி செய்வதற்கான பங்களிப்பு

AVSEC முகாமையாளர்களின் சான்றிதழ் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக CAASL ஆல் நடத்தப்பட்ட ஒரு (1) பயிற்சித் திட்டத்துக்கு பிரிவின் ஆய்வாளர் பணியகம் பங்களித்தது.

✈ கட்டுநாயக்க CAASL தலைமை அலுவலகத்தின் ஒருங்கிணைந்த பாதுகாப்பு அமைப்பை நிர்வகித்தல்

ஊழியர்கள், வாடிக்கையாளர்களுக்கு பாதுகாப்பான சூழலை ஏற்படுத்தவும் அதன் சொத்துக்களை பாதுகாக்கவும், CAASL தலைமை அலுவலக வளாகத்தில் உள்ள உடல்சார் பாதுகாப்பு சேவைகள், மின்னணு அணுகல் கட்டுப்பாட்டு அமைப்பு மற்றும் மூடிய சேர்க்யூட் தொலைக்காட்சி (CCTV) அமைப்பு ஆகியவற்றை இந்த பிரிவு தொடர்ந்து நிர்வகித்தது.



# பெருநிறுவன முகாமைத்துவப் பிரிவு

“அனைவருக்கும் பாதுகாப்பு மற்றும் வினைத்திறன்மிக்க ஆகாயம்”

# பெருநிறுவன முகாமைத்துவப் பிரிவு

## வான்பயண மற்றும் பொருளாதார ஒழுங்குமுறைப் பிரிவு

வான் போக்குவரத்து மற்றும் பொருளாதார ஒழுங்குமுறைப் பிரிவு, இலங்கையில் விமானப் போக்குவரத்துத் துறையை ஒழுங்குபடுத்தும் பொறுப்பைக் கொண்டு, இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் பெருநிறுவன முகாமைத்துவப் பிரிவின் கீழ் உள்ளது.

வான்போக்குவரத்துத் துறையானது கொவிட்-19 நோய்த்தொற்றின் விளைவுகளை தொடர்ச்சியாக 2 ஆவது ஆண்டாக அனுபவித்தது. அதன் திட்டமிடப்பட்ட பல வேலைத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் சவால்களை எதிர்கொண்டது. சுகாதார அமைச்சின் வழிகாட்டுதல்களுக்கு அமைய உள்வரும் பயணிகளுக்கு அனுமதி வழங்குவது உள்ளிட்ட நோய்த்தொற்றைத் தவிர்க்கும் புதிய செயற்பாடுகளை இப்பிரிவு தொடர வேண்டியிருந்தது.

### சர்வதேச விமான சேவைகள்

மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டில், 34 ஸ்ரீலங்கன் விமான சேவை உள்ளிட்ட அட்டவணைப்படுத்திய விமான நிறுவனங்கள் இலங்கைக்கு/இலங்கையிலிருந்து தங்கள் நடவடிக்கைகளை தொடர்ந்தன. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், உலகளாவிய தொற்றுநோய் நிலைமை காரணமாக விமானங்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டது. பண்டைய விமானசேவைகள் செயற்படுத்துநர்களில் பெரும்பகுதியாக இருந்த அதேசமயம் "no-frills" விமானச்சேவைகளும் உலகின் முக்கிய இடங்களுக்கு பயணிகளை நகர்த்துவதில் பங்களித்தன.

எமிரேட்ஸ் எயார்வேஸ், எதிஹாட் எயார்வேஸ், எயார் பிரான்ஸ், LOT போலிஷ், துருக்கி எயார்வேஸ், சிங்கப்பூர் எயார்வேஸ், கல்ஃப் எயார், எயார் இந்தியா, ஏரோஃப்ளொட், சைனா ஈஸ்ட், கட்டார் எயார்வேஸ் உள்ளிட்ட முன்னணி வெளிநாட்டு விமானசேவைகள் 2021 இல் இலங்கைக்கான தமது செயற்பாடுகளைத் தொடர்ந்தன.

விமான நிலைய பயணிகள் கட்டுப்பாடு தொடர்வதால், ஏறக்குறைய அனைத்து விமான நிறுவனங்களும் இலங்கைக்கான சேவை எண்ணிக்கையைக் குறைக்க வேண்டியிருந்தது. இருப்பினும், 2020 இல் செயல்பாடுகளை நிறுத்திய பின்னர், அந்த ஆண்டில் அதிகமான விமான நிறுவனங்கள் தங்கள் செயல்பாடுகளை மீண்டும் தொடங்கியுள்ளன.

எமிரேட்ஸ், கத்தார் எயார்வேஸ், குவைத் எயார்வேஸ், எதிஹாட் எயார்வேஸ் ஆகிய நிறுவனங்களும் வெளிநாட்டு மண்ணில் சிக்கித் தவிக்கும் இலங்கை பயணிகளை திருப்பி அனுப்பும் நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளன. எவ்வாறாயினும், கொவிட்-19 சார் சுகாதாரக் கட்டுப்பாடுகள் மற்றும் வெளிச்செல்லும் இடங்களுக்கான கட்டுப்பாடுகள் காரணமாக இலங்கை விமானச் சேவைகள் ஏனைய நாடுகளுக்கான சேவை எண்ணிக்கையை குறைக்க வேண்டியிருந்தது. மேலும், இந்திய எல்லைகள் மூடப்பட்டதால், இலங்கை விமான நிறுவனங்கள் தங்களது முக்கிய இடங்கள் மற்றும் இணைப்புகளை இழந்துள்ளன.

சுகாதார வழிகாட்டுதல்களின்படி, ஆண்டின் முதற்பாதியில் விமானப் போக்குவரத்து அதிகாரிகள் உள்வரும் பயணிகளின் எண்ணிக்கையை மட்டுப்படுத்தினர். சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையானது இலங்கைக்கு சமமான முறையில் இயங்கும் விமான நிறுவனங்களிடையே பயணிகள் ஒதுக்கீட்டை ஒழுங்கு செய்தது. இந்த கட்டுப்பாடுகள் எந்த வரம்புகளும் விதிக்கப்படாமல் ஆண்டின் இரண்டாம் பாதியில் அகற்றப்பட்டன.

கேத்தே பசிபிக், சிங்கப்பூர் எயார்லைன்ஸ், இண்டிகோ, எயார் ஏசியா உள்ளிட்ட விமான நிறுவனங்கள் இரு நாடுகளிலும் பல்வேறு கட்டுப்பாடுகள் காரணமாக பயணிகள் விமானங்களுக்கு பதிலாக சரக்கு விமானங்களை இயக்கின.

### சரக்குப் போக்குவரத்தின் வளர்ச்சி

மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் தொற்றுநோய் இருந்தபோதிலும், கடந்த ஆண்டைவிட உலகளவில் பயணிகளின் செயல்பாடுகள் சற்று அதிகரித்துள்ளன, அதேநேரம் கொவிட்-19 வெடிப்பின்போதுகூட பயணிகள் செயல்பாடுகளுடன் ஒப்பிடும்போது சரக்கு போக்குவரத்து மேலும் அதிகரித்தது. இலங்கைக்கு இயக்கப்பட்ட பெரும்பாலான சேவைகள், பயணிகள் விமானங்களைப் பயன்படுத்தி சரக்கு போக்குவரத்திலும், தேவையான ஒழுங்குமுறை அனுமதிகளுடன் கேபினில் சரக்குகளை ஏற்றிச் செல்வதிலும் தொடர்ந்து ஈடுபட்டன. LOT போலிஷ், தாய் எயார் ஏசியா, ஃப்ளை துபாய், எயார் அரேபியா, துருக்கி எயார்லைன்ஸ், இண்டிகோ உள்ளிட்ட விமான நிறுவனங்கள் அத்தகைய சேவைகளுக்கு எடுத்துக்காட்டுகள். விமான நிறுவனங்கள் ஒரு முழுமையான மதிப்பீட்டிற்குப் பிறகு CAASL இன் செயல்பாட்டுப் பிரிவில் இருந்து கேபினில் சரக்குகளை ஏற்றிச் செல்வதற்கான ஒப்புதலைப் பெற்றன. கத்தே பசிபிக், கட்டார் எயார்வேஸ், எமிரேட்ஸ், ஓமான்

# பெருநிறுவன முகாமைத்துவப் பிரிவு

எயார்லைன்ஸ், எயார் சைனா ஆகியவை இலங்கையின் வர்த்தகத் துறையை பெரிதும் ஊக்குவிப்பதன் மூலம் இலங்கைக்கான தமது அட்டவணையிடப்பட்ட சரக்குப் போக்குவரத்தைத் தொடர்ந்தன.

மேற்கூறிய விமான இயக்குநர்களுக்கு மேலதிகமாக, வியட்நாம் எயார்லைன்ஸ், வியட் ஜெட், எத்தியோப்பியன் எயார்லைன்ஸ், எகிப்து எயார் ஆகியவை தற்காலிக சரக்கு விமானங்களை இயக்கின. அதுமட்டுமின்றி, இலங்கையின் ஆடைத் தொழில்துறையின் உற்பத்தியானது, விமானப் போக்குவரத்தைப் பயன்படுத்தி ஐரோப்பா மற்றும் அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் ஆனது நைரோபி (கென்யா) உள்ளிட்ட புதிய இடங்களுக்கு சரக்கு விமானங்களைத் தொடங்கியதோடு, கொழும்பு வழியாக அவுஸ்திரேலியாவுக்கு விமானங்கள் பறந்தன. மேலும், ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனம், இந்தியா, அவுஸ்திரேலியா, சீனா உள்ளிட்ட பல இடங்களுக்கு சரக்கு விமானங்களை இயக்குவதன் மூலம் சரக்கு நடவடிக்கைகளில் தனது இடத்தைத் தக்கவைத்துக்கொண்டது.

இலங்கையின் பதிவு செய்யப்பட்ட சர்வதேச சரக்கு நிறுவனமான /பிட்ஸ் ஏவியேஷன் ஆனது, வியட்நாம், பாகிஸ்தான், இந்தியா, மியான்மார், மாலைதீவுகள் உள்ளிட்ட நாடுகளுக்கு புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட விமானங்களைப் பயன்படுத்தி, இலங்கைக்கான சரக்கு நடவடிக்கைகளின் வளர்ச்சிக்கு பெரும் ஆதரவாக இந்த ஆண்டில் தங்கள் செயல்பாடுகளை அதிகரித்தது.

### கடல்வழி பரிமாற்ற செயற்பாடுகளின் தொடர்ச்சி

உலகெங்கிலும் உள்ள கப்பல்களில் பணிபுரியும் பணியாளர்கள் தங்கள் பணிக்காலம் முடிந்த பிறகு சாதாரண பயணிகள் விமானங்கள் மூலம் இடம்மாறிக்கொண்டனர். கொவிட்-19 இற்கு முந்தைய காலகட்டத்தில் இந்த செயல்முறை சீராகக் கையாளப்பட்டது. கொவிட் நோய்த்தொற்று சூழ்நிலையின்போது, விமானங்கள் இல்லாததால் பரிமாற்ற செயல்முறை சிக்கலானது. கடுமையான சுகாதார வழிகாட்டுதல்களின் கீழ் இலங்கையின் விமான நிலையங்கள் மற்றும் கடல் துறைமுகங்களைப் பயன்படுத்தும் கப்பற்பணியாளர்களுக்கான இவ்வகை செயல்பாடுகள்/பரிமாற்றங்களுக்கு அனுமதி வழங்க 2020 இல் CAASL நடவடிக்கை எடுத்ததோடு, மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டிலும் இவர்களுக்கான சேவை 2021 செப்டெம்பர் வரை தொடர்ந்தது. கப்பற்பணியாளர்களுக்கான பரிமாற்றங்கள் பல விமான நிறுவனங்களுடன் தொடர்ந்தன, மேலும் ஆண்டின் இறுதியில் இண்டிகோ, ஸ்பைஸ்ஜெட், கத்தார் எயார்வேஸ், எயார் ஏசியா பிலிப்பைன்ஸ், மாலைதீவு எயார்லைன்ஸ் மற்றும் சில தற்காலிக வெளிநாட்டு நிறுவனங்கள் இந்த செயல்பாட்டைத் தொடர்ந்தன. இந்த புதிய வணிக வாய்ப்பு தொற்றுநோய் காரணமாக வளர்ச்சியடைந்தது.

### புதிய செயற்படுத்துநர்கள்

2020 ஆம் ஆண்டில் பல்வேறு நாடுகளில் குறைந்த பயணிகளின் தேவை மற்றும் முடக்கம் காரணமாக இலங்கைக்கான தங்கள் சேவையை நிறுத்தியவர்கள் 2021 ஆம் ஆண்டில் இலங்கை மற்றும் பிற நாடுகளில் உள்ள கட்டுப்பாடுகள் தளர்ந்ததன் மூலம் தங்கள் விமானங்களை மீண்டும் தொடங்கினர். குவைத்தை தளமாகக் கொண்ட குறைந்த கட்டண விமான சேவையான ஜசீரா எயார்வேஸ், இலங்கைக்கான தனது நடவடிக்கைகளை ஆரம்பித்தது, ஆனால் அந்த ஆண்டில் குறுகிய கால இடைவெளிக்கு நிறுத்தப்பட்டது. கசகஸ்தானின் விமான சேவை நிறுவனமான எயார் அஸ்தானா, அதிகரித்த சேவையுடன் சுற்றுலாத் துறைக்கு பெரும் ஆதரவை வழங்குவதன் மூலம்இலங்கைக்கான தனது நடவடிக்கைகளைத் தொடங்கியது.

நாட்டின் விமானப் போக்குவரத்துத் துறைக்கு பல தசாப்தங்களுக்குப் பிறகு மாலே வழியாக இலங்கைக்கு ஐரோப்பாவை தளமாகக் கொண்ட மதிப்புமிக்க எயார் பிரான்ஸ் செயல்பாடுகளை மீண்டும் தொடங்கியது இந்த ஆண்டின் மிக முக்கியமான நிகழ்வாகும்.

### சர்வதேச வாடகை விமானம், தனிப்பட்ட மற்றும் வர்த்தக நோக்கத்துக்கான ஜெட் செயற்படுத்துநர்கள்

ஆண்டின் மூன்றாம் காலாண்டு வரை அட்டவணையிடப்பட்ட வாடகை விமானங்கள் இயக்கப்படவில்லை. ஆனால் அதிகப்படியான தேவை காரணமாக பல தனிப்பட்ட வாடகை விமானங்கள் மற்றும் தனியார் விமானங்கள் இயக்கத்தில் இருந்தன. ஸ்கைஅப் எயார்லைன்ஸ் மற்றும் உக்ரைன் இன்டர்நஷனல் எயார்லைன்ஸ் ஆகியவை முதல் காலாண்டில் மத்தள சர்வதேச விமான நிலையத்திற்கு வாடகை விமானங்களை இயக்கி, நோய்த்தொற்றால் கடுமையாக பாதிக்கப்பட்டிருந்த சுற்றுலாத்துறைக்கு ஊக்கத்தை அளித்தன. பெரும்பாலான கட்டுப்பாடுகளை தளர்த்திய பிறகு, சில வாடகை விமான நிறுவனங்கள் ஆண்டு இறுதியில்

# பெருநிறுவன முகாமைத்துவப் பிரிவு

அதிக பயணிகளுடன் தங்கள் செயல்பாட்டைத் தொடங்கின. களிவர் எயார், ஸ்கைஅப், SCAT எயார்லைன்ஸ் ஆகியவையும் வாடகை விமானங்களை இயக்குவதன் மூலம் சுற்றுலாத்துறைக்குப் பங்களித்தன.

### விமான இடஒதுக்கீடு ஒருங்கிணைப்பு

விமானச் செயல்பாடுகளின் கட்டுப்பாடு காரணமாக, அட்டவணையிடப்பட்டிருந்த அனைத்து வான்பயண இடஒதுக்கீடுகளும், முந்தைய ஆண்டு போலவே மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டிலும் சிவில் விமானப் போக்குவரத்து பணிப்பாளர் நாயகத்தால் இரத்து செய்யப்பட்டன. எவ்வாறாயினும், கட்டுப்பாட்டு காலத்திலும், அதிகபட்ச செயல்திறனை உறுதி செய்வதற்காக, இலங்கைக்கான அனைத்து வான்பயண செயல்பாட்டாளர்களுக்கும் சிறப்பு இடஒதுக்கீட்டு பொறிமுறையை CAASL நடைமுறைப்படுத்தியது.

பயணிகளைக் கையாள்வது முந்தைய ஆண்டைப் போலவே மதிப்பாய்வு ஆண்டிலும் சுகாதார நெறிமுறைகளால் கட்டுப்படுத்தப்பட்டதுடன் 3 ஆவது காலாண்டு வரை கட்டுப்பாடுகள் தொடர்ந்தன. விமான இடஒதுக்கீட்டிற்கான அதே விமானப் பிரிப்பு பொறிமுறையானது ஆண்டின் முதல் பாதியில் பராமரிக்கப்பட்டு கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும்வரை தொடர்ந்தது. தளர்வின் பின்னர் புதிய இடஒதுக்கீட்டு பொறிமுறையுடன் விமானங்களுக்கு அதிக போக்குவரத்து வாய்ப்புக்களை வழங்க முடிந்தது.

மேலும், விமான நிறுவனங்கள், தங்கள் வழமையான அட்டவணையிடப்பட்ட பயணங்களை 2022 கோடை மற்றும் 2022/23 குளிர்காலம் வரை செயற்படுத்தி, இடஒதுக்கீட்டு தளர்வு மூலம் செயல்பாட்டு சிக்கல்களைத் தவிர்த்து முன்கொண்டு செல்ல அனுமதிக்கப்பட்டது.

### விமான சான்றழிப்பு, வெளிநாட்டு விமான நிறுவன உரிமங்கள்

இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட அனைத்து விமான நிறுவனங்களும் தமது செயற்பாடுகளின் தொழில்நுட்பத் திறமையை நிரூபிக்கும் வான்செயற்படுத்துநர் சான்றுப்பத்திரத்தை (AOC) பெற்றிருக்க வேண்டும். இதேபோல், விமான நிறுவனங்கள் தமது வணிக நடவடிக்கைகளுக்கான அங்கீகாரத்துக்கும் சான்றுப்பத்திரம் பெற்றிருக்க வேண்டும். திட்டமிடப்பட்ட பயணிகள் சேவைகளுக்கு விமான உரிமம் வழங்கப்படுவதோடு, வாடகை விமான நடவடிக்கைகளுக்கு வாடகை உரிமம் வழங்கப்படுகிறது. தனிப்பட்ட நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படும் விமானங்களுக்கு தனியார் விமான அங்கீகாரம் வழங்கப்படுகின்றது.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், சா∴ப்ரோன் எயார், ∴பிட்ஸ் எயார் ஆகிய விமான நிறுவனங்களுக்கான உரிமங்கள் இந்த ஆண்டில் புதுப்பிக்கப்பட்ட அதேநேரத்தில் புதிய விமான உரிமங்கள் எதுவும் வழங்கப்படவில்லை. ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், ∴பிட்ஸ் எயார், ரிச்சி ஸ்கைலார்க், தயா ஏவியேஷன், மிலேனியம் எயார், செனோக் எயார், சகுராய், ∴ப்ளை சதேர்ன், சினமன் எயார், எ∴ப்-எயார்வேஸ் ஆகியவற்றுக்கான வாடகை விமான உரிமங்கள் புதுப்பிக்கப்பட்டன.

### பயண முகவர்கள்

வான் போக்குவரத்து வழங்குநர்கள் (பயணிகள்) உரிமம் (பயண முகவர் உரிமம்) ஆனது, உரிமம் வைத்திருப்பவர்கள், 1992 ஆம் ஆண்டின் 55 ஆம் இலக்க வான்வழிகாட்டல் சட்டம் மற்றும் 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சிவில் விமானப் போக்குவரத்துச் சட்ட விதிகளின்படி, பயணிகள், சரக்கு, கடிதங்களை விமானம் மூலம் கொண்டு செல்ல அனுமதிக்கிறது. இலங்கையில் இத்தகைய வணிகங்களை நடத்துவதற்கு விமானப் போக்குவரத்து வழங்குநர்கள் (பயணிகள்) உரிமம் கட்டாயத் தேவையாகும். முகவர்களின் கூறப்பட்ட மூலதனம்/மூலதனப் பங்களிப்பைப் பொறுத்து Group A, Group B என இரண்டு வகை உரிமங்கள் உள்ளதுடன் உரிமம் ஆண்டுதோறும் புதுப்பிக்க வேண்டியதாகும்.

மீளாய்வாண்டில், Group A பிரிவில் 25, Group B பிரிவில் ஒரு முகவர் என 26 புதிய உரிமங்கள் வழங்கப்பட்டன. 273 Group A உரிமதாரர்கள் தங்கள் உரிமத்தைப் புதுப்பித்துள்ள அதேவேளை, 10 Group B உரிமதாரர்கள் உரிமத்தைப் புதுப்பித்தனர். கொவிட்-19 நோய்த்தொற்று தாக்கத்தின் காரணமாக பல முகவர்கள் தங்கள் வணிகத்தை நிறுத்திவிட்டனர். சில Group B உரிமதாரர்கள் தங்கள் உரிமத்தை Group A ஆக மேம்படுத்தியுள்ளனர். புதிய உரிமங்களுக்கு விண்ணப்பிக்கும்போது மற்றும் ஏற்கனவே உள்ள உரிமங்களை புதுப்பிக்கும்போது வங்கி உத்தரவாதத்தை சமர்ப்பிப்பதற்கு CAASL ஒரு வருட கால சலுகையை வழங்கியது.

# பெருநிறுவன முகாமைத்துவப் பிரிவு

| மாதம் | வான்போக்குவரத்து வழங்குநர் உரிமம் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆரம்ப வழங்கல் | | | | புதுப்பிப்பு | | | |
| | குழு A | | குழு B | | குழு A | | குழு B | |
| | 2021 | 2020 | 2021 | 2020 | 2021 | 2020 | 2021 | 2020 |
| ஜனவரி | **3** | 8 | **0** | 0 | **24** | 61 | **0** | 6 |
| பெப்ரவரி | **2** | 12 | **0** | 0 | **38** | 32 | **1** | 9 |
| மார்ச் | **2** | 3 | **0** | 0 | **46** | 19 | **0** | 1 |
| ஏப்ரல் | **3** | 0 | **0** | 0 | **27** | 0 | **1** | 0 |
| மே | **0** | 0 | **0** | 0 | **0** | 3 | **0** | 1 |
| ஜூன் | **0** | 0 | **0** | 0 | **0** | 56 | **0** | 2 |
| ஜூலை | **5** | 0 | **0** | 0 | **14** | 34 | **3** | 0 |
| ஆகஸ்ட் | **0** | 0 | **0** | 0 | **5** | 21 | **0** | 0 |
| செப்டெம்பர் | **0** | 0 | **0** | 0 | **24** | 32 | **1** | 0 |
| அக்டோபர் | **2** | 0 | **0** | 0 | **41** | 6 | **1** | 0 |
| நவம்பர் | **5** | 0 | **0** | 0 | **17** | 19 | **0** | 0 |
| டிசம்ர் | **3** | 0 | **1** | 0 | **37** | 23 | **3** | 0 |
| மொத்தம் | **25** | 23 | **1** | 0 | **273** | 306 | **10** | 19 |

*அட்டவணை 01 – 2020 மற்றும் 2021 இற்கான வான்போக்குவரத்து வழங்குநர் உரிமம் வழங்குதல்*

### வெளிநாட்டினர் மற்றும் இலங்கையில் பணிபுரியும்/படிக்கும் மாணவர்களுக்கான விசா பரிந்துரைகள்

குடிவரவு, குடியகல்வுத் திணைக்கள வழிகாட்டுதலின்படி சிவில் விமானப் போக்குவரத்து பணிப்பாளர் நாயகம் வழங்கிய அறிவுறுத்தல்களுக்கமைய, உள்நாட்டு விமான நிறுவனத்தில் பணிபுரியும் அனைத்து வெளிநாட்டினரும் இலங்கையில் பணி அனுமதி/குடியிருப்பு விசாவைப் பெறுவதற்கு சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையிடம் பரிந்துரைகளைப் பெற்றிருக்க வேண்டும். விமானப் போக்குவரத்துத் துறைக்கான இத்தகைய கோரிக்கைகளை சம்பந்தப்பட்ட அமைச்சகம் மூலம் CAASL பரிந்துரைக்கிறது. ஜூன் 2019 இல் சிவில் விமானப் போக்குவரத்து பணிப்பாளர் நாயகத்தின் உத்தரவில் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு புதிய நடைமுறையின்படி, அனைத்து விண்ணப்பதாரர்களும் நேர்காணல் செய்யப்பட வேண்டும்.

எனினும் கொவிட்-19 பரவல் காரணமாக நேர்காணல் நடைமுறையை நடத்த முடியவில்லை. நாட்டில் கொவிட்-19 நிலைமை மற்றும் முடக்கம் காரணமாக, குடிவரவுத் திணைக்களத்தினால் விசா நீட்டிப்பு வழங்கப்பட்டது.

இந்தப் பிரிவானது தொழில்நுட்ப மற்றும் தொழில்நுட்பம் அல்லாத வெளிநாட்டு ஊழியர்கள் உட்பட 41 விசா பரிந்துரைகளை தொழில்துறைக்கு வழங்கியதுடன், மீளாண்டில் 303 வெளிநாட்டு மாணவர்களுக்கு விசா பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன.

### பயண முகவர் மற்றும் விமான நிறுவனங்களுக்கு எதிரான நுகர்வோர் முறைப்பாடுகள்

வான்போக்குவரத்து சேவைகளைப் பயன்படுத்தும் ஒரு பயணி பொதுவாக இனிமையான அனுபவங்களைப் பெறுவார். விதிவிலக்காக அரிதான சந்தர்ப்பங்களில், பயணிகள் அசௌகரியங்களை சந்திக்க நேரிடும். அத்தகைய பயணிகள் அதிகாரசபையிடம் பயண முகவர், விமான நிறுவனங்கள், விமான நிலையங்களுக்கு எதிராக முறையிட வாய்ப்புள்ளது. CAASL இரு தரப்புக்குமிடையே மத்தியஸ்தம் செய்து அவர்களை ஒரு தீர்வுக்கு வழிநடத்துகிறது. கடந்த ஆண்டு கொவிட்-19 நோய்த்தொற்று மற்றும் குறைந்த பயணிகள் எண்ணிக்கை காரணமாக வாடிக்கையாளர் முறைபாடுகளின் எண்ணிக்கை குறைந்தது.

மீளாய்வு ஆண்டில், பயணிகளிடமிருந்து 30 முறைப்பாடுகள் பெறப்பட்டன, இவற்றில் 25 முறைப்பாடுகளை ஆண்டின் இறுதியில் தீர்த்து முடிக்க முடிந்தது. மீதமுள்ள முறைப்பாடுகள் விசாரிக்கப்பட்டு நேர்ம முடிவுகள் எதிர்பார்க்கப்படுகின்றன. கொவிட்-19 காரணமாக பயணத்தில் இடையூறு நிகழ்ந்ததால், வாடிக்கையாளர்கள் விமான நிறுவனத்திடமிருந்து பணத்தைத் திரும்பக் கோரினர்.

இதுபோன்ற முறைப்பாடுகளில் பெரும்பாலானவை விமான பயணச்சீட்டுக்கான பயணத்தை மீளப் பெறுவது தொடர்பானவை. பின்வரும் விளக்கப்படம் பெறப்பட்ட முறைப்பாடுகளின் வகைப்படுத்தலைக் காட்டுகிறது.

# பெருநிறுவன முகாமைத்துவப் பிரிவு

### 2021 ஆம் ஆண்டுக்கான முறைப்பாடுகள்




- விமான பயணச்சீட்டு
- விமானமேறல் அனுமதி மறுப்பு
- நிலுவைக் கொடுப்பனவு
- நிலுவைக் கொடுப்பனவு

### தரை உதவிச் சேவை அனுமதிகள் - (நிலையான செயற்படுத்துநர் அனுமதிகள்)

வருங்காலத்தில் அனைத்து வணிக ஜெட் விமானங்கள்/தனியார் ஜெட் செயற்படுத்துநர்கள், தற்காலிக வாடகை விமான செயற்படுத்துநர்கள் தங்கள் விமானங்களை CAASL அங்கீகரிக்கப்பட்ட தரை உதவிச் சேவை வழங்குநர்களின் உதவியுடன் இயக்க வேண்டும் என்று CAASL பரிந்துரைத்துள்ளது.

மீளாய்வு ஆண்டின் முதற்பாதியில், ஒரு தரை உதவிச் சேவை அனுமதி புதுப்பிக்கப்பட்டது.

ஆண்டின் நடுப்பகுதியில், சிவில் விமானப் போக்குவரத்து பணிப்பாளர் நாயகத்தின் அறிவுறுத்தலின் கீழ், தரை உதவிச் சேவைகளை அனுமதிக்கும் நடைமுறை. செயற்பாட்டுப் பிரிவுக்கு மாற்றப்பட்டது.

### தொழில்துறையின் செயல்பாடுகளுக்கு உதவும் கொவிட்-19 சார் பணிகள்

இந்தப் பிரிவினர், குறிப்பாக பணிப்பாளர் (வான் போக்குவரத்து மற்றும் பொருளாதார ஒழுங்குமுறைகள்) மற்றும் முகாமையாளர் (விமான சேவைகள் மற்றும் போக்குவரத்து உரிமைகள்) இந்த கடினமான காலத்தில் தொழிற்துறையை உயிர்ப்புடன் வைத்திருப்பதற்கு உதவுவதற்காக அதிகாரசபையின் கொவிட்-19 சார் நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

### பயணிகள் நாடுதிரும்புவதற்கான ஒப்புதல்

உள்வரும் பயணிகளுக்கான கொவிட்-19 கட்டுப்பாடுகள் காரணமாக, தேசிய கொவிட்-19 பணிக்குழுவால் 2020 முதல் ஒப்புதல் செயல்முறை நடைமுறையில் இருந்தது. சுகாதாரக் கட்டுப்பாடுகள் மற்றும் எல்லைக் கட்டுப்பாட்டு பொறிமுறையின் காரணமாக 2021 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டு வரை இந்த ஒப்புதல் செயல்முறை தொடர்ந்தது. ஒப்புதல் செயல்முறைக்குள், இலங்கைக்கு வரும் எந்தவொரு பயணிக்கும் முதல் அனுமதி வெளியுறவு அமைச்சகத்தின் செயலாளரால் வழங்கப்பட வேண்டும், 2 ஆவது அனுமதியை CAASL வழங்க வேண்டும். திருப்பி அனுப்பல் நடவடிக்கைக்கான விமானங்களில் வந்த பயணிகள் உட்பட, பயணிகளின் வருகையை எளிதாக்கும் வகையில், ஆண்டு முழுவதும் இவ்வாறான 80,000 ஒப்புதல்கள் வழங்கப்பட்டன.

ஒப்புதல் செயல்முறையை கவனிக்க ஒரு சிறப்பு குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழுவில் முகாமையாளர் (விமான சேவைகள் மற்றும் போக்குவரத்து உரிமைகள்), முகாமையாளர் (ஊழியர் பயிற்சி மற்றும் மேம்பாடு), முகாமையாளர் (ஆராய்ச்சி மேம்பாடு மற்றும் சிறப்புத் திட்டங்கள்) ஆகியோர் பணிப்பாளர் (வான்போக்குவரத்து மற்றும் பொருளாதார ஒழுங்குமுறைகள்) தலைமையில் இருந்தனர். இக்குழுவின் அர்ப்பணிப்பு காரணமாக அதிகாரசபையால் தாமதமின்றி அனுமதிகளை வழங்க முடிந்தது.

வழக்கமான பணி நடவடிக்கைகளை சீர்குலைக்கும் தொற்றுநோய்ப் பரவல் மற்றும் அதன் கணிக்க முடியாத தன்மைகளுக்கு மத்தியிலும் அவ்வப்போது நடைபெறும் பல கூட்டங்களில் இந்தப் பிரிவு பங்கேற்றது.

### EASA-APP மற்றும் COSCAP-SA திட்டங்களின் செயற்பாடுகளுக்கான உதவி

பணிப்பாளர் (வான போக்குவரத்து மற்றும் பொருளாதார ஒழுங்குமுறை) EASA-வான்பயண கூட்டாண்மைத் திட்டம் மற்றும் COSCAP-தெற்காசிய திட்டம் ஆகிய இரண்டிற்கும் தேசிய ஒருங்கிணைப்பாளராக பணியாற்றினார்.

### ஈ-எயார்வே பில்ஸ் (சரக்குகளுக்கான ரசீது)

E-Airway Bills அமலாக்கத் திட்டம் ஆண்டு முழுவதும் தொடர்ந்தது. சரக்கு போக்குவரத்தை அதிகரிக்க, சரக்கு அனுப்புபவர்களுடன் இணைந்து பல புதிய விமான நிறுவனங்கள் இத்திட்டத்தில் இணைந்தன.

## மனித வள மற்றும் ஆதன முகாமைத்துவம்

மனிதவள மற்றும் ஆதன முகாமைத்துவப் பிரிவு (HRPM) CAASL இல் சரியான ஊழியர்கள் பணியாற்றுவதை உறுதிசெய்கிறது, இதன் மூலம் CAASL இல் ஊழியர்களின் செயற்திறனை மேம்படுத்துவதற்கும் முன்னேற்றுவதற்கும் தனிநபர்கள் மற்றும் பணியாளர்களின் குழுவை எளிதாக்குவதற்கும் ஊக்கப்படுத்துவதற்கும் வாய்ப்புகளை உருவாக்குகிறது. அலுவலக நிர்வாகம், அதிகாரசபைக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துகளின் முகாமைத்துவம் ஆகியவற்றிற்கும் இந்த பிரிவு பொறுப்பாகும்.

# பெருநிறுவன முகாமைத்துவப் பிரிவு

மீளாய்வாண்டில், HRPM பிரிவு, அதன் மூலோபாய நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு அதிகாரசபைக்கு தொடர்ந்து ஆதரவளித்து வருகிறது, மனித வளக் கொள்கைகளின் தொகுப்புடன் செயல்படுகிறது, இது நோக்கங்கள், நடைமுறைகள், தகுதிகள், வரம்புகள், விலக்குகள் (ஏதேனும் இருந்தால்) பற்றிய விரிவான விளக்கத்தை அளிக்கிறது. பணியாளர் விதிகள் மற்றும் நிர்வாக நடைமுறை கையேட்டில் (SLCAP 5000) இது வழிகாட்டுதல்களாகவும் அமைக்கப்பட்டுள்ளது. HRPM பிரிவானது தனது முன்னுரிமைகளை நிறைவேற்ற அதிகாரசபையால் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகள், நோக்கங்கள், எதிர்பார்ப்புகளை அடைவதில் எப்போதும் ஒப்பற்ற குரலைப் பேணி வருகிறது.

## நிறுவன சீர்திருத்தங்கள் மற்றும் ஆட்சேர்ப்பு

ஒரு திறமையான, நம்பகமான விமானப் பாதுகாப்பு ஒழுங்குபடுத்தல் எனும் முதன்மையான நோக்கத்தின் அடிப்படையில், CAASL இன் மேம்பட்ட கடுமையான ஆட்சேர்ப்பு செயல்முறையானது, எதிர்பார்க்கப்படும் விளைவு பற்றிய தெளிவான சிந்தனையுடனும், உள்ளார்ந்த திறன்களுடனும் ஒவ்வொரு பணியாளரும் CAASL இற்குள் நுழைவதை உறுதிசெய்கிறது.

HRPM பிரிவானது அதிகாரசபையின் செயல்பாடுகளை இயக்குவதற்கு திறமையான மற்றும் திறன்வாய்ந்த பணியாளர்களை வழங்குவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

எனவே, CAASL இன் தொடர்ச்சியான செயல்பாடுகளை உறுதி செய்வதற்காக மிகவும் பொருத்தமான விண்ணப்பதாரர்களைக் கொண்டு பணி வெற்றிடங்களை நிரப்புவதற்கு HRPM மகத்தான முயற்சியை மேற்கொண்டுள்ளது. 2021 ஆம் ஆண்டில் எட்டு (8) புதிய ஆட்சேர்ப்புகள் நடைபெற்றன, 31.12.2021 இல் மொத்தம் நூற்று எழுபத்தாறு (176) ஊழியர்கள். 2021 ஆம் ஆண்டில் பத்து (10) அடுத்த நிலைக்கான பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. தற்போதுள்ள பணியாளர்கள் படிநிலை ஏணியில் மேலே செய்வதற்கான தளத்தை உருவாக்குகிறது. அரசாங்க சுற்றறிக்கைகள் மூலம் விதிக்கப்பட்ட வரம்புகள் காரணமாக பெரும்பாலான ஆட்சேர்ப்புகளை தொடர முடியவில்லை.

### ஊழியர் வகை




*படம் 01 – 31.12.2021 இன்படி ஊழியர் வகை*

படம் 01 இல் சித்தரிக்கப்பட்டுள்ளபடி, மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டின் இறுதிக்குள், CAASL ஊழியர்கள் ஒரு பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதம நிறைவேற்று அலுவலர், மூத்த மேலாளர் பிரிவில் CEO அல்லாத மூன்று (3) அலுவலர்கள், மூத்த மேலாளர் பிரிவில் ஒன்பது (9), மேலாளர் பிரிவில் இருபத்து மூன்று (23) பேர் வகைப்படுத்தப்பட்டுள்ளனர். தற்போதைய புள்ளிவிவரங்களின்படி, அமுலாக்கம்/செயற்பாடு/நீட்டிப்பு என்ற பிரிவில் நாற்பத்தேழு (47) பேர் பணியமர்த்தப்பட்டுள்ளனர், ஏழு (7) பேர் கனிஷ்ட முகாமையாளராக வகைப்படுத்தப்பட்டுள்ளனர். மேலும், ஐந்து (5) முகாமைத்துவ உதவியாளர்கள் (தொழில்நுட்பம்) மற்றும் நாற்பத்தொன்பது (49) முகாமைத்துவ உதவியாளர்கள் (தொழில்நுட்பம் அல்லாத) என பணியமர்த்தப்பட்டுள்ளனர். முதல்நிலை (தேர்ச்சி) மற்றும் முதல்நிலை (தேர்ச்சியற்ற) என்ற இரு பிரிவிலும் முறையே பத்தொன்பது (19) பேர்

பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

இந்த காலகட்டத்தில் ஐந்து (5) உள்ளக இடமாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள் காரணமாக அக்டோபர் 2021 முதல் ஆட்சேர்ப்பு செயல்முறை குறைக்கப்பட்டதால், 2021 டிசம்பர் 31 நிலவரப்படி 32 பணி வெற்றிடங்கள் உள்ளன. குறித்த காலப்பகுதியில் ஊழியர் புரள்வு 2.84% ஆக பதிவாகியுள்ளது.

### ஊழியர் நலன்

### ஊழியர் நலன்புரி வசதிகள்




*படம் 02 – ஊழியர் நலன்புரி வசதிகள்*

2021 ஆம் ஆண்டில், CAASL ஆனது, அதிகாரசபையின் முதன்மை அக்கறையான ஊழியர்களின் நலனுக்காக, படம் 02 இல் வழங்கப்பட்டுள்ள பலதரப்பட்ட நலன்புரி வசதிகளை தொடர்ந்து வழங்கி வந்தது.

ஊழியர்கள் மற்றும் அவர்களது உடனடி குடும்ப உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நலன்புரி வசதியாகவே மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் உள்ளது. இந்த ஆண்டு, செலிங்கோ காப்புறுதி பிஎல்சியின் உதவியுடன், ஊழியரின் பெற்றோருக்கு உள்ளக மருத்துவ வசதியாக நூற்று எழுபத்தைந்தாயிரம் ரூபாய் (ரூ. 175,000.00) கூடுதல் நன்மை ஒதுக்கப்பட்டுள்ளது.

வருடத்தின் ஜனவரி 2021 முதல் டிசம்பர் 2021 வரையிலான காலகட்டத்தில், வெளிநோயாளர் நன்மைகளின் கீழ் மொத்தம் தொள்ளாயிரத்து எண்பத்து நான்கு (984) காப்புறுதி கோருதல்களாக, ஆறு மில்லியன் ஐந்நூற்று நாற்பத்தைந்து ஆயிரத்து இருநூற்று எழுபத்து ஒன்பது ரூபாய் மற்றும் நாற்பத்து ஒன்பது சதத்துக்கு (ரூ. 6,545,279.49) செய்யப்பட்டுள்ளன. அதைத் தொடர்ந்து, 23 மருத்துவக் காப்பீட்டு உள்ளக கோருதல்களாக, ஒரு மில்லியன் எழுநூற்று எண்பத்து இரண்டாயிரத்து முன்னூற்று எட்டு மற்றும் நாற்பத்தெட்டு சத (ரூ. 1,782,308.48) மதிப்பும் அதே காலகட்டத்தில் ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

விபத்துக் காப்புறுதிக் கொள்கையானது ஒவ்வொரு ஊழியருக்கும் CAASL பரிசோதகர்களுக்கான கூடுதல் சிறப்புப் பாதுகாப்புடன் அவர்களின் உடல்நலம், கவனம், பாதுகாப்பிற்கு தீங்கு விளைவிக்கும் சூழ்நிலைகளை எதிர்கொள்ளும் சாத்தியக்கூறுகளை இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் உதவியுடன் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

படம் 03 இல் காட்டப்பட்டுள்ளபடி, அதிகாரசபையால் நிறுவப்பட்ட ஊழியர் கடன் திட்டம் ஊழியர்களுக்கு பாரிய நிதி உதவியை வழங்கி வருகிறது.




*படம் 03 – கடன் விவரம்*

CAASL இன் ஊழியர்களுக்கு நலன்புரி கடனிலிருந்து 2021 ஆம் ஆண்டில் 38 ஊழியர்களுக்கு பதினொரு மில்லியன் தொள்ளாயிரத்து தொண்ணூற்று ஆயிரத்து நாற்பது ரூபாய் (ரூ. 11,990,040.00) இடர் கடனாக வழங்கப்பட்டது. இது தவிர, மோட்டார் வாகனங்களை கொள்வனவு செய்வதற்கு மூன்று மில்லியன் இருநூற்று ஐம்பத்தொன்பதாயிரத்து இருநூறு ரூபாய் (ரூ. 3,259,200.00) கடனாக வழங்கப்பட்டது. கூடுதலாக, மதிப்பாய்வில் உள்ள ஆண்டில் ஒரு (1) ஊழியருக்கு துவிச்சைக்கிள் வாங்குவதற்கு இருபதாயிரம் ரூபாய் (ரூ. 20,000) வழங்குவதன் மூலம் அதிகாரசபை ஆதரவு அளித்துள்ளது.

# பெருநிறுவன முகாமைத்துவப் பிரிவு

வருடத்தில் எழுபத்தெட்டு (78) ஊழியர்களுக்கு ஒரு மில்லியன் ஒரு லட்சத்து இரண்டாயிரம் ரூபாய் (ரூ. 1,102,000.00) விழா முற்பணம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், முந்நூற்று முப்பத்தைந்து ஆயிரத்து முந்நூற்று முப்பது ரூபாய் (ரூ. 335,330.00) கடன் தொகை ஒரு மாத சம்பளக் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

ஊழியர்களுக்கான நலன்புரி வசதியாக CAASL இன் மட்டக்களப்பு பங்களா, நியாயமான வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளது. நாட்டில் நோய்த்தொற்று நிலைமை காணப்பட்டபோதிலும், ஏழு (7) ஊழியர்கள் இந்த வசதியைப் பயன்படுத்தினர். மேலும், நலன்புரி வசதிகளை மேம்படுத்தும் வகையில், அதிகாரசபை தனது ஊழியர்களுக்கு வழக்கம் போல் ரயில்வே வாரண்ட்களை வழங்கியுள்ளது.

### பயிற்சி, கருத்தரங்கு, செயலமர்வு, கூட்டம், மாநாடு, ஆய்வு

CAASL ஆனது மனித மூலதன அபிவிருத்தியில் தொடர்ந்து முதலீடு செய்ததுடன், அதிகாரசபையின் எதிர்கால வெற்றிக்குத் தேவையான திறன்களையும் அறிவையும் ஊழியர்கள் வளர்த்துக்கொள்வதை உறுதிசெய்யும் வகையில் அதன் பார்வைக்கு ஏற்ப பயனுள்ள பணியாளர்களை நடைமுறைப்படுத்துகிறது. உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் நடைபெறும் மனிதவள மேம்பாட்டுத் திட்டங்களுக்காக ஆறு மில்லியன் இருநூற்று எழுபத்தோறாயிரத்து அறுநூற்று ஐம்பத்து மூன்று ரூபாய் தொண்ணூற்று மூன்று சதங்கள் (ரூ. 6,271,653.93) செலவிடப்பட்டுள்ளன.

மதிப்பாய்வு செய்யப்பட்ட காலகட்டத்தில், கொவிட்-19 நோய்த்தொற்று உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பயிற்சிகளில் நேரடியாகக் கலந்துகொள்வதில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இருப்பினும், ஊழியர்களுக்கு இணையவழி வசதிகள் மூலம் பலதரப்பட்ட பயிற்சிகள் வழங்கப்பட்டன, ஏனெனில் மனித திறமைகளை வளர்த்துக்கொள்ளும் நோக்கத்தை மாற்று பயிற்சியின் மூலம் அடையலாம். எனவே, 2021 ஆம் ஆண்டில் நூற்று இருபத்து நான்கு (124) பணியாளர்களுக்கு ஒரு மில்லியன் நூற்று அறுபத்து இரண்டாயிரத்து எண்ணூற்று முப்பத்திரண்டு ரூபாய் ஐம்பத்தொன்பது சதம் (ரூ. 1,162,832.59) மதிப்புள்ள இணையவழி பயிற்சி அமர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.

**மனித வள மேம்பாட்டுத் திட்டங்களுக்கான செலவு - 2021**




*படம் 4 - மனித வள மேம்பாட்டுத் திட்டங்களுக்கான செலவு - 2021*

விமானப் போக்குவரத்துத் துறையின் ஆற்றல்மிக்க தன்மை, அதன் வல்லுநர்களுக்கு மிகவும் மேம்படுத்தப்பட்ட திறன்கள் மற்றும் திறன்களைப் பெறுவதற்கு சவால் விடுகிறது. எனவே, அறுபத்து ஒன்பது (69) உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பயிற்சிகள், கருத்தரங்குகள், பட்டறைகள், கூட்டங்கள், ஆய்வுகள் மீளாய்வுக்கு உட்பட்ட காலப்பகுதியில் நடத்தப்பட்டது. நூற்று எண்பத்தேழு (187) பணியாளர்களுக்கு தேவையான மேம்படுத்தப்பட்ட அறிவைப் பெறுவதற்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இது முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மொத்த பயிற்சிகளின் எண்ணிக்கையில் 30% அதிகரிப்பைக் காட்டுகிறது.

**மனித வள மேம்பாட்டுத் திட்டங்களின் எண்ணிக்கை - 2021**




*படம் 5 - 2021 இல் மனித வள மேம்பாட்டுத் திட்டங்களின் எண்ணிக்கை*

# பெருநிறுவன முகாமைத்துவப் பிரிவு

ஊழியர்களின் பொதுவான பயிற்சித் தேவைகள் கண்டறியப்பட்டு, “பயிற்சியாளரைப் பயிற்றுவிக்கவும்” என்ற தலைப்பில் இரண்டு இலட்சத்து ஒன்பதாயிரம் ரூபாய் (ரூ. 209,000.00) செலவில் பணியாளர்கள் பிரிவுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. முதன்மை நிலை திறமையான (ஓட்டுநர் பிரிவு) ஊழியர்களுக்காக நடத்தப்படும் “போக்குவரத்து விதிகள் மற்றும் நெறிமுறைகள்” நிகழ்ச்சிக்காக இருபத்து எட்டாயிரம் ரூபாய் (ரூ. 28,000) செலவிடப்பட்டுள்ளது.

## சொத்து முகாமைத்துவ நடவடிக்கைகள்

HRPM பிரிவின் நிறுவன விவகாரங்கள் மற்றும் சொத்து முகாமைத்துவமானது, வசதிகளை திறமையாகவும் திறம்படவும் நிர்வகிப்பதன் மூலம் அதிகாரசபையின் பிரதான நோக்கத்திற்கு தொடர்ந்து பங்களிக்கிறது. இப்பிரிவு ஏனைய பிரிவுகளுக்கு சேவைகளின் பன்முகப்படுத்தப்பட்ட சுயவிவரத்தை மேலும் எளிதாக்குவதன் மூலம் தடையின்றிப் பணியாற்றும் செயல்முறைகளை பராமரிக்கிறது.

மீளாய்வாண்டில், இலங்கை அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட பயணக் கட்டுப்பாடுகள் மற்றும் முடக்கக் கட்டுப்பாடு காரணமாக அதிகாரசபையின் வழமையான செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. பணியாளர்கள் உடல்ரீதியாக பணியில் ஈடுபட முடியாவிட்டாலும், பெரும்பாலானோர் பாதுகாப்பாக வீட்டில் இருந்தபடியே தங்கள் சேவையை தொடர்ந்துள்ளனர். கொவிட்-19 வைரஸிலிருந்து அலுவலக வளாகத்தை பாதுகாப்பாக வைத்திருக்க மனித வளம் மற்றும் சொத்து முகாமைத்துவப் பிரிவு தனது பங்களிப்பை விரிவுபடுத்தியுள்ளது. வளாகம் முழுவதையும் கிருமி நீக்கம் செய்தல், கை கழுவும் வசதியை நிறுவுதல், போதுமான கை சுத்திகரிப்பான்களை வழங்குதல் மற்றும் ஒவ்வொரு தளத்திலும் அவற்றைக் கிடைக்கச் செய்தல், முகக்கவச விநியோகம் உள்ளிட்ட பல முயற்சிகள் இது தொடர்பாக எடுக்கப்பட்டுள்ளன.

01.07.2016 திகதியிட்ட அதிவிசேட வர்த்தமானி இலக்கம் 1973/78 இன் விதிகளின்படி, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், தொடர்புடைய சொத்துக்கள், மட்டக்களப்பு விமான நிலையம், இரத்மலானை விமான நிலையம் உட்பட CAASL இற்கு அடையாளம் காணப்பட்ட சொத்துக்களின் ஆவணங்களை நிர்வகிக்க CAASL ஆரம்பித்துள்ளது. பின்வரும் வானூர்தி வசதிகள் மற்றும் நிலம் தொடர்பான (இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் மூன்றாவது அட்டவணையில் 2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது) சொத்துக்கள் மீளாய்வுக்கு உட்பட்ட வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

- இரத்மலானை கண்டாவல வீதியில் உள்ள சிவில் விமானப் பயிற்சி நிலையம், அதிலுள்ள கட்டடங்கள் மற்றும் கட்டமைப்புகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய நிலம்.
- இரத்மலானை, அத்திடியவில் உள்ள வானூர்தி தொடர்பாடல் ஒலிபரப்பு நிலையம், அதிலுள்ள கட்டடங்கள் மற்றும் கட்டமைப்புகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய நிலம்.
- கம்பஹா, மடம்பெலவில் அமைந்துள்ள பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கான ரேடியோ வழிகாட்டல் உதவி, கட்டடங்கள் மற்றும் கட்டமைப்புகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய நிலம்.
- கம்பஹாவின் கப்புங்கொட, பமுனுகமவில் அமைந்துள்ள பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஓடுபாதைக்கான வானொலி ஊடுருவல் உதவி, கட்டடங்கள் மற்றும் கட்டமைப்புகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய நிலம்.
- பிதுருதலாகல மலையில் அமைந்துள்ள ரேடார் நிலையம், அதிலுள்ள கட்டடங்கள் மற்றும் கட்டமைப்புகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய நிலம்.
- நுவரெலியா மாவட்டத்தில், பிதுருதலாகலவில் உள்ள காணி, அங்கு நிர்மாணிக்கப்பட்டுள்ள விமானப் பணியாளர்களுக்கான விடுமுறை பங்களாக்கள், அதன் கட்டமைப்புகள் அல்லது அதனுடன் தொடர்புடையவை.

## நிதி மற்றும் வருவாய் முகாமைத்துவப் பிரிவு

### பாதீட்டு நிகழ்ச்சித் திட்டம்

பாதீட்டு நிகழ்ச்சித் திட்டம் - 2021, நான்கு முக்கிய திட்டங்களின் கீழ் அடுத்த ஆண்டுக்கான செலவினங்களை அமைக்கிறது. இயக்கம் மற்றும் முகாமைத்துவம், வான்வெளி மற்றும் வான்பயண பாதுகாப்பு ஒழுங்குமுறை, விமானப் பாதுகாப்பு ஒழுங்குமுறை, பெருநிறுவன விவகாரங்கள் மற்றும் பொருளாதார ஒழுங்குமுறை ஆகியனவே அவையாகும். முன்னறிவிக்கப்பட்ட திருத்தப்பட்ட வருமானம் ரூ.846 மில்லியனாகக் கணக்கிடப்பட்டு, திருத்தப்பட்ட மதிப்பிடப்பட்ட மறுநிகழ்வு மற்றும் மூலதனச் செலவு ரூ. 669 மில்லியன் என கணக்கிடப்பட்டுள்ளது.

### CAASL வருவாய் மற்றும் செலவு

CAASL வருவாய் முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும் போது உண்மையான வருமானம் ரூ. 986 மில்லியன் இலிருந்து ரூ.1,128 மில்லியன் என 14% அதிகரிப்பைக்

# பெருநிறுவன முகாமைத்துவப் பிரிவு

காட்டியுள்ளது. வெளிநாட்டு விற்பனை மிகைக் கட்டணம் மற்றும் விமானமேறல் வரியின் சேவைக் கட்டணம் ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட வருமானத்தில் சிறிது அதிகரிப்பு காணப்படலாம்.

கடந்த ஆண்டு உண்மையான செலவினத்துடன் ஒப்பிடுகையில் உண்மையான செலவினம் 4% அதிகரித்துள்ளது.

### முகாமைத்துவத் தகவல்

இலங்கை நிதி அறிக்கை தரநிலைகளுக்கு இணங்க இந்த நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

**மூலதனச் செலவு 2021 எதிர் 2020**

ரூ. மில்




**பிற வருமானம் 2021 எதிர் 2020**

ரூ. மில்




**மீளுருவாகும் செலவு 2021 எதிர் 2020**

ரூ. மில்




**மொத்த வருமானம் 2021 எதிர் 2020**

ரூ. மில்




**OSS வருமானம் 2021 எதிர் 2020**

ரூ. மில்




**பாதீடு எதிர் உண்மை - 2021**

ரூ. மில்



# CAASL செயற்திறனின் சுருக்கம் - 2021

| விதிமுறை /அறிவிப்பு /விதிகளின் எண்ணிக்கை | 2021 | 2020 |
|---|---|---|
| வானூர்தி செயற்பாடுகள் | **2** | 2 |
| வானூர்தி பதிகை மற்றும் வான்தகைமை | **1** | 2 |
| விமானத்தளங்கள் | **2** | 1 |
| வான் வழிகாட்டல் சேவை | **5** | 7 |
| விமானப் போக்குவரத்து பாதுகாப்பு | **6** | 4 |
| வான் மருத்துவ சேவைகள் | **14** | 3 |

| நிறுவனங்கள்/ பணியாளர்களின் ஆரம்ப சான்றிதழ் | 2021 | 2020 |
|---|---|---|
| விமான சேவைகள் (வெளிநாட்டு) | **9** | 3 |
| பராமரிப்பு நிறுவனங்கள் | **3** | 11 |
| விமானிகள் | **192** | 106 |
| வானூர்தி பராமரிப்பு உரிமம் வைத்திருப்போர் | **32** | 18 |
| விமான இயக்க அதிகாரிகள் (விமான அனுப்புநர்) | **1** | - |
| விமான பயிற்றுநர்கள் | **-** | 1 |
| உதவி விமான பயிற்றுவிப்பாளர்கள் | **6** | 3 |
| தரை பயிற்றுவிப்பாளர்கள் | **15** | - |
| கேபின் குழு உறுப்பினர்கள் | **6** | - |
| விமானப் பாடசாலை உரிமம் | **-** | 2 |

# CAASL செயற்திறனின் சுருக்கம் - 2021

| சான்றளிக்கப்பட்ட நிறுவனங்கள் /பணியாளர்களின் கண்காணிப்பு | 2021 | 2020 |
|---|---|---|
| சரிவு சோதனை–வான்தகைமை | **-** | 20 |
| சரிவு சோதனை–செயற்பாடுகள் | **3** | 7 |
| விமானத்தள ஆய்வுகள் | **29** | 40 |
| விமானப் போக்குவரத்து சேவை ஆய்வுகள் | **27** | 32 |
| வானூர்தி பராமரிப்பு நிறுவன ஆய்வுகள் | **10** | 2 |
| ஒப்புதலளிக்கப்பட்ட பராமரிப்பு பயிற்சி நிறுவன ஆய்வுகள் | **1** | - |
| தொடர் வான்தகைமை முகாமைத்துவ அமைப்பு (CAMO) ஆய்வுகள் | **8** | 1 |
| பறத்தல் பயிற்சி பாடசாலை ஆய்வுகள் | **8** | 14 |
| விமானப் போக்குவரத்து பாதுகாப்பு கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் (ஆய்வு, கணக்காய்வு, மதிப்பாய்வு, சோதனை) | **52** | 55 |
| சிமியூலேட்டர் ஆய்வுகள் | **3** | 3 |
| வழித்தட சோதனைகள் | **1** | 2 |
| ஆபத்தான சரக்கு சோதனைகள் | **12** | 10 |
| வானூர்தி தகவல் சேவை ஆய்வுகள் | **9** | 10 |
| பிரதான தள ஆய்வுகள்/பயிற்றுநர் அவதானிப்புக்கள் | **8** | 8 |
| நியமிக்கப்பட்ட மேற்பார்வை விமானிகள் (DCP கண்காணிப்பு) | **16** | 26 |

# பிரதான செயற்திறன் குறிகாட்டிகள் - 2021

| இயக்கம் மற்றும் முகாமைத்துவம் | 2021 | 2020 |
|---|---|---|
| அதிகாரசபை கூட்டங்கள் | **9** | 8 |
| கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் | **3** | 6 |
| ஊழியர் குழுக் கூட்டம் | **2** | 3 |
| தொழிற்துறை ஆலோசனைக் கூட்டம் | **68** | 79 |
| வெளியக அமைப்பு/நபர்களுக்களுடனான சந்திப்பு | **137** | 184 |
| கிடைக்கப்பெற்ற கடிதங்களின் எண்ணிக்கை | **13,428** | 6,226 |
| NGAP இலங்கை குழுக் கூட்டங்கள் | **15** | 9 |

| சட்ட விவகாரம் மற்றும் அமுலாக்கம் (LA&E) | 2021 | 2020 |
|---|---|---|
| வெளியிடப்பட்ட மதிப்பாய்வு செய்யப்பட்ட திருத்தப்பட்ட துணைச் சட்டமுறைமைகள் | **13** | 3 |
| ஒப்பந்தங்கள் / புரிந்துணர்வு உடன்படிக்கைகள் | **26** | 17 |
| சட்டமா அதிபர் திணைக்களம் சட்ட வரைஞர் திணைக்களத்தில் பங்கேற்ற கலந்துரையாடல்களின் எண்ணிக்கை | **11** | 13 |
| சட்ட விடயங்களில் CAASL/DGCA இற்கு சட்ட ஆலோசனை வழங்குதல் | **103** | 59 |
| நீதிமன்றில் ஆஜராகியமை | **22** | 26 |
| தயாரிக்கப்பட்ட சட்ட ஆவணங்கள் | **8** | 4 |
| மதிப்பாய்வு செய்யப்பட்ட CAASL ஆவணங்களின் எண்ணிக்கை | **7** | 34 |

| விமானப் போக்குவரத்து பாதுகாப்பு (AVSEC) | 2021 | 2020 |
|---|---|---|
| மீளாய்வுகள் /திருத்தங்கள் – NCASP மற்றும் துணை ஆவணங்கள் | **-** | 5 |
| மதிப்பீடுகள் / மீளாய்வுகள் – உள்நாட்டு விமான நிறுவனம் /விமான நிலைய செயற்படுத்துநர் விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு திட்டம் | **10** | 15 |
| மதிப்பீடுகள் / மீளாய்வுகள் – வெளிநாட்டு விமான நிறுவனங்களின் விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு திட்டம் | **17** | 27 |
| மதிப்பீடுகள் /மீளாய்வுகள் – விமானப் போக்குவரத்து பாதுகாப்புப் பயிற்சித் திட்டம் /பாடத்திட்டம் | **7** | 1 |
| விமானப் போக்குவரத்து பாதுகாப்பு கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் (ஆய்வு, கணக்காய்வு, மதிப்பாய்வு, சோதனை) | **52** | 55 |
| விமான பாதுகாப்பு முகாமையாளர்களின் சான்றிதழ் மற்றும் மறு சான்றிதழ் | **20** | 2 |
| விமான பாதுகாப்பு பயிற்றுவிப்பாளர்களின் சான்றிதழ் மற்றும் மறு சான்றிதழ் | **14** | 13 |
| விமானப் போக்குவரத்து பாதுகாப்பு ஸ்கிரீனர்களின் சான்றிதழ் மற்றும் மறு சான்றிதழ் | **648** | 452 |
| விமானங்களில் ஆயுதங்களை கொண்டு செல்வதற்கான ஒப்புதல் | **47** | 62 |
| விமான நிலைய அணுகல் அனுமதிகளை வழங்குவதற்கான பரிந்துரை | **191** | 37 |
| விமான பாதுகாப்பு பயிற்சி/விரிவுரை/ காட்சியளிப்புகளை நடத்துதல் | **6** | 1 |
| அரசு மற்றும் பிற நிறுவனங்களுக்கு நிபுணத்துவ சேவைகளை வழங்குதல் | **-** | 2 |

# பிரதான செயற்திறன் குறிகாட்டிகள் - 2021

| சுற்றாடல், ஆராய்ச்சி, வேலைத்திட்டங்கள் (ERP) | 2021 | 2020 |
|---|---|---|
| சர்வதேச விமானநிறுவன புள்ளிவிவர அறிக்கைகள் | **317** | 314 |
| உள்நாட்டு விமானநிறுவன புள்ளிவிவர அறிக்கைகள் | **48** | 43 |
| சர்வதேச விமானநிலைய புள்ளிவிவர அறிக்கைகள் | **24** | 28 |
| உள்நாட்டு விமானநிலைய புள்ளிவிவர அறிக்கைகள் | **17** | 17 |
| அனுப்பப்பட்ட ICAO அறிக்கையிடல் படிவங்கள் | **51** | 26 |
| CAASL பணி செயற்திறன் புள்ளிவிவர அறிக்கைகள் | **214** | 181 |
| CAASL இல் உள்ள அரசாங்க நிறுவனங்கள்/ பொது/ பிற பிரிவுகளுக்கு புள்ளிவிவரங்களை வழங்குதல் | **20** | 15 |
| வழங்கப்பட்ட ஏலம்/RFP (முன்மொழிவுகளுக்கான கோரிக்கை) | **40** | 28 |
| வழங்கப்பட்ட ஒப்பந்தங்கள் | **53** | 42 |
| தயாரிக்கப்பட்ட CAASL சபை ஆவணங்கள் | **2** | 2 |
| CAASL செயலமர்வு/செயல்பாடு/நிகழ்வு/சிறப்பு நாட்களுக்கு நிர்வாக ஆதரவு | **3** | 4 |
| கூட்டம் /பயிற்சி/கருத்தரங்கு/செயலமர்வுகளை (விமான போக்குவரத்து) ஒழுங்கமைப்பதற்கான நிர்வாக ஆதரவு | **1** | 2 |

| வான் வழிகாட்டல் சேவை (ANS) | 2021 | 2020 |
|---|---|---|
| நடத்தப்பட்ட ATS ஆய்வுகள் | **27** | 32 |
| நடத்தப்பட்ட AIS ஆய்வுகள் | **9** | 10 |
| நடத்தப்பட்ட SAR ஆய்வுகள் | **3** | 4 |
| நடத்தப்பட்ட CNS ஆய்வுகள் | **21** | 30 |
| நடத்தப்பட்ட வரைபட மற்றும் விளக்கப்பட ஆய்வுகள் | **3** | 3 |
| நடத்தப்பட்ட PANS-OPS ஆய்வுகள் | **-** | 1 |
| NOTAM வெளியீடுகளுக்கான ஒப்புதல்கள் | **579** | 442 |
| வழங்கப்பட்ட AIP துணை இணைப்பு | **3** | 8 |
| AIP திருத்தம் | **1** | - |
| வான்வழிப் பணி ஒப்புதல் எண்ணிக்கை | **41** | 24 |
| வழங்கப்பட்ட AIC எண்ணிக்கை | **4** | 5 |
| வழங்கப்பட்ட தரையிறங்கல் அனுமதி | **551** | 451 |
| வழங்கப்பட்ட மேலாக பறத்தல் அனுமதி | **584** | 859 |
| திட்டமிடப்படாத விமானங்களுக்கான ஒப்புதல்களின் எண்ணிக்கை | **1,135** | 1,317 |
| அனுப்பப்பட்ட AFTN | **478** | 600 |
| பெறப்பட்ட AFTN | **3,850** | 2,225 |
| தரையிறக்கம் மற்றும் நிறுத்துமிடக் கட்டண விலக்களிப்பு எண்ணிக்கை | **12** | 4 |
| இராஜதந்திர விமான தரையிறங்கலுக்கு ஆட்சேபிக்காத குறிப்பு எண்ணிக்கை | **153** | 68 |
| மேலாக பறக்கும் இராஜதந்திர விமானங்களுக்கு ஆட்சேபிக்காத குறிப்பு எண்ணிக்கை | **57** | 53 |
| கொழும்பு FIR மேலாக பறந்த விமானங்களின் எண்ணிக்கை | **9,757** | 16,543 |

# பிரதான செயற்திறன் குறிகாட்டிகள் - 2021

| விமானத்தளங்கள் மற்றும் வசதிப்படுத்தல் | 2021 | 2020 |
|---|---|---|
| கோபுர அனுமதிகளின் எண்ணிக்கை | **343** | 46 |
| உயரமான கட்டடங்களை நிர்மாணிப்பதற்கான ஒப்புதல்கள் | **172** | 96 |
| தரை விமான நிலைய சான்றிதழ் - புதுப்பித்தல் | **1** | 1 |
| மேற்கொள்ளப்பட்ட விமானத்தளக் கண்காணிப்பு | **29** | 40 |

| விமானப் போக்குவரத்துப் பயிற்சி மற்றும் பணியாளர் உரிமம் | 2021 | 2020 |
|---|---|---|
| மாணவர் விமானி உரிமங்கள் (SPL) (வழங்கலும் புதுப்பித்தலும்) | **211** | 114 |
| தனியார் விமானி உரிமங்கள் (PPL) (வழங்கலும் புதுப்பித்தலும்) | **173** | 87 |
| வணிக விமானி உரிமங்கள் (CPL) (வழங்கலும் புதுப்பித்தலும்) | **306** | 176 |
| விமான போக்குவரத்து விமானி உரிமங்கள் (ATPL) (வழங்கலும் புதுப்பித்தலும்) | **448** | 295 |
| விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர் உரிமங்கள் (ATC) (வழங்கலும் புதுப்பித்தலும்) | **54** | 49 |
| விமான பராமரிப்பு பொறியாளர் உரிமங்கள் (வழங்கலும் புதுப்பித்தலும்) | **2** | 1 |
| விமான பராமரிப்பு உரிமம் (வழங்கலும் புதுப்பித்தலும்) | **81** | 144 |
| விமான பராமரிப்பு உரிமம்-வகை மதிப்பீடு (வழங்கல்கள்) | **36** | 50 |
| விமான பராமரிப்பு உரிமம்-பிரிவுகள் (வழங்கல்கள்) | **1** | 2 |
| கேபின் குழு சான்றிதழ் (வழங்கலும் புதுப்பித்தலும்) | **176** | 96 |
| விமான இயக்க அதிகாரி உரிமம் (வழங்கலும் புதுப்பித்தலும்) | **1** | - |
| PPL, CPL, ATPL விமான வகை மதிப்பீடு வழங்கல் | **67** | 62 |
| உதவி விமான பயிற்றுவிப்பாளர் (AFI) மற்றும் விமான பயிற்றுவிப்பாளர் (FI) மதிப்பீடு – (வழங்கலும் புதுப்பித்தலும்) | **9** | 4 |
| விமானப் பாடசாலை உரிமங்கள் (வழங்கலும் புதுப்பித்தலும்) | **9** | 8 |
| தரை பயிற்றுவிப்பாளர் உரிமம் (வழங்கலும் புதுப்பித்தலும்) | **3** | 6 |
| தரை பயிற்றுவிப்பாளர் ஒப்புதல்கள் (வழங்கலும் புதுப்பித்தலும்) | **19** | 28 |
| விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர் மதிப்பீடு (வழங்கலும் புதுப்பித்தலும்) | **120** | 140 |
| NIB அனுமதிகளை வழங்குதல் | **114** | 100 |
| PPL தேர்வு (தாள்களின் எண்ணிக்கை) | **463** | 291 |
| AML தேர்வு (பரீட்சைகளின் எண்ணிக்கை) | **1** | 1 |
| AML தேர்வு (தாள்களின் எண்ணிக்கை) | **1,114** | 1,105 |
| ATPL (A) தேர்வு | **33** | 21 |
| ATPL (A) வழங்கப்பட்ட தாள்களின் எண்ணிக்கை | **737** | 416 |
| ATPL (H) தேர்வு | **1** | 1 |
| ATPL (H) தேர்வு (தாள்களின் எண்ணிக்கை) | **6** | 3 |
| ஆங்கில மொழித் தேர்ச்சி சோதனை (ELPC) | **124** | 85 |
| ரேடியோ தகவல்தொடர்பு செயன்முறை பரீட்சை | **64** | 40 |
| உதவி விமானப் பயிற்றுவிப்பாளர் தேர்வு (எழுத்து மற்றும் வாய்மொழி) | **16** | 4 |

# பிரதான செயற்திறன் குறிகாட்டிகள் - 2021

| வானூர்தி செயற்பாடுகள் | 2021 | 2020 |
|---|---|---|
| சிறப்பு செயற்பாடுகள் | **41** | 52 |
| வெளிநாட்டு வானூர்திச் செயற்பாட்டாளர் சான்றிதழ் - மூலம் | **9** | 3 |
| வெளிநாட்டு வானூர்திச் செயற்பாட்டாளர் சான்றிதழ் - புதுப்பிப்பு | **29** | 30 |
| அபாயகர பொருள் போக்குவரத்து உரிமங்கள் - மூலம் | **-** | 3 |
| அபாயகர பொருள் போக்குவரத்து உரிமங்கள் - புதுப்பிப்பு | **12** | 12 |
| DCP மூலம் | **5** | 3 |
| DCP புதுப்பிப்பு | **17** | 24 |
| சர்வதேச வானூர்திச் செயற்பாட்டாளர் சான்றிதழ் - புதுப்பிப்பு | **1** | 2 |
| சிமுலேட்டர் புதுப்பிப்பு | **3** | 3 |
| PPC ஒப்புதல்கள் | **87** | 81 |
| மேற்கொள்ளப்பட்ட கண்காணிப்பு நடவடிக்கைகள் | **31** | 40 |

| வானூர்தி பதிகை மற்றும் வான்தகைமை (AR&AW) | 2021 | 2020 |
|---|---|---|
| மேற்கொள்ளப்பட்ட கண்காணிப்பு நடவடிக்கைகள் (வளைவு, தணிக்கை) | **81** | 68 |
| விமானங்களின் வான்தகைமை சான்றிதழ் - மூலம் | **4** | 1 |
| விமானங்களின் வான்தகைமை சான்றிதழ் - புதுப்பிப்பு | **54** | 48 |
| விமான பதிகை சான்றிதழ் - மூலம் | **3** | 2 |
| விமான பதிகை சான்றிதழ் - புதுப்பிப்பு | **69** | 68 |
| பராமரிப்பு நிறுவனம் (உள்ளூர்) - மூலம் | **-** | 2 |
| பராமரிப்பு நிறுவனம் (உள்ளூர்) – புதுப்பிப்பு | **10** | 19 |
| பராமரிப்பு நிறுவனம் (வெளியூர்) - மூலம் | **3** | 9 |
| பராமரிப்பு நிறுவனம் (வெளியூர்) – புதுப்பிப்பு | **55** | 49 |
| பராமரிப்பு பயிற்சி நிறுவனம் - புதுப்பிப்பு | **3** | 1 |
| தொடர் வான்தகைமை முகாமைத்துவ அமைப்பு - மூலம் | **-** | 1 |
| தொடர் வான்தகைமை முகாமைத்துவ அமைப்பு – புதுப்பிப்பு | **5** | 6 |
| விமான போக்குவரத்து சம்பவங்கள் பற்றிய விசாரணைகள் | **164** | 55 |

# பிரதான செயற்திறன் குறிகாட்டிகள் - 2021

| விமானப் போக்குவரத்து மற்றும் பொருளாதார ஒழுங்குமுறைகள் (ATER) | 2021 | 2020 |
|---|---|---|
| உள்நாட்டு விமான அட்டவணை ஒப்புதல்கள் | **44** | 42 |
| விமான போக்குவரத்து வழங்குநர்களுக்காக நடத்தப்பட்ட மதிப்பீடுகள் | **29** | 49 |
| சர்வதேச விமான அட்டவணை ஒப்புதல்கள் | **1,093** | 833 |
| வெளிநாட்டு தொழில்நுட்ப/தொழில்நுட்பம் அல்லாத நிபுணர்களுக்கான விசா பரிந்துரைகள் | **71** | 41 |
| இலங்கை பதிவு செய்யப்பட்ட விமான நிறுவனங்களுக்கான வாடகை விமான உரிமம் | **7** | 5 |
| இலங்கை பதிவு செய்யப்பட்ட விமான நிறுவனங்களுக்கான விமான உரிமம் | **5** | 2 |
| வாடகை உரிமங்கள் - உள்நாட்டு வழக்கமான செயல்பாடுகள் | **2** | - |
| விமான போக்குவரத்து வழங்குநரின் உரிமங்கள் | **309** | 317 |
| ஆண்டிறுதி திறந்த வான்வெளி விமான சேவை ஒப்பந்தங்கள் | **19** | 19 |

| மனிதவளம் மற்றும் ஆதன முகாமைத்துவம் (HRPM) | 2021 | 2020 |
|---|---|---|
| ஊழியர் ஆட்சேர்ப்பு | **8** | 4 |
| மொத்த ஊழியர் (நிரந்தர பணி) | **176** | 175 |
| ஏற்பாடு செய்யப்பட்ட வெளிநாட்டுப் பயிற்சி/கருத்தரங்கு/செயலமர்வுகள் | **-** | 2 |
| ஏற்பாடு செய்யப்பட்ட வெளிநாட்டு கூட்டம் /மாநாடு/கருத்தரங்குகள் | **2** | 2 |
| ஏற்பாடு செய்யப்பட்ட வெளிநாட்டு ஆய்வுகள் | **1** | 2 |
| ஏற்பாடு செய்யப்பட்ட உள்நாட்டு பயிற்சி/கருத்தரங்கு/செயலமர்வுகள் | **4** | 25 |
| ஏற்பாடு செய்யப்பட்ட உள்ளூர் உள்ளக பயிற்சி திட்டங்கள் (உபதேசங்கள் உட்பட) | **8** | 3 |
| ஏற்பாடு செய்யப்பட்ட இணையவழி பயிற்சி/ கருத்தரங்கு/ பட்டடைகள் | **53** | 23 |
| ஏற்பாடு செய்யப்பட்ட இணையவழி கூட்டம்/மாநாடுகள் | **5** | - |
| செயலாக்கப்பட்ட செயல்திறன் மதிப்பீடுகள் | **141** | 121 |
| வழங்கப்பட்ட பணியாளர் கடன் வசதி | **47** | 199 |
| அனுகப்பட்ட மற்றும் விநியோகிக்கப்பட்ட ICAO ஆவணங்கள் | **720** | 424 |

| நிதி மற்றும் வருமான முகாமைத்துவம் (F&RM) | 2021 | 2020 |
|---|---|---|
| சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் (ரூ. மில்லியன்) | **1,128** | 986 |
| ஏற்பட்ட மொத்த செலவினம் (ரூ. மில்லியன்) | **707** | 679 |
| செலுத்தப்பட்ட மொத்த ஊழியர் செலவு (ரூ. மில்லியன்) | **356** | 354 |

| தரம் மற்றும் உள்ளக கணக்காய்வு (Q&IA) | 2021 | 2020 |
|---|---|---|
| நடத்தப்பட்ட கணக்காய்வுகள் | **80** | 84 |
| சேகரிப்பட்ட நிதி | **110** | 87 |

# பிரதான செயற்திறன் குறிகாட்டிகள் - 2021

| விமான போக்குவரத்து பாதுகாப்பு கண்காணிப்பு | 2021 | 2020 |
|---|---|---|
| அறிக்கையிடப்பட்ட சம்பவங்கள் (தீவிரம் /சிறு) | **12** | 6 |
| அறிக்கையிடப்பட்ட விபத்துக்கள் | **1** | - |
| பதிவாகிய சம்பவங்கள் | **226** | 121 |
| பயணி அல்லது ஊழியருக்கு கடும் காயங்கள் | **1** | - |
| பயணி அல்லது ஊழியருக்கு சிறு காயங்கள் | **3** | 2 |
| உருவாக்கப்பட்ட புதிய விதிமுறைகள் | **-** | 3 |
| உருவாக்கப்பட்ட புதிய வழிகாட்டல் முறைகள் | **1** | 5 |
| திருத்தப்பட்ட ஏற்கனவேயுள்ள வழிகாட்டுதல் முறைகள் | **8** | 5 |
| தயாரிக்கப்பட்ட புதிய IS | **2** | 1 |
| திருத்தப்பட்ட தற்போதைய IS | **2** | 6 |
| ட்ரோன் பதிவு - உள்நாட்டு உரிமையாளர்கள் | **857** | 383 |
| ட்ரோன் பதிவு - வெளிநாட்டு உரிமையாளர்கள் | **171** | 2 |
| உரிமம் வைத்திருப்பவர்கள் மீதான விபத்து/சம்பவ சரிபார்ப்புகள் | **39** | 42 |

| வான் மருத்துவ சேவைகள் (AMS) | 2021 | 2020 |
|---|---|---|
| மருத்துவ பரிசோதனைகள் | **1,353** | 917 |

| தகவல் தொழில்நுட்பம் (IT) | 2021 | 2020 |
|---|---|---|
| முறைப்பாடுகளின் எண்ணிக்கை - உதவி மைய ஆதரவு | **4,651** | 2,656 |
| தீர்க்கப்பட்ட முறைப்பாடுகளின எண்ணிக்கை - உதவி மைய ஆதரவு | **4,651** | 2,584 |
| கொள்வனவு செய்யப்பட்ட புதிய தகவல் தொழில்நுட்ப உபகரணங்களுக்கான மதிப்பீடுகள் | **14** | 8 |

| சிவில் போக்குவரத்து மேம்பாடு மற்றும் ஊடகம் | 2021 | 2020 |
|---|---|---|
| வெளியிடப்பட்ட குவன்சர இதழ்கள் | **1** | 1 |
| நடத்தப்பட்ட CADEC நிகழ்ச்சிகள் | **-** | 2 |
| பாடசாலை மாணவர்களுக்கான பட்டறைகள் | **-** | 1 |
| நடத்தப்பட்ட சிறப்பு நிகழ்வுகள், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் | **9** | 2 |
| பத்திரிகை கட்டுரைகள் | **27** | 47 |
| தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் | **38** | 12 |

# போக்குவரத்து விவரங்கள் 2021

| | 2021 | 2020 | வளர்ச்சி |
|---|---|---|---|
| **சர்வதேச போக்குவரத்து** | | | |
| **பயணிகள்** | | | |
| புறப்பட்ட | **708,076** | 1,231,939 | -43% |
| தரையிறங்கிய | **792,002** | 1,140,989 | -31% |
| வழி மாற்றிய | **196,553** | 275,866 | -29% |
| **சரக்கு (மெட்ரிக் தொன்)** | | | |
| உள்வந்த | **72,676** | 49,766 | 46% |
| வெளிச்சென்ற | **111,463** | 86,327 | 29% |
| **விமான இயக்கங்கள்** | | | |
| நிரந்தர விமானங்கள் | **18,738** | 19,442 | -4% |
| வாடகை விமானங்கள் | **2,269** | 1,300 | 75% |
| **இயக்கப்பட்ட விமான நிறுவனங்களின் எண்ணிக்கை** | | | |
| நிரந்தர சேவை | **32** | 36 | -11% |
| வாடகை சேவை | **37** | 39 | -5% |
| சரக்கு சேவை | **4** | 4 | 0% |
| **உள்நாட்டுப் போக்குவரத்து** | | | |
| கொண்டுசெல்லப்பட்ட பயணிகள் | **5,406** | 8,960 | -40% |
| விமான இயக்கங்கள் | **1,093** | 2,041 | -46% |
| இயக்கப்பட்ட விமான நிறுவனங்களின் எண்ணிக்கை | **5** | 7 | -29% |
| நிரந்தர விமானங்கள் | **2** | 2 | 0% |
| வாடகை விமானங்கள் | **3** | 5 | -40% |

# போக்குவரத்து விவரங்கள் 2021

## மதிப்பீட்டு அட்டவணை

### பயணிகள் நடமாட்டம்




*"2012 முதல் 2021 வரையான பயணிகள் நடமாட்டம்"*

### சரக்கு நடமாட்டம்




*"2012 முதல் 2021 வரையான சரக்கு நடமாட்டம்"*

### விமான இயக்கங்கள்




*"2012 முதல் 2021 வரையான விமான இயக்கங்கள்"*

# நிதிக் கூற்றுகள் - 2021

# விரிவான வருமானக் கூற்று

| டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது | குறிப்பு | 2021<br>ரூ. | 2020<br>ரூ. |
|---|---|---|---|
| **வருமானம்** | | | |
| செயற்பாட்டு வருமானம் | 23 | **993,344,282** | 803,216,822 |
| செயற்பாடு அல்லாத வருமானம் | 23 | **134,905,424** | 182,992,523 |
| | | **1,128,249,706** | 986,209,345 |
| **செலவினம்** | | | |
| ஊழியர் செலவுகள் | 24 | **356,754,794** | 354,048,327 |
| கூட்டங்கள், கருத்தரங்குகள், செயலமர்வுகள் | 25 | **2,292,036** | 1,781,594 |
| பயிற்சி செலவுகள் | 26 | **4,617,621** | 5,078,282 |
| நிர்வாகம் மற்றும் பிற செலவுகள் | 27 | **195,510,215** | 184,820,164 |
| தேய்மானம் | 29 | **139,863,363** | 133,523,370 |
| அருவச் சொத்துக்களின் கடன் தீர்ப்பனவு | 30 | **8,590,685** | 256,265 |
| பயன்பாட்டு உரிமைச் சொத்துக்களின் தேய்மானச் செலவுகள் | 31 | **21,034** | 21,034 |
| | | **707,649,748** | 679,529,036 |
| வரிக்கு முந்தைய இலாபம் | | **420,599,958** | 306,680,309 |
| வருமான வரிச் செலவுகள் | 28 | **90,701,569** | 69,528,468 |
| வருடத்துக்கான இலாபம் | | **329,898,389** | 237,151,840 |
| **பிற விரிவான வருமானம்** | | | |
| ஓய்வூதிய நன்மை கடப்பாடுகளை மீள் அளவீடு செய்வதால் ஏற்படும் இலாபம் /(நட்டம்) | | **(12,908,854)** | (20,183,552) |
| **ஆண்டுக்கான மொத்த விரிவான வருமானம்** | | **316,989,535** | 216,968,288 |

பக்கம் 106 முதல் 135 வரையான குறிப்புகள் இந்நிதிக் கூற்றுக்களின் இன்றியமையாத பாகமாகும்.

# நிதி நிலைமைக் கூற்று

| டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது | குறிப்பு | 2021<br>ரூ. | 2020<br>ரூ. |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறையல்லா சொத்துக்கள்** | | | |
| ஆதனம், பொறி, உபகரணம் | 29 | **2,231,885,553** | 2,309,530,500 |
| அருவச் சொத்துக்கள் | 30 | **27,244,041** | 4,081,325 |
| பயன்படுத்தும் உரிமை சொத்து | 31 | **336,539** | 357,573 |
| புத்துருவாகும் வேலை - மூலதனம் | 32 | **469,622,199** | 464,794,076 |
| நிலையான வைப்பு – ஊழியர் நலன், சமூகப் பாதுகாப்பு நிதி | | **135,269** | 128,487 |
| பிற்போடப்பட்ட வரி – சொத்துக்கள் | | **15,596,177** | 10,377,440 |
| **மொத்த நடைமுறையல்லா சொத்துக்கள்** | | **2,744,819,778** | **2,789,269,401** |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| இருப்புக்கள் | | **5,624,206** | 6,963,707 |
| வியாபார வருமதிகள் | 33 | **126,228,278** | 718,952,055 |
| ஊழியர் கடன்கள் | 34 | **79,172,733** | 90,686,852 |
| நிதி உடமைகள் | 35 | **1,394,337,537** | 1,218,129,968 |
| முற்பணம், முற்கொடுப்புனவு, பிற பெறத்தக்கவை | 36 | **557,517,472** | 513,923,665 |
| காசு, காசுக்கு சமமானவை | 37 | **1,748,236,749** | 1,658,332,429 |
| **மொத்த நடைமுறைச் சொத்துக்கள்** | | **3,911,116,975** | **4,206,988,675** |
| **மொத்த சொத்துக்கள்** | | **6,655,936,753** | **6,996,258,076** |

# நிதி நிலைமைக் கூற்று

| டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது | குறிப்பு | 2021 ரூ. | 2020 ரூ. |
|---|---|---|---|
| **உரிமையாண்மை, பொறுப்புக்கள்** | | | |
| **மூலதனம் மற்றும் ஒதுக்கங்கள்** | | | |
| அரச கொடைகள் | 38 | 558,598,755 | 562,818,117 |
| கைக்கொள் இலாபம் | 39 | 4,029,697,346 | 3,762,707,811 |
| **மொத்த மூலதனம் மற்றும் ஒதுக்கங்கள்** | | **4,588,296,103** | **4,325,525,928** |
| **பொறுப்புக்கள்** | | | |
| **நடைமுறையல்லா பொறுப்புக்கள்** | | | |
| பிற்போடப்பட்ட வரி பொறுப்புக்கள் | 40 | 37,265,104 | 35,260,898 |
| குத்தகை பொறுப்புக்கள் | 41 | 329,501 | 353,339 |
| ஏற்பாடுகள் மற்றும் ஏனைய பொறுப்புகள் | 42 | 61,267,822 | 94,073,855 |
| ஓய்வுப் பயன் கடப்பாடு | 43 | 66,185,597 | 50,084,994 |
| **மொத்த நடைமுறையல்லா பொறுப்புக்கள்** | | **165,048,024** | **179,773,086** |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| வியாபார சென்மதிகள் | 44 | 1,654,555,238 | 2,309,954,594 |
| ஏனைய சென்மதிகள் | 45 | 74,744,483 | 61,855,239 |
| வருமான வரி பொறுப்புக்கள் | 46 | 173,292,905 | 119,149,229 |
| **மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள்** | | **1,902,592,626** | **2,490,959,062** |
| **மொத்த உரிமையாண்மை மற்றும் பொறுப்புக்கள்** | | **6,655,936,753** | **6,996,258,076** |

பக்கம் 106 முதல் 135 வரையான குறிப்புகள் இந்நிதிக் கூற்றுக்களின் இன்றியமையாத பாகமாகும்.
இந்த நிதிக் கூற்றுக்கள் 31.12.2021 நிலவரப்படி அதிகாரசபை விவகாரங்களின் உண்மையான, நியாயமான விளக்கங்களை அளிக்கின்றன.

இலங்கை கணக்கியல் நியமங்களுக்கு அமைய இந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து சமர்ப்பிப்பது பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும். இந்நிதிக் கூற்றுக்கள் 25 பெப்ரவரி 2022 அன்று 178 ஆவது CAASL பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்டு கையொப்பம் இடப்பட்டுள்ளது.

**கேப்டன் தேமியா அபேவிக்ரம**
சிவில் விமானப் போக்குவரத்து பணிப்பாளர் நாயகம், பிரதம நிறைவேற்று அலுவலர்

**உபுல் தர்மதாச**
தலைவர்

**இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை**
28 பெப்ரவரி 2022

# உரிமையாண்மை மாற்றங்களின் கூற்று

| | அரச கொடை ரூ. | கைக்கொள் இலாபம் ரூ. | மொத்தம் ரூ. |
|---|---|---|---|
| இருப்பு, 2020 ஜனவரி 1 இல் உள்ளவாறு | 567,094,016 | 3,545,739,523 | 4,112,833,539 |
| காலப்பகுதிக்கான இலாபம் | - | 237,151,840 | 237,151,840 |
| ஆண்டுக்கான கடன் தீர்ப்பனவு | (4,275,899) | - | (4,275,899) |
| ஓய்வுப் பயன் கடப்பாடுகளின் மீள் அளவீடு | - | (20,183,552) | (20,183,552) |
| இருப்பு, 2020 டிசம்பர் 31 இல் உள்ளவாறு | 562,818,117 | 3,762,707,811 | 4,325,525,928 |
| காலப்பகுதிக்கான இலாபம் | - | 329,898,389 | 329,898,389 |
| ஒன்றித்த நிதியத்துக்கான மாற்றல் | - | (50,000,000) | (50,000,000) |
| ஓய்வுப் பயன் கடப்பாடுகளின் மீள் அளவீடு | - | (12,908,854) | (12,908,854) |
| ஆண்டுக்கான கடன் தீர்ப்பனவு | (4,219,362) | - | (4,219,362) |
| இருப்பு, 2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறு | 558,598,755 | 4,029,697,346 | 4,588,296,103 |

பக்கம் 106 முதல் 135 வரையான குறிப்புகள் இந்நிதிக் கூற்றுக்களின் இன்றியமையாத பாகமாகும்

# காசுப்பாய்ச்சல் கூற்று

| டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது | குறிப்பு | 2021<br>ரூ. | 2020<br>ரூ. |
|---|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகள் மூலமான காசுப் பாய்ச்சல்** | | | |
| பொதுவான செயற்பாடுகளின் இலாபம்/(நட்டம்) வரிக்கு முன் | | 420,599,959 | 306,680,309 |
| **செம்மையாக்கல்கள்** | | | |
| தேய்மானம் | 29 | 139,863,363 | 133,523,370 |
| அருவச் சொத்துக்களின் கடன் தீர்ப்பனவு | 30 | 8,590,685 | 256,265 |
| பயன்படுத்தும் உரிமைச் சொத்துக்களின் தேய்மானச் செலவுகள் | 31 | 21,034 | 21,034 |
| அரச கொடைக்கான கடன் தீர்ப்பனவு | 38 | (4,219,362) | (4,275,899) |
| முதலீடுகளிலிருந்தான வட்டி வருமானம் | 23 | (120,997,733) | (167,903,923) |
| ஆதனம், பொறி, உபகரணங்களின் விற்பனை மூலமான இலாபம்/(நட்டம்) | | 243,984 | 125,663 |
| குத்தகை பொறுப்புக்களின் நிதிக் கிரயம் | 41 | 2,946 | 1,516 |
| வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டங்களுக்கான ஏற்பாடு | 43 | 8,350,858 | 6,890,186 |
| **தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன் செயற்பாட்டு இலாபம்/(நட்டம்)** | | **452,455,734** | **275,318,521** |
| இருப்புக்களில் அதிகரிப்பு | | 1,339,500 | (760,483) |
| வியாபார வருமதிகளில் (அதிகரிப்பு)/குறைவு | 33 | 592,723,776 | (594,434,118) |
| ஊழியர் கடன்களில் (அதிகரிப்பு)/குறைவு | 34 | 15,403,383 | (39,535,096) |
| முற்பணம், முற்கொடுப்பனவு, பிற வருமதிகளில் (அதிகரிப்பு)/குறைவு | 36 | (17,447,387) | 12,402,778 |
| வியாபாரம் மற்றும் பிற சென்மதிகளில் அதிகரிப்பு | 44/45 | (642,510,113) | 313,891,308 |
| **செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட காசு** | | **401,964,894** | **(33,117,090)** |
| அனுமதிக்கப்படாத பெறுமதி சேர் வரி | | - | - |
| செலுத்தப்பட்ட வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டச் செலவுகள் (பணிக்கொடை) | 43 | (5,159,109) | (17,449,856) |
| செலுத்தப்பட்ட வருமான வரி | 46 | (39,772,423) | (164,706,977) |
| **செயற்பாட்டு நடவடிக்கைகள் மூலமான தேறிய காசு** | | **357,033,363** | **(215,273,922)** |
| **முதலீட்டு நடவடிக்கைகள் மூலமான காசுப் பாய்ச்சல்** | | | |
| ஆதனம், பொறி, உபகரணங்களின் கையகப்படுத்தல் | 29 | (62,565,451) | (10,668,748) |
| அருவச் சொத்துக்களின் கையகப்படுத்தல் | 30 | (31,753,401) | (2,497,500) |
| மூலதன புத்துருவாகும் வேலையில் அதிகரிப்பு | 32 | (4,828,122) | (38,734,826) |
| பிற மூலதனங்களை திரும்பப்பெறல் /கையகப்படுத்தல் | 35 | (171,880,262) | (356,434,700) |
| பெறப்பட்ட வட்டி | | 86,634,742 | 132,987,202 |
| ஆதனம், பொறி, உபகரணங்களின் விற்பனை மூலம் கிடைக்கும் வருமானம் | | 103,051 | 72,525 |
| வங்கி உத்தரவாதத்தில் குறைவு | | (32,812,815) | - |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்திய தேறிய காசு** | | **(217,102,258)** | **(275,276,045)** |
| **நிதியீட்டச் செயற்பாடுகள் மூலமான காசுப் பாய்ச்சல்** | | | |
| ஒன்றித்த நிதியத்துக்கான பங்களிப்பு | | (50,000,000) | - |
| வீரவில காணிக்கான குத்தகைக் கொடுப்பனவு | 41 | (26,784) | (26,784) |
| **நிதியீட்டச் செயற்பாடுகளில் பயன்படுத்திய தேறிய காசு** | | **(50,026,784)** | **(26,784)** |
| **காசு மற்றும் காசுக்கு சமமானவற்றில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு/(குறைவு)** | | **89,904,320** | **(490,576,752)** |
| **ஆண்டு தொடக்கத்தில் காசும் காசுக்கு சமமானவையும்** | 37 | **1,658,332,429** | **2,148,909,180** |
| **ஆண்டு இறுதியில் காசும் காசுக்கு சமமானவையும்** | 37 | **1,748,236,749** | **1,658,332,429** |

பக்கம் 106 முதல் 135 வரையான குறிப்புகள் இந்நிதிக் கூற்றுக்களின் இன்றியமையாத பாகமாகும்

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

## 1. பெருநிறுவனத் தகவல்

### 1.1. பொது

இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகாரசபையானது அதன் பதிவு அலுவலகம் இல. 152/1 மினுவாங்கொட வீதி, கட்டுநாயக்கவில் அமைந்துள்ளது.

### 1.2 பிரதான செயற்பாடுகள் மற்றும் செயற்பாட்டின் தன்மை

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையானது 2002 ஆம் ஆண்டு டிசம்பர் 27 ஆம் திகதி 2002 ஆம் ஆண்டின் சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைச் சட்டத்தின் இலக்கம் 34 இன் கீழ் ஸ்தாபிக்கப்பட்டது. சிவில் விமான சேவையில் பாதுகாப்பு, செயற்திறன், ஒழுங்குமுறை. சுற்றாடலில் அதன் தாக்கத்தை ஒழுங்குபடுத்தும் ஒரு சட்டப்பூர்வ அமைப்பாகக் கருதப்படுகிறது. 2002 ஆம் ஆண்டின் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை சட்ட இல.34 மற்றும் 2010 ஆம் ஆண்டின் சிவில் விமானச் சட்ட இல.14 இல் உள்ள சட்ட விதிகளின் கீழ் பன்னாட்டு குடிசார் வான்பயண அமைப்பால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பொருந்தக்கூடிய சர்வதேச தரநிலைகள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளுக்கு இது இணங்குகிறது.

### 1.3 வெளியீட்டுக்கான அங்கீகாரத் திகதி

2021 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் நிதிநிலை அறிக்கைகள், ஜுன் 10 அன்று சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் தீர்மானத்திற்கு இணங்க வெளியிடுவதற்கு அங்கீகரிக்கப்பட்டது.

## பொது கணக்கீட்டுக் கொள்கைகள்

## 2. தயாரிப்புக்கான அடிப்படை

### 2.1 இணக்கத்துக்கான அறிக்கை

நிதி நிலை அறிக்கை, இலாபம் அல்லது நட்ட அறிக்கை மற்றும் ஏனைய விரிவான வருமானம், பங்கு மாற்றங்கள், காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் குறிப்புகள் மற்றும் குறிப்பிடத்தக்க கணக்கியல் கொள்கைகளுடன் ('நிதிக் கூற்றுக்கள்') அதிகாரசபையின் 2021 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் ஒப்பீட்டுத் தகவல்களுடன் சர்வதேச கணக்கியல் தரநிலை சபையினால் வெளியிடப்பட்ட சர்வதேச நிதி அறிக்கையிடல் தராதரங்களைப் ("IFRS") பிரதிநிதித்துவப்படுத்தும் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம் (CA) வழங்கிய இலங்கை கணக்கியல் தரநிலைகள் (SLFR) மற்றும் (LKAS) ஆகியவற்றின் அடிப்படையில் வெளியடப்பட்டது. நிதிநிலை அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பிப்பதற்கு இலங்கையின் சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

### 2.2 அளவீட்டின் அடிப்படை

நிதிநிலை அறிக்கைகள் வரலாற்றுச் செலவு அடிப்படையின் கீழ் தயாரிக்கப்பட்டு, நிதிச் சொத்துக்கள் சீர்மதிப்பின் மூலம் அளவிடப்பட்டன.

### 2.3 செயல்பாட்டு மற்றும் செயற்படுத்தல் நாணயம்

அதிகாரசபையின் செயற்பாட்டு நாணயமானது இலங்கை ரூபாயாக இருக்க வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டு, நிதி அறிக்கைகள் இலங்கை ரூபாயில் வழங்கப்படுகின்றன.

### 2.4 தொடர்ந்தியங்கும் அடிப்படை

நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிக்கும் போது, நிர்வாகமானது, தொடர்ந்து இயங்கும் அதிகாரசபையின் திறனை மதிப்பிட்டுள்ளது. அதிகாரசபையானது அதன் சட்டபூர்வமான கடமைகள் மற்றும் செயல்பாடுகளை நிறைவேற்றுவதற்கு போதுமான ஆதாரங்களைக் கொண்டுள்ளதுடன் எதிர்வரும் காலங்களில் செயற்பாட்டு இருப்பில் தொடர வேண்டும் என்ற நியாயமான எதிர்பார்ப்பைக் கொண்டுள்ளது. எதிர்காலத்தைப் பற்றிய அனைத்து தகவல்களையும் கணக்கில் எடுத்துக்கொண்டு, செயல்பாடுகளை கலைத்தல் அல்லது நிறுத்துதல் ஆகியவற்றின் தேவையை அதிகாரசபையானது எதிர்பார்க்கவில்லை. அதற்கிணங்க, நிதிநிலை அறிக்கைகளை தயாரிப்பதில் அதிகாரசபை தொடந்தியங்கும் அடிப்படையை பின்பற்றுகிறது.

### 2.5 குறிப்பிடத்தக்க கணக்கியல் தீர்ப்புக்கள், மதிப்பீடுகள், அனுமானங்கள்

அதிகாரசபையின் நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிப்பதற்கு, அறிக்கையிடப்பட்ட திகதியில் வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புகள் மற்றும் தற்செயலான பொறுப்புகளை வெளிப்படுத்துதல் ஆகியவற்றின் அறிக்கையின் அளவுகளை பாதிக்கும் தீர்ப்புகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்களை நிர்வாகம் செய்ய வேண்டும். எவ்வாறாயினும், இந்த அனுமானங்கள் மற்றும் மதிப்பீடுகள் பற்றிய நிச்சயமற்ற தன்மை எதிர்காலத்தில் பாதிக்கப்படும் சொத்து அல்லது பொறுப்பின் முற்கொணர் தொகைக்கு பொருள் சரிசெய்தல் தேவைப்படும் விளைவுகளை ஏற்படுத்தலாம். இந்த காரணிகளில் தீர்ப்பு, மதிப்பீடு, அனுமானங்கள் ஆகியவை அடங்கும்.

#### தீர்ப்புகள்

அதிகாரசபையின் கணக்கியல் கொள்கைகளைப் பயன்படுத்தும் செயல்பாட்டில், நிதிநிலை அறிக்கைகளில் அங்கீகரிக்கப்பட்ட

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

i. பொது திறைசேரி /அரசாங்கத்திலிருந்து மாற்றப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் ஆகிய சொத்துக்கள் பெறப்பட்ட திகதியின் சீர்மதிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளன. (மதிப்பீடு 2003 இல் செய்யப்பட்டது.) IFRS மாற்றத்திற்காக, குறிப்பிடப்பட்ட சொத்துக்களின் மறுமதிப்பீடு செய்யப்பட்ட தொகைகள் 1 ஜனவரி 2011 இல் செலவாகக் கருதப்பட்டன.

ii. கொவிட்-19 நோய்த்தொற்றால் எழுந்த சிக்கல் காரணமாக மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் சொத்தின் மீள் மதிப்பீட்டை முடிக்க அதிகாரசபை தவறிவிட்டது.

iii. இந்த ஆண்டில் வகைப்படுத்தல் மாற்றங்கள் கண்டறியப்பட்டு, அதற்கேற்ப மறுவகைப்படுத்தல் செய்யப்பட்டுள்ளது, இது LKAS 1 குறிப்பு எண் 30,31 இல் சித்தரிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மறுவகைப்படுத்தல் இலாபத்தை பாதிக்கவில்லை.

iv. இரத்மலானை விமான நிலையத்தை சிவில் பாவனைக்காக அபிவிருத்தி செய்ய வேண்டியதன் அவசியத்தை கருத்திற் கொண்டு, SLAF Y-12 Hangars, MA-60 Hanger, B-200 Hangar மற்றும் இரத்மலானை தரிப்பிட ஏப்ரன்களை தற்போதைய வளாகத்திலிருந்து வடக்கு வளாகத்திற்கு இடமாற்றுவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. CAASL மூலம் ரூ. 759,800,000/- இடமாற்றச் செலவாக விமானப் படைக்கு உபரியாக உள்ளது. இந்தத் தொகை 10.02.2020 முதல் கட்டடங்களின் கீழ் மூலதனமாக்கப்பட்டது.

v. 2019 ஜனவரி 29 எடுக்கப்பட்ட அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம், பெப்ரவரி 5 மற்றும் ஏப்ரல் 2 ஆம் திகதிகளில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் திருத்தப்பட்டு, உள்நாட்டு நிதியில் பிராந்திய வர்த்தக விமானங்களை இயக்குவதற்காக பலாலி விமான நிலையத்தை அபிவிருத்தி செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளது. CAASL மற்றும் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி நிதியம் (SLTDA) முறையே 900 மில்லியன் மற்றும் ரூ.1,050 மில்லியன் பங்களித்தன.

vi. 2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை சட்டத்தின் பிரிவு 9 இன்படி போக்குவரத்து மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து கௌரவ அமைச்சர், மட்டக்களப்பை இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபைக்கு மாற்றுவதற்கும் பொறுப்பேற்றுக் கொள்வதற்கும் 2016 ஜூலை 1 அன்று 1973/78 வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டார். அதன்படி, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் நிலம் மற்றும் கட்டடங்கள் CAASL சொத்துப் பதிவேட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்டன. இந்த சொத்துக்கள் செயல்படுவதற்காக வரையறு. இலங்கை விமான நிலையம் மற்றும் வான்பயண சேவைகள் நிறுவனத்துக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளன.

vii. மட்டக்களப்பு விமான நிலையத்தின் ஓடுபாதையை போக்குவரத்து அமைச்சு 2016 இல் ரூ. 482,779,024/- செலவில் அபிவிருத்தி செய்தது. போக்குவரத்து அமைச்சின் செயலாளர் 16.11.2021 திகதியிட்ட கடிதம் எண்: MT/04/03/01-1 மூலம் CAASL சொத்துப் பதிவேட்டில் மதிப்பை எடுத்துச் செல்லுமாறு தெரிவித்தார். இது நிதிநிலை அறிக்கைகள் - 2022 இல் எடுத்துக்கொள்ளப்படும்.

viii. சர்வதேச விமான நிலையங்களில் CAASL ஆய்வாளர்கள் 24-7 கண்காணிப்புக்களை மேற்கொள்ள வேண்டும். எனவே வாகன ஓட்டுநர்கள் 24 மணி நேரமும் தயார் நிலையில் இருக்க வேண்டும், மேலும் சில ஓட்டுநர்கள் ஏற்படக்கூடிய அவசரநிலைகளுக்கு காத்திருப்பில் இருப்பார்கள். ஓட்டுநர்களுக்கு வசதியாக ரூ. 4,315,018/- இற்கு ஓய்வறை வசதிக்காக இரண்டு கொள்கலன் அலகுகளை CAASL வாங்கியுள்ளது. நிலையான சொத்துகள் பதிவேட்டில் புதிய வகை நிலையான சொத்துக்களாக 'கொள்கலன் கட்டமைப்புக்கள்' என இவை அறிக்கையிடப்பட்டுள்ளன.

ix. 2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில், போக்குவரத்து மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர், 21.12.2017 திகதியிட்ட அதிவிசேட வர்த்தமானி இலக்கம்: 2050/38 மூலம் ஒரு உத்தரவை பிறப்பித்துள்ளார். இலங்கையின் சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைக்கு, இரண்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் விமான நிலையங்கள் மற்றும் வானூர்தி வசதிகள் மற்றும் மேற்கூறிய சட்டத்தின் மூன்றாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிலம் ஆகியவற்றை உடன் அமுலுக்கு வரும் வகையில் மாற்றுவதாக அதில் கூறப்பட்டுள்ளது.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

## விமானத்தளங்கள் (இரண்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது)

- கட்டுநாயக்க விமான நிலையம்
- இரத்மலானை விமான நிலையம்

## வானூர்தி வசதிகள் மற்றும் அதற்கான நிலம் (மூன்றாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது)

- இரத்மலானை கந்தவள வீதியில் உள்ள சிவில் விமானப் போக்குவரத்து பயிற்சி நிலையம், அதிலுள்ள கட்டடம் மற்றும் கட்டமைப்புகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய நிலம்.
- இரத்மலானை அத்திடியவில் உள்ள வானூர்தி தொடர்பாடல் ஒலிபரப்பு நிலையம், அதிலுள்ள கட்டடங்கள், கட்டமைப்புகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய நிலம்.
- கம்பஹா மாதம்பெல்லவில் அமைந்துள்ள பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கான வானொலி ஊடுருவல் உதவி, அதன் கட்டடங்கள், கட்டமைப்புகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய நிலம்.
- கம்பஹாவின் கப்புங்கொட பமுனுகமவில் அமைந்துள்ள பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய ஓடுபாதைக்கான வானொலி ஊடுருவல் உதவி, அதிலுள்ள கட்டடங்கள், கட்டமைப்புகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய நிலம்
- பிதுருதலாகல மலையில் அமைந்துள்ள ரேடார் நிலையம், அதிலுள்ள கட்டிடங்கள், கட்டமைப்புகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய நிலம்.
- நுவரெலியா மாவட்டம் பிதுருதலாகவில் உள்ள காணியொன்றில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன விமான ஊழியர்களுக்கான விடுமுறை பங்களாக்கள், கட்டமைப்புகள் அதனுடன் தொடர்புடையவை.
- அனுராதபுரம் மாவட்ட நுவரகம்பலாத்த கிழக்குப் பிரதேச செயலகப் பிரிவின், அநுராதபுரம் புதிய நகரம், இலக்கம் II-கிராமசேவகப் பிரிவின், அநுராதபுரம் புதிய நகரத்தில் அமைந்துள்ள, 0.125 ஹெக்டேயர் பரப்பிலான காணி இல. 976.

2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைச் சட்டத்தின்படி, கணக்கெடுப்புத் திட்டங்கள் மற்றும் மதிப்பீடுகள் இறுதி செய்யப்பட்டு, சொத்துக்கள் மாற்றப்பட்டவுடன், மேற்கூறிய சொத்துக்களின் மதிப்பு CAASL சொத்துப் பதிவேட்டில் எடுத்துக்கொள்ளப்படும்.

| சொத்துக்களின் வகுதி | 01/01/2021 அன்று மீதி ரூ. | சேர்வு/ இடமாற்றம் ரூ. | வெளியகற்றல் ரூ. | 31/12/2021 அன்று மீதி ரூ. | 31/12/2020 அன்று மீதி ரூ. |
|---|---|---|---|---|---|
| காணி | 575,826,244 | - | - | **575,826,244** | 575,826,244 |
| கட்டடம் | 1,803,537,578 | 36,918,853 | - | **1,840,456,431** | 1,803,537,578 |
| கொள்கலன் கட்டமைப்புகள் | - | 4,315,018 | - | **4,315,018** | - |
| வாகனங்கள் | 132,502,263 | - | - | **132,502,263** | 132,502,263 |
| பொறி மற்றும் இயந்திரம் | 121,437,918 | 19,257,152 | (1,098,870) | **139,596,199** | 121,437,918 |
| தளபாடங்களும் பொருத்திகளும் | 59,140,368 | 2,074,429 | - | **61,214,797** | 59,140,368 |
| பிற நிலையான சொத்துக்கள் | 625,254 | - | - | **625,254** | 625,254 |
| | **2,693,069,625** | **62,565,451** | **(1,098,870)** | **2,754,536,206** | **2,693,069,625** |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

| தேய்மானம் | 01/01/2021 அன்று மீதி ரூ. | ஆண்டுக்கான கட்டணம் ரூ. | வெளியகற்றல் ரூ. | 31/12/2021 அன்று மீதி ரூ. | 31/12/2020 அன்று மீதி ரூ. |
|---|---|---|---|---|---|
| கட்டடம் | 163,912,877 | 108,897,618 | - | **272,810,496** | 163,912,877 |
| கொள்கலன் கட்டமைப்புகள் | - | 20,216 | - | **20,216** | |
| வாகனங்கள் | 100,924,211 | 5,385,783 | - | **106,309,994** | 100,924,211 |
| பொறி மற்றும் இயந்திரம் | 82,064,118 | 16,360,757 | (751,835) | **97,673,040** | 82,064,118 |
| தளபாடங்களும் பொருத்திகளும் | 36,144,325 | 9,151,735 | - | **45,296,060** | 36,144,325 |
| பிற நிலையான சொத்துக்கள் | 493,593 | 47,254 | - | **540,847** | 493,593 |
| | 383,539,125 | 139,863,363 | (751,835) | **522,650,653** | 383,539,125 |
| எழுதப்பட்ட பெறுமதி | 2,309,530,500 | - | (751,835) | **2,231,885,553** | 2,309,530,500 |

## 30. அருவச் சொத்துக்கள்

| சொத்துக்களின் வகுதி | 01/01/2021 அன்று மீதி ரூ. | சேர்வு/ இடமாற்றம் ரூ. | வெளியகற்றல் ரூ. | 31/12/2021 அன்று மீதி ரூ. | 31/12/2020 அன்று மீதி ரூ. |
|---|---|---|---|---|---|
| IT மென்பொருள் | 18,579,467 | 31,753,401 | - | **50,332,868** | 18,579,467 |

| தேய்மானம் | 01/01/2021 அன்று மீதி ரூ. | ஆண்டுக்கான கட்டணம் ரூ. | வெளியகற்றல் ரூ. | 31/12/2021 அன்று மீதி ரூ. | 31/12/2020 அன்று மீதி ரூ. |
|---|---|---|---|---|---|
| IT மென்பொருள் | 14,498,142 | 8,590,685 | - | **23,088,827** | 14,498,142 |
| எழுதப்பட்ட பெறுமதி | 4,081,325 | - | - | **27,244,041** | 4,081,325 |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

## 31. பயன்படுத்தும் உரிமைச் சொத்து – வீரவில காணி

2008 ஜனவரி முதல் 30 வருட குத்தகை ஒப்பந்தத்தின் கீழ் வீரவில சுற்றுலா பங்களாவின் நிலத்தை அதிகாரசபை அரசாங்கத்திடமிருந்து பெற்றுள்ளது. அதிகாரசபையானது 31.12.2019 வரையிலான குத்தகைக் கொடுப்பனவுக்கான இலாப நட்டக் கணக்கை அறிக்கையிட்டுள்ளது. இலங்கையின் பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம், LKAS 17 ஐ மீறும் குத்தகைகளுக்கு SLFRS 16 ஐ வழங்கியுள்ளது. எனவே, சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையானது 2020 ஜனவரி 1 ஆம் திகதி முதல் SLFRS 16 இன் பத்திகள் C7–C13 தரநிலையை கடந்தகாலத்தை உள்ளடக்கும் முறையில் ஏற்றுக்கொண்டது.

அங்கீகரிக்கப்பட்ட பயன்படுத்தும் உரிமைச் சொத்துகளின் முற்கொணர் தொகை அளவுகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| | 2021<br>ரூ. | 2020<br>ரூ. |
|---|---|---|
| 2021 ஜனவரி 1 நிலவரப்படி | **357,573** | 378,607 |
| சேர்ப்பனவுகள் | **-** | - |
| தேய்மானச் செலவு | **(21,034)** | (21,034) |
| 2020 டிசம்பர் 31 நிலவரப்படி | **336,539** | **357,573** |

## 32. மூலதன புத்துருவாகும் வேலை

i. தேசிய வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்ட புத்தளம் மற்றும் பண்டாரவளை உள்நாட்டு விமான நிலையங்களை அபிவிருத்தி செய்வதற்கான கணக்கெடுப்புத் திட்டங்களுக்கு CAASL பணம் செலவிட்டுள்ளது. இந்த உள்நாட்டு விமான நிலையங்களின் வளர்ச்சி இறுதி செய்யப்படாததால், கட்டுமானப் பணிகள் தொடங்கப்படவில்லை.

ii. CAASL ஆல் 31,12,2019 வரை ரூ. 446,509,332/- செலுத்தப்பட்டது, நிதிநிலை அறிக்கைகளில் 'புத்துருவாகும் வேலை - மூலதனம்' என்பதன் கீழ் கூறப்பட்டுள்ளதோடு, பலாலி என்பதன் கீழ் முற்பணமாக 'ரூ. 170,621,991/- என குறிப்பிடப்பட்டுள்ளது- கட்டுமான நிறுவனம் இறுதி பற்றுச்சீட்டுக்களைச் சமர்ப்பிக்காததால், சொத்து இன்னும் மூலதனமாக்கப்படவில்லை.

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் மூன்று கட்டங்களாக நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது. இதுவரை கட்டம் ஒன்று கட்டிமுடிக்கப்பட்டுள்ளது. மேலும் சில சிறிய மேம்பாடுகள் கட்டம் 1 இன்கீழ் மேற்கொள்ளப்படவுள்ளதால் நிறைவுச் சான்றிதழைப் பெற முடியவில்லை. மேலும் அரசாங்கத்தின் தீர்மானத்தின்படி, கொவிட்-19 காரணமாக யாழ்ப்பாண சர்வதேச விமான நிலைய நிர்மாண நடவடிக்கைகள் மார்ச் 2020 முதல் இடைநிறுத்தப்பட்டுள்ளன. பணிகளை மீண்டும் தொடங்க அரசாங்கம் தீர்மானித்தவுடன், கட்டுமாணப் பணிகள் தொடரும்.

iii. தலைமை அலுவலக வளாகத்தில் வாகன தரிப்பிடம் கட்டுவதற்காக பகுதியளவில் செலுத்தப்பட்ட ரூ.16,667,742/- கட்டுமானங்கள் - தலைமை அலுவலகம் என்ற பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

iv. HRIS மென்பொருள் மற்றும் உரிமத்துக்காக மேற்கொள்ளப்பட்ட பகுதியளவான கட்டணங்கள் தகவல்தொடர்பு அபிவிருத்தி பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

| | 2021<br>ரூ. | 2020<br>ரூ. |
|---|---|---|
| உள்நாட்டு விமான நிலையம் - பண்டாரவளை | **677,000** | 677,000 |
| உள்நாட்டு விமான நிலையம் - புத்தளம் | **315,000** | 315,000 |
| யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் - பலாலி | **446,509,332** | 446,509,332 |
| கட்டுமானங்கள் - தலைமை அலுவலகம் | **16,667,742** | - |
| தகவல்தொலைநுட்ப அபிவிருத்திகள் | **5,453,124** | 17,292,744 |
| | **469,622,199** | **464,794,076** |

## 33. வியாபார வருமதிகள்

| | 2021<br>ரூ. | 2020<br>ரூ. |
|---|---|---|
| OSS மற்றும் விமானமேறல் சேவை கட்டண வருமான வருமதிகள் | **125,715,503** | 31,576,152 |
| ஏனைய கடன்பட்டோர் | **512,775** | 687,375,903 |
| | **126,228,279** | **718,952,055** |

## 34. ஊழியர் கடன்கள்

| | 2021<br>ரூ. | 2020<br>ரூ. |
|---|---|---|
| ஊழியர் கடன்கள் | **124,903,221** | 140,306,603 |
| பிற்போடப்பட்ட ஊழியர் கிரயம் (கடன்) | **(45,730,488)** | (49,619,751) |
| | **79,172,733** | **90,686,852** |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

## 35. நிதிச் சொத்துக்கள்

| | 2021<br>ரூ. | 2020<br>ரூ. |
|---|---|---|
| திறைசேரி உண்டியல்கள் | **1,404,628,796** | 1,232,748,534 |
| கழிக்க: பிற்போடப்பட்ட வட்டி வருமானம் | **(10,291,259)** | (14,618,566) |
| | **1,394,337,537** | **1,218,129,968** |

ஓய்வூதிய நன்மைக் கடப்பாடாக (31.12.2020 நிலவரப்படி மீதி) பராமரிக்கப்படும் ரூ.50,084,994/- இற்கான தனி முதலீடு நிதிச் சொத்துக்களில் சேர்க்கப்பட்டுள்ளது.

## 36. முற்பணம், முற்கொடுப்பனவு மற்றும் பிற வருமதிகள்

| | 2021<br>ரூ. | 2020<br>ரூ. |
|---|---|---|
| முற்பணம் | **176,842,956** | 173,858,816 |
| முற்கொடுப்பனவு | **12,598,863** | 8,103,104 |
| பெறுமதி சேர் வரி வருமதி | **251,139,837** | 241,172,350 |
| வட்டி வருமானம் வருமதி | **71,205,328** | 41,169,645 |
| முற்செலுத்திய பணியாளர் கிரயம் | **45,730,488** | 49,619,751 |
| | **557,517,473** | **513,923,666** |

2015 ஆம் ஆண்டு முதல் அதிகாரசபையின் விலைப்பட்டியல்களை உள்நாட்டு வருமானவரித் திணைக்களம் கணக்காய்வு செய்யத் தொடங்கவில்லை. 2015- 2019 ஆம் ஆண்டுக்கான சேர் பெறுமதி வரி வருமதிகளின் மதிப்பு VAT வருமதிகளில் 90% இற்கும் அதிகமாகப் பிரதிபலிக்கிறது. அதிகாரசபை பல கலந்துரையாடல்களை நடத்தி, நிலுவையிலுள்ள பணத்தை திரும்பப்பெற 2021 இல் எழுத்துபூர்வ கோரிக்கைகள், நினைவூட்டல்கள் அனுப்பப்பட்டன. ஆனால் கொவிட்-19 சிக்கல் காரணமாக IRD ஆல் பணத்தைத் திரும்பப் பெறுவது தாமதமானது. மேலும் IRD அதிகாரிகள் விரைவில் பணத்தை திரும்பச் செலுத்த வாய்மொழியாக ஒப்புக்கொண்டனர். RAMIS அமைப்பு சிவில் விமானப் போக்குவரத்து மீளப்பெறல்களை செயலாக்கம் எனக் காட்டுகிறது.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

## 37. காசும் காசுக்கு சமமானவையும்

| | 2021<br>ரூ. | 2020<br>ரூ. |
|---|---|---|
| **வங்கியிலுள்ள காசு** | | |
| நடைமுறைக் கணக்கு 000 202 6666 | **52,175,812** | 5,354,213 |
| நடைமுறைக் கணக்கு 000 202 6678 | **171,045,728** | 370,637,638 |
| நடைமுறைக் கணக்கு 324 100 190 023 731 | **261,675,259** | 34,733,513 |
| அழைப்பு வைப்புக்கள் | **1,262,700,000** | 1,246,950,000 |
| சில்லறைக் காசு முற்பணம் | **639,950** | 657,065 |
| **காசுப்பாய்ச்சல் அறிக்கைக்கான மொத்த காசும் காசுக்கு சமமானவையும்** | **1,748,236,749** | **1,658,332,429** |

## 38. பெறப்பட்ட அரசாங்க மானியங்கள்

i. 2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க சிவில் விமான போக்குவரத்து அதிகாரசபை சட்டத்தின் பிரிவு 9 இன்படி CAASL இற்கு மாற்றப்பட்ட மட்டக்களப்பு விமான நிலைய கட்டடங்கள் மற்றும் காணிகளின் பெறுமதி.

ii. 65-3651 மற்றும் 65-3653 ஆகிய இரண்டு வாகனங்களின் பெறுமதி ICAO திட்டத்தில் இருந்து பெறப்பட்டது.

iii. இலங்கைக்கான பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தித் திட்டத்திற்கான ஜப்பானின் மானிய உதவியிலிருந்து வெளிவிவகாரத் திணைக்களத்தின் ஊடாக நன்கொடையாகப் பெறப்பட்ட 3 அலகுகள் மது சோதனைக்கான சுவாச ஆய்வு இயந்திரங்களின் பெறுமதி.

| | |
|---|---|
| 01.01.2020 நிலவரப்படி அரசாங்க மானியங்கள் | 567,094,016 |
| கூட்டுக: 2020 ஆம் ஆண்டில் கிடைத்த மானியங்கள் | - |
| கழிக்க: 2020 ஆம் ஆண்டுக்கான கடன் தீர்ப்பனவு | (4,275,899) |
| **31.12.2020 நிலவரப்படி அரசாங்க மானியங்கள்** | 562,818,117 |
| கூட்டுக: 2021 ஆம் ஆண்டில் கிடைத்த மானியங்கள் | - |
| கழிக்க: 2021 ஆம் ஆண்டுக்கான கடன் தீர்ப்பனவு | (4,219,362) |
| **31.12.2021 நிலவரப்படி அரசாங்க மானியங்கள்** | 558,598,755 |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

| | 2021<br>ரூ. | 2020<br>ரூ. |
|---|---|---|
| காணி | 522,374,500 | 522,374,500 |
| கட்டடம் | 31,101,398 | 33,403,094 |
| பொறி, இயந்திரம், உபகரணங்கள் | 660,498 | 1,172,201 |
| தளபாடங்களும் பொருத்திகளும் | 8,663,608 | 10,126,108 |
| ஏனைய நிலையான சொத்துக்கள் | 18,113 | 18,113 |
| மொத்தம் | 562,818,117 | 567,094,016 |
| ஆண்டுக்கான கடன் தீர்ப்பனவு | (4,219,362) | (4,275,899) |
| **ஆண்டு இறுதியில் மீதி** | **558,598,755** | **562,818,117** |

## 39. கைக்கொள் இலாபம்

| | 2021<br>ரூ. | 2020<br>ரூ. |
|---|---|---|
| ஆண்டு தொடக்க நிலவரப்படி | 3,762,707,811 | 3,545,739,523 |
| நடப்பு ஆண்டு இலாபம் | 329,898,389 | 237,151,840 |
| முந்தைய ஆண்டு சீராக்கம் - பெறுமதி சேர் வரி | - | - |
| முந்தைய ஆண்டு சீராக்கம் - பணிக்கொடை | - | - |
| பிற விரிவான வருமானம் / (செலவுகள்) | (12,908,854) | (20,183,552) |
| ஒன்றித்த நிதியத்துக்கான இடமாற்றங்கள் | (50,000,000) | - |
| **ஆண்டு இறுதி நிலவரப்படி** | **4,029,697,346** | **3,762,707,811** |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

## 40. பிற்போடப்பட்ட வரி பொறுப்பு

| | நிதி நிலமைக் கூற்று | | விரிவான வருமானக் கூற்று | |
|---|---|---|---|---|
| | 2021 | 2020 | 2021 | 2020 |
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| **பிற்போடப்பட்ட வரி பொறுப்பு :** | | | | |
| வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டம் | **16,850,486** | 14,846,280 | **2,004,206** | 1,653,645 |
| துரிதப்படுத்தப்பட்ட வரி தேய்மானம் | **20,414,618** | 20,414,618 | **-** | - |
| | **37,265,104** | 35,260,898 | **2,004,206** | 1,653,645 |
| **பிற்போடப்பட்ட வரி சொத்து:** | | | | |
| துரிதப்படுத்தப்பட்ட வரி தேய்மானம் | **15,596,177** | 10,377,440 | **5,218,737** | 5,159,197 |
| வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டம் | **-** | - | **-** | - |
| | **15,596.177** | 10,377,440 | **5,218,737** | 5,159,197 |
| **பிற விரிவான வருமானம்** | | | | |
| பிற்போடப்பட்ட வருமான வரிக கட்டணம் (குறிப்பு இல.28) | **-** | - | **(3,214,531)** | (3,505,552) |

தற்போதைய வரிப் பொறுப்புகளுக்கு எதிராக தற்போதைய வரிச் சொத்தை ஈடுகட்ட சட்டப்பூர்வ, செயல்படுத்தக்கூடிய உரிமை இருக்கும்போது மற்றும் ஒத்திவைக்கப்பட்ட வருமான வரிகள் அதே நிதி அதிகாரத்துடன் தொடர்புடையதாக இருக்கும்போது ஒத்திவைக்கப்பட்ட வருமான வரி சொத்து மற்றும் பொறுப்புகள் எதிரீடு செய்யப்படும். தேறிய பிற்போடப்பட்ட வரித் தொகை பின்வருமாறு,

| | 2021 | 2020 |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| பிற்போடப்பட்ட வரி சொத்து | **15,596,177** | 10,377,440 |
| பிற்போடப்பட்ட வரி பொறுப்பு | **(37,265,104)** | (35,260,898) |
| **தேறிய பிற்போடப்பட்ட சொத்து மற்றும் பொறுப்பு** | **(21,668,927)** | **(24,883,458)** |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

## 41. குத்தகைப் பொறுப்புக்கள்

| | 2021<br>ரூ. | 2020<br>ரூ. |
|---|---|---|
| ஜனவரி 1 நிலவரப்படி | **353,339** | 378,607 |
| சேர்ப்பனவு | **-** | - |
| வரி திரட்டுதல் | **2,946** | 1,516 |
| கொடுப்பனவு | **(26,784)** | (26,784) |
| **டிசம்பர் 31 நிலவரப்படி** | **329,501** | **353,339** |

## 42. ஏற்பாடுகளும் பிற பொறுப்புக்களும்

| | 2021<br>ரூ. | 2020<br>ரூ. |
|---|---|---|
| ஊழியர் நலன்புரி நிதியம் | **135,269** | 128,487 |
| வங்கி உத்தரவாத வைப்புக்கள் (விமானமேறல் வரி) | **11,132,553** | 43,945,368 |
| விபத்து விசாரணை நிதியம் | **50,000,000** | 50,000,000 |
| | **61,267,822** | **94,073,855** |

## 43. ஓய்வூதிய நன்மைக் கடப்பாடுகள்

நிதி நிலமை அறிக்கையில் அங்கீகரிக்கப்பட்ட பொறுப்பு இயக்கம் வருமாறு:

| | 2021<br>ரூ. | 2020<br>ரூ. |
|---|---|---|
| ஆண்டின் தொடக்க நிலவரப்படி | **50,084,994** | 40,461,111 |
| நடைமுறை சேவைக் கிரயம் | **6,278,000** | 4,826,489 |
| வட்டிக் கிரயம் | **2,072,858** | 2,063,698 |
| ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் | **(5,159,109)** | (17,449,856) |
| அனுமான கால மாற்றத்திலிருந்து எழும் (ஆதாயம்)/இழப்பு | **12,908,854** | 20,183,552 |
| **ஆண்டு இறுதி நிலவரப்படி** | **66,185,597** | **50,084,994** |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

திட்டமிடப்பட்ட அலகுக் கடன் முறையைப் பயன்படுத்தி ஊழியர்களின் நன்மைகளின் விலையை நிர்ணயிக்கும் கொள்கை அனுமானங்கள் ஆண்டு இறுதியில் வரையறுக்கப்பட்ட பலன் கடமைக்கான பொறுப்பைக் கணக்கிடுவதற்குப் பயன்படுத்தப்படுகின்றன:

| | 2021 | 2020 |
|---|---|---|
| தள்ளுபடி விகிதம் | **4.5%** | 6% |
| எதிர்கால சம்பள உயர்வு விகிதம் | **1%** | 1% |
| வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு அதிகரிப்பு விகிதம் | **0%** | 0% |
| ஊழியர் வருவாய் விகிதம் | **0%** | 0% |
| ஓய்வூதிய வயது | **60 years** | 60 years |

வரையறுக்கப்பட்ட நன்மைக் கடப்பாட்டிற்கான பொறுப்பு வெளிப்புறமாக நிதியளிக்கப்படவில்லை, ஒவ்வொரு ஆண்டு முடிவிலும் ஓய்வூதியப் நன்மைக் கடப்பாட்டின் மதிப்புக்கு ஒரு தனி முதலீடு பராமரிக்கப்படுகிறது.

## 44. வியாபார சென்மதிகள்

i. 2019 ஒக்டோபர் 11 எடுக்கப்பட்ட முடிவின்படி, இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை (CAASL) இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபைக்கு (SLTDA) அனுப்பும் விமானமேறல் வரி அறவீட்டுத் தொகையான 1,050/- மில்லியன் ரூபாயை, யாழ்ப்பாணம் (பலாலி) சர்வதேச விமான நிலையத்தின் அபிவிருத்திக்காக பிராந்திய வர்த்தக விமானங்களை இயக்குவதற்கு பயன்படுத்தப்படும். ரூ. 1,050,000/- தக்கவைக்கப்பட்டுள்ளது 'வைப்பு- யாழ்ப்பாண சர்வதேச விமான நிலைய அபிவிருத்தி – SLTDA' இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

| | 2021<br>ரூ. | 2020<br>ரூ. |
|---|---|---|
| வைப்பு ஆய்வு கட்டணங்கள் மற்றும் செயற்பாடுகள் | **8,089,850** | 7,725,019 |
| AASL, சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை, அரச திறைசேரிக்கான சென்மதிகள் | **595,416,498** | 1,228,944,925 |
| வைப்பு – யாழ்ப்பாண சர்வதேச விமான நிலைய அபிவிருத்தி – SLTDA | **1,050,000,000** | 1,050,000,000 |
| பிற கடனாளிகள் | **1,048,890** | 23,284,650 |
| | **1,654,555,238** | **2,309,954,594** |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

## 45. பிற சென்மதிகள்

| | 2021<br>ரூ. | 2020<br>ரூ. |
|---|---|---|
| அட்டுறு செலவுகள் | | |
| – ஊழியர் செலவுகள் | | |
| ஊக்கக் கொடுப்பனவுள் | **13,251,652** | 189,438 |
| ஊழியர் சேமலாப நிதி | **7,542,534** | 5,906,772 |
| விடுப்புக்கீடான பணம் | **4,573,456** | 9,761,991 |
| வெகுமதி | **4,713,444** | 9,560,112 |
| ஊழியர் நம்பிக்கை நிதி | **1,110,626** | 817,578 |
| நலன்புரி கொடுப்பனவு | **35,079** | 581,986 |
| PAYE | **-** | 201,123 |
| சம்பளமும் கூலியும் | **81,750** | 30,000 |
| பயிற்சி | **19,000** | - |
| – நிர்வாகம் மற்றும் பிற செலவுகள் | | |
| – ICAO இற்கான சந்தா | **25,059,856** | 16,343,796 |
| வெளிவாரி தொழில்நுட்ப உதவி | **2,264,000** | 2,726,000 |
| தொலைத்தொடர்பு | **834,856** | 777,015 |
| அச்சு | **3,900,000** | 3,431,994 |
| கணக்காய்வுக் கட்டணம் | **1,100,000** | 3,718,000 |
| மின்சாரம் | **1,542,958** | 1,437,564 |
| பாதுகாப்பு | **879,235** | 91,020 |
| துப்பரவு | **833,530** | 14,612 |
| கட்டட பராமரிப்பு - பிற | **1,915,073** | 3,202,487 |
| வாடகை கட்டணம் | **1,532,500** | - |
| ஏனைய செலவுகள் | **3,554,934** | 3,063.751 |
| | **74,744,483** | **61,855,239** |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

## 46. வருமான வரிப் பொறுப்புக்கள்

| | 2021<br>ரூ. | 2020<br>ரூ. |
|---|---|---|
| ஆண்டு தொடக்கத்தில் மீதி | **119,149,228** | 210,822,185 |
| மீளாண்டுக்கான ஏற்பாடு | **93,916,100** | 73,034,020 |
| மீளாண்டில் செலுத்தியவை | **(39,772,423)** | (164,706,976) |
| **ஆண்டு இறுதியில் மீதி** | **173,292,905** | **119,149,229** |

## 47. ஐந்தொகை திகதிக்குப் பின்னரான நிகழ்வுகள்

நிதி நிலை அறிக்கைக்குப் பிறகு, நிதிநிலை அறிக்கைகளில் தேவையான சரிசெய்தல் அல்லது வெளிப்படுத்துதல் போன்ற எந்த முக்கிய நிகழ்வுகளும் இடம்பெறவில்லை.

# கணக்காய்வாளர் அறிக்கை - 2021

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. } AAV/A/CAASL/01/21/14 ඔබේ අංකය / உமது இல. / Your No. } දිනය / திகதி / Date } 27 June 2022

தலைவர்
இலங்கை சிவில் போக்குவரத்து அதிகாரசபை

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் 2021 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான நிதியியல் கூற்றுக்கள் மற்றும் பிற சட்ட, ஒழுங்குமுறைத் தேவைகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டின் இலக்கம் 19 தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆவது வாசகத்துக்கு அமைய கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை.

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் (அதிகாரசபை) 2021 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்று, அத்திகதியன்று முடிவடையும் ஆண்டுக்கான நிதி நிலைமைக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமையாண்மை மாற்றக் கூற்று மற்றும் அத்திகதியன்று முடிவடையும் ஆண்டுக்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புகள் உள்ளடங்கலான முக்கிய கணக்கீட்டு தராதரங்களை உள்ளடங்கிய 2021 டிசம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள், இலங்கை சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது கட்டளைக்கமைய கணக்காய்விற்குட்படுத்தப்பட்டன. அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

2021 டிசம்பர் 31 ஆம் திகதி நிதி நிலைமை மற்றும் அத்தினத்தன்று முடிவடையும் வருடத்தின் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சலானது இலங்கை அரசதுறைக் கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப, அதிகாரசபையின் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையைப் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 | +94 11 2 88 72 23 | ag@auditorgeneral.gov.lk | www.naosl.gov.lk

# கணக்காய்வாளர் அறிக்கை - 2021

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

### 1.2 அபிப்பிராயத்துக்கான அடிப்படை

இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கிணங்க (SLAuSs) நான் எனது கணக்காய்வினை மேற்கொண்டுள்ளேன். இந்த கணக்காய்வு நியமங்களின் கீழ், எனது பொறுப்புக்களாவன, எனது அறிக்கையின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பிலான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் எனும் பகுதியில் மேலும் விளக்கப்பட்டுள்ளன. எனது கணக்காய்வுக்குத் தகுதி பெறுதல் அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றினை வழங்குவதனை நோக்காகக் கொண்டு, பெறப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவாகவும் பொருத்தமானதாகவும் உள்ளன என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 அதிகாரசபையின் 2021 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஏனைய தகவல்

இக்கணக்காய்வு அறிக்கைத் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக்கொண்ட அதிகாரசபையின் 2021 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள எனினும், நிதிக் கூற்றுக்கள் மற்றும் அது தொடர்பான எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள் ஏனைய தகவல்களெனப் பொருள்படும். இந்த ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவமே பொறுப்பேற்க வேண்டும்.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது அபிப்பிராயங்கள் ஏனைய தகவல்களை உள்ளடக்காது என்பதுடன் நான் அது தொடர்பாக எந்த வகையிலான முடிவுகளையும் உறுதிப்படுத்தி கருத்து வெளியிடவில்லை.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது கணக்காய்வு தொடர்பில், எனது பொறுப்பானது மேலே அடையாளங் காணப்பட்ட ஏனைய தகவல்களை வாசிப்பதுடன் அவ்வாறு செய்யும்போது, நிதிக் கூற்றுக்களுடன் ஏனைய தகவல்களின் தோற்றம் பொருந்தவில்லையா, அல்லது கூற்றுக்கள் பிழையாக வெளியிடப்பட்டுள்ளனவா என்பதனை எனது கணக்காய்வு அறிவினைக் கொண்டு ஆராய்வதாகும்.

இந்தக் கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக்கொண்ட ஏனைய தகவல்களின்படி மற்றும் என்னால் மேற்கொள்ளப்பட்ட பணிகளை அடிப்படையாகக் கொண்டு, இந்த ஏனைய தகவல்கள் பொருத்தமற்றதாக காட்டப்பட்டுள்ளதாக நான் தீர்மானித்தால், அவ்விடயங்களை நான் அறிக்கையிட வேண்டும் அல்லது இது தொடர்பில் நான் அறிக்கையிடுவதற்கு எதுவுமில்லை என்பதனை குறிப்பிட வேண்டும்.

# கணக்காய்வாளர் அறிக்கை - 2021

தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

### 1.4 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவம் மற்றும் நிருவகிக்கும் தரப்பினரது பொறுப்புக்கள்

இந்நிதிக் கூற்றுக்களை இலங்கை அரசாங்க கணக்கீட்டுத் தராதரங்களுக்கேற்ப தயாரித்தல் மற்றும் நியாயமானதாகச் சமர்ப்பித்தலும் மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக் கூடிய பிழையான அறிக்கை வெளிப்பாடுகளின்றி நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தினது பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது, நிறுவனத்தைத் தொடர்ந்தும் நடாத்திச் செல்லும் இயலுமையைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தினது பொறுப்பாவதுடன், முகாமைத்துவமானது நிறுவனத்தை முடிவுறுத்துவதற்கு எண்ணியிருப்பின் அல்லது வேறு மாற்றுவழி இல்லாதபோது, செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருப்பினும் தவிர, இடையறாது நிலைத்திருத்தல் அடிப்படையில் கணக்குகளை மேற்கொள்ளல் மற்றும் நிறுவனத்தின் இடையறாது நிலைத்திருத்தலுக்குரிய விடயங்களை வெளிப்படுத்துவது முகாமைத்துவத்தினது பொறுப்பாகும்.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செய்முறை தொடர்பாகப் மேற்பார்வை செய்யும் பொறுப்பானது, நிருவகிக்கும் தரப்பினால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டமூலத்தின் 16(1) பிரிவின் பிரகாரம், நிறுவனத்தின் வருடாந்த மற்றும் உரிய நேரத்திலான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமானவாறு, நிறுவனத்தினது வருமானம், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றி உரியவாறு புத்தகங்களையும் அறிக்கைகளையும் பராமரித்துச் செல்ல வேண்டும்.

### 1.5 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாகக் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக் கூடிய பிழையான அறிக்கை வெளிப்பாடுகளின்றியது என நியாயமான உறுதிப்படுத்தலொன்றை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளரின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயத்தை உறுதிப்படுத்துதலானது உயர் மட்ட உறுதிப்படுத்தலாகிய போதிலும், இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வினை மேற்கொள்ளும் போது எப்போதும் அளவுரீதியான தவறான அறிக்கையிடலைக் கண்டுபிடிக்கப்படும் என்பதை உறுதிப்படுத்த முடியாது. மோசடி அல்லது தவறினது தனிப்பட்ட அல்லது ஒட்டுமொத்த செல்வாக்கு செலுத்துகை காரணமாக, அளவுரீதியான தவறான அறிக்கையிடல் ஏற்படக் கூடியதுடன், இந்த நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு, பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதாரரீதியான தீர்மானங்களில் செல்வாக்குச் செலுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# கணக்காய்வாளர் அறிக்கை - 2021

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

என்னால் தொழில்சார் நடுநிலையானதாகவும் துல்லியமாகவும் இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும்,

- மோசடி அல்லது தவறு காரணமாக, நிதிக் கூற்றுக்களில் ஏற்படக் கூடிய அளவுரீதியான பிழையான அறிக்கையிடலின் அபாயத்தை அடையாளங் காணும் போதும் மதிப்பீடு செய்யும் போதும் சந்தர்ப்பத்திற்கேற்ப, பொருத்தமான கணக்காய்வு விதிமுறைகளைத் தயாரிப்பதனூடாக மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படும் அபாயத்தைத் தவிர்ப்பதற்குப் போதியளவு மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளுதல் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகும். அளவுரீதியாக பிழையான அறிக்கையிடலின் தாக்கத்தைவிட, மோசடி காரணமாக ஏற்படும் தாக்கம் தீவிரமாகவிருப்பதுடன், கூட்டுச்சதி, போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே தவிர்த்தல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டினைக் கைவிடல் போன்றவை காரணமாக மோசடி ஏற்படுகின்றது.
- சந்தர்ப்பத்திற்கேற்ப பொருத்தமான கணக்காய்வு விதிமுறைகளைத் தயாரிப்பதற்காக நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான புரிந்துணர்வொன்று பெறப்பட்ட போதிலும், உள்ளகக் கட்டுப்பாட்டின் வினைத்திறன் பற்றிய கருத்தொன்றை வெளியிட உத்தேசிக்கவில்லை.
- பயன்படுத்தப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் கணக்கீட்டு முன்மதிப்பீடுகளின் நியாயமானதன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் அது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்களின் பொருத்தப்பாடு மதிப்பிடப்பட்டது.
- நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் காரணமாக நிறுவனத்தின் இடையறாத நிலைத்திருத்தல் தொடர்பாக போதியளவிலான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றதா என்பது தொடர்பாகப் பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளினடிப்படையில், கணக்கீட்டினை மேற்கொள்வதற்கு நிறுவனமானது இடையறாது நிலைத்திருத்தல் தொடர்பான அடிப்படையினைப் பிரயோகிப்பதற்கான பொருத்தப்பாடு தீர்மானிக்கப்பட்டது. போதியளவு நிச்சயமற்றதன்மை காணப்படுவதாக நான் முடிவுக்கு வருவதாயின், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பான வெளிப்பாடுகளுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்படுவதுடன் அவ்வெளிப்பாடுகள் போதியளவினதாக இல்லாவிட்டால், எனது அபிப்பிராயப்படி கணக்காய்வு செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், தொடர்ந்து நிலைத்திருப்பதானது எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகளினால் முடிவுறுத்தப்படலாம்.
- வெளிப்பாடுகளை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல், வியூகம் மற்றும் உள்ளடக்கத்தினை மதிப்பீட்டிற்குட்படுத்தியதுடன் அதற்குக் காரணமான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

# கணக்காய்வாளர் அறிக்கை - 2021

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

எனது கணக்காய்வினுள், அடையாளங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நிருவகிக்கும் தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்கமைப்புத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கும்.

**2.1.1** 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (a) வாசகத்தில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின்படி, எனது அறிக்கையில் கணக்காய்வுக்குத் தகுதி பெறும் அபிப்பிராயத்திற்கு அடிப்படையான பகுதியில் விளக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்து எழும் செல்வாக்கினைத் தவிர, கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்கள் என்னால் பெறப்பட்டுள்ளதுடன், எனது பரிசீலனையில் விளங்கும் விதத்தில் உரிய நிதி அறிக்கைகளை நிறுவனமானது பராமரித்து வந்துள்ளது.

**2.1.2** 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (d) (iii) ஆம் வாசகத்தின் தேவைப்பாடுகளின்படி, நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் இணங்குகின்றன.

**2.1.3** 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (d) (iv) ஆம் வாசகத்தின் தேவைப்பாடுகளின்படி கடந்த வருடத்தில் என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட நடைமுறைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகளினடிப்படையில், போதியளவிலான விடயங்களுக்கு வரையறுக்கப்படுவதினுள் பின்வரும் வெளிப்படுத்தலை மேற்கொள்ளக் கூடிய எதுவும் எனது அவதானிப்புக்குட்படவில்லை.

**2.2.1** 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (d) வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் நிறுவனத்தின் நிருவாகச் சபையின் உறுப்பினரொருவருக்கு நிறுவனம் தொடர்பான குறித்ததொரு ஒப்பந்தம் தொடர்பில் நேரடியாக அல்லது வேறுவிதமாக சாதாரண வியாபார நிலைமைகளுக்குப் புறம்பாகத் தொடர்பொன்றுள்ளது என்பதாகும்.

# கணக்காய்வாளர் அறிக்கை - 2021



**2.2.2** 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (f) வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பின்வரும் அவதானிப்பு தவிர, குறித்ததொரு எழுத்துமூலமான சட்டமொன்றுக்கு அல்லது நிறுவகத்தின் நிருவாகச் சபையினால் வெளியிடப்பட்ட வேறேதேனும் பொது அல்லது விசேட கட்டளைகளுடன் இணங்காது செயற்பட்டுள்ளமையாகும்.

**சட்ட மேற்கோள்/வழிகாட்டல்**
முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை இல. 03/2018 திகதி 18 ஜுலை 2018

**விளக்கம்**
பொதுத்திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைளத்தின் உரிய அனுமதியை பெற்றுக் கொள்ளாது கொடுப்பனவுகளை செலுத்தக்கூடாது என்றபோதும், அதிகாரசபையின் உயர் முகாமைத்துவத்தில் அங்கம் வகிக்கும் 27 அதிகாரிகளுக்கு மாதாந்தம் ரூ.50,000 முகாமைத்துவக் கொடுப்பனவாக வழங்கப்பட்டுள்ளது. 2018 மே மாதம் அமுலுக்கு வரும் வகையில் பணிப்பாளர் சபை தீர்மானத்திற்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், 2018 முதல் 2021 வரையில் மீளாய்வு செய்யப்படும் ஆண்டில் ரூ.13,061,742 கொடுப்பனவு உள்ளிட்ட ரூ.50,128,553 மொத்த கொடுப்பனவாக செலுத்தப்பட்டுள்ளது.

**2.2.3** 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (g) வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் நிறுவனத்தின் அதிகாரங்கள், பணிகளும் பொறுப்புக்களுடனும் இணங்காதவாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமை.

**2.2.4** 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (h) வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புக்கள் தவிர, நிறுவன வளங்களை சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் மற்றும் பயனுள்ள விதத்திலும் உரிய காலவெல்லையினுள் குறித்த சட்டதிட்டங்களுக்கமைவாக, கொள்வனவு செய்து பயன்படுத்தப்படாமை.

## 3. ஏனைய விடயங்கள்

(அ) 2019 செப்டம்பர் 26 மற்றும் 2017 டிசம்பர் 21 திகதிகளில் வெளியான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்களின் ஊடாக இரத்மலானை, பலாலி, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய சொத்துக்களின் உரிமைகள் மாற்றப்பட்டு அதிகாரசபைக்கு சொந்தமானது என அறிவிக்கப்பட்ட போதிலும் உரிமை மாற்றச் செயல்முறையை இறுதி செய்யும் நடவடிக்கைகள் இன்னும் எடுக்கப்படவில்லை. மேலும், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய வளாகத்தில் உள்ள 1.190 ஏக்கர் அரசாங்க காணியும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

# கணக்காய்வாளர் அறிக்கை - 2021

(ஆ) 2021 டிசம்பர் 31 அன்று கால ஆய்வு அடிப்படையில் ஐந்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட கிடைக்கப் பெற வேண்டிய வரித் தொகையான ரூ.33,149,196 உள்ளடங்கலாக, கொள்வனவுகளுக்காக 2021 டிசம்பர் 31 அன்று உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடமிருந்து பெறத்தக்க ரூ.251,139,837 பெறுமதி சேர் வரி (உள்ளீட்டு வரி) குறித்து பல தடவை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டாலும் கிடைக்கப்பெற வேண்டிய வரித் தொகை இதுவரையில் மொத்த வரியிலிருந்து கழிக்கப்படவில்லை.

(இ) பாலாலி விமான நிலையத்தினை அபிவிருத்தி செய்வதற்காக 2019 டிசம்பர் 31 வரையில் அதிகாரசபை ரூ.617,131,323 செலவிட்டுள்ளது. இந்த விமான நிலையம் 2019 ஆம் ஆண்டில் திறந்து வைக்கப்பட்டது இயங்கத் தொடங்கியது. எனினும் கொவிட்-19 பெருந்தொற்று காரணமாக 2020 மார்ச் மாதம் விமான நிலைய செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டன. பலாலி விமான நிலைய அபிவிருத்தி மீதான செலவுகள் வினைத்திறனாதாக இல்லை, கணக்காய்வு அறிக்கையில் கேள்விக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

**டபிள்யூ.பி.சி. விக்ரமரட்ண**
*கணக்காய்வாளர் தலைமை அதிபதி*

# கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பதில் - 2021

கணக்காய்வாளர் தலைமை அதிபதி
தேசிய கணக்காய்வு அலுவலகம்
பத்தரமுல்லை

**2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின்படி, 2021 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் நிதி அறிக்கைகள் மற்றும் பிற சட்ட மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகள் குறித்த கணக்காய்வாளர் தலைமையதிபதி அவர்களின் அறிக்கை**

இது 27 ஜுன் 2022 திகதியிட்ட உங்கள் அறிக்கைகளின் குறிப்பு எண். AAV/B/CAASL/01/21/14 உடன் தொடர்புடையது.

மேலே குறிப்பிட்டுள்ள அறிக்கைக்கான பதில்களை தயவுசெய்து கீழே காணவும்.

## 2. பிற சட்ட மற்றும் ஒழுங்குமுறை தேவைகள் பற்றிய அறிக்கை

### 2.2.2 தங்கள் அவதானிப்புடன் உடன்படவில்லை

2002 ஆம் ஆண்டின் CAASL சட்டம் எண் 34 பிரிவு 7 (t) இன் பகுதி இரண்டு மற்றும் பிரிவு 18 இன் பகுதி ஐந்தின்படி ஊழியர்களின் சம்பளங்களைக் கையாள்வதில் பணிப்பாளர் சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் சபை முடிவு எடுக்கப்படுகின்றது.

2002 ஆம் ஆண்டின் இலங்கை சிவில் போக்குவரத்து அதிகாரசபையின் சட்ட எண் 34 பிரிவு 7 (t) இன் பகுதி இரண்டு அதிகாரசபையின் செயற்பாடுகள், கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான ஊழியர்களைத் தெரிவுசெய்து பணியமர்த்துதல் மற்றும் ஊழியர் நலத்திட்டங்கள், பயிற்சித் திட்டங்கள் உட்பட அதிகாரசபை ஊழியர்களின் சம்பளம் மற்றும் சேவை நிபந்தனைகளை நிர்ணயம் செய்து ஏற்றுக்கொள்ளுதல்.

2002 ஆம் ஆண்டின் இலங்கை சிவில் போக்குவரத்து அதிகாரசபையின் சட்ட எண் 34 பிரிவு 18 இன் பகுதி ஐந்து

(1) அதிகாரசபையானது அதன் செயற்பாடுகளை திறம்ப நிறைவேற்றுவதற்கு அவசியமானதாகக் கருதும் வகையில் அத்தகைய அலுவலர் மற்றும் பணியாளர்களை நியமிக்கலாம்.

(2) அதிகாரசபையானது, துணைப்பிரிவு (1) இன்கீழ், அதிகாரசபைக்கு நியமிக்கப்பட்ட அலுவலர் மற்றும் பணியாளர் தொடர்பாக,

அ. அத்தகைய அலுவலர் மற்றும் பணியாளர் மீதான ஒழுக்கக் கட்டுப்பாட்டை கடைப்பிடிக்கவும் அல்லது பணிநீக்கம் செய்யவும்

ஆ. அத்தகைய அலுவலர் மற்றும் பணியாளர்களுக்கு சம்பளம் வழங்கப்படும் விகிதங்களை நிர்ணயிக்கவும்

இ. அத்தகைய அலுவலர் மற்றும் பணியாளர்களின் சேவை விதிமுறை மற்றும் நிபந்தனைகளைத் தீர்மானிக்கவும்

ஈ. அத்தகைய அலுவலர் மற்றும் பணியாளர்களின் நலனுக்காக ஊழியர் நலன்புரி மற்றும் சமூக பாதுகாப்புத் திட்டத்தை நிறுவவும், எந்தவொரு திட்டத்துக்கும் பங்களிப்பை வழங்கவும் முடிவெடுக்கும்.

எனவே மேற்கண்டவற்றைக் கருத்திற் கொண்டு இந்தக் கூற்றினை நீக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

## 3. ஏனைய விடயங்கள்

(அ) கணக்காய்வு அறிக்கை வினா இலக்கம் 3 (அ) தொடர்பில் ஏனைய விடயங்கள் செயற்பாட்டின் கீழ் பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

26.09.2019 இலக்கம் 2142/74 இலக்க மற்றும் 21.12.2017 வெளியிடப்பட்ட 2050-38 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்களின் பிரகாரம், பலாலி விமான நிலையம், இரத்மலானை விமான நிலையம், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் என்பனவற்றின் உரிமையானது சிவில் விமான போக்குவரத்து அதிகாரசபையிடம் ஏற்கனவே மாற்றப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனவே உரிமையை மாற்றுவது தொடர்பில் ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதே காணிகளை பட்டியலிடுவதற்குத் தேவையான நிர்வாகப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன, இதற்கு நீண்ட காலஅவகாசம் தேவைப்படுவதுடன் பல அரசாங்க நிறுவனங்கள் தொடர்புபட்டுள்ளன, இதற்காக நேரத்தை செலவிட வேண்டிய அவசியம் காணப்படுகின்றது.

கூறப்பட்ட நிர்வாக செயன்முறைகளை பூர்த்தி செய்வதற்கு பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பதில் - 2021

இரத்மலானை விமான நிலையக் காணி குறித்த நிர்வாக செயற்பாடுகளை முன்னெடுக்குமாறும், காணியை அளவையிட்டு காணியின் எல்லைப் பகுதிகளை அடையாளமிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை ஆரம்பிக்குமாறும் இரத்மலானை பிரதேச செயலாளருக்கு CAASL எழுத்து மூலம் கோரிக்கை முன்வைத்துள்ளது. காணி உரிமை கைமாற்றப்பட்டபோது காணியின் எல்லைகள் பற்றிய விபரங்களை துறைசார் அமைச்சு வர்த்தமானியில் அறிவிக்கவில்லை.

உள்ளூர் விமான போக்குவரத்தை மேம்படுத்தும் நோக்கில் பலாலி விமான நிலையத்தின் சட்ட உரிமை CAASL இடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எவ்வாறெனினும், கிடைக்கப் பெற்ற ஆவண சான்றுகளின் பிரகாரம், விமான நிலையத்திற்கான காணி உரிமையை பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் முழுமையடையாததோடு முரண்பாடுகளும் காணப்படுகின்றன. காணி உரிமையை கைமாற்றும்போது அமைச்சு எல்லைகளை நிர்ணயித்து வர்த்தமானி அறிவித்தல் வெளியிடாத காரணத்தினால் எல்லைகளை நிர்ணயம் செய்வதறாக அளவை செய்யப்பட வேண்டியுள்ளது. எவ்வாறெனினும், காணிகளுக்கான இழப்பீடு வழங்குதல் உள்ளிட்ட சட்ட ரீதியான நிலுவைப் பிரச்சினைகளினால் அளவையிடும் பணிகளை அதிகாரிகள் மேற்கொள்வது தடைப்பட்டுள்ளது. பலாலி விமான நிலைய காணிப் பிரச்சினைக்கு தீர்வு காணும நோக்கில் 08/06/2022 அன்று சுற்றுலாத்துறை மற்றும் காணிகள் அமைச்சினால் கூட்டமொன்று நடத்தப்பட்டது. எனினும் காணிப் பிணக்குகள் தொடர்ந்தும் நீடித்து வருகின்றன.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் மற்றும் அதனுடன் தொடர்புடைய காணிகள் பற்றிய பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்கில் கம்பஹா மாவட்டச் செயலகத்தில் கூட்டமொன்று நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து, BIA காணிகளின் எல்லையை அடையாளம் காண்பதற்காக அளவை செய்வதற்கு தேவையான நிர்வாக செயற்பாடுகளை ஆரம்பிக்கும் நோக்கில் CAASL கட்டான மாவட்டச் செயலகத்திற்கு எழுத்து மூலம் அறிவித்தது. நில அளவைத் திணைக்களத்தினால் கணக்கெடுப்பு நடத்தப்பட்ட பின்னரே காணியின் எல்லைகளை அடையாளம் காண முடியும். நில அளவைக்கு எடுத்துக் கொள்ளப்படும் நேரத்தின் அடிப்படையில் அளவைப் பணிகள் பூர்த்தியாவதற்கான காலம் மாறுபடும். காணி அளவையிடப்படாது ஏனைய எந்தவொரு நிர்வாக செயற்பாடுகளையும் முன்னெடுக்க முடியாது.

மேற்கூறியவற்றிற்கு இணங்க, காணிகளுக்கான நிர்வாகத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக நாம் கூறுகின்றோம்.

(ஆ) தங்கள் அவதானிப்புடன் உடன்படவில்லை.

கலந்துரையாடல்கள் மற்றும் அதனைத் தொடர்ந்தான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன, நிதி அமைச்சின் ஊடாக கோரிக்கையொன்றும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. IRD அதிகாரிகளின் கூற்றுப்படி, பணத்தை திரும்ப பெற்றுக்கொள்வதில் சந்தேகம் எதுவும் கிடையாது. இதன் காரணமாக நிதி அறிக்கைகளில் இந்த விடயம் குறித்து எவ்வித ஏற்பாடுகளும் பரிந்துரை செய்யப்படவில்லை. உள்நாட்டு இறைவரித் திணைக்களம் கடிதங்கள் அல்லது உறுதிப்படுத்தல்களுக்கு எழுத்துபூர்வமாக எவ்வாறான பதில்களையும் அளிக்கவில்லை. இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண கணக்காய்வாளர் தலைமை அதிபரின் உதவி கிடைக்கப் பெற்றால் மிகுந்த உதவியாக அமையும் என நான் கருதுகின்றேன்.

எனவே மேற்கண்டவற்றைக் கருத்திற் கொண்டு இந்தக் கூற்றினை நீக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

(இ) தங்கள் அவதானிப்புடன் உடன்படவில்லை.

யாழ்ப்பாண சர்வதேச விமான நிலைய அபிவிருத்திப் பணிகளை தொடர்ந்தும் முன்னெடுப்பது குறித்து துறைசார் அமைச்சிடம் ஆலோசனை கோரப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்டவற்றைக் கருத்திற் கொண்டு இந்தக் கூற்றினை நீக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.



**உபுல் தர்மதாச CTC**
*தலைவர்*
இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை

optima
Designing Your Year!

Designed & Produced by
**Optima Designs (Pvt) Ltd.**

A full service design and print company.
**www.optimadesigns.lk**

Civil Aviation Authority
Sri Lanka

සැමට නිරුපද්‍රත සහ කාර්යක්ෂම අහසක්


ශ්‍රී ලංකා සිවිල් ගුවන්සේවා අධිකාරිය

අංක 152/1, මිනුවන්ගොඩ පාර, කටුනායක

දුරකථන : 94 – 11 – 2358800

ෆැක්ස් : 94 – 11 – 2253038

විද්‍යුත් තැපෑල : info@caa.lk

වෙබ්අඩවිය : www.caa.lk